223
4-12-87

ஞான [illegible]

(VOL. I to III)

Page No. 1 to 276.

VOL. I

சர்வேஸ்வராயநம:

# ஞானசமுத்திரம்.

இஃது,

ம-வ-ஆண்டவராகிய

முடியப்ப பௌலி

மேற்றிராணியாரவர்கள் அளித்த உத்தாரப்படி;

வேத வித்தியாபாரகர்களும்,

REV. W. H. STERLING

என்னுமுனிவரும் மொழிபெயர்த்துத் தந்தபடி;
இராயபுரி அர்ச். இராயப்பர் கோவில் விசாரணைக் குரு

இராஜரிஷி

தே. மரி. ஞானப்பிரகாசநாத சுவாமியார்

அவர்களால் பரிசோதிக்கப்பட்டது.

ஐந்தாம் பதிப்பு.

MADRAS:
PRINTED AT THE INDIAN PRESS, No. 107, ROYAPURAM;
1887.

115236

223/788

Q6:4146
H27

I. APPATHORAY PILLAY, PUBLISHER.

115236



## APPROBATION.

*The Fifth Edition of the Tamil Prayer Book* "Gnanasamuthirum" *with the omissions and additions marked by the Rev. P. Ruthna Nader is hereby approved*

(Signed) ✠ JOSEPH,
*Archbishop of Madras.*

*The Fifth Edition of "Gnanasamuthirum" has been compiled by me.*

(Signed) P. RUTHNA NADER,
*Vicar of St. Peter's Church,*
*Royapoorum.*

ஸ்ரீமெய்யக கடவுளுக்கே
தோத்திர முண்டாகக் கடவது.

# முகவுரை.

அர்ச்சியசிஷ்ட விக்தோரியா ரநேக ஞானப்பிரபந்தங்களைச் செய்திருந்தாலுஞ் செபத்தி னவசரத்தைக் காட்ட அவர்செய்த புத்தகத்தை மற்றெல்லாப் புத்தகங்களுக்கு மேலாக மதிக்கிறார். இருளும், மாயைகளுங் கொண்ட மனிதர்கள் சன்மப்பாவத்தால் பலவீனப்பட் டிருப்பதால், செபமின்றி கற்பனைகளை யநுசரிக்கவும், சூத்திரங்களைச் செயிக்கவும் எலாதவர்களா யிருக்கிறார்களென்றும், கடவுள் செபஞ் செய்கிறவர்களுக்கே மோட்ச பாக்கியத்தைக் கொடுக்கிறாரென்றும், வேதவுதாரணங்களைக் கொண்டு தெளிவாய்க் காட்டியிருக்கிறார். உலக இரட்சகர் இரவும் பகலுஞ் செபஞ்செய்து, அவர் செய்தபிரகாரம் நாமுஞ் செய்யப் பலத்த கட்டளை பண்ணியிருக்கிறார். மேலும் நாம் சிருஷ்டிப்பானதால், ௧-வது.—நாம் கர்த்தருக்கு நமஸ்கார வணக்கஞ் செய்யவேண்டும். ௨-வது.—நாம் பெற்றுக்கொண்ட உபகாரங்களுக்காக நன்றியறிந்த தோத்திரம் பண்ணவேண்டும். ௩-வது.—நாம் கட்டிக்கொண்ட பாவங்களுக்கு மன்னிப்பை யடையவேண்டும். ௪-வது.—ஞான சத்துருக்களை வென்று, பரகதிவழி நடக்க வரங்களைப் பெறவேண்டும். செபமின்றித் தேவ ஒளியின்றி யிந்நான்கு கடமைகளையும் நிறைவேற்றக் கூடுமோ? இதினிமித்தியந் திரளான செபங்களை இப்புத்தகத்தில் சேர்த்திருப்பதால் இதற்கு ஞான சமுத்திரமென்கிறபெயர் வந்தது. இச்செபங்களைச் செபித்து கேட்கு மன்றாட்டுக்களைத் தப்பாம லடைய எட்டு காரியம் வேண்டியது.

௧-வது.—தன்னீசத் தனத்தையுஞ் சுவாமியினது பரப்பிரமத்தையும் அறிந்து அச்சம், நடுக்கம், நம்பிக்கை, பத்தி, விசுவாசம், அன்புங் கொண்டிருத்தல். ௨-வது.—சுவாமியைக் கண்ணேற் கண்டாற்போல அவரிடம் பேசுதல். ௩-வது.—செபஞ்செய்கையில் வேறேநினைப்பின்றி, பராக்கின்றி ஆத்துமத்திலுஞ் சரீரத்திலு மொடுக்கமா யிருத்தல். ௪-வது.—இருதயத்தில் காய்மகாரம்

வர்ம முதலான பாசங்க ளில்லாமல் தன்து துர்ப்பலத்தையுஞ் சின்னத் தனத்தையுமே பாராட்டிக்கொண்டிருத்தல். ரு-வது.—செபஞ்செய்கையில் இருதயத்தில் நயமும், புத்தியின் துலாம்பரமும், நற்றோற்றங்களு முணர்தல் அவசரமல்ல. சரீர சங்கட்டங்கள் நோய்களுண்டானாலும் பொறுமையாய்ச் சகித்து, தேவ அன்பையே பாராட்டிச் செபஞ்செய்தல். சு-வது.—தன்னை ஒற்பமாகிலும் மதியாமல் சுவாமியினது வரங்களை வெகுவாய் மதித்து இருதய பரிசுத்தத்தோடு மிந்திரிய வணக்கத்தோடுஞ் சுவாமி சமுகத்தில் சலஞ்சாதித்து ஊதாரிப்பிள்ளையைப்போலத் தாழ்ச்சியோடு செபஞ்செய்தல். எ-வது.—உலகில் வருஞ் சகல தரித்திரம், இக்கட்டு, வியாகுலம், வியாதி, நிந்தை அவமானங்கள் முதலான அநித்திய துன்பங்களை சேசுநாதர்பட்ட துன்பப் பாட்டுக்கிணங்க நல்ல மனதோடே சகிக்கத்தன்னை சுவாமிக்குப் பலியாக ஒப்புக் கொடுத்துக்கொண்டே செபஞ் செய்தல். அ-வது.—நிலைகொண்ட கவனத்தோடும் பூலோக காரியங்களை அசட்டைபண்ணி மேலோக காரியங்களைக் கேட்கிற உத்தம கருத்தோடும், சுவாமி நமக்குப் பிதா வென்கிற திடனுள்ள நம்பிக்கையோடும், உடனே கேட்டவைகளை யடையாவிட்டாலுஞ் சலியாத உறுதியோடு நாட்படச் செபஞ் செய்தல். இப்படிச் செபஞ் செய்கிறவர்கள் கேட்டவரங்களை யடைகிறது மன்றி மேலான ஞானவூக்கம், ஒளி, தைரியம், பொறுமை, அன்பிற் பற்றுதல் முதலான நன்மைகளை யடைந்து மோட்சத்திற் சிறந்து வாழ்வார்க ளென்றறிக.

இந்த ஐந்தாம் பதிப்பிலே பூசைகாணும் வகைகளும், இத் தேசத்தில் சனங்கள் பத்தி வைத்திருக்கும் அர்ச்சியசிஷ்டவர்களுக்குச் செபங்களும், பிரார்த்தனைகளுஞ் அந்தந்த மாதத்தின் தேதிகளில் வருந் திருநாள்களுக் கிணங்க வரிசைக் கிரமமாய்ச் சேர்த்திருப்பதுடன் முன்பதிப்பில் இல்லாத அநேகஞ் செபங்களும் இதில் சேர்த்திருக்கின்றன. அன்றியும் அநேகர் ஆசிப்பதுபோலக் கலியாண பூசையில் செபிக்கவேண்டிய செபங்களும் அதன்பின் பாடும் பாடல்களும் அடங்கியிருக்கின்றன. ஒரே புத்தகத்தில் அவசரமான சகல காரியங்களுஞ் சேர்த்திருப்பதால், புத்தகம் பெரிதாயினும் யாவரும் இதை அன்போடு அங்கீகரிப்பார்களென்று நம்புகிறேம்.



## மாறுந் திருநாட்களின் அட்டவணை.

| வருஷம். | *விபூதித்திருநாள். | | பாஸ்குத்திருநாள். | | சுவாமி மோக்ஷத்திற்கு எழுந்தருளின திருநாள். | | இஸ்பிரீத்துசாந்துவின் திருநாள். | | தேவநற்கருணைத் திருநாள். | | ஆகமன முதல் ஞாயிறு வாரம். | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மாதம். | தேதி. | மாதம். | தேதி. | மாதம். | தேதி. | மாதம். | தேதி. | மீ. | உ. | மீ. | உ. |
| கஅஅஎ | பெபிரவரி | உங | எப்பிரல் | ய | மே | யகூ | மே | உகூ | ஜூன் | கூ | நவ | உஎ |
| கஅஅஅ‡ | ,, | யரு | ,, | க | ,, | ய | மே | உ0 | மே | ஙக | டிச | உ |
| கஅஅகூ | மார்ச் | சு | ,, | உக | ,, | ங0 | ஜூன் | கூ | ஜூன் | உ0 | ,, | க |
| கஅகூ0 | பெபிரவரி | யகூ | ,, | சு | ,, | யரு | மே | உரு | ,, | ரு | நவ | ங0 |
| கஅகூக | ,, | யக | மார்ச். | உகூ | ,, | எ | ,, | யஎ | மே | உஅ | ,, | உகூ |
| கஅகூஉ‡ | மார்ச் | உ | எப்பிரல் | யஎ | ,, | உசு | ஜூன் | ரு | ஜூன் | யசு | ,, | உஎ |
| கஅகூங | பெபிரவரி | யரு | ,, | உ | ,, | யக | மே | உக | ,, | க | டிச | ங |
| கஅகூச | ,, | எ | மார்ச் | உரு | ,, | ங | ,, | யங | மே | உச | ,, | உ |
| கஅகூரு | ,, | உஎ | எப்பிரல் | யச | ,, | உங | ஜூன் | உ | ஜூன் | யங | ,, | க |
| கஅகூசு‡ | ,, | யகூ | ,, | ரு | ,, | யச | மே | உச | ,, | ச | நவ | உகூ |

*இத்திருநாளுக்கு முந்திவரும் ங-ம். ஞாயிறை "Septuagesima" எழுபதாம் நாள் ஞாயிறெனவும், உ-ம். ஞாயிறை "Sexagesima" அறுபதாம் நாள் ஞாயிறெனவும், முதலாம் ஞாயிறை "Quinquagesima". ஐம்பதாம் நாள் ஞாயிறெனவுங் கண்டுகொள்க. சிலவிடங்களில் இதையுந் தபசுகாலமாக அநுசரிக்கிறது முண்டு.

†இத்திருநாளுக்குப் பின்வரும் ஞாயிறை திரித்துவ ஞாயிறெனவுங் கண்டுகொள்க.

‡இக்குறியிட்டிருக்கும் வருஷங்களில் பெபிரவரியீக்கு (உகூ-தேதி) என்றறியவும்.

| வருஷம். | *விபூதித்திருநாள். | | பாஸ்குத்திருநாள். | | சுவாமி மோக்ஷத்திற்கு எழுந்தருளின திருநாள். | | †இஸ்பிரீத்துசாந்துவின் திருநாள். | | தேவநற்கருணைத் திருநாள். | | ஆகமன. முதல் ஞாயிறு வாரம். | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மாதம். | தேதி. | மாதம். | தேதி. | மாதம். | தேதி. | மாதம். | தேதி. | மீ. | உ. | மீ. | உ. |
| ௧௮௯௭ | மார்ச்சு | ௩ | ஏப்பிரல் | ௰௮ | மே | ௨௭ | ஜூன் | ௬ | ஜூன் | ௰௭ | நவ. | ௨௮ |
| ௧௮௯௮ | பெபிரிவரி | ௨௩ | ,, | ௰ | ,, | ௰௯ | மே | ௨௯ | ,, | ௯ | ,, | ௨௭ |
| ௧௮௯௯ | ,, | ௰௫ | ,, | ௨ | ,, | ௰௧ | ,, | ௨௧ | ,, | ௧ | டிச. | ௩ |
| ௧௯௦௦‡ | ,, | ௨௮ | ,, | ௰௫ | ,, | ௨௪ | ஜூன் | ௩ | ,, | ௰௪ | ,, | ௨ |
| ௧௯௦௧ | ,, | ௨௰ | ,, | ௭ | ,, | ௰௬ | மே | ௨௬ | ,, | ௬ | ,, | ௧ |
| ௧௯௦௨ | ,, | ௰௨ | மார்ச்சு | ௩௰ | ,, | ௮ | ,, | ௰௮ | மே | ௨௯ | நவ. | ௩௰ |
| ௧௯௦௩ | ,, | ௨௫ | ஏப்பிரல் | ௰௨ | ,, | ௨௧ | ,, | ௩௧ | ஜூன் | ௰௧ | ,, | ௨௯ |
| ௧௯௦௪‡ | ,, | ௰௭ | ,, | ௩ | ,, | ௰௨ | ,, | ௨௨ | ,, | ௨ | நவ. | ௨௭ |
| ௧௯௦௫ | மார்ச்சு | ௮ | ,, | ௨௩ | ஜூன் | ௧ | ஜூன் | ௰௧ | ,, | ௨௨ | டிச. | ௩ |
| ௧௯௦௬ | பெபிரிவரி | ௨௮ | ,, | ௰௫ | மே | ௨௪ | ,, | ௩ | ,, | ௰௪ | ,, | ௨ |
| ௧௯௦௭ | ,, | ௰௩ | மார்ச்சு | ௩௧ | ,, | ௯ | மே | ௰௯ | மே | ௩௰ | ,, | ௧ |
| ௧௯௦௮‡ | மார்ச்சு | ௪ | ஏப்பிரல் | ௰௯ | ,, | ௨௮ | ஜூன் | ௭ | ஜூன் | ௰௮ | நவ. | ௨௯ |
| ௧௯௦௯ | பெபிரிவரி | ௨௪ | ,, | ௰௧ | ,, | ௨௰ | மே | ௩௰ | ,, | ௰ | ,, | ௨௮ |

# மாறுத்திருநாட்களின் அட்டவணை.

| தேதி. | திருநாட்கள். |
|---|---|
| | **சனவரிமீ** |
| | †வருஷத்தில் வருகிற சகல ஞாயிற்றுக்கிழமைகள். |
| ௧ | †கர்த்தர் விருத்தசேதன மடைந்து சேசுவென்னுந் திருநாம மடைந்த திருநாள். |
| | கர்த்தர் விருத்த சேதனத்தின் திருநாளுக்குப் பின்வரும் ஞாயிற்றுக்கிழமை. |
| ௬ | †மூன்று ‡இராசாக்களின் திரு. |
| | மூன்று இராசாக்கள் திருநாளுக்குப்பின்வரும் முதலாம் ஞாயிற்றுக்கிழமை. |
| ௰௫ | §அர்ச். சின்னப்பர் (முதல் வனவாசியாகிய) திரு. |
| ௰௭ | அர்ச். அந்தோனியார் (மடாதிபதியாகிய) திரு. |
| | மூன்று இராசாக்கள் திருநாளுக்குப் பின்வரும் உ-ம். ஞாயிற்றுக்கிழமையில் கர்த்தருடைய சேசுவென்னுந் திருநாமத்தின் திருநாள். |
| ௨௰ | அர்ச். பபியான் செபஸ்திபார் (வேதசாட்சிகளாகிய) திரு. |
| ௨௧ | அர்ச். அக்னேஸம்மாள் (கன்னி, வேதசாட்சியுமாகிய) திரு. |
| ௨௫ | அர்ச். சின்னப்பர் மனந்திரும்பின திருநாள். |
| | மூன்று இராசாக்கள் திருநாளுக்குப் பின்வரும் ௩-ம். ஞாயிற்றுக்கிழமை. |

†இந்தக் குறியிட்டிருக்குந் திருநாட்களி லெல்லாம் பூசை காணவும், தங்கள் ஊழியத் தொழில்களைவிட்டு ஓய்ந்திருக்கவும் திருச்சபையினாற் கட்டளை யிடப்பட்டதும், சென்னப்பட்டண அதிமேற்றிராசன எல்லையில் அநுசரித்துக்கொண்டுவருவதுமான கடன் திருநாட்களென்று அறிந்துகொள்க.

‡புதுவை, கோயம்புத்தூர் விசாரணைப்பங்கில் இந்தத் திருநாளைக் கடன் திருநாளாக அநுசரியாமல் பத்தித் திருநாளாக அநுசரிக்கிறது முண்டு.

§அர்ச். சின்னப்பர் (முதல் வனவாசியாகிய) திருநாளென்றிருப்பதை, (முதல் வனவாசியாகிய) அர்ச். சின்னப்பர் திருநாளென்று வாசிக்கவும்.

| தே. | திருநாட்கள். |
|---|---|

## பெப்ரவரியீ

| | |
|---|---|
| | தபசுகாலத்துக்கு முன்வரும் நாலாம் ஞாயிற்றுக்கிழமையில் தேவமாதாவின் திரு இருதயத் திரு. |
| ௧ | அர்ச். விறிச்சித்தம்மாள் (கன்னியாஸ்திரீயாகிய) திரு. |
| ௨ | தேவமாதாவின் ‡ சுத்திகரத் திரு. |
| | மூன்று இராசாக்கள் திருநாளுக்குப் பின்வரும் ௪-ம். ஞாயிற்றுக்கிழமை. |
| ௫ | அர்ச். ஆகத்தம்மாள் (கன்னி - வேதசாட்சியுமாகிய) திரு. |
| ௬ | அர்ச். இஞ்ஞாசியார் (மேற்றிராணி, வேதசாட்சியுமாகிய) திருநாள். |
| | மூன்று இராசாக்கள் திருநாளுக்குப் பின்வரும் ௫-ம். ஞாயிற்றுக்கிழமை. |
| ௰௪ | மூத்திப்பேறுபெற்ற அருளானந்தர் திருநாள். |
| | எழுபதாம்நாள் ஞாயிற்றுக்கிழமை. |
| ௨௪ | அர்ச். மத்தியாஸ் (அப்போஸ்தலராகிய) திருநாள். |
| | அறுபதாம்நாள் ஞாயிற்றுக்கிழமை. |

## மார்ச்சுமீ

| | |
|---|---|
| | ஐம்பதாம்நாள் ஞாயிற்றுக்கிழமை. |
| | நீறுபூசுகிற புதன்கிழமை. |
| | தபசுகாலத்தின் முதல் வெள்ளிக்கிழமையில் கர்த்தருடைய திருப்பாடுகளின் திரு. |
| ௯ | அர்ச். பிரான்சிஸ்கம்மாள் (விதவையாகிய) திரு. |
| | தபசுகாலத்தில் வரும் முதல் ஞாயிற்றுக்கிழமை. |
| | தபசுகாலத்தின் ௨-ம். வெள்ளிக்கிழமையில் கர்த்தருடைய முண்முடியின் திருநாள். |
| ௰௭ | அர்ச். பாற்றிக் நாதர் (மேற்றிராணி, ஸ்துதியருமாகிய) திருநாள். |
| | தபசுகாலத்தில் வரும் ௨-ம். ஞாயிற்றுக்கிழமை. |
| | தபசுகாலத்தின் ௩-ம். வெள்ளிக்கிழமையில் கர்த்தருடைய ஈட்டி, ஆணிகளின் திருநாள். |
| ௰௮ | அர்ச். கபிரியேல் (அதிதூதராகிய) திருநாள். |
| ௰௯ | அர்ச். சூசையப்பர் (தேவமாதாவின் பத்தாவாகிய) திரு. |

‡ புதுவை, கோயம்புத்தூர்விசாரணையில் இந்தத்திருநாளைக் கடன் திருநாளாக அநுசரிக்கிறது முண்டு.



| தே. | திருநாட்கள். |
|---|---|

| | |
|---|---|
| | தபசுகாலத்தில் வரும் ௩-ம் ஞாயிற்றுக்கிழமை. |
| ௫ | தேவமாதாவுக்கு மங்களவார்த்தை சொன்ன திரு. |
| | தபசுகாலத்தின் ௪-ம். வெள்ளிக்கிழமையில் கர்த்தருடைய ஐந்து திருக்காயங்களின் திருநாள். |
| | தபசுகாலத்தில் வரும் ௪-ம். ஞாயிற்றுக்கிழமை. |

## எப்பிரல்மீ

| | |
|---|---|
| | தபசுகாலத்தின் ௫-ம். வெள்ளிக்கிழமையில் கர்த்தருடைய விலைமதிப்பில்லாத திரு இரத்தத்தின் திருநாள். |
| | திருப்பாடுகளின் ஞாயிற்றுக்கிழமை. |
| | தபசுகாலத்தின் ௬-ம். வெள்ளிக்கிழமையில் தேவமாதாவின் ஏழு வியாகுலத்தின் திருநாள். |
| | குருத்து ஞாயிற்றுக்கிழமை. |
| | அர்ச்சியசிஷ்ட வாரத்தின் திங்கள். |
| | ,, ,, செவ்வாய். |
| | ,, ,, புதன். |
| | ,, ,, வியாழம். |
| | ,, ,, வெள்ளி. |
| | ,, ,, சனி. |
| | உயிர்த்த ஞாயிற்றுக்கிழமை. |
| ௨௫ | அர்ச். மாற்கு (சுவிசேஷகராகிய) திருநாள். |
| | உயிர்த்த திருநாளுக்குப் பின்வரும் முதல் ஞாயிற்றுக்கிழமை. |
| ௩௰ | அர்ச். கத்திரீனம்மாள் (கன்னியாஸ்திரீயாகிய) திரு. |

## மேமீ

| | |
|---|---|
| ௧ | அர்ச். பிலிப்பு, சின்னயாகப்பர் (அப்போஸ்தலர்களாகிய) திருநாள். |
| ௩ | அர்ச். சிலுவை கண்டெடுத்த திருநாள். |
| ௪ | அர்ச். மாணிக்கம்மாள் (விதவையாகிய) திருநாள். |
| | உயிர்த்த திருநாளுக்குப்பின்வரும் ௨-ம். ஞாயிற்றுக்கிழமை. |
| ௮ | அர்ச். மிக்கயேல் தரிசனையான (அதிதூதராகிய) திரு. |
| | உயிர்த்த திருநாளுக்குப் பின்வரும் ௩-ம். ஞாயிற்றுக்கிழமையில் அர்ச். சூசையப்பருடைய அடைக்கலத் திரு. |
| | உயிர்த்த திருநாளுக்குப் பின்வரும் ௪-ம். ஞாயிற்றுக்கிழமை. |

| தேதி | திருநாட்கள். |
|---|---|
| உக | அர்ச். பிலிப்பு நேரி (ஸ்துதியராகிய) திருநாள். |
| | உயிர்த்த திருநாளுக்குப் பின்வரும் ரு-ம். ஞாயிற்றுக்கிழமை. |
| உஎ | அர்ச். பாசி மரிய மதலேனம்மாள் (கன்னியாஸ்திரீயாகிய) திருநாள். |
| | **ஜூன்மீ** |
| | †கர்த்தர் மோக்ஷத்துக்கு ஆரோகணமான (பாஸ்குத் திருநாளுக்குப் பின் ரு-ம். வாரத்தில் வரும் வியாழக்கிழமையில்) திருநாள். |
| | கர்த்தர் மோட்சத்துக்கு ஆரோகணமான திருநாளுக்குப் பின்வரும் ஞாயிற்றுக்கிழமையில் இஸ்பிரீத்து சாந்துவின் திருநாள். |
| கக | அர்ச். பற்னபாஸ் (அப்போஸ்தலராகிய) திருநாள். |
| கங | அர்ச். அந்தோனியார் (ஸ்துதியராகிய-பாதுவா) திரு. |
| | திரித்துவத்தின் திருநாள். |
| | †ஆராதிஷ்ட தேவநற்கருணை (பாஸ்குத் திருநாளுக்குப்பின் வரும் அ-ம். ஞாயிறு அல்லது திரித்துவ ஞாயிறுக்குப் பின்வரும் வியாழக்கிழமையில்) திரு. |
| உக | அர்ச். ஞானப்பிரகாசியார் (ஸ்துதியராகிய) திரு. |
| | இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்குப் பின்வரும் உ-ம். ஞாயிற்றுக்கிழமை. |
| உச | அர்ச். ஸ்நாபக அருளப்பர் பிறந்த திருநாள். |
| | ஆராதிஷ்ட தேவநற்கருணைத் திருநாளுக்குப் பின் வெள்ளிக்கிழமையில் சேசுநாதருடைய திரு இருதயத் திருநாள். |
| உகூ | †அர்ச். இராயப்பர், சின்னப்பர் (அப்போஸ். வேதசாட்சிகளுமாகிய) திருநாள். |
| ௩௰ | அர்ச். சின்னப்பர் (அப்போஸ். வேதசாட்சியுமாகிய) திரு. |
| | இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்குப் பின்வரும் ங-ம். ஞாயிற்றுக்கிழமை. |
| | **ஜூலாய்மீ** |
| உ. | அர்ச். எலிசபெத்தம்மாளைத் தேவமாதா வினவின திரு. |
| ரு | அர்ச். பிலோமேனம்மாள் (கன்னி. வேதசாட்சியுமாகிய) திரு. |
| | இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்குப் பின்வரும் ச-ம். ஞாயிற்றுக்கிழமை. |



| தேதி | திருநாட்கள். |
|---|---|
| | இஸ்பிரீத்துசாந்துவின் திருநாளுக்குப்பின்வரும் ரு-ம். ஞாயிற்றுக்கிழமை. |
| கசு | அர்ச். உத்தரீயமாதா திருநாள். |
| உ௰ | அர்ச். மரிகருதம்மாள் (கன்னியாஸ்திரீ. வேதசாட்சியுமாகிய) திருநாள். |
| | இஸ்பிரீத்துசாந்துவின் திருநாளுக்குப் பின்வரும் சு-ம். ஞாயிற்றுக்கிழமை. |
| உஉ | அர்ச். மரியமதலேனம்மாள் திருநாள். |
| உச | அர்ச். கிறீஸ்தீனம்மாள் (கன்னியாஸ்திரீ, வேத சாட்சியுமாகிய) திருநாள். |
| உரு | அர்ச். பெரிய யாகப்பர் (அப்போஸ்தலராகிய) திரு. |
| உசு | அர்ச். அன்னம்மாள் (தேவமாதாவின் தாயாராகிய) திரு. |
| | இஸ்பிரீத்துசாந்துவின் திருநாளுக்குப் பின்வரும் எ-ம். ஞாயிற்றுக்கிழமை. |
| உகூ | அர்ச். மாடத்தம்மாள் (கன்னியாஸ்திரீயாகிய) திரு. |
| | **ஆகஸ்டுமீ** |
| க | அர்ச். இராயப்பர் சங்கிலியின் திருநாள். |
| உ | அர்ச். அல்போன்சு லிகோரியார் (மேற்றிராணி. ஸ்துதியருமாகிய) திருநாள். |
| ங | அர்ச். முடியப்பரின் சரீரங்கண்டெடுத்த திருநாள். |
| | இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்குப் பின்வரும் அ-ம் ஞாயிற்றுக்கிழமை. |
| ச | அர்ச். தோமினிக்கென்னுஞ் சாமிநாதர் (ஸ்துதியராகிய திருநாள். |
| ரு | அர்ச். பனிமாதாவின் திருநாள். |
| சு | கர்த்தர் மறுரூபமான திருநாள். |
| கஉ | அர்ச். கிளாரம்மாள் (கன்னியாஸ்திரீயாகிய) திரு. |
| | இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்குப் பின்வரும் கூ-ம் ஞாயிற்றுக்கிழமை. |
| கரு | †தேவமாதா மோட்சத்துக் காரோகணமான திரு. |
| | இத்திருநாளுக்கு எட்டுநாளுக்குள் வருகிற ஞாயிற்றுக் கிழமையில் அர்ச். சுவக்கீன் திருநாள். |
| உ௰ | அர்ச். பெற்னர்து (மடாதிபதியாகிய) திருநாள். |
| உச | அர்ச். பற்தலோமை (அப்போஸ்தலராகிய) திருநாள். |

| தேதி | திருநாட்கள். |
|---|---|
| | இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்குப் பின்வரும் ௰௧-ம். ஞாயிற்றுக்கிழமை. |
| ௨௯ | அர்ச். இஸ்நாபக அருளப்பர் சிரச்சேதமான திருநாள். |
| | **செப்டெம்பர்மீ** |
| ௧ | அர்ச். உரோசம்மாள் (கன்னியாஸ்திரியாகிய) திருநாள், |
| | இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்குப் பின்வரும் ௰௨-ம். ஞாயிற்றுக்கிழமை. |
| ௮ | தேவமாதா பிறந்த திருநாள். |
| | இதை அடுத்த ஞாயிற்றுக்கிழமையில் தேவமாதாவின் திரு- [நாமத்தின் திருநாள். |
| ௧௪ | அர்ச். சிலுவை உயர்த்தப்பட்ட திருநாள். |
| | இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்குப் பின்வரும் ௰௪-ம். ஞாயிற்றுக்கிழமை. |
| ௧௭ | அர்ச். பிராஞ்சீஸ்குவின் ஐந்துகாயத்தின் திருநாள். |
| ௨௧ | அர்ச். மத்தேயு (அப்போஸ். சுவிசேஷகருமாகிய) திருநாள். |
| ௨௪ | அர்ச். உபகாரமாதாவின் திருநாள். |
| | இந்தமாதம் ௩-ம். ஞாயிற்றுக்கிழமையில் வியாகுலமாதாவின் திருநாள். |
| ௨௯ | அர்ச். மிக்கேயல் (அதிதூதரான) திருநாள். |
| | இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்குப் பின்வரும் ௰௫-ம். ஞாயிற்றுக்கிழமை. |
| | **அக்டோபர்மீ** |
| ௨ | காவலான சம்மனசுக்களின் திருநாள். |
| ௪ | அர்ச். பிராஞ்சீஸ்கு (ஸ்துதியாகிய ஐந்துகாய) திரு. |
| | இந்தமாதத்தில் வரும் ௧-ம். ஞாயிற்றுக்கிழமையில் செபமாலைமாதா திருநாள். |
| ௮ | அர்ச். விறிச்சித்தம்மாள் (விதவையாகிய) திருநாள். |
| | இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்குப் பின்வரும் ௧௮-ம். ஞாயிற்றுக்கிழமை. |
| ௧௫ | அர்ச். தெரசம்மாள் (கன்னிகையாகிய) திருநாள். |
| ௧௮ | அர்ச். லூக்காஸ் (சுவிசேஷகராகிய) திருநாள். |
| | இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்குப் பின்வரும் ௧௯-ம். ஞாயிற்றுக்கிழமை. |
| ௨௪ | அர்ச். இரபயேல் (அதிதூதரான) திருநாள். |
| | இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்குப் பின்வரும் ௨௦-ம் ஞாயிற்றுக்கிழமை. |
| ௨௮ | அர்ச். சிமோன் யூதா (அப்போஸ்தலர்களாகிய) திரு. |

15



| தேதி | திருநாட்கள். |
|---|---|
| | **நவம்பர்மீ** |
| ௧ | †சகல* அர்ச்சியசிஷ்டவர்களின் திருநாள். |
| ௨ | உத்தரிக்கிற ஆத்துமாக்கள் திருநாள். |
| | இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்குப் பின்வரும் ௨௧-ம். ஞாயிற்றுக்கிழமை. |
| | இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்குப் பின்வரும் ௨௨-ம். ஞாயிற்றுக்கிழமை. |
| | இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்குப் பின்வரும் ௨௩-ம். ஞாயிற்றுக்கிழமை. |
| ௨௧ | தேவமாதா தேவாலயத்தில் காணிக்கையான திருநாள். |
| | இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்குப் பின்வரும் ௨௪-ம். ஞாயிற்றுக்கிழமை. |
| ௨௫ | அர்ச். கத்திரீனம்மாள் (கன்னி. வேதசாட்சியாகிய) திரு. |
| ௨௪ | அர்ச். சிலுவை அருளப்பர் (ஸ்துதியாகிய) திருநாள். |
| ௩௦ | அர்ச். பெலேந்திரர் (அப்போஸ்தலராகிய) திருநாள். |
| | **டிசம்பர்மீ** |
| | ஆகமனகால முதல் ஞாயிற்றுக்கிழமை. |
| ௩ | அர்ச். சவேரியார் (சிந்து. அப்போஸ்தலராகிய) திரு. |
| ௮ | தேவமாதா உற்பவித்த திருநாள். |
| | ஆகமனகால ௨-ம். ஞாயிற்றுக்கிழமை. |
| | ஆகமனகால ௩-ம். ஞாயிற்றுக்கிழமை. |
| ௧௮ | திருப்பாலன் பிறப்பைத் தேவமாதா எதிர்பார்த்திருந்த திரு. |
| ௨௧ | அர்ச். தோமையார் (சிந்து அப்போஸ்தலராகிய) திரு. |
| | ஆகமனகால ௪-ம். ஞாயிற்றுக்கிழமை. |
| ௨௫ | †கர்த்தர் மனுஷாவதாரமெடுத்துப்பிறந்த திருநாள். |
| ௨௬ | அர்ச். முடியப்பர் (முதல்வேதசாட்சியான) திருநாள். |
| ௨௭ | அர்ச். அருளப்பர் (சுவிசேஷகராகிய) திருநாள். |
| ௨௮ | அர்ச். மாசில்லாத குழந்தைகள் திருநாள். |
| | கர்த்தர்பிறந்த திருநாளுக்குப் பின்வரும் ஞாயிற்றுக்கிழமை. |

*புதுவை, கோயம்புத்தூர், மைசூர், விசாரணையில் சகல அர்ச்சியசிஷ்டவர்களின் திருநாளைப் பத்தித் திருநாளாக அநுசரிக்கிறதுண்டு.

மேற்பங்காளம், மத்தியபங்காளம், கிழக்குப்பங்காளம், பாட்னு, ஆவா, பைகோ இவ்விடங்களில் சுவாமிபிறந்த திருநாள், சுவாமி மோட்சத்துக் காரோகணமான திருநாள், தேவமாதா மோட்சத்துக் காரோகணமான திருநாள், சகல அர்ச்சியசிஷ்டவர்களின் திருநாள், இவைகள் கடன் திருநாட்கள்.—இதோடு ஆசிரு, பாட்னு, சியம், இவ்விடங்களில் அர்ச். இராயப்பர், சின்னப்பர் திருநாளும் கடன்திருநாள்.

## *கடனொருசந்தி.

தபசுகாலத்தின் எழு வெள்ளிக் கிழமைகளும் அல்லாமல் கடைசிச் சனிக்கிழமையும், கர்த்தர் பிறந்த திருநாளுக்கு முந்தின நாளும், கடனொருசந்தி.

## சுத்தபோசனம்.

கர்த்தர் பிறந்த திருநாள் தவிர, வருஷத்தின் சகல வெள்ளி †சனிக்கிழமைகளும், தபசுகால முழுதுஞ் சுத்தபோசனக் கடன்.

## சதுர்கால சுத்தபோசனம்.

தபசுகாலத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமைக்குப் பிறகும், இஸ்பிரீத்து சாந்துவின் திருநாளுக்குப் பிறகும் செப்டெம்பர்மீ ௧௪௳ க்குப் பிறகும், டிசம்பர்மீ ௧௩௳ க்குப் பிறகும், வருகிற புதன், வெள்ளி, சனிக்கிழமைகள் சதுர்கால மென்னப்பட்ட சுத்தபோசனக் கடன்.

---

*ஒருசந்தி ஞாயிற்றுக் கிழமையில் வருமாகில் அதை முன் சனிக்கிழமையில் அநுசரிப்பதே முறை. மேலும் ஒருசந்தி அநுசரிக்கும்போது வழக்கமாய்ச் சாப்பிடுகிற போசன பதார்த்தங்களுக்குப் பதிமடங்காய்ச்செய்து இராமுழுதுஞ் சீரணிக்காமற் பெருண்டியாய்ச் சாப்பிடலாகாது, இது கிறீஸ்துவர்களுடைய ஒருசந்தியல்ல.

†அநேக நியாயங்களைப்பற்றி சென்னப்பட்டண விசாரணையில் சனிக்கிழமையில் மாமிசஞ் சாப்பிட அர்ச். பாப்பானவர் உத்தார மளித்திருக்கிறார்.





சர்வேஸ்வராய நம:

# ஞான சமுத்திரம்.

## பிரதிதின சுகிர்த செபங்கள்.

### *சிலுவை மந்திரம்.

அர்ச்சியசிஷ்ட சிலுவை அடையாளத்தினாலே எங்கள் சத்துருக்களிடத்திலே நின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும், எங்கள் சர்வேசுரா! பிதாவுடையவுஞ், சுதனுடையவுஞ்—இஸ்பிரீத்து சாந்துடையவும் நாமத்தினாலே.—ஆமென்சேசு.

### இஸ்பிரீத்து சாந்துவின் மந்திரம்.

இஸ்பிரீத்து சாந்துவே! தேவரீர் எழுந்தருளிவாரும், உம்முடைய விசுவாசிகளுடைய இருதயங்களை நிரப்பும், அவைகளில் உம்முடைய சிநேக அக்கினியை மூட்டியருளும், உம்முடைய ஞானக்கதிர்களை வரவிடும். அதினால், உலகத்தின் முகத்தைப் புதுப்பிப்பீர்.

பிரார்த்திக்கக் கடவோம்.

சர்வேசுரா சுவாமீ, விசுவாசிகளுடைய இருதயங்களை இஸ்பிரீத்து சாந்துவின் பிரகாசத்தால் படிப்பித்தருளினீரே,

---

*இதற்கு ௫௦-நாட்பலன்.

அந்த இஸ்பிரீத்துவினால் சரியானவைகளை உணரவும், அவருடைய ஆறுதலால் எப்போதும் மகிழ்ந்திருக்கவும் எங்களுக்கு அநுக்கிரகஞ்செய்தருளும், இவைகளை யெல்லாம், எங்கள் ஆண்டவராகிற சேசுக்கிறீஸ்து நாதருடைய திருமுகத்தைப் பார்த்து தந்தருளும்.—ஆமென்சேசு. ஒரு-பர.

ஆண்டவரே, நாங்கள் சரீரக்கற்புடனே உமக் கூழியஞ்செய்யவும், இருதயச் சுத்தத்துடனே உமக்குப் பிரியப்பட நடக்கவும், உம்முடைய இஸ்பிரீத்து சாந்துவினுடைய அக்கினியினால் எங்களுடைய இருதயம் பற்றியெரியவுந் தயைசெய்தருளுஞ் சுவாமீ, எங்களுடைய கிரியை வார்த்தைகளெல்லாம் உம்மைக்கொண்டு துவக்கவும், உம்மிலே முடிக்கவும் வேண்டியதாகையால், நாங்கள் அதைச் செய்யத் துவக்குகிறதற்கு முன்னே உம்முடைய ஏவுதலைத் தந்தருளும், செய்யும்போது உம்முடைய அநுக்கிரகத்தைத் தந்து நடத்தும் ஆண்டவரே.—ஆமெ.

~~~~~~~~

### தினந்தோறும் செய்கிற சகிர்த அப்பியாசம்.

## விடியற்கண் விழிக்கிற பொழுது ஓதுதல்.

சேசு மரியாயே சூசையே உங்கள் அடைக்கலத்திலே நான் கண்விழித்துப் பொல்லாப்பைக் காணாமலும், நினையாமலும் இருக்கக்கடவேன்.

*சேசு மரியாயே! சூசையே! என்னிருதயத்தையும் ஆத்துமத்தையும் உங்களுக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.

~~~~~~~~

## எழுந்திருக்கிற பொழுது.

சேசுநாதருடைய திருநாமத்தினாலே எழுந்திருக்கிறேன், படுக்கையிலே நின்று எழுந்ததுபோலே சர்வ பாவத்தைவிட்டெழுந்து மறுபடியும் நான் பாவத்தில் விழாதபடிக்கு என்னைத் தற்காத்தருளுஞ்சுவாமீ.

---

*இதற்கு ௩00 நாட் பலனுண்டு.



## உடுக்கிற பொழுது.

ஆண்டவரே, இந்தச் சரீரத்தையுடை வஸ்திரங் கொடுத்தது போல, ஆத்துமத்தை அலங்கரிக்க உமது கருணைப் பிரசாதத்தைக் கொடுத்தருளுவீராக.

~~~~~~~~

## உதய ஆராதனை.

பிதாச்சுதன் இஸ்பிரீத்து சாந்துவாகிய திரித்துவ ஏக சர்வேசுரா, தேவரீரை வணங்கித் துதிக்கிறேன், தேவரீருடைய திருவாக்கெல்லாம் முழுமனதோடே விசுவசித்து நம்பிச் சகலத்தையும் பார்க்க உம்மையே நேசிக்கிறேன், தேவரீர் அடியேனுக்குச்செய்த உபகாரங்களுக்காகவும், விசேஷமாய் என்னை இந்நேரமட்டும் பிழைத்திருக்கப் பண்ணினதற்காகவும், உமக்கு இடைவிடாத தோத்திரம் பண்ணுகிறேன். இன்று உம்முடைய கற்பனை தவறாமல் நடக்கக் கெட்டிமனதா யிருக்கிறேன், ஆனதினால் என் சிந்தனை, வாக்கு, கிரியை, ஆத்துமம், சரீரம், சகலத்தையும் உம்முடைய பணிவிடைக்கேற்க நடப்பித்துக்கொள்ள உமக்கே கையளிக்கிறேன். இதல்லாமல் நான் செய்கிற நற்கிரியையெல்லாஞ் சேசுநாதருடைய புண்ணியங்களோடே தேவரீர் கையேற்றுக்கொள்ளும், இன்று வருகிற பரிபூரணபலன்களை நானடைந்து சகல பாவங்களுக்கும் உத்தரிக்க மனதாயிருக்கிறேன். உமது அளவில்லாத கிருபையால் என்னை இரட்சித்தருளுஞ் சுவாமீ.—ஆமென்சேசு.

~~~~~~~~

## *திரிகாலச் செபம்.

ஆண்டவருடைய சம்மனசானது மரியாயியுடனே விசேஷஞ் சொல்லிற்று; அவளும் இஸ்பிரீத்து சாந்துவினாலே கர்ப்பிணியானாள்.—ஒரு-பிரி.

---

* மணியடிக்கும்போது இதை உண்மையான துக்க மனஸ்தாபத்துடனே, செபிக்கு மொவ்வொரு விசைக்கு நூறுநாட்பலனுண்டு. மேலு மிதைச் சனிக்கிழமை சாயந்திரந் துவக்கி ஞாயிற்றுக்கிழமை சாயந்திரம் வரைக்கும் நின்றுகொண்டு செபிப்பதே முறை. (சின்னம். பெனெதிக்து.)

இதோ, ஆண்டவருடைய அடிமையானவள்; உம்முடைய வார்த்தையின்படியே எனக்காகக்கடவது.—ஒரு-பிரி.

வார்த்தையானது மாம்ஸமாகப் பண்ணப்பட்டு; எங்களுடனேகூட வாசமாயிருந்தது.—ஒரு-பிரி.

முதலோதி.—சேசுக்கிறீஸ்து நாதருடைய திருவாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரமா யிருக்கத் தக்கதாக,

துணைவர்.—சர்வேசுரனுடைய பரிசுத்த மாதாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக் கடவோம்.

சர்வேசுரா சுவாமீ, சம்மனசு சொன்னதினாலே உமக்குக் குமாரனாகிய சேசுக்கிறீஸ்து மனுஷனானதை அறிந்திருக்கிற நாங்கள், அவருடைய பாடுகளினாலேயுஞ் சிலுவையினாலேயும், உத்தானத்தின் மகிமையை அடையத்தக்கதாக எங்களுக்கு அநுக்கிரகம் பண்ணியருள வேணுமென்று தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம். இந்த மன்றாட்டுக்களை யெல்லாஞ் சேசுக்கிறீஸ்து நாதருடைய திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும்.—ஆமென்சேசு.—ஒரு-பர.

---

## REGINA CŒLI.

## பாஸ்குக் காலத்தின் திரிகாலச் செபம்.

இது பெரிய சனிவாரந் துவக்கி அர்ச். தமதிரித்துவத்தின் திருநாள் வரைக்குஞ் சொல்லத்தக்கது.

பரலோகத்துக்கு இராக்கினியே மனங்களிகூரும்.—அல்லேலூயா.

அதேதெனில் பாக்கியவதியான உமது திரு உதரத்தில் அவதரித்தவர்.—அல்லேலூயா.

திருவுளம் பற்றின வாக்கின்படியே உயிர்த்தெழுந்தருளினார்.—அல்லேலூயா.

எங்களுக்காக சர்வேசுரனை மன்றாடும்.—அல்லேலூயா.



முதலோதி.—எப்பொழுதுங் கன்னிகையான மரியாயே அகமகிழ்ந்து பூரிக்கக் கடவீர்.—அல்லேலூயா.

துணைவர்.—அதேதெனில் ஆண்டவர் மெய்யாகவே உத்தான மாயினார்.—அல்லேலூயா.

பிரார்த்திக்கக் கடவோம்.

சர்வேசுரா சுவாமீ, உம்முடைய திருக்குமாரனுமாய் எங்கள் ஆண்டவருமா யிருக்கிற சேசுக்கிறீஸ்துவின் உத்தானத்தினாலே உலகங்களிக்கச் சித்தமானீரே, கன்னிமரியாயாகிய அவருடைய திருத் தாயாராலே நித்திய ஜீவியமான பரலோக வாழ்வை நாங்கள் அடையும்படிக்கு அநுக்கிரகம் பண்ணியருளும். இந்த மன்றாட்டுக்களை யெல்லாம் எங்கள் ஆண்டவரான சேசுநாதருடைய திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும்.—ஆமென்சேசு.

---

## அதிகாலைச் செபம்.

¶கிறீஸ்துவனானவன் அதிகாலமே யெழுந்திருந்தவுடனே மிகுந்த பத்தியோடேயும் வணக்கத்தோடேயுங் கைகுவித்து முழங்காலிலே யிருந்து ஏக சர்வேசுரனைப் பார்த்துச் சொல்லத் தக்கதாவது:

தானே அநாதியுமாய்ச் சரீரமில்லாதவருமாய் அளவில்லாத சகலநன்மைச் சுரூபியுமாய்ஞானத்தினாலேயும், பலத்தினாலேயுங், காரணத்தினாலேயும் எங்கும் வியாபித் திருக்கிறவருமாய் எல்லாத்திற்கும் ஆதிகாரணமுமாய் யாவர்க்குங் கதியுமாய்ப் பொல்லாதவர்களை நரகத்திலே தள்ளி நல்லவர்களுக்கு மோட்சங் கொடுக்கிறவருமாகிய பிதாச் சுதன் இஸ்பிரீத்துசாந்து என்னும் மூன்றாட்களா யிருந்தாலும் ஒரே சர்வேசுரனா யிருக்கிற என்னாண்டவரே தேவரீர் மாத்திரம் மெய்யான தேவனா யிருக்கிறபடியினாலே உமக்கு மாத்திரஞ் செய்யத்தக்க தேவாராதனை பண்ணுகிறேன்.

¶இந்த வார்த்தைகளைச் சொல்லும்பொழுது மிகுந்த தாழ்ச்சியோடே சாஷ்டாங்கமாக விழுந்து முழுமனதோடே சர்வேசுரனை வணங்குகிறது.

¶ அதின்பிறகு எழுந்திருந்து பரிசுத்த தேவமாதாவைப் பார்த்துச் சொல்லத் தக்கதாவது:

சர்வேசுரனாலே உண்டாக்கப்பட்ட புத்தி யுடைத்தான வஸ்துக்களுக்குள்ளே மேலானவளா யிருக்கிற அர்ச்சியசிஷ்ட மரியாயே! நீர் மோட்சவாசிக ளென்னப்பட்ட யாவரையும் பார்க்க எண்ணப்படாத நன்மைகளினாலே அதிசயித்துச் சர்வலோகத்துக்கும் இராக்கினியா யிருக்கிறதினாலேயும், எப்பொழுதும் பரிசுத்த கன்னியாஸ்திரீயா யிருந்து மெய்யான சர்வேசுரனும் மெய்யான மனுஷனும், ஒன்றான சேசுநாதருக்குத் திவ்விய மாதாவா யிருக்கிறதினாலேயும் சகலமான அர்ச்சியசிஷ்டவர்களுக்குஞ் செய்யத்தக்க சாதாரண ஆராதனையைப் பார்க்க உமக்கு மாத்திரமே விசேஷ ஆராதனை பண்ணுகிறேன்.

¶ இந்த வார்த்தைகளைச் சொல்லும்பொழுது மிகுந்த தாழ்ச்சியோடே முழந்தாளிட்டு நெற்றித் தரையிலேபட நமஸ்காரம் பண்ணுகிறது.

---

¶ அதன்பின்பு எழுந்திருந்து காவலாயிருக்கிற சம்மனசானவரையும், பரம தாதர்களையும் சகல அர்ச்சியசிஷ்டவர்களையுங் குறித்துச் சொல்லத் தக்கதாவது.

சகல மோட்சவாசிகளே! சர்வேசுரனைப் பிரத்தியட்ச தரிசனமாய்த் தரிசித்துக்கொண்டு ஆண்டவருக்கு உகந்தவர்களா யிருக்கிறபடியினாலேயும் நன்மையிலே நிலை கொண்டவர்களா யிருக்கிறபடியினாலேயும், உங்களுடைய வேண்டுதல் மன்றாட்டுக்களினாலே சர்வேசுரன் உங்களைக்கொண்டு எங்களுக்கு அநேக சகாய உபகாரங்களைப் பண்ணிக்கொண்டு வருகிறதினாலேயுந் திருச்சபை கட்டளையிட்ட பிரகாரம் உங்களுக்கு ஆராதனை பண்ணுகிறேன்.

¶ இந்த வார்த்தைகளைச் சொல்லும்பொழுது மிகுந்த தாழ்ச்சியோடே தலைகுனிந்து தண்டன் பண்ணுகிறது.

---

¶ இப்படிப்பட்ட ஆராதனைகள் எல்லாம் முடிந்தபிற்பாடு சுவாமியைப் பார்த்துச் சொல்லத் தக்கதாவது:

சர்வேசுரா சுவாமீ, தேவரீர் என்னாத்துமத்தையுஞ் சரீரத்தையும் ஒன்றுமில்லா திருக்கையிலே உண்டாக்கி. இந்த ஆத்



துமமும், சரீரமும் பிழைக்கிறதற்கு எண்ணப்படாத நன்மைகளைத் தந்தருளினதினாலே,—சுவாமீ உமக்கே தோத்திர முண்டாகக்கடவது.

பின்னையுந்தேவரீர் இந்தப் பூலோகத்திலே எனக்காக வந்து மனுஷாவதாரம் பண்ணிப் பாடுபட்டுச் சிலுவையிலே அறையுண்டு கடினமான மரணத்தை அடைந்ததினாலே,—சுவாமீ உமக்கே தோத்திர முண்டாகக் கடவது.

மேலும் உம்முடைய திரு மரணத்தினாலே வந்த அளவில்லாத பலனை ஞானஸ்நானத்தின் வழியாகக் கொடுத்தருளினீரே,—சுவாமீ உமக்கே தோத்திர முண்டாகக்கடவது.

ஞானஸ்நானம் பெற்ற பிற்பாடு நான் அநேகமுறை பாவங்களைச் செய்திருக்க அந்தப் பாவங்களை யெல்லாம் பாவசங்கீர்த்தன முகாந்தரமாகப் பொறுத்துத் தெய்வீக போசனமாகிய நற்கருணையுங் கொடுத்து, காவலாயிருக்கிற சம்மனசானவரையுங் கட்டளையிட்டு இவை முதலான எண்ணிக்கைக்குள் ளடங்காத சகாய உபகாரங்களைப் பண்ணிக்கொண்டு வருகிறதினாலேயும் விசேஷமாய் இந்த இராத்திரி காலத்திலே என்னாத்துமத்துக்குஞ், சரீரத்துக்கும் யாதொரு பொல்லாப் பில்லாமற் காத்து இரட்சித்ததினாலேயும் என்னாற் கூடினமாத்திரம் நன்றியறிந்த மனதோடே தேவரீரை வணங்கித் தோத்திரம் பண்ணுகிறேன், சுவாமீ உமக்கே தோத்திர முண்டாகக் கடவது.

¶ அதற்குப்பின் தன்னை முழுதுஞ் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கிற வகையாவது:

சர்வலோகத்துக்கும் ஆண்டவரே! தேவரீர் என் சரீரத்தையும், பஞ்சேந்திரியங்களையும், அவைகளிலே யுண்டான தத்துவங்களையும், என்னாத்துமத்தையும், அதிலுள்ள புத்தி நினைவு மனதென்கிற மூன்று புலன்களாகிய உள்ளிந்திரியங்களையும் எனக்குக் கொடுத்தருளினீரே, இவையெல்லாந் தேவரீருக்குப் பிரியமா யிருக்கிறதற்குச் சேசுநாதர் பண்ணின புண்ணியங்களோடேயுஞ், சகல அர்ச்சிய சிஷ்டவர்களுடைய தேவ வசிகரமென்னுங் காணிக்கைகளோடேயுந் தேவரீருக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கிறேன். ஆனபடியினாலே இப்பொழுது அவ

க்கி மரணபரியந்தம் நான் செய்யுந் தரும காரியங்கள் எல்லாத்தையுந் தேவரீருக்குத் தோத்திரமாக ஒப்புக்கொடுக்கிறேன்.

¶ அதற்குமேல் சர்வேசுரனுடைய அநுக்கிரகத்தைக் கேட்கிற வகையாவது:

சர்வேசுரா சுவாமி, தேவரீருக்கு அளவில்லாத பலமும், மட்டில்லாத ஞானமும், அளவறுக்கப்படாத கிருபாகடாக்ஷமும் உண்டாயிருக்கிறபடியினாலே சேசுநாதருடைய திருமுகத்தைப் பார்த்து அடியேனுக்குந் திருச்சபைக்குஞ் சகலமான சனங்களுக்கும் வேண்டிய சகாயங்களைப் பண்ணுகிறதுமல்லாமல் விசேஷமாய் நானின்று பாவங்களைச் செய்யாமல் புண்ணியவழியிலே சுமுத்திரையாய் நடக்கத்தக்கதாகவும் எனக்கு அநுக்கிரகம் பண்ணியருளுஞ் சுவாமி.

¶ இந்தச்செபம் முடிந்தவுடனே பத்தியோடே பரமண்டல மந்திரமும், பிரியதத்த மந்திரமும், விசுவாசமந்திரமுஞ் சொல்லுகிறது.

## பரமண்டல மந்திரம்.

பரமண்டலங்களிலே யிருக்கிற எங்கள் பிதாவே! உம்முடைய நாமம் அர்ச்சிக்கப் படுவதாக, உம்முடைய இராச்சியம் வருக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுமாப்போலப் பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக, அன்றன்றுள்ள எங்களப்பம் எங்களுக்கு இன்றுதாரும், எங்கள் *கடன்காரருக்கு நாங்கள் பொறுக்குமாப்போல எங்கள் கடன்களை எங்களுக்குப் பொறும்; எங்களைச் சோதனையிலே பிரவேசிப்பியாதேயும், தின்மையிலே நின்று எங்களை யிரட்சித்துக்கொள்ளும்.—ஆமென்சேசு.

## பிரியதத்த மந்திரம்.

பிரியதத்தத்தினாலே பூரணமரியாயே வாழ்க, கர்த்தர் உம்முடனே, பெண்சாதிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப் பட்டவளும் நீ

* இதிலே கடனென்கிறது—குற்றமென்றர்த்தமாம்.



ரே, உம்முடைய திருவயிற்றின் கனியாகிய சேசு ஆசீர்வதிக்கப் பட்டவருமாமே; அர்ச்சியசிஷ்ட மரியாயே, சர்வேசுரனுடைய மாதாவே பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும்.—ஆமென்சேசு.

## விசுவாச மந்திரம்.

பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய சர்வேசுரனை அதியோக்கிய பத்தியாக விசுவசிக்கிறேன், அவருடைய ஏக சுதனாகிய நம்முடைய நாதர் சேசுக்கிறீஸ்துவையும் அதியோக்கிய பத்தியாக விசுவசிக்கிறேன், இவர் இஸ்பிரீத்து சாந்துவினாலே கர்ப்பமாயுற்பவித்து அர்ச்சியசிஷ்ட கன்னிமரியாயிடத்திலே நின்று பிறந்து, போஞ்சுபிலாத்தின்கீழே பாடுபட்டுச் சிலுவையிலே யறையுண்டு மரித்தடக்கப்பட்டார், பாதாளங்களிலே யிறங்கி மூன்றாநாள் மரித்தவர்களிடத்திலே நின்று உயிர்த்தெழுந்தருளினார், பரமண்டலங்களிலே யேறிச் சர்வத்துக்கும் வல்லபிதாவாகிய சர்வேசுரனுடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறார், அவ்விடத்திலே நின்று சீவியர்களுக்கும் மரித்தவர்களுக்கும் நடுத்தீர்க்கவருவார், இஸ்பிரீத்துசாந்துவை அதியோக்கிய பத்தியாக விசுவசிக்கிறேன், பொதுவாயிருக்கிற அர்ச்சியசிஷ்ட சபையையும் அர்ச்சியசிஷ்டவர்களுடைய சமூகிதப் பிரயோசனத்தையும் விசுவசிக்கிறேன், பாவப்பொறுத்தலை விசுவசிக்கிறேன், மாம்ச உத்தானத்தை விசுவசிக்கிறேன், சதமான சீவியத்தை விசுவசிக்கிறேன்.—ஆமென்சேசு.

¶ பத்துக்கற்பனைகளையுந் திருச்சபையின் கட்டளைகளையுஞ் சொல்லித் தன்னிலுள்ள பாவ துர்க்குணங்களை நினைத்து வெறுக்கிறது.

## பத்துக்கற்பனை.

சர்வேசுரன் நமக்கு அருளிச்செய்த வேதகற்பனை பத்து, அதின் முதலாவது.—உனக்குக் கர்த்தாவான சர்வேசுரன் நாமே, நமக்குமுன்பாக வேறே சர்வேசுரன் உனக் கில்லாதே போவதாக.

இரண்டாவது.—சர்வேசுரனுடைய திருநாமத்தை வியர்த்தமாகச் சுவீகரியாதே யிருப்பாயாக.

மூன்றாவது.—சர்வேசுரனுடைய திருநாட்களை ஆசரிக்கத் தக்கதாக நினைப்பாயாக.

நான்காவது.—பிதாவையும், மாதாவையுஞ் சங்கித் திருப்பாயாக.

ஐந்தாவது.—கொலைசெய்யாம லிருப்பாயாக.

ஆறாவது.—மோகம்அகமியா கமனம் பண்ணாதிருப்பாயாக.

ஏழாவது.—களவாடா திருப்பாயாக.

எட்டாவது.—பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

ஒன்பதாவது.—பரதாரத்தை அபேட்சியா திருப்பாயாக.

பத்தாவது.—பிறருடைமையை அபேட்சியா திருப்பாயாக.

இந்தப் பத்துக் கற்பனைகளும் இரண்டு கற்பனையில் அடங்கும் அதின் முதலாவது.—எல்லாத்தையும் பார்க்கச் சர்வேசுரனைச் சிநேகித்திருக்கிறது.

இரண்டாவது.—தன்னைத்தான் சிநேகிக்குமாப்போலே மற்றவர்களைச் சிநேகிக்கிறது.—ஆமென்சேசு.

## திருச்சபை கற்பனைகள் ஐந்து.

முதலாவது.—ஞாயிற்றுக்கிழமையிலேயுங் கடன் திருநாட்களிலேயும் முழுப்பூசை காண்கிறது.

இரண்டாவது.—வருஷத்துக்கு ஒருவிசையாகிலும் நல்ல பாவசங்கீர்த்தனம் பண்ணுகிறது.

மூன்றாவது.—பாஸ்குத் திருநாட்களிலே பாவசங்கீர்த்தனம் பண்ணித் தேவநற்கருணை யுட்கொள்ளுகிறது.

நான்காவது.—*வெள்ளி சனிக்கிழமைகள் தபசு காலம் முதலிய நாட்களிற் சுத்தபோசனமும் ஒருசந்தி நாட்களில் ஒருசந்தியும் அநுசரிக்கிறது.

*சென்னப் பட்டணத்தில் பற்பல பலத்த ஞாயங்களைப்பற்றி சனிக்கிழமையில் மாம்சஞ் சாப்பிடலா மென்று அர்ச். பாப்பானவர் உத்தார மளித்திருக்கிறார்.



ஐந்தாவது.—*விலக்கப்பட்ட காலத்திலுங் குறையான பிராயத்திலும் விக்கின முள்ள உறவின் முறைமையோடுங் கலியாணஞ் செய்யாதிருக்கிறது.—ஆமென்சேசு.

¶பின்னும் பாவசங்கீர்த்தன மந்திரஞ்சொல்லித் தன்பாவங்களுக்குத் துக்கப்பட்டு உத்தம மனஸ்தாப மந்திரஞ் சொல்லுகிறது.

## பாவசங்கீர்த்தன மந்திரம்.

சர்வத்துக்கும் வல்ல சர்வேசுரனுடனேயும், எப்பொழுதுங் கன்னியாயிருக்கிற முத்திப்பேறுபெற்ற மரியாயி யுடனேயும், பிரதான சம்மனசாயிருக்கிற முத்தனான மிக்கேலுடனேயும் ஸ்நாபகனா யிருக்கிற முத்தனான அருளப்பருடனேயும், அப்போஸ்தலரா யிருக்கிற அர்ச். இராயப்பருடனேயும், சின்னப்பருடனேயும், சகல அர்ச்சியசிஷ்டவர்களுடனேயும், எனக்குக் குருவாயிருக்கிற உம்முடனேயும் பாவசங்கீர்த்தனம் பண்ணிக்கொள்ளுகிறேன்; அதேதென்றால், என் சிந்தையினாலேயும், வாக்கினாலேயும், கிரியையினாலேயும்; மகா பாவங்களைச் செய்தேனே, என் பாவமே! என் பாவமே! என் பெரும்பாவமே! ஆகையால் எப்பொழுதுங் கன்னியாயிருக்கிற முத்திப்பேறுபெற்ற மரியாயியையும், பிரதான சம்மனசாயிருக்கிற முத்தனான மிக்கேலையும் ஸ்நாபகனாயிருக்கிற முத்தனான அருளப்பனையும், அப்போஸ்தலராயிருக்கிற அர்ச்சியசிஷ்ட இராயப்பனையும், சின்னப்பனையும், சகல அர்ச்சியசிஷ்டவர்களையும், எனக்குக் குருவாயிருக்கிற உம்மையும் நம்முடைய கர்த்தராகிய சர்வேசுரனிடத்திலே எனக்காக வேண்டிக்கொள்ள வேணுமென்று மன்றாடுகிறேன்.—ஆமென்.

## உத்தம மனஸ்தாப மந்திரம்.

அனந்த தயை சுரூபியாயிருக்கிற என் சர்வேசுரா சுவாமீ! தேவரீர் அளவில்லாத சகல நன்மையும் நிறைந்தவரா யிருக்கிற

*பத்திலொன்று முந்தின பலன் கோயிலுக்குக் காணிக்கையாகக் கொடுக்கிறது என்னுந் திருச்சபைக் கற்பனைப் பிரகாரம் கிறீஸ்துவர்கள் தங்களால் கூடின மட்டுந் தங்கள் ஞானாசாரியர்க்கு உதவி செய்யவேண்டியது கடனாகும்.

படியினாலே எல்லாத்தையும் பார்க்க உம்மை நான் முழுமனதோடே சிநேகிக்கிறேன், இப்படிப்பட்ட தேவரீருக்குப் பொருந்தாத பாவங்களைச் செய்தேனென்கிறதினாலே மிகவும் மனநொந்து மெத்த மனஸ்தாபமாயிருக்கிறேன், எனக்கிதுவே மனஸ்தாபமல்லாமல் வேறே மனஸ்தாபமில்லை. எனக்கிதுவே துக்கமல்லாமல் வேறே துக்கமில்லை. இனிமேல் ஒருகாலு மிப்படிப்பட்ட பாவங்களைச் செய்வதில்லை யென்று கெட்டியானமனதுடனே பிரதிக்கினைப் பண்ணுகிறேன், பின்னையுமென்பலம் போதாதெனகிறதினாலே சேசுநாத சுவாமி பாடுபட்டுச் சிந்தின திரு இரத்தப்பலன்களைப் பார்த்து என் பாவங்களை யெல்லாம் பொறுத்து எனக்கு உம்முடைய வரப்பிரசாதங்களையும், மோட்ச பாக்கியத்தைக் தந்தருளுவீரென்று முழுமனதோடே நம்பியிருக்கிறேன், திருச்சபை விசுவசித்துப் படிப்பிக்கிற சத்தியங்களை யெல்லாந் தேவரீர் தாமே அறிவித்தபடியினாலே நானும் உறுதியாக விசுவசிக்கிறேன்.—ஆமென்சேசு.

¶ அதன் மேலுஞ் சுவாமியை நோக்கி நல்ல பிரதிக்கினைப் பண்ணுகிற வகையாவது:—

சர்வேசுரா சுவாமி, தேவரீர் அருளிச்செய்த வேத கற்பனையின்படியே அடியேன் சுமுத்திரையாய் நடக்கத் துணிந்திருக்கிறபடியினாலே என்னிடத்தி லிருக்கிற ஆங்காரங் கோப முதலிய விசேஷ துர்க்குணங்களை நீக்கி இன்று அநேக தருமங்களைச் செய்து வாக்கினாலேயுங் கிரியையினாலேயுந் தாழ்ச்சி, பொறுமை, கற்பு முதலிய புண்ணியங்களை அடையப் பிரயாசப்படுவேன், இவையெல்லாம் என்னுடைய பலத்தினாலே கூடாதே பரிசுத்த தேவமாதாவே எனக்காக உம்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும்.—என் காவலான சம்மனசானவரே, என்னைப் புண்ணிய நன்னெறியில் நடப்பித்துக் காத்தருளும்.—நான்பேர் கொண்டிருக்கிற அர்ச்சியசிஷ்டவரே உம்மைப்போலே நான் இவ்வுலகத்திற் சர்வேசுரனைப் பத்தியோடே சேவிக்கவும் உம்மோடேயவரைப் பரலோகத்திலே தரிசித்துத் துதிக்கவுந் தேவகிருபை யெனக்குக் கிடைக்கும்படியாக மன்றாடிக் கொள்ளும்.—ஆமென்சேசு.



## சேசுநாதரைக் குறித்து

### முப்பத்துமூன்று மணிச்செபம் பண்ணுகிற வகையாவது.

சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய சர்வேசுரா சுவாமி, நீச மனுஷருமாய் நன்றியறியாத பாவிகளுமாயிருக்கிற அடியோர்கள் மட்டில்லாத மகிமைப்பிரதாபத்தைக் கொண்டிருக்கிற தேவரீருடைய சந்நிதியிலே யிருந்து செபம் பண்ணப் பாத்திரமாகாதவர்களாயிருந்தாலும், தேவரீருடைய அளவறுக்கப்படாத கிருபாகடாட்சத்தை நம்பிக்கொண்டு சேசுநாதருக்குத் தோத்திரமாக முப்பத்து மூன்றுமணிச் செபம்பண்ண ஆசையாயிருக்கிறோம், இப்படிப்பட்ட செபத்தைப் பத்தியோடே செய்து பராக்கில்லாமல் முடிக்கத் தேவரீருடைய ஒத்தாசை கட்டளை பண்ணியருளுஞ் சுவாமி.

¶ சகலமான புண்ணியங்களுக்கும் விசுவாசமென்கிறபுண்ணியம் அஸ்திவாரமாயிருக்கிறபடியினாலே முந்த முந்த விசுவாச மந்திரஞ் சொல்லுகிறது.

¶ மெய்யான சர்வேசுரனும் மெய்யான மனுஷனுமொன்றாயிருக்கிற சேசுநாத சுவாமியுடைய மூன்றுபிரதான மகிமைகளைக் குறித்து மூன்று புண்ணியங்களைக் கேட்கிறது.

மெய்யான சர்வேசுரனாயிருக்கிற எங்கள் ஆண்டவரே, எங்களிடத்திலே தேவ விசுவாசமென்கிற புண்ணியம் உண்டாகிப் பலனளிக்கும்படிக்கு அநுக்கிரகம் பண்ணியருளும்.—பரமண்டலமந்திரம்.

மெய்யான மனுஷனுமாயிருக்கிற எங்கள் ஆண்டவரே, எங்களிடத்திலே தேவ நம்பிக்கையென்கிற புண்ணியம் உண்டாகி வளரும்படிக்கு அநுக்கிரகம் பண்ணியருளும்.—பரமண்டல மந்திரம்.

மெய்யான இரட்சகருமாயிருக்கிற எங்கள் ஆண்டவரே, எங்களிடத்திலே தேவ சிநேகமென்கிற புண்ணியம் உண்டாகி அதிகரிக்கும்படிக்கு அநுக்கிரகம் பண்ணியருளும்.—பரமண்டல மந்திரம்.

பிதாவுக்கும், சுதனுக்கும், இஸ்பிரீத்து சாந்துவுக்குந் தோத்திர முண்டாகக்கடவது.—ஆதியிலே.—மற்றதும்.

ஸ்ரீ பரிசுத்த கன்னியாஸ்திரீயா யிருக்கிற அர்ச். தேவமாதாவுக்குக் கபிரியேலென்கிற சம்மனசானவர் மங்கள வார்த்தை சொன்ன பிரியதத்த மந்திரஞ் சொல்லுகிறது.

## முதலாவது மன்றாட்டு.

சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய சர்வேசுரா சுவாமீ, தேவரீர் அருளிச்செய்த திவ்விய கற்பனைகளுக்கு விரோதமான குற்றங்களைச் செய்தோமே, அவைகளை யெல்லாந் தேவரீருடைய மட்டில்லாத கிருபையினாலே பொறுத்துக்கொண்டு இனிமேல் அடியோர்கள் சுமுத்திரையாய் நடக்கவும் தேவரீருடைய ஸ்தோத்திரம் விக்கினமின்றி யெங்கும் பரம்பவும், உத்தரிக்கிற ஸ்தலத்திலே யிருக்கிற ஆத்துமாக்கள் அவதியில் இளைப்பாற்றியுடைத்தா மோட்ச பாக்கியத்தைச் சுதந்தரித்துக் கொள்ளவுங் கிருபை பண்ணியருளுஞ் சுவாமீ.—பத்து பர.

அர்ச். தமதிரித்துவத்தின் தோத்திரஞ் சொல்லுகிறது.

பரலோகத்திற்கு இராக்கினியா யிருக்கிற அர்ச். தேவமாதாவே, பாவிகளா யிருக்கிற நாங்கள் வேண்டிக்கொண்ட இந்தப் பத்துமணிச் செபத்தையும் உமது தோத்திரங்களோடேகூட ஒன்றாகக்கூட்டி உம்முடைய திருக்குமாரன் சேசுநாதர் திருப்பாதத்திலே பாத காணிக்கையாக வைக்க உம்மை மன்றாடுகிறோம்.—ஒரு பிரி.

## இரண்டாவது மன்றாட்டு.

சர்வத்துக்கும் வல்ல சர்வேசுரா சுவாமீ! நாங்கள் சுபாவமாய் மகா பலவீனருமாய்த் தந்திரங்களா லிழுக்கப் பட்டவர்களுமா யிருக்கிறபடியினாலே உலகம் பசாசு சரீரமென்னப்படுகிற ஞான சத்துருக்களை நாங்கள் ஜெயித்து பாவவழி போகாமலும், பஞ்சேந்திரியங்களுடைய அலைக்கழிப்புக் கிணங்காமலும், ஒறுத்த உபவாசத்தால் உமது வேத வழிப்பட்டுச் சுமுத்திரையாய் நடக்கக் கிருபை பண்ணியருளுஞ் சுவாமீ.—பத்து பர. ஒரு பிரி.



பூலோகத்துக்கு ஆண்டவளா யிருக்கிற அர்ச். தேவமாதாவே! பாவிகளா யிருக்கிற நாங்கள் வேண்டிக்கொண்ட இந்தப் பத்து மணிச் செபத்தையும் உமது தோத்திரங்களோடே கூட ஒன்றாகக் கூட்டி உம்முடைய திருக்குமாரன் சேசுநாதர் திருப்பாதத்திலே பாத காணிக்கையாக வைக்க உம்மை மன்றாடுகிறோம்.—ஒரு பிரி.

## மூன்றாவது மன்றாட்டு.

சர்வத்துக்கும் வல்ல சர்வேசுரா சுவாமீ! நாங்கள் பிரதான புண்ணியங்களாகிய விசுவாசம், நம்பிக்கை, தேவ சிநேகத்திலுயரவும், இஸ்பிரீத்து சாந்துவின் ஞான வொளிகொண்டு பேரின்பத்தின் பாதையைப் பிடிக்கவும், உலகத்தி லுத்தியோகத்தொழில்களைச் செய்கையில் எங்கள் மனது உம்மையும், உம்முடைய நித்திய விராச்சியத்தையுமாத்திரம் தாவிநிற்கவும், எல்லாக்கிரியைகளையும் உமக்காகவே செய்யவுங், கிருபை செய்தருளுஞ் சுவாமீ."—பத்து பர. ஒரு பிரி.

விடியற்காலத்தின் நட்சத்திரமா யிருக்கிற அர்ச். தேவமாதாவே! பாவிகளா யிருக்கிற நாங்கள் வேண்டிக்கொண்ட இந்த முப்பத்து மூன்றுமணிச் செபத்தையும், உமது தோத்திரங்களோடே கூட ஒன்றாகக் கூட்டி உம்முடைய திருக்குமாரன் சேசுநாதர் திருப்பாதத்திலே பாத காணிக்கையாக வைக்க உம்மை மன்றாடுகிறோம்.—ஒரு பிரி.

### பிரார்த்திக்கக்கடவோம்.

அவதரித்த தேவனுமாய்க், கிருபை நிறைந்த கர்த்தருமாய், மதுரமுள்ள இரட்சகருமா யிருக்கிற அன்புக்குரிய சேசுவே! தேவரீர் இவ்வுலகத்தில் வாசம்பண்ணின முப்பத்து மூன்று வருஷ காலம் மனிதர்களுக்குத் திவ்விய மாதிரிகையாகச் செய்து வந்த புண்ணியங்களை அடியோர்கள் அநுசரிக்கவுந், தேவரீர் எங்களை இரட்சிக்கத் தக்கதாக உம்முடைய திரு இரத்தமெல்லாஞ் சிந்தி அடைந்த கடின மரணத்தின் பலனாலே நாங்கள் மோட்சத்தின்

பேரின்ப பாக்கியத்தைப் பெற்று உம்மை யென்றென்றைக்குந் தரிசித்துச் சிநேகித்து ஸ்துதிக்கவுங் கிருபை செய்தருளுஞ் சுவாமி.—ஆமென்சேசு.

## *சேசுநாதருடைய திருநாமத்தின் பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்.
கிறீஸ்துவே கிருபையாயிரும்.
சுவாமீ கிருபையாயிரும்,
கிறீஸ்துவே யெங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.
கிறீஸ்துவே யெங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.

பரமண்டலங்களிலே யிருக்கிற பிதாவாகிய சர்வேசுரா,
உலகத்தை மீட்டிரட்சித்த சுதனாகிய சர்வேசுரா,
இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரா,
அர்ச். தமதிரித்துவமா யிருக்கிற ஏக சர்வேசுரா,
நித்திய பிதாவின் திருச்சுதனாயிருக்கிற சேசுவே,
பிதாவின் பிரகாசமா யிருக்கிற சேசுவே,
நித்திய வொளியின் தூய்மையாகிய சேசுவே,
மட்டில்லாத மகிமை யுடைத்தான இராசாவாகிய சேசுவே,
நீதி யாதித்தனாகிய சேசுவே,
பரிசுத்த கன்னிமரியாயி குமாரனாகிய சேசுவே,
மகா அன்புக்குரிய சேசுவே,
ஆச்சரியத்துக்குரிய சேசுவே,
மிகுந்த வல்லபக் கடவுளா யிருக்கிற சேசுவே,
வரப்போகிறபாக்கியங்களுக்குக்காரணராயிருக்கிற சேசுவே
பரம ஆலோசனைகளின் திவ்விய தூதனான சேசுவே,
மகா சத்தியுடைத்தான சேசுவே,
மகா பொறுமையுள்ள சேசுவே,
மகா கிரவணம் பொருந்திய சேசுவே, [சேசுவே,
மனத்தாழ்ச்சியையும், மதுரகுணத்தையுங் கொண்டிருக்கிற
கற்பை ஸ்நேகிக்கிற சேசுவே,
எங்க ளன்பராகிய சேசுவே,
சமாதான தேவனாகிய சேசுவே,

} எங்களுக்குக் கிருபையாயிரும் சுவாமி.

---

*இதைப் பத்தி மனஸ்தாபத்தோடே சொல்லும் போதெல்லாம் முந்நூறுநாட் பலனுண்டு.—இ-ம். சிக்ஸ்து.



சிவியத்துக்குக் காரணராயிருக்கிற சேசுவே,
சகல புண்ணியங்களுக்கு மாதிரிகையாயிருக்கிற சேசுவே,
ஆத்துமங்களை யிரட்சிக்கிறதிலே மகா அபேட்சையுள்ளசே
எங்கள் தேவனாயிருக்கிற சேசுவே, [சுவே,
எங்களுக் கடைக்கலமா யிருக்கிற சேசுவே,
தரித்திரருடைய பிதாவாயிருக்கிற சேசுவே,
விசுவாசிகளுடைய பொக்கிஷமா யிருக்கிற சேசுவே,
நல்ல ஆயராயிருக்கிற சேசுவே,
உண்மையான பிரகாசமாயிருக்கிற சேசுவே,
நித்திய ஞானமாயிருக்கிற சேசுவே, [வே,
மட்டில்லாத நன்மைத் தன்மையைக் கொண்டிருக்கிற சேசு
எங்கள் சிவியமும், உண்மையும் வழியுமாயிருக்கிற சேசுவே,
சம்மனசுக்களுடைய சந்தோஷமா யிருக்கிற சேசுவே,
பிதாப் பிதாக்களுக்கு இராசாவாகிய சேசுவே,
தீர்க்கதரிசிகளுக்கு ஞானங் கொடுக்கிற சேசுவே,
அப்போஸ் தலர்களுக்குக் குருவாகிய சேசுவே,
சுவிசேஷகருக்குப் போதகமான சேசுவே,
வேதசாட்சிகளுக்குத் திடனான சேசுவே,
ஸ்துதியருடைய பிரகாசமான சேசுவே,
விரத்தருடைய நற்புரவான சேசுவே,
சகல அர்ச்சிய சிஷ்டர்களுக்கு முடியான சேசுவே,

} எங்களுக்குக் கிருபையாயிரும் சுவாமி.

தயாபரரா யிருந்து,—எங்கள் பாவங்களைப் பொறுத்தருளுஞ் சுவாமீ.

தயாபரரா யிருந்து,—எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளுஞ் சுவாமீ.

சகல பாவங்களிலே நின்று,
தேவரீருடைய கோபத்திலே நின்று,
பசாசின் தந்திரங்களிலே நின்று,
மோக ஆசையிலே நின்று,
நித்திய மரணத்திலே நின்று,
தேவரீர் தருகிற தருமவிசாரங்களை யசட்டை பண்ணுகிற துர்க்குணத்திலே நின்று,
தேவரீருடைய மனுஷாவதாரத்தின் பரம இரகசியத்தைப் பார்த்து,
தேவரீருடைய பிறப்பைப் பார்த்து,
தேவரீருடைய பாலத்துவத்தைப் பார்த்து,
தேவரீருடைய விருத்த சேதனத்தைப் பார்த்து,
தேவரீருடைய திவ்விய நடக்கையைப் பார்த்து,
தேவரீருடைய பிரயாசத்தையும் பிரயாணங்களையும்பார்த்து,

} எங்க. இரட். சே. சுவாமி.

தேவரீருடைய ஆராட்டத்தையும், இரத்த வேர்வையையும் பார்த்து,
தேவரீருடைய சிலுவையையும், பாடுகளையும் பார்த்து,
தேவரீருடைய உபத்திரவங்களையும், நிர்ப்பந்தங்களையும் பார்த்து,
தேவரீருடைய மரணத்தையும், அடக்கத்தையும் பார்த்து,
தேவரீருடைய மகிமையான உத்தானத்தைப் பார்த்து,
தேவரீருடைய சந்தோஷத்தையும், மகிமையையும் பார்த்து,
தேற்றுகிறவராகிய இஸ்பிரீத்து சாந்துவின் ஆகமனத்தைப் பார்த்து. } எங். இ. கோ. சுவாமீ.

நடுத்தீர்க்கிற நாளிலே,—எங்களை இரட்சித்துக் கொள்ளுஞ் சுவாமீ.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே,—எங்கள் பாவங்களைப் போக்கியருளுஞ் சுவாமீ.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே,—எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளுஞ் சுவாமீ.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே,—எங்களுக்குத் தயைபண்ணி யிரட்சியுஞ் சுவாமீ.

சேசுவே எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்,

சேசுவே எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.

முதலோதி.—இப்பொழுதுமெப்பொழுது மென்றென்றைக்கும்.

அனைவர்.—ஆண்டவருடைய திருநாமம் வாழ்த்தப்படக்கடவது.

பிரார்த்திக்கக்கடவோம்.

எங்கள் திவ்விய இரட்சகருமாய் ஆண்டவருமா யிருக்கிற சேசுக்கிறீஸ்துவே! எங்களாத்துமத்தையுஞ், சரீரத்தையும், புத்தி மனது நினைவையும் எங்களுக்குண்டான சகலத்தையும் உமக்குக் காணிக்கையாக வைக்கிறோம். நாங்களெங்கள் சிந்தனை வாக்குக்கிரியைகளினாலே முழுதும் உம்மைச்சிநேகிக்கவும், ஸ்துதிக்கவும், உமது திவ்விய சிநேகத்தின் அக்கினியினால் எங்களிருதயம் பற்றி எரியவுந் தயைசெய்தருளுஞ் சுவாமீ. எங்களுக் கிதுவேபோதும், பிதாவோடேயும் இஸ்பிரீத்து சாந்துவோடேயுஞ் சதாகாலஞ் சீவியருமா யிராச்சிய பரிபாலகருமா யிருக்கிற ஆண்டவரே.—ஆமென்சேசு.



SALVE REGINA.

*கிருபைதயாபத்து மந்திரம்.

கிருபை தயாபத்துக்கு மாதாவாயிருக்கிற எங்களிராக்கினியே வாழ்க,
எங்கள் சீவமே, எங்கள் தஞ்சமே, எங்கள் மதுரமேவாழ்க,
பரதேசிகளா யிருக்கிற நாங்கள் ஏவையின் மக்கள்,
உம்மைப்பார்த்துக் கூப்பிடுகிறோம்,
இந்தக் கண்ணீர்க் கணவாயிலே நின்று பிரலாபித்தழுது,
உம்மையே நோக்கிப் பெருமூச்சுவிடுகிறோம்,
ஆதலால் எங்களுக்காக வேண்டிமன்றாடுகிறதாயே,
உம்முடைய தயாபமுள்ள திருக்கண்களை எங்கள் பேரிலே திருப்பியருளும்,
இதன்றியே நாங்களிந்தப் பரதேசங் கடந்தபிற்பாடு,
உம்முடைய திருவயிற்றின் கனியாகியசேசுநாதருடைய
பிரத்தியட்சயான தரிசனத்தை எங்களுக்குத்தந்தருளும்,
கிருபாகரியே, தயாபரியே,
பேரின்ப இரசமுள்ள கன்னிமரியாயே.

முதலோதி.—அர்ச். கன்னிகையே நானும்மை துதிக்கக் கிருபைசெய்தருளும்.

---

*தேவமாதாவுக்கும், அர்ச்சிய சிஷ்டவர்களுக்கும், பதிதரால் சொல்லப்படுகிற நிந்தைக்குப் பரிகாரமாக காலமே, பின்வரப்பட்ட சிறு வாக்கியங்களோடு கிருபை தயாபத்து மந்திரத்தையும், சாயந்திரம் சர்வேசுரனுடைய பரிசுத்த தேவமாதாவே! இதோவும்முடைய வென்று மந்திரத்தோடு மேற்படி வாக்கியங்களையுஞ் சொன்னால் நாளொன்றிற்கு ௧00-நாட் பலனுண்டு.—ஆரும் பக்திநாதர்.

துணைவர்.—உம்முடைய சத்துருக்களை வெற்றிக்கொள்ள எனக்குச் சத்துவத்தைத் தந்தருளும்.

முதலோதி.—தேவன் தமது அர்ச்சிய சிஷ்டவர்களில் ஆசீர்வதிக்கப்பட்டவரா யிருக்கிறார்.

துணைவர்.—ஆமென்சேசு.

பிரார்த்திக்கக் கடவோம்.

சர்வ சத்தி யுடையவருமாய், நித்தியருமா யிருக்கிற சர்வேசுரா! முத்திப்பேறுபெற்ற கன்னித்தாயான மரியாயியுடைய ஆத்துமமுஞ், சரீரமும், இஸ்பிரீத்து சாந்துவி னநுக்கிரகத்தினாலே தேவரீருடைய திருக்குமாரனுக்கு யோக்கியமான பீடமாயிருக்க எற்கெனவே நியமித்தருளினீரே, அந்தத் திவ்விய தாயை நினைத்து மகிழ்கின்ற நாங்க ளவளுடைய விரக்கமுள்ள மன்றாட்டினாலே யிவ்வுலகின் சகல பொல்லாப்புகளிலேயும், நித்திய மரணத்திலேயு நின் றிரட்சிக்கப் படும்படிக்குக் கிருபை கூர்ந்தருளும். இந்த மன்றாட்டுக்களை யெல்லாம் எங்களாண்டவரான சேசுநாதருடைய திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும்.—ஆமென்சேசு.

## *தேவசம்பந்தமான மூன்று புண்ணிய முயற்சி.

### விசுவாச முயற்சி.

என் சர்வேசுரா சுவாமீ, திருச்சபை விசுவசித்துப் படிப்பிக்கிற சத்தியங்களை யெல்லாம் தேவரீர் தாமே அறிவித்தபடியினாலே நானும் உறுதியாக விசுவசிக்கிறேன்.—ஆமென்சேசு.

### நம்பிக்கை முயற்சி.

என் சர்வேசுரா சுவாமீ, தேவரீர் வார்த்தைப்பாடு கொடுத்தபடியினாலே சேசுநாத சுவாமி பாடுபட்டுச் சிந்தின திருவிரத்தப் பலன்களைப் பார்த்து என் பாவங்களை யெல்லாம் பொறுத்து

*இந்த மூன்று முயற்சிகளைப் பத்தியோடு செபிக்கும் ஒவ்வொருவிசைக்கும் ஏழு வருஷமும், ஏழு மண்டலப் பலனு முண்டு.—கச-ம் பெனதிக்து.

37



எனக்கும்முடைய வரப்பிரசாதங்களையும், மோட்ச பாக்கியத்தையுந் தந்தருளுவீரென்று உறுதியாக நம்பி யிருக்கிறேன்.—ஆமெ.

### தேவசிநேக முயற்சி.

என் சர்வேசுரா சுவாமீ, தேவரீர் மட்டில்லாத சிநேகத்துக்குப் பாத்திரமா யிருக்கிறபடியினாலே, எல்லாத்தையும் பார்க்க உம்மை நான் முழுமனதோடே சிநேகிக்கிறேன், பின்னையும் உம்மைப்பற்றி என்னை நான் சிநேகிக்கிறாப்போலே மற்ற எல்லாரையுஞ் சிநேகிக்கிறேன்.—ஆமென்சேசு.

சேசுவே எங்கள்பேரில் தயவாயிரும்.

இதற்கு ௱-நாட் பலனுண்டு.

## கடைசி வேண்டுதல்.

மட்டில்லாத தயாசுரூபியா யிருக்கிற நித்திய சர்வேசுரா, உமக்கு மிகவும் பிரியமுள்ள திருக்குமாரன் மனுவாக்குக்கெட்டாத கொடியவேதனைப்படவும், அவர்படும் வேதனையைக்கண்டு அவர் திருத்தாயார் சொல்லிலடங்காத வியாகுலப்படவும், எங்கள் பாவங் காரணமாகையினால் நாங்கள் பாவத்தின் அகோரத்தைக்கண்டு அஞ்சி நடுங்கி மனஸ்தாபப்படவும், இனி யொருநாளும் பாவத்தைச் செய்யாதிருக்க வுறுதியான பிரதிக்கினை செய்யவும், செய்த பாவத்துக்குத் தபசு செய்யவும் எங்கள்மே லுமக்குள்ள மட்டில்லாத ஸ்நேகத்தைக் கண்டு எங்களால் ஆனமட்டும் உம்மை இவ்வுலகத்தில் ஸ்நேகித்தபின் நித்தியத்தி லிடைவிடாமல் பழுதற ஸ்நேகித்துவரவும்; உமது ஸ்நேகஞ் சகலமனித இருதயத்திலும் பற்றியெரியவும், அக்கியானங் குறையவும், சத்தியவேதம் பரம்பவும்; சத்திய இராசாக்கள் தங்களுக்குள்ளே சமாதானமா யிருக்கவும், பதிதர் துர்மதங்களொழியவும், திருச்சபையைவிட்டுப் பிரிந்தவர்கள் திரும்ப அதிற் பிரவேசிக்கவும், அர்ச். பாப்புநினைத்த தர்மகாரியங்கள் ஜெயமாகவும், பஞ்சம், படைநோய்கள் நீங்கவும், உத்தரிப்பு ஸ்தலத்தில் வேதனை படுகிற ஆத்துமங்க ளவதி குறையவும், நான் ஆராருக்காக வேண்டிக்கொள்ள வேண்டுமென்று தேவரீர் திருவுளமா

யிருக்கிறீரோ அவர்க ளெல்லோரு முமது விசேஷநன்மையைக் கைக்கொள்ளவும் உமது திருக்குமாரன் எங்களுக்காகச் சிந்தின விலைமதியாத திருவிரத்தத்தையும் அவர் திருத்தாயார் அநுபவித்த சொல்லிலடங்காத வியாகுலத்தையும், சிலுவையின் பேறடைந்த அர்ச்சியசிஷ்டவர்களுடைய வேண்டுதலையுங் குறித்து அடியார்கள் கேட்கிற மன்றாட்டுக்களுக் கிரங்கிக் கிருபைசெய்தருள வேண்டுமென்று தேவரீரை யிரந்து மன்றாடிக்கொள்ளுகிறோம்.

இடைவிடாமல் ஸ்துதிக்கப்பட யோக்கியமுமாய் யிருந்த மதுரமுள்ள பூசிதமுமா யிருக்கிற பரம திவ்விய நற்கருணைக்கே அநவரதகாலமும் முடியாத ஆராதனையும் ஸ்துதியுந் தோத்திரமு முண்டாகக்கடவது. சென்மப்பாவமில்லாமல் சன்மித்து எப்பொழுதும் பரிசுத்த கன்னியாஸ்திரீயுமாய், நமதாண்டவளுமாய்க் கொண்டாடப் பட்டவளுமா யிருக்கிற அர்ச். தேவமாதாவினுடைய அமலோற்பவத்துக்குந் தோத்திர முண்டாகக்கடவது. சர்வேசுரனுடைய அர்ச். மாதாவே, இதோ உமதுசரணமாக ஓடிவந்தோம் எங்கள் அவசரங்களிலே நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு நீர் பாராமுகமா யிராதேயும், ஆசீர்வதிக்கப்பட்டவளுமாய் மோட்ச முடையவளுமா யிருக்கிற நித்தியகன்னிகையே, சகல ஆபத்துகளிலேயு நின்றெங்களைத் தற்காத்துக் கொள்ளும், தேவப்பிரசாதத்தின் தாயே, இரக்கத்துக்கு மாதாவே, அர்ச். மரியாயே, எங்கள் மாற்றானுடைய சோதனையிலேயும், மரணநேரத்திலேயு முமது திருக்குமாரனை வேண்டி எங்களைக் காக்கவும் ஆளவுங் கைக்கொண்டு நடத்தவும் வேண்டுமென்று உமது திருப்பாதம் முத்திசெய்து மன்றாடுகிறோம்—ஆமெ.

## சுகிர்த முறைமைச் செபங்கள்.

### போசனத்துக்குமுன் கேட்கும் ஆசீர்வாதம்.

சர்வேசுரா சுவாமீ, என்னையும், உமதருளினாலே நான் புசிக்க இருக்கின்ற இந்தப் புசிப்புகளையும், என்னாண்டவராகிய சேசுக்கிறீஸ்து நாதருடைய திருமுகத்தைப் பார்த்து ஆசீர்வதித்தருளும்,—ஆமென்சேசு.



### போசனத்துக்குப்பின் நன்றியறிந்ததோத்திரம்.

சதாகாலத்துக்கும் ஜீவியருமாய் இராச்சிய பரிபாலனம் பண்ணுகிறவருமா யிருக்கிற சர்வ வல்லபமுள்ள சர்வேசுரா, தேவரீர் எனக்குத் தந்தருளின இந்த ஆகாரங்களுக்காகவும் தேவரீர் எனக்குச் செய்துவருகிற சகல உபகாரங்களுக்காகவுந் தேவரீருக்கு நன்றியறிந்த தோத்திரம் பண்ணுகிறேன்.—ஆமென்சே.

சுவாமீ கிருபையாயிரும்.
கிறீஸ்துவே கிருபையாயிரும்.
சுவாமீ தயையாயிரும்.—பரமண்டலமந்திரம்.

இப்பொழுதும் எப்பொழுதும் ஆண்டவருடைய திருநாமம் வாழ்த்தப்படக்கடவது.

பிரார்த்திக்கக் கடவோம்.

எங்களுக் குபகாரம் பண்ணுகிறவர்களுக் கெல்லாம் நித்திய சீவியத்தைக் கட்டளையிட்டருள அநுக்கிரகம் பண்ணியருளும்.—ஆமென்சேசு.

### பிரயாணத்துக்கு அல்லது வீட்டிலேயிருந்து புறப்படுகிற பொழுது.

ஆண்டவரே, அடியேன் வீட்டிலே நின்று புறப்படுகிற இந்தப் பிரயாணத்தில் (அலுவலில்) சகல ஆபத்துகளிலேயு நின்று என்னைத்தற்காத்து, உமது அடைக்கலத்துக்குள் வாசமாயிருக்கப்பண்ணி நினைத்த நற்காரியத்தைச் சுபலமாக்கி மோக்ஷவழியைத் தவறாமல் நடக்கத் தக்கதாகக் கிருபை செய்தருளும்.—ஆமென்சேசு.

### யாதொருவேலை ஆரம்பிக்கிற பொழுது.

சர்வேசுரா சுவாமீ, தேவரீருடைய திருநாமத்துக்குப் புகழ்ச்சி யுண்டாகும்படிக்குத், அவக்கின இந்தவேலையை முடியமட்டும் சேசுநாதருடைய புண்ணியங்களோடே உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.—ஆமென்சேசு.

¶யாதொருவேலை செய்யும்பொழுது அடிக்கடி சுவாமியை நினைக்கக் கடவாய்.

## வேலை செய்கிறபொழுது.

ஆண்டவரே நாங்கள் செய்கிற கிரியைகளுக்குத் தேவரீர் ஆசீர்வாதந் தந்தருளி யும்முடைய அநுக்கிரகத்தினாலே எங்களை நடப்பிக்க வேணுமென் றும்மை மன்றாடுகிறோம், அப்படியே யெங்கள் சகல காரியங்களும் உம்மாலே துவக்கவு முடிக்கவும் படக்கடவது.—ஆமென்சேசு.

## இராச் செபம்.

*சேசுமரியே!

திரிகாலச் செபஞ் சொல்லுகிறது.

### VENI SANCTE SPIRITUS.

### † இஸ்பிரீத்து சாந்துவின் மந்திரம்.

இஸ்பிரீத்து சாந்துவே, தேவரீர் எழுந்தருளிவாரும், பரலோகத்திலே நின்று உம்முடைய திவ்விய பிரகாசத்தின் கதிர்களை வரவிடும், தாரித்திரருடைய பிதாவே கொடைகளைக் கொடுக்கிறவரே இருதயங்களின் பிரகாசமே எழுந்தருளி வாரும், உத்தம ஆறுதலானவரே, ஆத்துமங்களுக்கு மதுரமான விருந்தாடியே, பேரின்ப இரசமுள்ள இளைப்பாற்றியே, பிரயாசத்திற் சுகமே, வெய்யிலிற் குளிர்ச்சியே, அழுகையிற் தேற்றரவே எழுந்தருளிவாரும், வெகு ஆனந்தத்தோடே கூடியிருக்கிற பிரகாசமே உமது விசுவாசிகளுடைய இருதயத்தின் உற்பனங்களை நிரப்பும்

*இதைப் பத்தியோடு உச்சரிக்கும் அந்தந்த விசைக்கும் உடு நாட் பலனுண்டு.

† இதைச் சத்திய இராசாக்களுக்குள் சமாதான முண்டாகப் பத்தியோடு செபித்தால் காலொன்றுக்கு ௬00-நாட் பலனுண்டு.—கூ-ம். பத்திநாதர்.



உம்முடைய தெய்வீக மின்றியே மனிதரிடத்திற் குற்றமில்லாதது ஒன்றுமில்லை, அசுத்தமா யிருக்கிறதைச் சுத்தம் பண்ணும், உலர்ந்ததை நனையும், நோவா யிருக்கிறதைக் குணமாக்கும், வணங்காததை வணங்கப்பண்ணும், குளிரோ டிருக்கிறதைக் குளிர் போக்கும், தவறினதைச் செவ்வே நடத்தும், உம்மை நம்பின உம்முடைய விசுவாசிகளுக்கு உம்முடைய திருக்கொடைகள் ஏழையுங் கொடுத்தருளும். புண்ணியத்தின் பேறுகளையும், நல்ல மரணத்தையும், நித்திய மோட்சானந்தத்தையும் எங்களுக்குத் தந்தருளும்.—ஆமென்சேசு.

## நன்றியறிந்த தோத்திரம்.

சர்வேசுரா சுவாமீ, என்னை ஒன்றுமில்லா திருக்கையிலே மனுஷனாக உண்டாக்கினீரே,—சுவாமீ உமக்கே தோத்திர முண்டாகக் கடவது.

நான் செய்த பாவங்களினாலே நரகத்துக்குப் போகக் கடனுண்டாயிற்றே, அந்தக் கடனை என்னால் உத்தரிக்கக் கூடாதென்று தேவரீர் மனுஷனாகப் பிறந்து பாடுபட்டு உத்தரித்தீரே,—சுவாமீ உமக்கே தோத்திர முண்டாகக் கடவது.

அந்தப் புண்ணிய பலன்களை யெல்லாம் ஞானஸ்நான முகாந்தரமாக வெனக்குத் தந்தருளினீரே,—சுவாமீ உமக்கே தோத்திரமுண்டாகக் கடவது.

நான் ஞானஸ்நானம் பெற்றபிற்பாடு அநேகமுறை பாவங்களைச் செய்தேனே அந்தப் பாவங்களை யெல்லாம் பாவசங்கீர்த்தன முகாந்தரமாகப் பொறுத்து என்னை நரகத்திலே தள்ளாமல் மோட்சத்துக்குப் போகிறவழியிலே நிறுத்திக்கொண் டிருக்கிறீரே,—சுவாமீ உமக்கே தோத்திர முண்டாகக் கடவது.

நீர் இன்றெனக்கு எண்ணிறந்த உபகாரங்களைச் செய்ததல்லாமலும் பசாசு எனக்கு நினைத்திருந்த அநேக பொல்லாப்புகளையும் விலக்கினீரே,—சுவாமீ உமக்கே தோத்திர முண்டாகக்கடவது.

நான் இன்றுசெய்த பாவங்களெல்லாம் என்னினைவிலே வரவும், அவைகளுக்காக நான் மெய்யான மனஸ்தாபப் படவும் உம்முடைய ஒத்தாசைக் கட்டளை பண்ணியருளுஞ் சுவாமீ.

¶போன ஆத்துமசோதனை தொடங்கி இந்நேரமட்டுஞ் சிந்தனை வாக்குக் கிரியையினாலே செய்த பாவங்களை யெல்லாம் பத்துக் கற்பனைப் பிரகாரமாக நினைத்துக் கொள்ளத் தக்கதாகப் பத்துக்கற்பனையுந், திருச்சபைக் கட்டளையுஞ் சொல்லி ஆத்தும சோதனை செய்து பாவசங்கீர்த்தன மந்திரஞ் சொல்லவும். கூ-ம். பக்கமுதல் கக-ம் பக்கம்வரைக்குங் காண்க.

## மேலான உத்தம மனஸ்தாப மந்திரம்.

பரிபூரண வஸ்துவா யிருக்கிற சர்வேசுரா சுவாமீ! தேவரீர் ஆண்டவர், நான் நீசனாயிருக்கிற அடிமை, இவ்வடிமை அளவில்லாத சகல நன்மைச் சுரூபியாயிருக்கிற தேவரீரைச் சட்டைப்பண்ணாமல் தேவரீருக்குப் பொருந்தாத பாவங்களைச் செய்தேனே சுவாமீ! தேவரீருக் கேற்காத துரோகங்களை நினைத்தேனே சுவாமீ! நான் செய்த பாவங்களினாலே சேசுநாதரோ தேவரீரைச் சிலுவையிலே அறைந்தேனே சுவாமீ! தேவரீருடைய திருக்காயங்களை நிஷ்டூரமாக அநேகமுறை நோகப்பண்ணினேனே சுவாமீ! தேவரீர் பாடுபட்டுச் சிலுவையிலே அறையுண்டு கடினமான மரணத்தை அடைகிறதற்குப் பாவி நான் காரணமா யிருந்தேனே சுவாமீ! நான் செய்த பாவங்களினாலே என்னாத்துமத்தைக் கெடுத்துப் பசாசுக்கு அடிமையாய்ப் போய் நரக பாதாளத்திலே விழுந்து என்றென்றைக்கும், எப்பொழுது மெப்பொழுதும், ஊழியுள்ள காலம் ஆறாத நெருப்பில் அவியாத கட்டையாய்க் கிடந்து வேகிறதற் கென்பேரிலே அளவில்லாத கடனைச் சுமந்திக் கொண்டேனே சுவாமீ! இதினாலே நரகத்துக்குப் போவேன் என்கிற பயத்தைப் பார்க்கவும் மோட்சம் இழந்து போவேன் என்கிற சேதத்தைப் பார்க்கவும் அளவில்லாத சகல நன்மைச்சுரூபியா யிருக்கிற தேவரீரைச் சட்டைப்பண்ணாமல் தேவரீருக்குப் பொருந்தாத பாவங்களைச் செய்தேன் என்கிறதினாலேயுந், தேவரீருக் கேற்காத துரோகங்களை நினைத்தேன் என்கிறதினாலேயும் மிகவும் மனநொந்து உத்தமமனஸ்தாபமாயிருக்கிறேன், எனக்கிதுவேமனஸ்தாபமல்லாமல் வேறேமனஸ்தாபமில்லை இதுவே துக்கமல்லாமல் வேறேதுக்கமில்லை, இந்தப்பாவங்களையெல்லாம் அறிந்தேசெய்தேன், என் பாவங்களைப் பொறுத்தருளுஞ் சுவாமீ, அறிந்தேசெய்தேன், என் பாவங்களைப் பொறுத்தருளுஞ் சுவாமீ.



அறிந்துந் துரோகமாய்ச்செய்தேன், என் பாவங்களைப் பொறுத்தருளுஞ்சுவாமீ, இனிமேல்ஒருகாலும் இப்படிப்பட்ட பாவங்களைச் செய்கிறதில்லையென்று கெட்டியான மனதோடே பிரதிக்கினை செய்கிறேன், பின்னையும் என்பலம்போதாதென்கிறதினாலே சேசுநாத சுவாமி பாடுபட்டுச் சிந்தின திரு இரத்தத்தின் பலன்களைப்பார்த்து, என் பாவங்களைப் பொறுத்து எனக்கு மோட்சபாக்கியந் தந்தருளுவீரென்று முழுமனதோடே நம்பியிருக்கிறேன்.

முதலோதி.—இவைகளெல்லாம் என் பலத்தினாலே கூடாதே, அர்ச். தேவமாதாவே எங்களுக்காக உம்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும்,

துணைவர்.—ஆண்டவரா யிருக்கிற சேசுக்கிறீஸ்துவே, உலகத்தினுடைய பாவங்களைப் போக்குகிறவரே, எங்கள் பேரிலே தயவாயிரும்.

இப்படி மூன்றுவிசை சொல்லுகிறது.

அதற்குப்பின் பர-பிரி. விசுவாச மந்திரஞ் சொல்லவும்.

## சேசுநாதசுவாமி பாடுபட்ட தியானம்.

சர்வேசுரா சுவாமீ, நிகரில்லாத தயையினாலே உலகத்தை மீட்டு இரட்சிக்கிறதற்காகத் தேவரீர் மனுஷனாகப் பிறக்கவும், விருத்தசேதனப் படவும், யூதர்களினாலே புறக்கணிக்கப்படவும், குருத் துரோகியான யூதாசென்பவன் உம்மைக் கன்னத்திலே முத்தஞ்செய்து காட்டிக்கொடுக்கப் படவும், தேவரீர் கயிறுகளினாலே கட்டுண்டு குற்றமில்லாத செம்மறிப்புருவைபோலேபலிச் சேவப்படவும், ஆனாசன், கைப்பாசன், பிலாத்தன், எரோதனென்கிற இவர்களண்டைக்கு அவமானமாகக் கூட்டிக்கொண்டு போய் விடப்படவும், பொய்ச் சாட்சிகளினாலே குற்றஞ் சாட்டப்படவும், திருக்கன்னத்திற் கைகளினாலேயுந் திருமேனியிற் கசைகளினாலேயும் அடிக்கப்படவும், திருமுகத்திலே துப்பப்படவும் தூஷணங்களினாலே நிந்திக்கப்படவும், முண்முடி தரிக்கப்படவும். மூங்கிற் றடியால் அடிக்கப்படவும், திருமுகம் வஸ்திரத்திலே மூடப்படவும், திருத்தோளின்பேரிற் பாரமான சிலுவைமரத்தைச் சுமந்திக் கபாலமலைமட்டுக்குங் கூட்டிக்கொண்டு

போகப்படவும், திருச்சட்டை யுரியப்படவும், திருப்பாணிகளினாலே அறையுண்டு இரண்டு கள்ளருக்கு நடுவிற் சிலுவையோடு உயர்த்தப்படவும், தாகத்துக்குப் பிச்சோடே கலந்த தேவதாழ்ச்சிப் பழத்தின் புளித்த இரசத்தைக் குடிக்கக் கொடுக்கப்படவும், திருவிலாவானது ஈட்டியாற் குத்தித்திறக்கப்படவும் திருவுளமானீரே சுவாமீ, பாவியாயிருக்கிற அடியேன் இவையெல்லாம் பத்தியோடே தியானிக்க அநுக்கிரகஞ் செய்தருளும். தேவரீருடைய அர்ச்சியசிஷ்ட இந்த நிர்ப்பந்தங்களையும், சிலுவையையும் திருமரணத்தையும் பார்த்து நரகவேதனையைவிட்டு அகற்றி அடியேனை இரட்சித்து உம்முடைய வலது பாரிசத்திலிருந்த பச்சாத்தாபக் கள்ளனுக்குத் தந்தருளின மோட்ச பாக்கியத்தில் அடியேனையுங் கூட்டிக்கொண்டு போகவுங் கிருபைபண்ணியருளும் சுவாமீ. பிதாவோடேயும், இஸ்பிரீத்து சாந்துவோடேயும் சதாகாலஞ் சீவியருமாய் இராச்சிய பரிபாலனம் பண்ணுகிறவருமா யிருக்கிற ஆண்டவரே.—ஆமென்சேசு.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ, தேவரீர் சிலுவையிலே அறையுண்டிருக்கிறபொழுது, அளவில்லாத கஸ்திநோவுகளை அநுபவித்தீரே, விசேஷமாய் உம்முடைய திரு ஆத்துமந் திருச்சரீரத்தை விட்டுப் பிரியும்பொழுது மிகுந்த துக்கத்தை அடைந்தீரே; அந்தத் துக்கத்தைப்பார்த்துப் பாவியாயிருக்கிற அடியேன் சாகிறதருவாயிலே, உலகம், பசாசு, சரீர மென்கிற சத்துருக்களாலே என்னாத்துமத்துக்கு யாதொரு மோசம் வரவொட்டாமற் கிருபைபண்ணி யிரட்சியுஞ் சுவாமீ.—ஆமென்சேசு.

பிதாவாகிய சர்வேசுரா! தேவரீருக்கு உகந்த குமாரனுமாயெங்களுக்குக் கர்த்தருமா யிருக்கிற சேசுக்கிறீஸ்துநாதர் எங்களுக்காக இத்தனைப் பாடுகளைப் பட்டாரே அவருடைய திருமுகத்தைப்பார்த்து எங்கள் பாவங்களைப் பொறுத்துக் கொள்ளுஞ் சுவாமீ.

இப்படி மூன்றுவிசை சொல்லுகிறது.



# ஐம்பத்து மூன்றுமணிச் செபம் துவக்குகிற வகையாவது.

அளவில்லாத சகல நன்மைச் சுரூபியாயிருக்கிற சர்வேசுரா சுவாமீ! நீசமனுஷருமாய் நன்றியறியாத பாவிகளுமா யிருக்கிற அடியோர்கள் மட்டில்லாத மகிமைப் பிரதாபத்தைக் கொண்டிருக்கிற தேவரீருடைய சந்நிதியிலே யிருந்து, செபம்பண்ணப் பாத்திர மாகாதவர்களா யிருந்தாலுந் தேவரீருடைய அளவில்லாத தயையை நம்பிக்கொண்டு, தேவரீருக்கு ஸ்துதி வணக்கமாகவும் அர்ச். தேவமாதாவுக்குத் தோத்திரமாகவும் ஐம்பத்துமூன்றுமணிச் செபம் பண்ண ஆசையா யிருக்கிறோம். இந்தச் செபத்தைப் பத்தியோடே செய்து பராக்கில்லாமல் முடிக்கத் தேவரீருடைய ஒத்தாசைக் கட்டளைபண்ணி யருளுஞ் சுவாமீ.

¶சகலமான புண்ணியங்களுக்கும் விசுவாசமென்கிற புண்ணியம் அஸ்திவாரமா யிருக்கிறபடியினாலே முந்தமுந்த விசுவாச மந்திரஞ் சொல்லுகிறது.

¶பின்பு மெய்யான சர்வேசுரனு, மெய்யான மனுஷனு மொன்றாயிருக்கிற சேசுநாதசுவாமி படிப்பித்த பரமண்டல மந்திரஞ் சொல்லுகிறது.

¶பரிசுத்த கன்னியாஸ்திரீயா யிருக்கிற தேவமாதாவினுடைய பிரதான மகிமைகளைக் குறித்து மூன்று பிரதான புண்ணியங்களைக் கேட்கிறது.

பிதாவாகிய சர்வேசுரனுக்குக் குமாரத்தியா யிருக்கிற பரிசுத்த தேவமாதாவே, எங்களிடத்திலே தேவ விசுவாசமென்கிற புண்ணிய முண்டாகிப் பலனளிக்கும்படிக்கு உம்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும்.—ஒரு-பிரி.

சுதனாகிய சர்வேசுரனுக்குத் தாயாராயிருக்கிற பரிசுத்த தேவமாதாவே, எங்களிடத்திலே தேவநம்பிக்கை யென்கிற புண்ணிய முண்டாகி வளரும்படிக்கு உம்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும்.—ஒரு-பிரி.

இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரனுக்கு மிகவும் பிரிய முள்ளவளா யிருக்கிற பரிசுத்த தேவமாதாவே, எங்களிடத்தி

லே தேவபத்தி யென்கிற புண்ணிய முண்டாகி யதிகரிக்கும்படிக்கு உம்முடைய திருக்குமாரனை வேண்டிக் கொள்ளும்.—ஒரு-பிரி.

திரித்துவ தோத்திரஞ் சொல்லியபின்—ஒரு-பர.

## *சந்தோஷத்தேவ இரகசியங்கள்.

### முதல் தேவ இரகசியம்.

அர்ச்சியசிஷ்ட கன்னிகையே, உம்முடைய கிட்ட சம்மனசுவந்து மங்களவார்த்தை சொன்னதினாலே அளவிறக்கப்படாத சந்தோஷத்தை யடைந்து அவர்வந்த காரியத்தை யறிந்து மகா தாழ்ச்சியோடே அங்கீகாரம் பண்ணிச் சர்வேசுரனை உம்முடைய திருக்கர்ப்பத்திலே பிள்ளையாகத் தரித்தீரே, சர்வேசுரனுக்கு நீர் மாதாவானீ ரென்கிற சந்தோஷத்தைப் பார்த்து எங்களுக்காக மன்றாடிப் பத்தியினாலே யவரை நாங்க ளெங்க ளிருதயத்தி லெப்பொழுதும் வைத்திருக்கத் தக்கதாக உம்முடைய திருக்குமாரனாகிய அவரை வேண்டிக்கொள்ளும்.—பத்து-பிரி. ஒரு-திரி.

சம்மனசுக்களுக் கெல்லாம் பிரதான சம்மனசா யிருக்கிற அர்ச். மிக்கயேலென்கிற சம்மனசானவரே, நாங்களெத்தனைப் பாவிகளாயிருந்தாலும் நாங்கள் வேண்டிக்கொண்ட இந்தப்பத்துமணிச் செபத்தையும் அர்ச். தேவமாதாவின் திருப்பாதத்திலே உம்முடைய தோத்திரங்களோடே கூட ஒன்றாகக்கூட்டிப் பாதகாணிக்கையாக வைக்க உம்மைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.—ஒரு-பர.

* சந்தோஷத் தேவ இரகசியங்கள் ஆகமன காலமுதல் தபசுகால பரியந்தமும், துக்கத்தேவ இரகசியங்கள் தபசுகாலத்திலும், மகிமைத் தேவ இரகசியங்கள் தேவனுயிர்த்த ஞாயிறு துவக்கி ஆகமனகால பரியந்தமுஞ் செபிப்பது சரியானாலும் அவைகளை யவரவர் பத்திக்குத் தக்காப்போலே எக்காலத்திலுஞ் செபிக்கலாம்.



### இரண்டாம் தேவ இரகசியம்.

கன்னிகையாயிருக்கிற அர்ச். தேவமாதாவே, உமது சிநேகத்தால் உமக்குப் பந்துவாயிருக்கிற எலிசபேத்தம்மாளை மினைவப் போனபோது சர்வேசுரன் அவள் வீட்டிலே பண்ணின தயையைக்கண்டு அத்தியந்த சந்தோஷமானீரே அந்தச் சந்தோஷத்தைப் பார்த்து இலவுகிக சந்தோஷத்தை நாங்கள் சட்டைபண்ணாமல் ஞான சந்தோஷத்தின் இன்பமான இரசத்தைவருந்தித்தேடி யடையத்தக்கதாக உம்முடைய திருக்குமாரனாகிய அவரை வேண்டிக்கொள்ளும்.—பத்து-பிரி. ஒரு-திரி.

அர்ச். கபிரியேலென்கிற சம்மனசானவரே, நாங்கள் எத்தனைப் பாவிகளா யிருந்தாலும் நாங்கள் வேண்டிக்கொண்ட இந்தப் பத்துமணிச் செபத்தையும் அர்ச். தேவமாதாவின் திருப்பாதத்திலே உம்முடைய தோத்திரங்களோடேகூட ஒன்றாகக்கூட்டிப் பாதகாணிக்கையாக வைக்க உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.—ஒரு-பர.

### மூன்றாம் தேவ இரகசியம்.

சம்மனசுக்களுடைய இராக்கினியே, உமது கன்னிசுத்தத்துக்குப் பழுதில்லாமல் உலக இரட்சகரான சேசுநாதரைப் பெற்றதினாலே நீர் அநுபவித்த சந்தோஷ மெங்கள் வாக்கினாற் சொல்லிமுடியாதே, அந்தச் சந்தோஷத்தைப் பார்த்துப் பாவிகளாயிருக்கிற எங்களிருதயத்திலே அவர் ஞானவிதமாகவந்துபிறக்கத்தக்கதாக உம்முடைய திருக்குமாரனாகிய அவரை வேண்டிக்கொள்ளும்.—பத்து-பிரி. ஒரு-திரி.

அர்ச். இரபயேலென்கிற சம்மனசானவரே, நாங்கள் எத்தனைப் பாவிகளா யிருந்தாலும் நாங்கள் வேண்டிக்கொண்ட இந்தப் பத்துமணிச் செபத்தையும், அர்ச். தேவமாதாவின் திருப்பாதத்திலே உம்முடைய தோத்திரங்களோடேகூட ஒன்றாகக்கூட்டிப் பாதகாணிக்கையாகவைக்க உம்மைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.—ஒரு-பர.

## நான்காம் தேவ இரகசியம்.

பரிசுத்த கன்னியாஸ்திரீயா யிருக்கிற அர்ச். தேவமாதாவே, கோவிலுக்குக் கர்த்தராயிருக்கிற உம்முடைய திவ்விய பிள்ளையைப்பெற்ற நாற்பதாநாள் கோவிலிற் கொண்டுபோய் அநாதி பிதாவுக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்து மீட்டுக்கொண்டீரே, அப்போது அவ்விடத்தி லிருந்த மகாத்துமாக்கள் அவருடைய மகிமையை யறிந்து அவரை அநேகவிதமாகத் தோத்திரம் பண்ணினதைக்கண்டு மகா சந்தோஷப்பட்டீரே, அந்தச் சந்தோஷத்தைப்பார்த்துப் பத்திமுதலான புண்ணியங்களினாலே யெங்களாத்துமம் அவருக்கு யோக்கியமான கோவிலா யிருக்கத்தக்கதாக உம்முடைய திருக்குமாரனாகிய அவரை வேண்டிக்கொள்ளும்.—பத்து-பிரி. ஒரு-திரி.

அப்போஸ்தலர்களுக்குள்ளே பிரதான அப்போஸ்தலர்களா யிருக்கிற அர்ச். இராயப்பரே, சின்னப்பரே, நாங்களெத்தனைப் பாவிகளா யிருந்தாலும் நாங்கள் வேண்டிக்கொண்ட இந்தப்பத்துமணிச் செபத்தையும், அர்ச். தேவமாதாவின் திருப்பாதத்திலே உங்களுடைய தோத்திரங்களோடேகூட ஒன்றாகக்கூட்டிப் பாதகாணிக்கையாக வைக்க உங்களைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.—ஒரு-பர.

## ஐந்தாம் தேவ இரகசியம்.

பரலோகத்துக்கு இராக்கினியே, உம்முடைய பிள்ளையாகிய சேசுநாதருக்குப் பன்னிரண்டு வயது நடக்கிறபோது மூன்றுநாள் அவரைக்காணாமல் மகா துக்கத்தோடு தேடி மூன்றுநாள் சாஸ்திரிகள் சபைநடுவிலே கோவிலுக்குள் அவரைக்கண்டு பரிபூரண சந்தோஷத்தை யடைந்தீரே, அந்தச் சந்தோஷத்தைப்பார்த்து நாங்க ளொருபோதும் பாவத்தா லவரைவிட்டுப் பிரியாமலிருக்கப் பண்ணியருளும், யாதொருகாலம் அஞ்ஞானத்தால் பாவம்பண்ணி யவரைப் பிரிந்தோமேயாகிற் சீக்கிரமாகப் பச்சாத்தாபத்தினாலே அவரையண்டி அவரிடத்திலே அடியோர்கள் ஸ்திரமாயிருக்க உம்முடைய திருக்குமாரனாகிய அவரைவேண்டிக்கொள்ளும்.—பத்து-பிரி. ஒரு-திரி.



அப்போஸ்தலரா யிருக்கிற அர்ச். அருளப்பரே, நாங்களெத்தனைப் பாவிகளா யிருந்தாலும் நாங்கள் வேண்டிக்கொண்ட இந்தப் பத்துமணிச் செபத்தையும் அர்ச். தேவமாதாவின் திருப்பாதத்திலே உம்முடைய தோத்திரங்களோடேகூட ஒன்றாகக்கூட்டிப் பாதகாணிக்கையாக வைக்க உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.—ஒரு-பர.

அதிதூதரான அர்ச். மிக்கயேலே, தேவதூதர்களான அர்ச். கபிரியேலே, இரபயேலே, அப்போஸ்தலர்களான அர்ச். இராயப்பரே, சின்னப்பரே, அருளப்பரே, நாங்கள் எத்தனைப்பாவிகளா யிருந்தாலும் நாங்கள் வேண்டிக்கொண்ட இந்த ஐம்பத்து மூன்றுமணிச் செபத்தையும், அர்ச். தேவமாதாவின் திருப்பாதத்திலே உங்கள் தோத்திரங்களோடேகூட ஒன்றாகக்கூட்டிப் பாதகாணிக்கையாக வைக்க உங்களைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.—ஒரு-பர.

## துக்கத் தேவ இரகசியங்கள்.

## முதல் தேவ இரகசியம்.

அத்தியந்த தயையுள்ள அர்ச். தேவமாதாவே, உம்முடைய திருக்குமாரனாகிய சேசுநாதர் அடிபட்டுச் சிலுவையிலே அறையுண்டதுபோலே நீர் அடிபட்டுச் சிலுவையிலே அறைபடாதிருந்தாலும் அவர் தம்முடைய திருச்சரீரத்தில் அநுபவித்த வாதைகளெல்லாம் நீரும்முடைய மனதில் அநுபவித்தீரே, அவர் பூங்காவனத்திலே எங்கள் பாவங்களுக்காக மிகவுந் துக்கப்பட்டதினால் அவருடைய திருச்சரீரமெல்லாம் உதிரவேர்வையாக வேர்த்ததை நினைத்து நீர் திரளாய்விட்ட கண்ணீரால் தரையை நனைத்துச் சொல்லப்படாத துக்கசாகரத்தில் அமிழ்ந்தினீரே, அந்தத் துக்கத்தைப்பார்த்துப் பாவிகளாயிருக்கிற நாங்கள் பண்ணின பாவங்களுக்காக மிகவும் அழுது மனஸ்தாபப்பட்டுப் பாவவிமோசன மடையத்தக்கதாக உம்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும்.—பத்து-பிரி. ஒரு-திரி.

சம்மனசுக்களுக் கெல்லாம் பிரதான சம்மனசா யிருக்கிற அர்ச். மிக்கயே லென்கிற சம்மனசானவரே, நாங்க ளெத்தனைப்

பாவிகளா யிருந்தாலும் நாங்கள்வேண்டிக்கொண்ட இந்தப்பத்துமணிச் செபத்தையும் அர்ச். தேவமாதாவின் திருப்பாதத்திலே உம்முடைய தோத்திரங்க ளோடே கூட ஒன்றாகக் கூட்டி பாதகாணிக்கையாக வைக்க உம்மைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.—ஒரு பர.

## இரண்டாம் தேவ இரகசியம்.

[illegible]ம்பூரா இரக்கமுள்ள அர்ச். தேவமாதாவே, தேவசுபாவத்தைக் கொண்டிருக்கிற உம்முடைய திருக்குமாரன் சேசுநாதர் நிஷ்டூரராலே தூணோடு இறுகக் கட்டப்பட்டு வலுவாய் அடிபட்டதினாலே அவர் திருச்சரீரமுழுதுந் தழும்பும் உதிரக்காயமுமாய் நீசச் சேவகருடைய அசுத்த வுமிழ்நீரால் அவர் திருமுகம் அழுக்கடைந்ததுமா யிருக்கிறதைக் கண்டு துக்க சமுத்திரத்தில் அழுந்தினீரோ அந்தத் துக்கத்தைப்பார்த்துஎங்கள் பாவங்களுக்கு வருகிற கடினமான ஆக்கினைகளை யெல்லாஞ் சர்வேசுரன் நீக்கத் தக்கதாக உம்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும்.—
த்து-பிரி. ஒரு-திரி.

அர்ச். கபிரியேலென்கிற சம்மனசானவரே, நாங்கள் எத்தனைப் பாவிகளா யிருந்தாலும் நாங்கள் வேண்டிக்கொண்ட இந்தப் பத்துமணிச் செபத்தையும், அர்ச். தேவமாதாவின் திருப்பாதத்திலே உம்முடைய தோத்திரங்களோடேகூட ஒன்றாகக் கூட்டிப் பாதகாணிக்கையாக வைக்க உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.—ஒரு பர.

## மூன்றாம் தேவ இரகசியம்.

பொறுமைப் பிரவாக ஊருணியான அர்ச். தேவதாயாரே, பரலோக இராசாவாகிய உம்முடைய திருக்குமாரன் சேசுநாதரை யூதர்கள் பரியாச இராசாவாக ஸ்தாபித்து, அவருடைய திருத்தலையிலே முண்முடிவைத்து அடித்ததினாலே முள்ளுக்களுருவினதைப்பற்றி அவர் திருமுகத்தில் ஓடின இரத்தத்தை நீர் கண்டு அந்த முள்ளுக்களெல்லாம் உம திருதயத்திலே யூடுருவினதாக மிருந்த துக்கப் பட்டீரோ அந்தத் துக்கத்தைப் பார்த்துப்



பாவிகளாயிருக்கிற நாங்களெங்க ளிருதயத்திலிருக்கும் பாவமாகிய முள்ளுக்களை உத்தம மனஸ்தாபத்தினாலே பிடுங்கி யெறியத்தக்கதாக உம்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும்.—பத்து பிரி. ஒரு திரி.

அர்ச். இரபயேலென்கிற சம்மனசானவரே, நாங்கள் எத்தனைப் பாவிகளா யிருந்தாலும் நாங்கள் வேண்டிக் கொண்ட இந்தப் பத்து மணிச் செபத்தையும் அர்ச். தேவமாதாவின் திருப்பாதத்திலே உம்முடைய தோத்திரங்களோடே கூட ஒன்றாகக் கூட்டிப் பாத காணிக்கையாக வைக்க உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.—ஒரு பர.

## நான்காம் தேவ இரகசியம்.

பூலோகத்துக்கு ஆண்டவளா யிருக்கிற அர்ச். தேவமாதாவே, உம்முடைய திருக்குமாரனாகிய சேசுநாதனை யூதர்கள் கொல்லவேணுமென்று நிச்சயம்பண்ணி, அவருடைய திருத்தோளின்பேரிலே பாரமான சிலுவை மரத்தைச் சுமத்திக் கபாலமலைமட்டும் அவரைத் தள்ளிக்கொண்டு போகிறபோது நீருங்கூடத் துக்கப்பட்டு அழுதுகொண்டு போனீரோ, அந்தத் துக்கத்தைப்பார்த்துப் பாவிகளாயிருக்கிற நாங்களு மெங்களுக்கு வருகிறதுன்ப ஆக்கினையான சிலுவையை நல்லமனதோடு சுமந்துகொண்டு அவர் திருவடியைப் பின்பற்றி நடக்கத்தக்கதாக உம்முடைய திருக்குமாரனாகிய அவரை வேண்டிக்கொள்ளும்.—பத்து-பிரி. ஒரு-திரி.

அப்போஸ்தலர்களுக்குள்ளே பிரதான அப்போஸ்தலர்களாயிருக்கிற அர்ச். இராயப்பரே, சின்னப்பரே, நாங்களெத்தனைப் பாவிகளா யிருந்தாலும் நாங்கள் வேண்டிக்கொண்ட இந்தப் பத்துமணிச் செபத்தையும், அர்ச். தேவமாதாவின் திருப்பாதத்திலே உங்களுடைய தோத்திரங்களோடே கூட ஒன்றாகக் கூட்டிப் பாதகாணிக்கையாக வைக்க உங்களைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.—ஒரு பர.

## ஐந்தாம் தேவ இரகசியம்.

பாவிகளுக்கு அடைக்கலமா யிருக்கிற பரமதாயாரே, உம்முடைய திருக்குமாரன் சேசுநாதரை யூதர்கள் சிலுவை மரத்தோடே சேர்த்துச் சொல்லி லடங்காத கொடுமையாய் அவருடைய திருக்கைகளையுங் கால்களையும் பாரவிருப்பாணிகளாற் கடாவி யிருகள்ளருக்கு நடுவே எடுத்து நாட்டின பின்பு, மகா அவமானத்தோடே அவர் தொங்கி யிருக்கின்றதைக் கண்டதினாலே, மட்டில்லாத துக்கவியாகுலப்பட்டீரோ, நீருமது மனதிலே அநுபவித்த அவருடையபீடைகளையுஞ், சிலுவையையும்பார்த்துப் பாவிகளாயிருக்கிற அடியோர்கள் அந்தத் திவ்விய மாதிரிகையைக் கைக்கொண்டு, செவ்வழிநடந்து பாவப்பொறுத்த லடையத்தக்கதாக உம்முடைய திருக்குமாரனாகிய அவரை வேண்டிக்கொள்ளும்.—பத்து பிரி. ஒரு திரி.

அப்போஸ்தலரா யிருக்கிற அர்ச். அருளப்பரே, நாங்கள் எத்தனைப் பாவிகளா யிருந்தாலும் நாங்கள் வேண்டிக்கொண்ட இந்தப்பத்துமணிச் செபத்தையும் அர்ச். தேவ மாதாவின் திருப்பாதத்திலே உம்முடைய தோத்திரங்களோடே கூட ஒன்றாகக் கூட்டிப் பாத காணிக்கையாக வைக்க உம்மைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.—ஒரு பர.

அதிதூதரான அர்ச். மிக்கயேலே, தேவதூதர்களான அர்ச். கபிரியேலே, இரபயேலே, அப்போஸ்தலர்களான அர்ச். இராயப்பரே, சின்னப்பரே, அருளப்பரே, நாங்கள் எத்தனைப்பாவிகளா யிருந்தாலும் நாங்கள் வேண்டிக்கொண்ட இந்த ஐம்பத்து மூன்றுமணிச் செபத்தையும், அர்ச். தேவமாதாவின் திருப்பாதத்திலே உங்கள் தோத்திரங்களோடேகூட ஒன்றாகக் கூட்டிப்பாதகாணிக்கையாக வைக்க உங்களைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.—ஒரு பர.



# மகிமைத் தேவ இரகசியங்கள்.

## முதல் தேவ இரகசியம்.

வருஷகாலமுங், குளிர்காலமு நீங்கிப்போக வசந்தகாலம் வருகிறதுபோலப்பிரசந்நமா யிருக்கிற மோட்சத்தினுடைய இராக்கினியே, உம்முடைய திருக்குமாரனாகிய சேசுநாதர் பாடுபட்டு மரித்த துக்ககாலத்துக்குப்பின் மூன்றுநாள் கல்லறையை விட்டுச் செயசீலராய்ச் சூரியனிலுங் காந்தியான சுபசௌந்தரியசுடராய் உயிர்த்தெழுந்த அவரை நீர் கண்டதினாலே உமக்கு அளவற்ற மகிமை பொருந்திய சந்தோஷ காலம் வந்ததே, அந்த மகிமையைப் பார்த்து நாங்கள் பாவமாகிய மரணத்தைவிட்டு ஞானவிதமாய் உயிர்த்தெழுந் திருக்கத்தக்கதாக உம்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும்.—பத்து-பிரி. ஒரு-திரி.

சம்மனசுக்களுக் கெல்லாம் பிரதான சம்மனசா யிருக்கிற அர்ச். மிக்கயே லென்கிற சம்மனசானவரே, நாங்க ளெத்தனைப் பாவிகளா யிருந்தாலும் நாங்கள்வேண்டிக்கொண்ட இந்தப்பத்துமணிச் செபத்தையும் அர்ச். தேவமாதாவின் திருப்பாதத்திலே உம்முடைய தோத்திரங்களோடேகூட ஒன்றாகக் கூட்டிப் பாதகாணிக்கையாக வைக்க உம்மைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.—ஒரு பர.

## இரண்டாம் தேவ இரகசியம்.

அட்சயமும் பரிசுத்தமுமா யிருக்கிற அர்ச். தேவமாதாவே, மட்டில்லாத மகிமையு மாறாத திருச்செயமுங்கொண்ட உம்முடைய திருக்குமாரனாகிய சேசுநாதர் உத்தானமாயின நாற்பதாநாள் வானவர் அணியாகச்சூழ அதிபிதாக்களோடே ஒட்டோலகமாய்ப் பரலோகத்துக்கு ஆரோகண மானதைக்கண்டு அத்தியந்த சந்தோஷமகிமை அடைந்தீரே, அந்த மகிமையைப் பார்த்து இவ்வுலகத்திற் பரதேசிகளா யிருக்கிற நாங்கள் பரலோகத்தையே வருந்தி நாடிப் பரலோக பாக்கியமான மோட்ச ஆநந்தத்தைப் பெறத்தக்கதாக உம்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும்.—பத்து-பிரி. ஒரு-திரி.

அர்ச். கபிரியேலென்கிற சம்மனசானவரே, நாங்கள் எத்தனைப் பாவிகளா யிருந்தாலும் நாங்கள் வேண்டிக்கொண்ட இந்தப் பத்துமணிச் செபத்தையும், அர்ச். தேவமாதாவின் திருப்பாதத்திலே உம்முடைய் தோத்திரங்களோடேகூட ஒன்றாகக் கூட்டிப் பாதகாணிக்கையாக வைக்க உம்மைப்பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.—ஒரு பர.

## மூன்றாம் தேவ இரகசியம்.

தேவ நன்மைகளாற் பூரிக்கப்பட்டவளுமாய் வானோர்களுக்கு அரசியுமா யிருக்கிற அர்ச். தேவமாதாவே, உம்முடைய திருக்குமாரனுகிய சேசுநாதருடைய சீஷர்களோடு நீர் தியானத்திலிருக்கிறபோது அக்கினி நாக்கு ரூபமாய் இஸ்பிரீத்துசாந்து இறங்கிவந்து, உமது இருதயத்தையுஞ் சீஷர்களி இருதயத்தையுந் தேவ இஷ்டப்பிரசாதங்களினாலே நிரப்பினதினால் அத்தியந்த சந்தோஷமகிமை அடைந்தீரே, அந்த மகிமையைப்பார்த்து இஸ்பிரீத்து சாந்துவின் வரப்பிரசாதத்தை நாங்கள் அடைந்து தேவ சித்தத்தின்படியே நடக்கத்தக்கதாக உம்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும்.—பத்து-பிரி. ஒரு-திரி.

அர்ச். இரபயேலென்கிற சம்மனசானவரே, நாங்கள் எத்தனைப் பாவிகளா யிருந்தாலும் நாங்கள் வேண்டிக் கொண்ட இந்தப் பத்துமணிச் செபத்தையும் அர்ச். தேவமாதவின் திருப்பாதத்திலே உம்முடைய தோத்திரங்களோடே கூட ஒன்றாகக் கூட்டிப் பாதகாணிக்கையாக வைக்க உம்மைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.—ஒரு பர.

## நான்காம் தேவ இரகசியம்.

பூசிக்கப் படத்தக்க யோக்கியமுமாய்ப் புண்ணியவழிக்கு மாதிரிகையுமா யிருக்கிற அர்ச். தேவமாதாவே, உமது திரு ஆத்துமந் திருச்சரீரத்தை விட்டுப்பிரிந்து உம்முடைய திருக்குமாரன் சேசுநாதருடைய திருக்கரஞ் சேர்ந்த மூன்றாநாள் திவ்விய சுகந்த பரிமளவாசமும் மகா காந்தியு முடைத்தான உமது திருச்சரீரத்தோடு கூடக் கல்லறையைவிட்டு வானோர்களுடைய பரலோ

இராச் செபம்.

கத்திலிருந்து மதுரமான கான சங்கீதங்கள் தொனிக்கப் பரலோகத்துக்கு எழுந்தருளி அத்தியந்த சந்தோஷ மகிமையடைந்தீரே; அந்த மகிமையைப் பார்த்துப் பூலோகமென்கிற துக்க சாகரத்திலே மிகுந்த ஆபத்துக்குள் இருக்கிற எங்களை உமது கிருபாகடாட்சத்தினாலே நோக்கிப் பாவிகளாயிருக்கிற நாங்கள் மோக்ஷகரை யேறத்தக்கதாக உம்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும்.—பத்து-பிரி. ஒரு-திரி.

அப்போஸ்தலர்களுக்குள்ளே பிரதான அப்போஸ்தலர்களாயிருக்கிற அர்ச். இராயப்பரே, சின்னப்பரே, நாங்களெத்தனைப் பாவிகளா யிருந்தாலும் நாங்கள் வேண்டிக்கொண்ட இந்தப் பத்துமணிச் செபத்தையும், அர்ச். தேவமாதாவின் திருப்பாதத்திலே உங்களுடைய தோத்திரங்களோடே கூட ஒன்றாகக் கூட்டிப் பாதகாணிக்கையாக வைக்க உங்களைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.—ஒரு பர.

## ஐந்தாம் தேவ இரகசியம்.

நன்மைக்கடலுமாய் நம்பினவர்க்கு ஆதாரமுமா யிருக்கிற அர்ச். தேவமாதாவே, சிருஷ்டிக்கப்பட்ட சர்வ பொருள்களையும் பார்க்கச் சகல சுகிர்தங்களினாலே நீர் நிறைந்தலங்கரிக்கப்பட்டவளானபடியால் பரலோகத்துக்கு எழுந்தருளின வுடனே சகல அர்ச்சிய சிஷ்டவர்களையும்விட அதிகமான மோக்ஷ சம்பாவனை பெற்று, அர்ச். தமதிரித்துவத்தினால் வானோர்களுக்கெல்லாம் இராக்கினியாகக் கிரீடந்தரிக்கப்பட்டுச் சம்மனசுக்கள் மோக்ஷவாசிகள் எல்லோருக்கும் மேலாக உயர்த்தி ஸ்தாபிக்கப்பட்டு, நித்திய பேரின்ப வாழ்வுநிறைந்த மகிமை யடைந்தீரே, அந்தமகிமையைப் பார்த்து, நீரநுபவிக்கிற மோக்ஷானந்த பாக்கியத்தில் ஓர் அற்பப் பங்கு பாவிகளாயிருக்கிற அடியோர்களும் பெறத்தக்கதாக உம்முடைய திருக்குமாரனை வேண்டிக் கொள்ளும்.—பத்து பிரி. ஒரு திரி.

அப்போஸ்தலரா யிருக்கிற அர்ச். அருளப்பரே, நாங்கள் எத்தனைப் பாவிகளா யிருந்தாலும் நாங்கள் வேண்டிக்கொண்ட இந்தப் பத்துமணிச் செபத்தையும் அர்ச். தேவமாதாவின் திருப்

பாதத்திலே உம்முடைய தோத்திரங்களோடே கூட ஒன்றாகக் கூட்டிப் பாத காணிக்கையாக வைக்க உம்மைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.—ஒரு பர.

அதிதூதரான அர்ச். மிக்கயேலே, தேவதூதர்களான அர்ச். கபிரியேலே, இரபயேலே, அப்போஸ்தலர்களான அர்ச். இராயப்பரே, சின்னப்பரே, அருளப்பரே, நாங்கள் எத்தனைப் பாவிகளாயிருந்தாலும் நாங்கள் வேண்டிக்கொண்ட இந்த ஐம்பத்து மூன்று மணிச் செபத்தையும், அர்ச். தேவமாதாவின் திருப்பாதத்திலே உங்கள் தோத்திரங்களோடே கூட ஒன்றாகக்கூட்டிப் பாதகாணிக்கையாக வைக்க உங்களைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.—ஒரு பர.

## நூற்று ஐம்பத்து மூன்றுமணிச் செபஞ் செய்து முடிக்கிற வகையாவது.

அதிதூதரான அர்ச். மிக்கயேலே, தேவதூதர்களான அர்ச். கபிரியேலே, இரபயேலே. அப்போஸ்தலர்களான அர்ச். இராயப்பரே, சின்னப்பரே, அருளப்பரே, நாங்கள் எத்தனைப் பாவிகளாயிருந்தாலும் நாங்கள் வேண்டிக்கொண்ட இந்த நூற்று ஐம்பத்து மூன்று மணிச் செபத்தையும், அர்ச். தேவமாதாவின் திருப்பாதத்திலே உங்கள் தோத்திரங்களோடே கூட ஒன்றாகக் கூட்டிப் பாதகாணிக்கையாக வைக்க உங்களைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.—ஆமென்சேசு.

## *அர்ச்சியசிஷ்ட தேவமாதாவின் பிரார்த்தனை.

சுவாமீ கிருபையா யிரும்.
கிறீஸ்துவே கிருபையா யிரும்.
சுவாமீ கிருபையா யிரும்.

*இதைப் பத்தி மனஸ்தாபத்தோடு சொல்லும்போதெல்லாம் முந்நூறுநாட் பலனுண்டு.—௫-ம். சிக்ஸ்து.—௮-ம். கிளேமேந்து



கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.

கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.

பரமண்டலங்களிலே யிருக்கிற பிதாவாகிய சர்வேசுரா,—எங்களுக்குத் தயைசெய்து இரட்சியுஞ் சுவாமீ.

உலகத்தை மீண்டு இரட்சித்த சுதனாகிய சர்வேசுரா,—எங்களுக்குத் தயைசெய்து இரட்சியுஞ் சுவாமீ.

இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரா,—எங்களுக்குத் தயைசெய்து இரட்சியுஞ் சுவாமீ.

அர்ச்சியசிஷ்ட தமதிரித்துவமா யிருக்கிற ஏகசர்வேசுரா,—எங்களுக்குத் தயைசெய்து இரட்சியுஞ் சுவாமீ.

அர்ச். மரியாயே,
சர்வேசுரனுடைய அர்ச். மாதாவே,
கன்னியாஸ்திரீகளுக்குள்ளே உத்தம அர்ச். கன்னிகையே,
கிறீஸ்துவினுடைய மாதாவே,
தேவப் பிரசாதத்தின் மாதாவே,
மகா பரிசுத்த மாதாவே,
அத்தியந்த விரத்தியா யிருக்கிற மாதாவே,
பழுதற்ற கன்னியாஸ்திரீயா யிருக்கிற மாதாவே,
கன்னிசுத்தங் கெடாத மாதாவே,
மகா அன்புக்குப் பாத்திரமாயிருக்கிற மாதாவே,
ஆச்சரியத்துக்குரிய மாதாவே,
சிருஷ்டிகருடைய மாதாவே,
இரட்சகருடைய மாதாவே,
மகா புத்தியுடைத்தான கன்னிகையே,
மகா வணக்கத்துக்குரிய கன்னிகையே,
பிரகாசமாய் ஸ்துதிக்கப்பட யோக்கியமா யிருக்கிற கன்னிகையே,
சத்தியுடையவளா யிருக்கிற கன்னிகையே,
தயையுள்ள கன்னிகையே,
விசுவாசியா யிருக்கிற கன்னிகையே,
தர்மத்தினுடைய கண்ணாடியே,
ஞானத்துக்கு இருப்பிடமே,
எங்கள் சந்தோஷத்தினுடைய காரணமே,
ஞான பாத்திரமே,
மகிமைக்குரிய பாத்திரமே,
அத்தியந்த பத்தியுடைத்தான பாத்திரமே,
தேவ இரகசியத்தைக் கொண்டிருக்கிற உரோச வென்கிற புஷ்பமே,
தாவீது இராசாவினுடைய உப்பரிகையே,
தந்தமயமாயிருக்கிற உப்பரிகையே,

(எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.)

சொர்ன மயமா யிருக்கிற ஆலயமே,
வாக்குத் தத்தத்தின் பெட்டியே,
பரலோகத்தினுடைய வாசலே,
விடியற் காலத்தின் நட்சத்திரமே,
வியாதிக்காரருக்கு ஆரோக்கியமே,
பாவிகளுக்கு அடைக்கலமே,
கஸ்திப்படுகிறவர்களுக்குத் தேற்றரவே,
கிறீஸ்துவர்களுடைய சகாயமே,
சம்மனசுக்களுடைய இராக்கினியே,
பிதாப்பிதாக்களுடைய இராக்கினியே,
தீர்க்கதரிசிகளுடைய இராக்கினியே,
அப்போஸ்தலர்களுடைய இராக்கினியே,
வேதசாட்சிகளுடைய இராக்கினியே,
ஸ்துதியருடைய இராக்கினியே,
கன்னியாஸ்திரிகளுடைய இராக்கினியே,
சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய இராக்கினியே,
சன்மப் பாவ மில்லாம லுற்பவித்த இராக்கினியே,
மகா பூஜிதமான ஜெபமாலை இராக்கினியே,

(எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.)

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே,—எங்கள் பாவங்களைப் போக்கியருளுஞ் சுவாமி.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே,—எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளுஞ் சுவாமி.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே,—எங்களுக்குத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமி.

முதலோதி.—சேசுக்கிறீஸ்து நாதருடைய திருவாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரமா யிருக்கத்தக்கதாக,

துணைவர்.—சர்வேசுரனுடைய பரிசுத்தமாதாவே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக் கடவோம்.

சுவாமி முழுமனதோடே தண்டனாக விழுந்து கிடக்கிற இந்தக் குடும்பத்தைப் பார்த்து முப்போதும் பரிசுத்த கன்னிகையான முத்திப்பேறுபெற்ற மரியாயியுடைய வேண்டுதலினாலே சகல சத்துருக்களின் சர்ப்பனைகளிலே நின்று பிரசன்னராய்த்



தயைசெய்து இரட்சியும், இந்த மன்றாட்டுக்களை யெல்லாம் எங்களாண்டவரான சேசுநாதருடைய திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும்.—ஆமென்சேசு.

* சர்வேசுரனுடைய அர்ச்சியசிஷ்டமாதாவே இதோ உம்முடைய சரணமாக வோடிவந்தோம், எங்க ளவசரங்களிலே நாங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு நீர் பராமுகமா யிராதேயும், ஆசீர்வதிக்கப் பட்டவளுமாய் மோட்சமுடையவளுமா யிருக்கிற நித்திய கன்னிகையே சகல ஆபத்துக்களிலே நின்று எங்களைத் தற்காத்துக்கொள்ளும்.

முதலோதி.—அர்ச். கன்னிகையே, நானும்மை ஸ்துதிக்கக் கிருபை செய்தருளும்,

துணைவர்.—உம்முடைய சத்துருக்களை வெற்றிகொள்ள எனக்குச் சத்துவத்தைத் தந்தருளும்.

முதலோதி.—தேவன் தமது அர்ச்சியசிஷ்டவர்களில் ஆசீர்வதிக்கப்பட்டவரா யிருக்கிறார்.

துணைவர்.—ஆமென்சேசு.

## AVE MARIS STELLA.

## அர்ச். தேவமாதாவுக்குத் தோத்திர செபங்கள்.

சமுத்திரத்தி னட்சத்திரமே, சர்வேசுரனுடைய பூசிக்கப்பட்ட மாதாவே, நித்திய கன்னிகையே, பரலோகத்தின் பாக்கியமான வாசலே.

---

* தேவமாதாவுக்கும் அர்ச்சியசிஷ்டவர்களுக்கும் பதிதரால் சொல்லப்படுகிற நிந்தைக்குப் பரிகாரமாக காலமே, பின்னேரப்பட்ட திருவாக்கியங்களோடு கிருபைதயாபத்து மந்திரத்தையும், சாயந்திரம், சர்வேசுரனுடைய அர்ச்சியசிஷ்ட மாதாவே இதோ வும்முடைய, வென்று மிந்த மந்திரத்தோடு மேற்படி வாக்கியங்களையுஞ் சொன்னால் நாளொன்றிற்கு ௪௦௦-நாட் பலனுண்டு, ௭-ம். பத்திநாதர்.

காபிரியேலென்கிற சம்மனசினுடைய வாக்கிலேநின்று புறப்பட்ட மங்கள வார்த்தையைக் கேட்டவளே யேவையின் பெயரை மாற்றி யெங்களைச் சமாதானத்திலே நிலைநிறுத்தும்.

ஆக்கினைக்குப் பாத்திரமானவர்களுடைய கட்டுக்களை யவிழும்; குருடருக்குப் பிரகாசத்தைக் கொடும், எங்கள் பொல்லாப்புக்களைத் தள்ளும், சகல நன்மைகள் எங்களுக்கு வரமன்றாடும்.

நீரெங்களுக்குத் தாயாரா யிருக்கிறீரென்று காண்பியும், எங்களுக்காக அவதரித்த உம்முடைய திருக்குமாரன் சேசுநாதர் உம்மாலே யெங்கள் வேண்டுதலைக் கேட்கக் கடவாராக.

உத்தம கன்னிகையே, எல்லாத்திலுஞ் சாதுவே, நாங்கள் பாவங்களினின்று விடப்பட்டவர்களாகிச் சாதுக்களாகவுங், கற்புடையவராகவும் பண்ணியருளும்.

நாங்கள் சேசுநாதரைத் தரிசித்து நிரந்தரங் களிகூர்ந்திருக்கச் சுத்த நடக்கையைத் தந்து பயமில்லாத வழியிற் கூட்டிக்கொண்டு போகவு மநுக்கிரகம் பண்ணியருளும்.

சர்வேசுரனாகிய பிதாவுக்குத் தோத்திரம், உத்தம கிறீஸ்துவுக்குப் பூசை, இஸ்பிரீத்து சாந்துவுக்கு மங்களம், இந்த மூன்றுகளுக்கு மொரே யுத்தம தேவாராதனை யுண்டாகக் கடவது.— மென்சேசு,

* கிறீஸ்துவே, உம்மைச்சுமந்த வுதரமும், நீர் அமுதுண்ட கொங்கைகளும், பாக்கியம் பெற்றதுகளாமே.

மிகவும் மிகுந்த மதுரமுள்ள அர்ச். மரியாயே, ஒன்றான சர்வேசுரனைப் பழுதற்ற கன்னியாயிருந்து உமதுகர்ப்பத்திலே பிள்ளையாகத் தரித்தீரே வாழ்க. அத்தேவ சுதனைக் குறையற்ற கன்னிகையா யிருந்துகொண்டு பிறவித்துன்ப மில்லாமற் பெற்றீரே வாழ்க, அவரைப் பெற்றபின்னு மெப்போதும் பரிசுத்த கன்னியாஸ்திரீயா யிருந்தீரே வாழ்க. சர்வேசுரனுடைய அர்ச். மாதாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.—ஆமென்சேசு.

* அர்ச். லூக்கா ௧௧-ம் அதி, ௨௭-ம் வச. வேதவிளக்கம் ௪-அதி ௬௦-ம் பிரிவு முதற்காண்க.



தேவ சுவையுந் திவ்விய கன்னிகையுமான சர்வேஸ்வரனுடைய அர்ச். மாதாவே நீதியாதித்தனாகிய சேசுக்கிறீஸ்து உம்மிடத்தி லவதரித்ததினாலே நீரதிக பாக்கியவதியுமாய்ச் சகல தோத்திரங்களுக்கும் பாத்திரமுமா யிருக்கிறீர். நிர்ப்பாக்கியருக் குதவியாயிரும். அழுகிறபேர்களை அரவணையும், அல்லற்படுகிறவர்களுக் காறுதலாயிரும். சர்வசனங்களுக்காகமன்றாடும். பூசைசபைக்காகப் பிரார்த்தித்துக் கொள்ளும். உம்முடையமேற் பத்தியா யிருக்கிற ஸ்திரீ பூமான்களுக்காக மன்றாடும். உம்முடைய திருநாமத்தை, யாரார் கொண்டாடுகிறார்களோ அவர்க ளெல்லாரும் உமது உபகாரத்தின் பலனை யடையக் கடவார்கள்.

சர்வேசுரா சுவாமீ! தேவரீரை ஸ்துதிக்கிறவர்களுக்கு வெகுமானம் பண்ணுகிறீர். உம்முடைய திருவடியார்களுடைய மகிமைகளாற் பூசிக்கப்படுகிறீர். தேவரீருடைய திருவடியார்களாகிய அர்ச். இன்னாசியார், அர்ச். சவேரியா ரிவர்களுடைய புண்ணியங்களை ஸ்துதிக்கிற நாங்க ளிவர்களுடைய விரக்கமுள்ள வேண்டுதலின் பலனைக்கண்டுகொள்ளத் தக்கதாகப் பிரசன்னராய்த் தயை புரிந்திரட்சியும். இந்த மன்றாட்டுக்களையெல்லா மெங்க ளாண்டவரான சேசுநாதருடைய திருமுகத்தைப் பார்த் தெங்களுக்குத் தந்தருளும்.—ஆமென்சேசு.

## MAGNIFICAT.

### அர்ச். தேவமாதா சுவாமியைப் புகழ்ந்து வசனித்த பத்து வாக்கியங்கள்.

என்னாத்துமமானது ஆண்டவரை வணங்கித் தோத்திரம் பண்ணுகிறது.

என் னிரட்சணியமாகிய சர்வேசுரனிடத்தி லென்னாத்தும மானந்தமா யெழும்பி மன மகிழ்கின்றது.

தமது அடிமை யானவளுடைய நீசத்தனத்தைக் கிருபாகடாட்சத்தாற் பார்த்தபடியினாலே, இதோ எல்லாரும் இக்கால முதல் தலைமுறை தலைமுறையாக வென்னைப் பாக்கிய முள்ளவ ளென்பார்கள்.

வல்லப மிக்கவர் தம்முடைய பெருமையுள்ளதுகளை யென்னிடத்திற் செய்தருளினார். மேலும் அவருடைய நாமமானது ஆர்ச்சிய சிஷ்ட நாமந்தானே.

தமக்குப் பயந்திருக்கிறவர்களுக்கே தலைமுறை தலைமுறையாகத் தமது கிருபையைச் செய்வார்.

தம்முடைய கையின் பலத்தைக் காட்டித் தங்கள் தங்களிருதயத்தின் விசாரத்தினாலே கர்வமுள்ளபேர்களைச் சிதறப்பண்ணினார்.

பல முடைத்தானவர்களை யாசனத்தினின்று தள்ளித் தாழ்ந்தவர்களை யுயர்த்தினார்.

பசித்திருக்கிறவர்களைத் தம்முடைய நன்மையினாலே நிரப்பித் தனமுள்ளபேர்களை வறுமையுள்ளவர்களாக்கினார்.

அபிரா மென்பவருக்கும் ஊழியுள்ள கால மவருடைய சுதபரம்பரையாகிய வெங்கள் பிதாப் பிதாக்களுக்குஞ் சர்வேசுரன் திருவுளம் பற்றின படியே.

தமது கிருபையை நினைத்துத் தம்முடைய தாசராகிய இசுராயேல் சனங்களைப் பரிக்கிரகம் பண்ணினார்.

பிதாவுக்கும், சுதனுக்கும்; இஸ்பிரீத்து சாந்துவுக்கும், தோத்திரம் உண்டாகக் கடவது. ஆதியிலேயும், இப்பொழுதும், எப்பொழுதும், அநாதி சதாகாலமும், இருக்கும்படியே.—ஆமென் சேசு.

**கிருபை தயாபத்து மந்திரம் மற்றதும்**
கக-ம் பக்கங் காண்க.

¶ அமலோற்பவியான அர்ச். தேவமாதாவின் பிரதானமான ஐந்து மகிமைகளைக் குறித்து ஐந்து பிரியதத்த மந்திரம் வேண்டிக்கொள்ளுகிற வகையாவது.

க-வது.—பரலோகத்துக்கு இராக்கினியா யிருக்கிற அர்ச். மரியாயே, யெங்களுக்காக வும்முடைய திருக் குமாரனை வேண்டிக்கொள்ளும்—ஒரு பிரி.

உ-வது.—பூலோகத்துக்கு ஆண்டவளா யிருக்கிற அர்ச். மரியாயே யெங்களுக்காக உம்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும்.—ஒரு பிரி.



ங-வது.—சமுத்திரத்தி னட்சத்திரமா யிருக்கிற அர்ச். மரியாயே, எங்களுக்காக வும்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும்.—ஒரு பிரி.

ச-வது.—முப்போதுங் கன்னிகையான பரிசுத்தத்தனத்தைக் கொண்டிருக்கிற அர்ச். மரியாயே, யெங்களுக்காக வும்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும்.—ஒரு பிரி.

ரு-வது.—எங்களா லளவறுக்கப் படாத ஞானப்பிரகாசத்தைக் கொண்டிருக்கிற அர்ச். மரியாயே, யெங்களுக்காக வும்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும்.—ஒரு பிரி.

## சயன ஆராதனை.

சர்வேசுரா சுவாமி! மனுஷர் சயனத்தா லிளைப்பாற இராத்திரிகாலங் கட்டளையிட்டருளினீரே, உமக்கே தோத்திர முண்டாகக் கடவது. இன்றெனக்குச்செய்த சகல உபகாரங்களுக்கு முமக்குத் தோத்திரம்பண்ணி என்னாற் செய்யப்பட்ட பாவங்களையெல்லாம் பொறுத்தருள வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறேன். அவைகள் தேவரீருடைய அளவில்லாத மகிமைக்கும் நன்மைத்தனத்துக்கும் விரோதமா யிருக்கிறதினாலே முழுதுமவைகளை வெறுக்கிறேன், இந்த இராத்திரியிலே சடுதிமரணத்தினாலுந் துர்க்கனவு முதலான பசாசு சோதனைகளாலு மடியேனுக்கு மோசம்வரவொட்டாமற் காத்துக்கொள்ளும், ஆ! என் சேசுவே, என் மரணவேளையிலே யுமது இஷ்டப்பிரசாதத்தோ டிருந்து உமது திருவுளத்தை யாவலோடு தழுவி யுயிர்விடவும் உமதிராச்சியத்திலும்மோடு நிரந்தரம் அடியேன் இளைப்பாறவுங் கிருபைசெய்தருளும்.—ஆமென் சேசு.

## நித்திரை யொழுக்கம்.

¶ நீ நித்திரை செய்யப்போகையில் உன் படுக்கையைக் கல்லறையாக எண்ணி, நித்திரைசாயலாக மரணம் எத்தனை விரைவாய் வரலாமென்றும் அப்போது உலக சுக வெகுமான எண்ணங்களெல்லாம் எவ்விதமாமென்றுஞ் சிந்திப்பாய், சயன விளைப்பாற்றியாற் சுவாமிக்குப் பணிபுரிய அதிக சத்தியுண்டாக உன் சயனத்தை யவர் அமல திருவுளத்துக்குத் தூயமனதோடே ஒப்புக்கொடு. நித்திரையிலே நீ விடுஞ் சு

வாசமெல்லாம் நித்திரையற்ற பரமனாதரும் மற்றப் பரலோக வாசிகளும் இடைவிடாது செய்யுந் தோத்திரத்துக்கு ஒப்பாக வேண்டுமென்று விரும்பி உன்னிரட்சகருடைய திருக்கரத்தில் உறங்குவதாக எண்ணுவாய்.

*சேசுமரியாயே, சூசையே, என் கடைசி அவஸ்தையில் எனக்கு உதவிசெய்தருளுங்கள்.

நீ படுக்கையிற் சென்றபின் நித்திரை வராவிட்டாலும் அல்லது கொஞ்சந் தூக்கியபின் நித்திரை யகன்றாலும் மறுபடி நித்திரைபிடிக்கிற வரையில் செய்யவேண்டியது: "க-வது. செபமாலை சொல்லுகிறது. உ-வது. சாவு தீர்வை நரக மோட்சத்தைக் குறித்துத் தியானிக்கிறது. ௩-வது. உத்தரிப்பில் வேதனைப்படுகிற ஆத்துமாக்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறது. ௪-வது. பொது அல்லது தனி ஆத்துமசோதனைப் பண்ணுகிறது. ௫-வது. சீவியத்தைச் சீர்படுத்தி நித்தியத்தை உறுதிபண்ணிக்கொள்ளத் தகுந்த உபாயங்களை யோசிக்கிறது. ௬-வது. நரகத்தில் ஆத்துமாக்களபடும் கொடிய உபாதனைகளை நினைத்துச் சேசுநாதர்பூங்காவனத்தில் கொண்ட அகோர நடுக்கம் பயம் உபாதனைகளை நினைக்கிறது. ௭-வது. அர்ச்சியசிஷ்டர்கள் சம்மனசுக்களோடு தனிமையாயிருப்பதாக வெண்ணி அவர்களோடு சம்பாஷணைபண்ணுகிறது. ௮-வது. தளங்களுக்குக் கர்த்தராயிருக்கிற தேவனே நீர்பரிசுத்தர் பரிசுத்தர், பரிசுத்தராயிருக்கிறீர், உமது மகத்துவமும் பொருந்திய மகிமைப் பிரதாபத்தால் வானமும் பூமியும் சம்பூர்ணமாயிருக்கின்றன. என்னைப்படைத்த பிதாவுக்கும், என்னை இரட்சித்த சுதனுக்கும், எனக்கானந்த உபசாந்தியாகிய இஸ்பிரீத்து சாந்துவுக்கும், எனறென்றைக்கும் எல்லாப் படைப்புகளாலும், ஸ்தோத்திர முண்டாகக் கடவது. என் சீவிய கர்த்தாவே, சேசுவே வாழி" என்னு மிப்படிப்பட்ட மனவல்லயச் செபங்களையுஞ் செபிக்கவும்.

---

இதன் பிறகு கடைசி வேண்டுதல் சொல்லவும்.
மட்டில்லாத சருபியாயிருக்கிற. மற்றதும்,
௨௪௰ம் பக்கங் காண்க.

---

*இஃதைப் பத்தியோடு உச்சரிக்கும்போதெல்லாம் ௬௦௦-நாட் பலனுண்டு.



## இரண்டாம் வகை காலைச் செபம்.

பிதாவுடையவும் சுதனுடையவும் இஸ்பிரீத்து சாந்துடையவும் நாமத்தினாலே.—ஆமென்சேசு.

திரிகாலச் செபஞ் சொல்லவும்.

இதோ இருளின் திரை நீங்கப் பிரகாசக் கிரகந் தோன்றுகின்றது, பரலோக பூலோக பாதாள மென்னப்பட்ட மூன்றுலகங்களிலும் அடங்காத தேவாதி தேவனே! நான் இருகரங்குவித்து மெத்த தாழ்ச்சியோடு உம்மை நமஸ்கரிக்கிறேன். சர்வ இன்பத்தின் ஊருணியே! நித்திய சந்தோஷத்தின் வெள்ளமே! நான் உம்மை ஆவலாய்த் தாவி வணங்குகிறேன். தேவரீர் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் சொல்லியதெல்லாம் உயிருக்கொட்டி விசுவசிக்கிறேன். என் ஏக நித்திய ஆஸ்தியே! என்னை யுண்டு பண்ணின கர்த்தரே! உமதுபேரில் நான் கொண்டிருக்கிற அன்பினால் உமது பாதத்தில் உயிரைவிட ஆசிக்கிறேன். என்னேக நம்பிக்கையே! என்னல்ல இராசாவே! தேவரீருடைய தோத்திரத்துக்காக என் இரத்தமெல்லாஞ் சிந்த ஆசிக்கிறேன். நீர் எனக்குச் செய்த எண்ணி முடியாத நன்மைகளுக்காக நான் தாசியோடு தாசியாய்த் தாழ்ந்து, பயபத்தி பட்சத்துடனே உமக்கு நன்றியறிந்த தோத்திரம் பண்ணுகிறேன். சம்மனசுக்களோடும், அர்ச்சிய சிஷ்டவர்களோடும் தேவரீரைத் துதிக்க இச்சிக்கிறேன். உலகத்திலுள்ள சகலத்தையும் விட்டு உம்மை அபேட்சையாய்க் கைக்கொள்ள விருப்பங் கொள்ளுகிறேன், என் பஞ்சேந்திரியங்களின் பலமெல்லாங் கொண்டு, புத்தி மனது நினைவை முழுதும் பிரயோகம் பண்ணித் தேவரீரை யென் கண்ணாற் கண்டாற் போல உமது பாதத்தில் விழுந்து உமது சமுகத்தில் உல்லாசிக்கத் தேடுகிறேன். படைக்கப்பட்ட வஸ்துக்கள் பேரில் நாடுகிற நாட்டத்தைவிட்டுச் சீவிய ஊருணியாகிய உம்மையே நோக்கி நாடுகிறேன். பூலோகத்திலுள்ள வஸ்துக்களைக் கொண்டு உம்மைத் துதிக்கிறேன். சகல யுகங்களின் கர்த்தரே! பூலோக ஆரம்பந் தொடங்கி யிதுவரையில் செய்யப்பட்டதும், இனிச் செய்யப்படப் போகிறதுமான பலிகளையும், துதிகளையும், உமக்கு ஒப்புக் கொடுக்கிறேன். ஊருவன, நடப்பன, பறப்பனவற்றோடு

உம்மை வாழ்த்தி உம்மில் உறைய ஆசைப்படுகிறேன். இன்று நான் யாதோர் பாவத்தில் விழாமலிருக்கப் பண்ணியருளுஞ் சுவாமீ. தந்திர மயக்கங்களில் நின்றென்னை மீட்டருளும், எனது கிரியைகள் நினைப்புகள் யாவும் உமது ஊழியத்திற் செலுத்தப்பட அநுக்கிரகஞ் செய்தருளும், நான் உம்மில் மூழ்கிப்போகவும், உமது வரப்பிரசாதங்கள் என்னிருதயத்தில் ஏராளமாய்ப் பாயவுஞ் செய்தருளும். உபவாச ஒறுத்தலால் நான் உமது திருக்கற்பனைகளை அநுசரிக்கப் பண்ணியருளும். என் சந்தோஷ வெள்ளமே! எனக்குத் திருப்தியான ஆஸ்தியே! என் ஆனந்த மோட்சமே! வேதம் என்னிடம் வந்து உறையவும், உமது இஸ்பிரீத்துசாந்து சம்பூரணமாய் எனக்கு அகப்படவும், உலக காரியங்கள் எனக்குக் கசப்பாகத் தோன்றவுஞ் செய்தருளுஞ் சுவாமீ. நான் இந்நாளிற் செய்யுங் கருமங்களையும், விடுஞ் சுவாசங்களையும், நடக்கும் நடைகளையும், நினைக்கும் நினைவுகளையும் தேவரீருக்கு ஒப்புக் கொடுக்கிறேன். ஆகாசத்தில் அண்டகோளங்களும், பூமண்டலத்தில் சமுத்திரங்களும், பாதாளத்தில் அரும் பொருள்களும் உம்மால் அசைவுபெற்று உமது சித்தப்பிரகாரம் ஆடுகிறது போல என் சித்தம் புத்தி ஞாபகம் பஞ்சேந்திரியங்கள் யாவும் உம்மில் ஆடப் பண்ணியருளும். மோட்சத்தில் தேவமாதா, சம்மனசுக்கள், அர்ச்சிய சிஷ்டவர்களால் உமக்கு எத்தோத்திரம் புகழுண்டாகிறதோ, பூலோகத்தில் நடக்குந் தேவபலிகளாலும், அருந்தவத்தோருடைய செபங்களாலும் உமக்கு எவ்வளவு தோத்திரம் உண்டாகின்றதோ அம்மாத்திரம் வணக்கந் துதி, நீசவஸ்துவாகிய என்னால் இன்று உமக்கு உண்டாக ஆசிக்கிறேன். என் புத்தி நினைவு கொண்டமட்டும் உம்மை என்னுக்குள் அடக்கி அநுபவிக்க அளைகடந்த விருப்பங் கொள்ளுகிறேன். பளுவுள்ள மாமிசத்தோடும் விகாரங் கொண்ட தத்துவங்களோடும், இப்பாக்கியம் எனக்குக் கிடைக்காதென்கிறதினால் என்னுயிரை விட்டாகிலும் உம்மில் மூழ்கி ஆனந்த வெள்ளவாரியாகிய உம்மில் அமிழ்ந்த அபேட்சிக்கிறேன். கருணாகரக் கடவுளே! என் கடந்த இலட்சணமுள்ள சர்வேஸ்வரா! என்னேக நம்பிக்கையே! கடந்த காலத்தில் நான்செய்த தப்புறைகளை மன்னியும், நான் உமது அருளைக்கொண்டு செய்த அற்பப் புண்ணியங்களை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். நீர் செய்த சகல உபகாரங்களுக்



குக் கைம்மாருக உமது நேசத்திருக்குமாரனின் பேறு பலன்களை எல்லாம் எனது சொந்த ஆஸ்திபோலெடுத்து உமக்களிக்கிறேன். நிகழ்காலத்தில்விசேஷமாய் இன்றுநான்செய்யும் நற்காரியங்களையெல்லாம் உமது திருப்பாதத்திற் காணிக்கையாக வைக்கிறேன். இன்று எனக்கியாதோர் பிசகுவராமற் காத்தருளுஞ் சுவாமீ. எதிர்காலத்தி லென்னவருமோ அறியேன், என் துர்ப்பலத்தால் வருங்காலத்தில் நான் மோசம் போகாமல் என்னாயுசு முழுதும் நானுமது ஊழியத்தில் நாள் கழித்து வரும்படி அநுக்கிரகித் தருளுஞ் சுவாமீ.—ஆமென்சேசு.

௫௯-மணிச்செப மற்றதும் ௧௯-ம். பக்கங்காண்க.

## இரண்டாம் வகை மாலைச் செபம்.

பிதாவுடையவுஞ், சுதனுடையவும், இஸ்பிரீத்து சாந்துடையவும், நாமத்தினாலே.—ஆமென்சேசு.

திரிகாலச் செபம் செபிக்கவும்.

ஆனந்த சந்தோஷங் கொண்டு பரலோகத்தி லிருக்கின்ற சம்மனசுக்களே! பூமண்டலத்தி லிருக்கிற சகலமான படைப்புகளே! ஆண்டவனைத் துதித்து நமஸ்காரம்பண்ண என்னுடனே வாருங்கள். ஆண்டவரே! நானென் பாவங்களைச் சங்கீர்த்தனம் பண்ணிக்கொண்டு நீர் எனக்குச் செய்த எண்ணிறந்த உபகாரங்களைப் புத்தியில் நினைத்துக் கொண்டுபயபத்தியோடே நடுநடுங்கித் தாசியோடு தாசியாய் உமது தெய்வ சந்நிதியிலே விழுந்து உம்மை ஆராதித்து நமஸ்காரம் பண்ணுகிறேன். ஆண்டவரே! நீரேபெரிய தேவனுமாய், என்னை யுண்டுபண்ணினவருமாய் எல்லாச் சந்தோஷங்களுக்கும், நன்மைகளுக்கும் ஊருணியுமாய், உண்மையின் உப்பரிகையுமா யிருக்கிறீர். உலகத்தின்பேரி லிருக்கப்பட்ட சகல மனிதர்களுக்கும், அமுது கொடுத்து அவர்கள் பாவங்களை அடிக்கடி பாராட்டாமல் பொறுத்து ஆண்டு வருகிறீர். பூமியின் ஆழங்களையும், உமது திருக்கண்கள் பார்க்கின்றன. சமுத்திரமும் உம்முடையது, வெட்டாந்தரையும் உமதுகரம் உருவாக்கினது. நீர்என்னுடையகடவுள், நான்உமது சிருஷ்டிப்பும், உமது மேய்ச்சலின் ஆடுமா யிருக்கிறேன். நீரென்னை யுருவாக்கின நாள்

முதற்கொண்டு இதுவரைக்கும் என் பாவங்களினாலே நான் நரகத்தில் விழாமற் காப்பாற்றி உமது அளவுகடந்த இரக்கத்தால் எனக்குச் செய்த உபகாரங்களுக்காகவும், விசேஷமா யின்று செய்த நன்மைகளுக்காகவும், என் சத்துருவன் கொண்டமட்டும் அன்போ டெணிந்து உமக்கு நன்றியறிந்த தோத்திரம் பண்ணுகிறேன். இதுவரையில் என்சொந்த துர்ப்பலத்தினாலேயும், புத்தியின் கெடுதியினாலேயும், பாவப் பழக்கங்களினாலேயும், நானே யெனக்குத் தேடிக்கொண்ட ஆபத்தில்நின்று இரட்சித்ததற்காக உம்மை வாழ்த்தித் துதிக்கிறேன். இந்த இராத்திரிவரையிலே யென்பாவங்களுக்குச் சரியான தண்டனை யிடாமல் என்னை நிலை நிறுத்தி உயிர்வாழ வைத்ததற்காக உமது தெய்வ சந்நிதியிலே என் பஞ்சேந்திரியங்களையும், உள்ளிந்திரியங்களையும், ஒடுக்கிக்கொண்டு பட்ச வினயத்துடனே என் கிரியைகளை உமது பாதத்தில் வைத்து உம்மை வாழ்த்திப் போற்றிப் புகழ்ந்து என் நீசத்தனத்துக்குத் தக்க பிரகாரம் உமக்கு நன்றியறிந்த தோத்திரம் பண்ணுகிறேன். நாளினிவாழப்போகிற வாழ்நாட்களையும், அதிற் செய்யப்போகிற கிரியைகளையும், உமக்கொப்புக் கொடுக்கிறேன். உலகத்தில் தருமாத்துமாக்கள் செய்யுஞ்செபதவப் புண்ணியங்களையும், உலகத்தில் பலிபீடங்களில் உமக்கிடப்படுகிற உத்தமான தெய்வபூசைகளையும், நமஸ்காரம் பொருந்திய கைவேத்தியங்களையும், இதினிமித்தியத்துக் காகவே யுமக் கொப்புக் கொடுக்கிறேன். நான் தேவரீருக்குச் செய்ய வேண்டியதுமாய், என் னிர்ப்பாக்கியத்தி னிமித்தம், என்னாற் செய்யக் கூடாததுமான கடமைகளுக்காகப் பரலோகத்தில் உமது தெய்வ சந்நிதானத்திலே உமது தூதர்கள் உமது பாதத்திலே வைக்குங் காணிக்கைகளை யுமக்கொப்புக் கொடுக்கிறேன். இதுவரையி லென்னைக் காப்பாற்றியது போல இந்த இராத்திரி காலத்திலு மென்னைக்காப்பாற்ற மெத்த பத்திப் பற்றுதலோடு உம்மைப் பார்த்து மன்றாடுகிறேன். வெளியாபத்துகளில் நின்றும், துர்க்கனவு முதலான சோதனைகளில் நின்றும் என்னை இந்த இராக்காலத்தில் இரட்சித் தருளும். என்னைப் படைத்த பிதாவே! எனக்குமது திருக்கர ஆசீர்வாதந் தந்தருளும். தேவசுதனே என்னைக் கையேற்றுக் கொள்ளும். என்னை ஆதரித்துக் காப்பாற்றும். இஸ்பிரீத்து சாந்துவே! என்னைச் சகலமான ஆபத்துக்களிலும், நின்று காப்பாற்றி யருளும்.



அர்ச். தேவமாதாவே! பாவிகளுக் கடைக்கலமே, என் நல்லதாயே! எனக்காக அடைந்துதந்த உபகாரங்களுக்காக உம்மைப் பூசித்து உமக்கு நன்றி யறிந்த தோத்திரம் பண்ணுகிறேன்.

சகல சம்மனசுக்களே ! சகல மோட்சவாசிகளே ! உங்களை நமஸ்கரித்து இந்த இரவில் எனக்கு ஒத்தாசையாக வர உங்களை மன்றாடுகிறேன்.

என் காவலான சம்மனசானவரே! நான்பேர்கொண்ட அர்ச்சியசிஷ்டவரே! (பெயரை யுச்சரிக்கவும்,) உங்களை நமஸ்கரிக்கிறேன், இந்த இராத்திரி காலத்தில் எனக் குதவியாக வாருங்கள். —ஆமென்சேசு.

ஐம்பத்து மூன்றுமணிச் செபம் மற்றதும் ௨௯-ம் பக்கங் காண்க.

## ALMA REDEMPTORIS.

### ஆகமனகால முதல் ஞாயிறு தொடங்கிக் கர்த்தர்பிறந்த திருநாளுக்கு முன்னுள் மட்டுஞ் சொல்லத் தகுஞ் செபம்.

இரட்சகருடைய பரிசுத்தமாதாவே! எகும் வழியான பரகதிவாசலே, சமுத்திரத்தின் தாரகையே, பாவத்தில் வீழ்ந்தவர் எழுந்திருக்கப் பரிதபிக்கையில் உமது வேண்டுதலால் உதவி யருளும். உலகத்தியல்பு அதிசயிக்க உம்மைப் படைத்தவரைப் பெற்றதாயே, பெறுமுன்னும் பெற்றபின்னுங் கன்னிகையே, தேவதூதனுடைய மங்களவாய் மொழியைக் கேட்டுப் பாவிகள்பேரில் இரக்கமாயிரும்.

முத.—ஆண்டவருடைய சம்மனசானது மரியாயி யுடனே விசேஷஞ் சொல்லிற்று.

துணை.—அவள் இஸ்பிரீத்து சாந்துவினாலே கர்ப்பிணியானாள்.

பிரார்த்திக்கக் கடவோம்.

சர்வேசுரா சுவாமீ சம்மனசு சொன்னதினாலே,—மற்றதும். —(௪-ம்.) பக்கங்காண்க.

## கர்த்தர் பிறந்த திருநாளுக்குப்பின் சொல்லத்தகுஞ் செபம்.

இரட்சகருடைய பரிசுத்த மாதாவே.—மற்றதும். ௩௩-ம். பக்கங் காண்க.

முதலோதி.—திருப்பேறு பெற்றபின்னுஞ் சிதைவில்லாத கன்னிகையே,

துணைவர்.—சர்வேசுரனுடைய தாயாரே, எங்களுக்காக மன்றாடும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுரா சுவாமி பாக்கியவதியான அர்ச். மரியாயி யுடைய கன்னிமை குன்றாத திருக்கருப்பத்திலே மனுக்குலத்துக்கு நித்திய இரட்சணியத்தின் சம்பாவனையைத் தந்தருளினீரே, எங்கள் சீவ காரணரான சேசுக் கிறீஸ்துவை எங்களுக்குத் தந்தருளின அந்தத் தேவதாயார் எங்களுக்காகத் தேவரீரைக் கேட்டு மன்றாட்டுக்களின் பலனை எங்கள் அவசரங்களிலே நாங்கள் கண்டுகொள்ளத்தக்கதாகத் தேவரீரை வேண்டிக் கொள்ளுகிறோம்.—ஆமென்சேசு.

## AVE REGINA CŒLORUM.

## காணிக்கைமாதா திருநாளுக்குப் பின் பெரிய புதன்கிழமை சாயங்காலமட்டுஞ் சொல்லுஞ் செபம்.

பரலோகத்துக்கு இராக்கினியே வாழ்க, சம்மனசுக்களுக்கு இறைவியே வாழ்க, உலகத்தைப் பிரகாசிப்பிக்கவந்த பரஞ்சோதியாகிய கர்த்தரெழுந்தருளின திரு வாசலே வாழ்க, தேவகனியைத்தந்த தூய்மையான திவ்விய பூங்கொடியே வாழ்க, சகல கன்னியாஸ்திரீகளிலும் மகிமை பொருந்திய அதிசயசுந்தரியரூப லாவண்ணிய கன்னிகையே களிகூரும்; ஆராதனைக்குப் பாத்திரமான வும்முடைய திருக்குமாரனிடத்தி லெங்கள் பாவப்பொறுத்தலுக்காக மன்றாடும்.



முதலோதி.—அர்ச். கன்னிகையே நானும்மை ஸ்துதிக்கக் கிருபை செய்தருளும்.

துணைவர்.—உம்முடைய சத்துருக்களை வெற்றிகொள்ள வெனக்குச் சூத்துவத்தைத் தந்தருளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

தயாபர சர்வேசுரா சுவாமி! எங்கள் துர்ப்பலத்துக்கு உமது திருச்சரணக் காவலைக் கட்டளையிட்டருளும். தேவமாதாவை நினைத்துக் கொண்டாடுகிற நாங்கள் அந்தத்திவ்விய தாயாருடைய வேண்டுதலுதவியாற் பாவமாகிய மரணத்திலே நின்று உயிர்க்கும் படிக்கு அனுக்கிரகஞ் செய்தருளும். இந்த மன்றாட்டுக்களையெல்லா மெங்களாண்டவரான சேசுநாதருடைய திருமுகத்தைப்பார்த் தெங்களுக்குத் தந்தருளும்.—ஆமென்சேசு.

---

முன் சொன்னதற்கு வதிலாய்ப் பெரிய புதன்கிழமைச் சாயங்காலந் துவக்கிப் பெரிய சனிவாரங் காலைமட்டுஞ் சொல்லத்தக்கது.

கிறீஸ்துவானவர் நமக்காக மரணமட்டுங் கீழ்ப்படிதலானார், மேலுஞ் சிலுவையிலே மரித்தார்.

ஆதலால் சர்வேசுரன் அவரைஉயர்த்தி, எல்லாநாமத்துக்கும் மேலான நாமதேயத்தை அவருக்குத் தந்தருளினார்.—பரமண்டலமந்திரம்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுராசுவாமி எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் பாவிகளாகிய யூதர்களுடைய கையிற் காட்டிக் கொடுக்கப்பட்டுச் சிலுவையி னிர்ப்பந்தத்தை அனுபவித்து இரட்சித்தருளின இந்தக்குடும்பத்தைக் கிருபைக் கண்கொண்டு பாரும். இத்தமன்றாட்டைத் தேவரீரோடும் இஸ்பிரீத்து சாந்துவோடும் ஏக தேவனுமாய்ச் சதாகாலஞ் சீவியருமாய்ப் பரிபாலனம் பண்ணுகிறவருமா யிருக்கிற சேசுநாதரைக் குறித்து எங்களுக்குத் தந்தருளும்.—ஆமென்சேசு.

## SALVE REGINA.

## அர்ச். தமதிரித்துவத்தின் திருநாள்

### தொடங்கி ஆகமனகாலபரியந்தஞ் சொல்லத்தகுஞ் செபம்.

கிருபை தயாபத்து.—மற்றதும்.—(கக-ம்.) பக்கங்காண்க.

~~~~~~~~

### எக்காலத்திலு மோதல்.

தேவ ஸ்நேகத்தின் மாதாவே பரிசுத்த மரியாயே இடைவிடாம லடியேனுக்காக வும்முடைய திருக்குமாரனை மன்றாடி நானொருகாலும் சாவான பாவத்தில் விழாம லென்னுயிர்க் காலமெல்லா மவரையும் உம்மையு மநந்த பத்தியோடே சேவித்து உம்மோடேகூட மோட்ச இராச்சியத்தில் அவருடைய பேரின்ப தரிசனத்தை அடையும்படிக்கு அவருடைய அநுக்கிரகத்தை எனக்குக் கேட்டருளும்.—ஆமென்சேசு.

~~~~~~~~

### மரியாயி யென்கிற திருநாமத்தின் வருணிப்பு.

மகிமையில் உத்தமமான மரியாயி என்கிற நாமம், மகிமையில் நிகரில்லாத நாமம், மகாகருணையாற் றேவபிதாவினால் இடப்பட்ட நாமம், மகிமை பொருந்திய தேவ தூதனால் அறிவிக்கப்பட்ட நாமம், மனோரூபிகளுக் குள்ளே முதல் நமஸ்கரிக்கப்பட்ட நாமம், மனுலோக தேவலோகத்திற் கொண்டாடப்பட்ட நாமம், மகிமைக்கு முதலெழுத்து கொடுக்கிறநாமம், மாதாவைக்கூப்பிட முதல் எழுத்துவேண்டிய நாமம், மனுஷர் ஈடேற்றத்திற்கு நிமித்தமான நாமம், மனுஷ சன்மத்திற்கு ஆசீர்வாதம் பெறுவித்தநாமம், மனுஷசாபம் நீக்கின நாமம், மகாதேவமுயற்சி பொருந்திய நாமம், மரணம், நரகம், அச்சம் அகற்றிய நாமம், மகா சமுத்திர யாத்திரைக்கு உத்திராதி நட்சத்திர மென்ற நாமம், மகா ஆபத்துக் களுக்கு உடனே சகாயங்கொடுக்கிற நாமம், மனச்சலிப்பெல்லாம் நிவாரண மாக்குகிற நாமம், மனப் பிரியமான சகல சுக



சம்பத்தை ஈகிறநாமம், மனுஷருக்கு ஏகஅடைக்கலமான நாமம், மரியாயி யென்கிற இந்த உத்தமமான நாமம், இந்தத் திரு நாமத்தை மகா பத்தியோடே நான் நித்தமும் ஸ்துதிப்பேனாக.

~~~~~~~~

### அர்ச். தேவமாதாவுக்குச் செபம்.

நமோ மாமரியாயே, சூரியப் பிரகாசத்திலும் அதிக பிரகாசம் பிரகாசிக்கிறதுமாய், சந்திர விம்பத்திலும் அதிகருபலாவருணிய வடிவுமாய்ச் சகலசவுந்தரிய அலங்காரங்கொண்ட நீதிஆதித்தனை உதயமாக்கின மாதாவுமா யிருக்கிறது நீர்தாமே, உம்முடைய மகிமையை எவ்விதமாய் வருணிப்பேன்! உமது மணிமகுடஞ் சூட்டின சிகரம் எங்களை மோட்சமுடிபெற அழைப்பது, உமது வைரிய ஒளியான கண்கள் மூடருக்கு ஞானத்திருஷ்டி கொடுப்பது, உமது சண்பகப் புஷ்ப அலங்கார செவிகள் எங்கள் மன்றாட்டுக்களை மனோச்சாகமாய்க் கேட்பது, உமது அகமலர்ந்த திருமுகம் துக்க சோபம் நிறைந்த மனச்சித்தங்களை ஆறுதலாக்குவது, உமது தர்ம சுகந்தம் எங்கள் பாவ துர்க்கந்தங்களை அகற்றுவது, உமது திருவுதரத்தில் ஆசீர் வதிக்கப்பட்ட கனி மோட்சவாசிகளுக்கு ஆநந்தம் பூரிப்பிக்கிறது, சர்வேசுரனுக்குப் பிறகு உம்மைப்பார்க்கமகிமை வல்லபமுள்ளவல்லபி இல்லை, உம்மிலும் அதிக சுத்த ஆத்துமா இல்லை, உம்மைப் பார்க்க மனோரூபிகளில் புகழ்பெற அதிக பேறு பெற்றவ ரில்லை, ஆகையால் மோட்சம் பெற்ற சகல மனோரூபிகளுக்கு மேலான ஆசனம் பெற்றிருக்கிறீர். இப்படிப்பட்ட உமது குண மகிமையைப் பிரசங்கிக்க என் மனோ வாக்கு போதாததினால், சமஸ்த தர்மாத்துமாக்களுடைய வாக்கால் சொல்லப் படுகிற சகல ஸ்துத்தியங்களையும், உமக்கு ஒப்புக் கொடுக்கிறேன். உம்முடைய தயாபாக் கடாட்சம் என்னிலிருந்து விலக்கக்கடவதல்ல, எனது பிரார்த்தனைகள் மறுக்கக்கடவதல்ல, எவனாகிலும் உம்மைப் பிரார்த்தித்து நீர் கேளாமல் இருந்த துண்டோ? எவனாகிலும் உமது சலுகையைக் கேட்டு அடையாமற் போனதுண்டோ? எவனாகிலும் உமக்குப் பணிசெய்து சலுகை பெறாமல் இருந்த துண்டோ? அப்படியே உம்முடைய சகாயம் அடையாமற் போன யாதொருவன் இருப்பானாகில், உம்மை இரக்கத்தின் மாதா வென்று கூப்பிடக் காரியமே
~~~~~~~~

ன்? உமது வல்லமையைப் புகழக் காரிய மென்ன? அதனால், இரக்கத்திற்கும் வல்லமைக்கும் உமக்குச்சமானம் வேறில்லாததினால், உம்முடைய அடைக்கல மென்கிற உத்தரீயத்திற் குள்ளே அ[illegible]யனை மறைத்துவைத்து, இவ்வுலகத்தில் சகல ஆபத்துக்கள் தற்காத்து துக்கத்தில் அரவணைத்து நீர் இருக்கிற மோட்ச இராச்சியத்திலே கூட்டிப்போகக் கிருபைசெய்தருளும்.—ஆமென்சேசு.

நமோ மாமரியாயே! அநாதிதேவ பராபரனுடைய மாதாவே ஆயிரம் ஆயிரமுறை பாக்கியம்அதிகரித்த இராஜேஸ்வரியே. உமது குமாரனுக்குப் பின் சகல உலகப்பொருள் பரிபாலனம் பண்ணுகிறது நீர், சகல உலக யுகங்களும் பரம்பரைகளு மும்மைநமஸ்கரித்து உம்மாற் புகழ்ச்சி பெறுவது மல்லாமல், சகலமும் உமக்குப் பணிந்து உமது பாதத்தின்கீழ் அமைவது, அதேதென்னில் ஆதிபராபர திரித்துவத்திற்குப்பின் மோட்ச இராச்சியத்தில் உம்மைப்பார்க்க மகிமைப் பேறுகளை அடைந்தவர்கள் இல்லை. பராபரனுடைய மாதாவும் நீர், பிரிய பத்தினியும் நீர், உமது நாமத்திற்குப் பசாசுக்கள் நடுநடுங்குவது, உமது தூய்ய பிரபைப் பிரதாபத்துக்கு இருள்வாசம் ஒளிவாசமாவது உமது சயிக்கினை யடையாளத்திற்குப் பரலோக வாசல் திறக்கப்படு[illegible] நரகலோகவாசல் அடைபடுவது உமது திருக்குமாரனுக்குப்பின் கிறீஸ்துவர்களுக்கு ஏகவிசுவாச ஆதாரம்நீர், இரக்கத்தின்நாயகி நீர், எங்கள் சீவியத்திற்கு அடைக்கலம் நீர், சமஸ்தர் கூப்பிடச் சமஸ்தருடைய சத்தங்கேட்டு யாவருக்குங் கிருபைப் பிரசன்னமாகிறதும் நீர், ஆதலால் அப்படிப்பட்ட உம்முடைய அடைக்கலம் ஒருகாலும் என்னைவிட்டு விலகாதபடிக்கு உம்மைப் பிரார்த்திக்கிறேன். நீர் உதவாவிட்டால் ஆர் உதவுவார்? நீர் மறந்தால் ஆர் நினைப்பார்? நீர் வழிகாட்டாவிட்டால் ஆர் வழிகாட்டுவார்? துக்க சமுத்திரத்தில் இருக்கிற எங்களிடத்தில் உம்முடைய கிருபாகடாட்சம் விலகினால் மாலுமியில்லாத கப்பல்போல எல்லாரும் அபலமாய்ப் போகலாகுமே, ஆகையால் எங்களுக்காக உம்முடைய திருக்குமாரனுக்கு நீர் அமிர்தம் ஊட்டினதையும், அவருடைய மிருதுவான சரீரத்தை ஏந்தின கரங்களையும், அவரை வளர்த்து எடுக்க நீர் பட்ட சகல பிரயாசைகளையும், நீர் அவருடைய நேச அக்கினியால் எரிந்திருக்கிற இருதயத்தையும் அவ



ருக்குக் காண்பித்து, எந்தவிதத்திலும் அவரை எங்கள்பேரில் இரக்கமாக்கி எங்களை இரட்சித்துக் கொள்ளும்.—ஆமென்சேசு.

# தேவமாதாவின் ஏழு ஆனந்த மகிமைப் பாடல்.

௧.—ஆனந்தம் ஆனந்தம் பரிசுத்த தேவமாதாவே, தேவதூதன் உமக்கு மங்களஞ்சொல்லத் தேவசுதனைக் கர்ப்பந் தரிக்கத் தேவ இஸ்பிரீத்து சாந்து வரம் பெற்றீரோ தாயே, தேவபத்தி எங்கள் இருதயத்தில் உற்பவிக்கக் கிருபை செய்வீராக. மங்களம், மங்களம்.—ஒரு-பிரி.

௨.—ஆனந்தம் ஆனந்தம் பரிசுத்த தேவமாதாவே, நிர்மல உதிரமிருக்க நிர்ப்பந்தம் ஒன்றும் படாதிருக்க நிர்மல குமாரனைப்பெற்று அணைத்தீரோ தாயே, நீச அடியார்கள் அவர் பேறுபேறடையக் கிருபை செய்வீராக. மங்களம்; மங்களம்.—ஒரு-பிரி.

௩.—ஆனந்தம் ஆனந்தம் பரிசுத்த தேவமாதாவே, சோதியைப் புதிதாய்க்கண்டு, சோதி இராசாக்கள் தெளிந்து சோதி இராயனை வ[illegible]ங்கினதைக் கண்டீரோ தாயே, சொர்னபாதம் அடியாருங்காணக் கிருபை செய்வீராக. மங்களம், மங்களம்.—ஒரு-பிரி.

௪.—ஆனந்தம் ஆனந்தம் பரிசுத்த தேவமாதாவே, உமது திருக்குமாரன் மரித்து உயிர்த்து உமக்குப் பிரிய தரிசனையைக் கொடுத்து, உமது மனம் பூரிக்க வினவினரோ தாயே, உமது தாசர்களைப் பாவ மரணத்தில் நின்று எழுப்பக் கிருபை செய்வீராக. மங்களம், மங்களம்.—ஒரு-பிரி.

௫.—ஆனந்தம் ஆனந்தம் பரிசுத்த தேவமாதாவே, பரமநாயகர் மகிமையைக்கொண்டு, பரலோகமேறுகிற குமாரனைக்கண்டு, பரிபூரண சந்தோஷம் அடைந்தீரோ தாயே, பரலோகவழியாய் அடியோர்களும் நடக்கக் கிருபை செய்வீராக. மங்களம், மங்களம். —ஒரு-பிரி.

௬.—ஆனந்தம் ஆனந்தம் பரிசுத்த தேவமாதாவே. நீர் சீஷர்களோடுகூடத் தியானத்திலிருக்க நிர்மலபிரசாதங்கொண்டு இஸ்பிரீத்துசாந்து இறங்க நிறைந்த பூரிப்பால் மகிழ்ந்தீரோ தாயே. நீர்

தாமே அடியோர்களை இஸ்பிரீத்து சாந்து வரமடையக் கிருபை செய்வீராக. மங்களம், மங்களம்.—ஒரு-பிரி.

௭.—ஆனந்தம் ஆனந்தம் பரிசுத்த தேவமாதாவே, அகத்தில் அதிக மகிமையோடும் அக்களித்த மனப் பிரியத்தோடும் ஆகாசம்வரை முடிபெற்றீரே தாயே, அடியார்களும் மோக்ஷ முடிபெறக் கிருபை செய்வீராக. மங்களம், மங்களம்.—ஒரு-பிரி.

## தன்னைத் தாசனாக ஒப்புக் கொடுக்கிற அடிமைச் சாதனம்.

நான் எனது சுய மனதோடும், முழுப்பக்தியோடும், என்னைப் பரிசுத்த தேவமாதாவுக்கு நித்திய தாசனும், புத்திரனுமாய் ஒப்புக்கொடுக்கிறேன். அதேதெனில் அவள் என்னுடைய மெய்யான தாயாரும், நாயகியுமாக நியமிக்கப்பட்டிருப்பதினால், என்னையும், எனது சகல காரியங்களையுந் தம்முடைய சித்தத்தின்படி நடத்திக் கொள்வாளாக.

பரலோக இராஜேஸ்வரியாகிய என் ஆண்டவளே! நீர் உம்முடைய நிகரற்ற தயைக்கும், இரக்கத்துக்கும், எற்கும் பரிசாக உமக்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட என்னைப் புத்திரனாகக் கையேற்றுக் கொள்ளக் கிருபை செய்தருளும். உம்முடைய நன்மைப்பிரசந்ந கரங்களில் என் சரீரத்தையும், ஆத்துமத்தையும், மனோசுதந்தரத்தையும், கையளிக்கிறேன். சகல காரியங்களிலும் உம்முடைய சித்தமும், என் மனமும், ஒரே அநுகூல மாகிற தல்லாதே, வேறு மனது கொண்டிருப்பேனல்ல. என்னுடைய மனோவாக்குக் கிரியைகளெல்லாம் உம்முடைய அதிக புகழ்ச்சிக்கும் பெருமானத்திற்கும், ஒப்புக் கொடுக்கிறேன். என்னுடைய நீது துன்பம், பாக்கியம், ஈடு, கேடு, இருத்தியம், எல்லாம் என் தேவதாயாரு நாயகியுமா யிருக்கிற உம்முடைய காருணியமுள்ள பராமரிப்புக்குள்ளே நித்தியமும் வைத்திருக்கப்படக் கடவது.

இது நிமித்தியமாய் அத்தியந்த கருணையுள்ள ஆண்டவளே! இனிமேல் ஒருக்காலும் உம்முடைய தயாபரக் கண்களை என்னை விட்டுவிலக்க வேண்டாம். இந்தநிர்ப்பந்தமான உலகத்தின் ஆபத்



துக்களிலே எனது சத்துராதிகள் கையில் நான் அகப்படாமல் தற்காத்துநடப்பித்து, என்னுடைய சுயதேசமாகிய மோட்ச இராச்சியத்திற்குப் பயமின்றியே சேரப் பண்ணும். அதேதென்றால் இன்று துவக்கி நான் முழுதும் உம்முடைய அடிமையாய் இருக்கும்படி உமது திருக்கரங்களில் என்னை ஒப்புக் கொடுக்கிறேன். என்னுடைய ஆத்துமத்தைச் சன்ம சத்துராதியான பசாசு பறித்துக் கொள்ளாதபடி காப்பாற்றியருளும்.

இதல்லாமல் யாதொருநாளிலே நான் மனுஷதுர்ப்பலத்தால் உம்முடைய திருக்குமாரனுக்குத் துரோகியாய் உம்மைவிட்டுப் பிரிந்துபோகச் சம்பவித்தால், இந்தக் குற்றத்திற்கு ஆக்கினையாக உம்முடைய புத்திரர்களுடைய எண்ணிக்கையில் என்னைப் புறந்தள்ளிப் பட்டிருக்க வொட்டாமல், நீர் தயை நிறைந்த நாயகியும் மாதாவுமானதால் உம்முடைய நேச உருசிகரத்திற்குந் திருவுளப்பிரியத்திற்கும் நான் திரும்பி வரத்தக்க அடைமானங்களை அடையப்பண்ணும். இது தவிர இந்த விலைமதியாத நன்மையால் உம்முடைய அடிமைப் புத்திரர்களுக்குள்ளே என்னை எண்ணிக்கொள்ளுகிற நன்மையை நான் பெறப் பாத்திர மாகாததினால் உம்முடைய சனுவான தாசருடைய சனுகை முன்னிற்க என் காவலான தேவதூதனையும் என் பிதாப் பிதாக்களான ஆராதிஷ்ட சுவைக்கீன், அன்னம்மாளையும், அதிநேச சகோதரனான சுவிசேஷக அருளப்பரையுஞ் சகல ஆராதிஷ்டர்களையும் மன்றாடுகிறேன். அதேதென்றால், என்னைப் புத்திரனும் நித்திய தாசனுமாய் இப்பொழுது கையளிக்கிறேன். என்னுடைய அடிமைச் சாதனத்தை நீர் உம்முடைய தயாபர பிரசன்னத்தாற் கையேற்று, உம்முடைய பாக்கியமான அடிமைப் புத்திரர்களுடைய கணக்கில் என்னைக் காத்துக்கொள்ளும். இப்படிப்பட்ட என்னுடைய ஒருமிப்பு, நல்லபுத்தி விசாலத்தோடும் சாகவும் பிழைக்கவும் தீர்த்த மனதோடு செய்த பிரகாரணம் எக்காலத்திற்கும் நான் தப்பிப் போகாதவண்ணம் என் நம்பிக்கை உறுதிப்படும்படிக்கு உம்மை மன்றாடுகிறேன்.—ஆமென்சேசு.

# தேவமாதாவைக் குறித்துச் செய்யத்தக்க கிழமைக் கிருத்தியம்.

## ஞாயிற்றுக்கிழமை.

### பாவப் பொறுத்தலுக்காக வேண்டிக்கொள்ளத்தக்க செபம்.

தேவசுதனை ஈன்றெடுத்த தாயே, நரகத்துக்குப் பாத்திரனுமாய் நிர்ப்பாக்கியம் நிறைந்த பாவியுமாகிய நான் உமது பாதமே தஞ்சமென்று அண்டிவந்தேன். உமது கிருபாகடாட்சத்தால் என்னை எறெடுத்துப் பாரும். பாடுபட்டிறந்த உமது திருக்குமாரனைப் பற்றிப் பாவிகளுக்கு உதவிசெய்ய உமக்குக் குறையற்ற ஆசை இருக்கிறதல்லோ? கிருபை தயாபத்துக்கு மாதாவே, என் நிர்ப்பாக்கியத்தைக் கண்டு என்பேரி லிரங்கும், உம்மைப் பாவிகளுக்குத் தஞ்சமென்றும், நம்பிக்கை யற்றவர்களுக்கு நம்பிக்கை என்றும், ஆதரவற்றவர்களுக்கு ஆதரவென்றும் உலகமெங்குங் கொண்டாடுகிறதினால், என் தஞ்சமும் நம்பிக்கையும் ஆதரவுமாயிரும், உம்முடைய மன்றாட்டினால், என்னை இரட்சிக்கக்கூடுமென்கிறதினால், உமது நேசமுள்ள திருக்குமாரன் திருமுகத்தைப் பார்த்து எனக்காக மன்றாடும். நான் பாவப் பாதாளத்தில் அமிழ்ந்திக் கிடந்தாலும் உமது பாதாரவிந்தத்தை எறெடுத்துப் பார்க்கிறபடியால், பாவியாகிய என்னைத் தூக்கியெடுக்க உமது திருக்கரங்களை நீட்டும். பாவிகளுக்கு உதவிசெய்ய உம்மாற்கூடுமானபொழுது சந்தோஷமாய்ச் செய்வீரென்பதை நான் அறிந்திருக்கிறதினால் எனக்கு உதவிசெய்யக் கூடுமான இப்பொழுதே எனக்கு உதவிசெய்யும். தேவ இஷ்டத்தையும் என் ஆத்துமத்தையும் பாவத்தால் இழந்துநிற்கும் அடியேன் உமது பாதத்தில் விழுந்திருக்கிறதினால் தேவ தயையை நான் திரும்ப அடையச் செய்யவேண்டிய தெப்படி யென்று எனக்குப் படிப்பியும். நீர் கற்பிக்கும் போதனைக்கு நானொருகாலும் விரோதஞ் செய்யத் தக்கதில்லை. நீரெனக்கு உதவியா யிருக்கும்படி என்னைச் சர்வேசுரன் உமதருகில் அனுப்பி வித்ததினாலும், உமது திருக்குமாரன் பேறுகளினால் நான் இரக்ஷணியப்பலன் அடைகிறதல்



லாமல் உமது மன்றாட்டினாலும், நான் இதையடைய உமது கிருபை தாயாபத்தை அண்டிவர வேண்டுமென்றுஞ் சர்வேசுரன் திருவுளமா யிருக்கிறதினாலும், நான் உமது பாதமே கதியென்று ஓடிவந்தேன். நீர் ஆருடைய பாவத்தை மன்னிக்கச் சொல்லுகிறீரோ அவர்கள் பாவத்தை உமது திருக்குமாரன் மன்னிப்பாரென்கிறதினால் அநேகமாயிரம் பெயர்களுக்காக மன்னிப்புக் கேட்கத் திருவுளமான நீர் எனக்காகவும் மன்னிப்புக்கேட்க இரங்கும். நான் இரக்ஷணிய மடைய உமக்கு விருப்பமுண்டென்று அறிந்தால் உமது திருக்குமாரன் என்னைத் தப்பாமல் இரட்சிப்பாரென்கிறதினால் நான் இரக்ஷணியமடைய உமக்கு விருப்பமுண்டென்கிறதை அவருக்கு அறிவியும். உம்மை நம்பினவர்களுக்கு நீர் செய்யும் நன்மையை நானும் அடையச்செய்யும்.—ஆமென்சேசு.

தேவமாதாவின் பேரிற் சொல்லப்படுகிற தூஷணங்களுக்குப் பரிகாரமாக மூன்று பிரியதத்த மந்திரஞ் சொல்லவும்.

## திங்கட்கிழமை.

### புண்ணிய வழியில் உறுதியாயிருக்க வேண்டிக் கொள்ளத்தக்க செபம்.

பரலோக இராக்கினியே, பாழ்நரகப் பசாசுக்கு அடிமைப்பட்டு நெடுநாள் பாவச்சகதியில் உழன்று திரிந்த அடியேனினி எந்நாளும் உமக்குச் சொந்த அடிமையா யிருந்து உம்மை வாழ்த்தி ஸ்துதித்து, வணங்கி நமஸ்கரிக்க வேண்டு மென்று உமது பாதத்தை அண்டி வருகிறேன். நானென் நம்பிக்கை யெல்லாம் உம்முடைய பேரில் வைத்திருக்கிறதினால் எனக்கு வேண்டிய உதவியெல்லாம் நீரே கட்டளையிட்டருளும். என் னிரட்சணியத்தி னச்சாரமாக உமதுபேரில் எனக்கு நம்பிக்கையைக் கொடுக்கத் திருவுளமான தயாபர சுரூபியான சர்வேசுரனுக்கு என்னால் ஆனமட்டும் நன்றியறிந்த தோத்திரம் பண்ணுகிறேன். நான் இந்தமட்டும் உமது அடைக்கலத்தை அண்டி வாராதினாலல்லோ? இத்தனை அக்கிரமதோஷங்களில் அமிழ்ந்திக்கிடந்தேன் உமது நேசமுள்ள திருக்குமாரனுடைய பேறுகளினாலும் உமது மன்றாட்டினாலும் இப்பொழுது என் பாவம் பொறுக்கப்பட்ட

தென்று நம்புகிறேன். என் ஆத்துமத்தைக் கெடுக்க வருந்துஞ் சத்துருக்கள் நித்திரை போகாததினாலும், என்னை அடர்ந்துவருஞ் சோதனைகள் எண்ணிக்கைக்குள் அடங்காதவென்கிறதினாலும், இப்பொழுது நான் அடைந்திருக்கு மிஷ்டப் பிரசாத நன்மையை மறுபடி இழந்துபோகப் போகிறேனென்று பயந்து நடுநடுங்குகிறேன். தயை நிறைந்த தாயே, என்னை உமது அடைக்கல நிழலில்வைத்து இனி நானொருகாலுஞ் சத்துருக்கள் கையிற் பிடிபட்டு அடிமைப் படாதபடி, எனக்கு வேண்டிய அநுக்கிரகத்தைத் தந்தருளும். நான் உம்முடைய அடைக்கலத்தை நாடி வரும்பொழுது நீர் எனக்கு வேண்டிய உதவியைக் குறைவில்லாமற் செய்வீரென்கிறதினால் என் சத்துருக்களை நான்செயிப்பேனென்கிறதற்கு அற்பமாகிலுஞ் சந்தேகமில்லை. ஆபத்தான சமயத்தில் உமதடைக்கல நிழலை அண்டி வராமற் கெட்டழிந்து போவேனோவென்று அஞ்சி நடுங்குகிறதினால் பாழ்நரகப் பேய்கள் என்னோடு வலுயுத்தம் பண்ணும்பொழுது, மரியாயே, எனக்குதவியா யிரும். தயை நிறைந்த தாயே, நான் ஒருகாலுஞ் சர்வேசுரனை இழந்து போகாமல் இருக்கக் கிருபை செய்யும்.—ஆமென்சேசு.

ஆஷணைப் பரிகாரமாக மூன்று பிரி. சொல்லவும்.

## செவ்வாய்க்கிழமை.

### நல்ல மரண மடைய வேண்டிக் கொள்ளத் தக்க செபம்.

மரியாயே, என் பாவ தோஷத்தையும், என் ஆவி பிரியும்பொழுது நீதிக் கர்த்தரான சர்வேசுரன் எனக்கு இடத்தக்க கடோரத்தீர்வையின் அகோரத்தையும், நினைக்கும் பொழுது நானஞ்சி நடுநடுங்கி மயிர்க்கூச்செறிய வேண்டியிருக்கிற தல்லாது வேறென்ன? இரக்கம் நிறைந்ததாயே, உமது திருக்குமாரனுடைய திருஉதிரமும், உமது மன்றாட்டு மாத்திரமே எனக்கு நம்பிக்கை யல்லாமல் வேறொரு நம்பிக்கை யில்லை. கஸ்திப் படுகிறவர் களுக்கு ஆறுதலே, என்மரணநேரத்தில் என்னைக் கைவிடாதேயும், அந்த அத்தியந்த கஸ்தி சமயத்தில் எனக்கு ஆறுதலா யிரும். நான்செய்த எண்ணிக்கை யில்லாத பாவம் பொறுக்கப் பட்டனவோ இல்லையோ வென்கிற அநுமானமும் மறுபடி நான் பாவத்தில் விழவிருக்கிற ஆபத்துக்களும், தேவ நீதியின் உக்கிரமும், இப்பொழுதானே எனக்கு இத்தனை நடுநடுக்கம் வருத்துகிறதினால் என் மரணநேரத்தில் எத்தனை அதிக நடுநடுக்கம் வருவிக்கும். நீர் எனக்கு உதவியா யிராவிட்டால் நான் கெட்டழிந்து நாசமாய்ப்போவேனென்பதற்குச் சந்தேக மில்லை. என்னாண்டவளே, என் மரணநேரம் அடுத்து வருமுன் நான் செய்த பாவங்களுக்கெல்லாம் மெய்யான மனஸ்தாபப்பட எனக்காக நீர் உமது திருக்குமாரனை மன்றாடுகிறது மல்லாமல் என் பாவங்களுக்குப் பரிகாரஞ் செய்யவும், என்னாயுள் பரியந்தம் நான் சர்வேசுரனுக்குப் பிரமாணிக்கமாய் ஊழியஞ் செய்யவும் அநுக்கிரகஞ் செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொள்ளும். மரியாயே, என் ஆபத்தாகிற மரணாவஸ்தை நேரத்தில் எனக்கு உதவியா யிரும். கொடிய சத்துருவான பசாசு நான் செய்த பாவங்களை எல்லாம் என் கண்முன் பாசக் காட்டும் பொழுது நான் அவநம்பிக்கைப்பட வொட்டாதேயும். உமது திருக்குமாரனுடைய திருநாமத்தையும், உமது திருநாமத்தையும், உச்சரித்து என் ஆவி பிரியச் செய்யும், பரலோக இராக்கினியே! உமக்குப் பிரமாணிக்கமாய் ஊழியஞ்செய்துகொண்டு வந்தவர்களுக்கு மரண சமயத்தில் நீர்தாமே வந்து ஆறுதல் வருவித்தாப் போல நீசப் பாவியா யிருக்கிற அடியேனுடைய மரண சமயத்திலும், நீர் எனக்கு ஆறுதல் தந்தருள வாரும். மரியாயே, நீர் எனக்கு இத்தனை மேலான தயையைச் செய்ய நான் அபாத்திரமான பாவியா யிருந்தாலும், நான் உமதுதாசனென்கிறதையும், சர்வேசுரனுக்குப் பின் உம்மை எல்லா வற்றிலும் மேலாக ஸ்நேகிக்கிறேனென்கிறதையும், என் நம்பிக்கையெல்லாம் உம்முடைய பேரில் வைத்திருக்கிறேனென்பதையும், பற்றி எனக்கு இந்தக் கிருபை செய்யும். நீர் தாமே எழுந்தருளி வந்து ஆறுதல் வருவிக்க நான் முழுதும் அபாத்திரவானா யிருந்தாலும் எவ்விதத்திலாவது எனக்கு ஆறுதல் வருவிப்பீரென்று நம்பி யிருக்கிறேன். இரக்கம் நிறைந்த மாதாவே! நான் எக்காலமும், உம்மை மோட்ச இராச்சியத்தில் ஸ்நேகித்துக் கொண்டு வரும்படி தேவ சிநேகத்தோடும், உம்முடைய சிநேகத்தோடும் நான் இவ்வுலகத்தினின்று பிரியச் செய்யும்.—ஆமென்சேசு.

ஆஷணைப் பரிகாரமாக மூன்று பிரி. சொல்லவும்.

## புதன்கிழமை.

### நரகத்துக்குத் தப்பித்துக்கொள்ள மன்றாடத்தக்க செபம்.

தயைநிறைந்த தாயே, அநேகமாயிரமுறை என்பாவத்தால் நரகத்தில்விழ இருந்த என்னைக் காப்பாற்றி இரட்சித்தீரென்கிறதினால் உமக்கு மிகவும் நன்றியறிந்த தோத்திரம் பண்ணுகிறேன். மரியாயே, நீர் எனக்காக மன்றாடாவிட்டால் நான் ஒரு பாவத்தில் விழுந்தவுடனே நரக பாதாளத்திலே தள்ளுண்டு போவேனென்று நினைக்கவேண்டியிருக்கிறது. நான் உம்மை மன்றாடாமல் இருக்கையிற்றானே நீர் உமது மட்டிலடங்காத கிருபையால் எனக்காக மன்றாடித் தேவகோபக் கடோரத் தீர்வையை நிறுத்தினீர். என் கன்னெஞ்சைக் கரைத்து உம்முடைய பேரில் நம்பிக்கையை வைக்கச் செய்தீர். தயை நிறைந்த தாயே, நீர் எனக்காக மன்றாடாவிட்டால் நான் எத்தனைப் பொல்லாப்பில் அகப்பட்டு மோசம் போக வேண்டியிருந்தது. இத்தனை ஆயிரம் உபகாரங்களை எனக்கு உதவியாகச் செய்து கொண்டு வந்த பரலோக இராக்கினியே, நான் நரக பாதாளத்தில் அமிழ்ந்தாமல் இருக்க சர்வேசுரன் எனக்கு அநுக்கிரகஞ் செய்தருள வேண்டுமென்று அவரை மன்றாடும். நான் நரகத்தில் விழுந்தால் உமது கிருபையாலும் உபகாரத்தாலும் எனக்கு என்ன பிரயோசன மாகும்? நான் இது வரைக்கும் உம்மைச் சிநேகியாமற் போனாலும் இப்பொழுது சர்வேசுரனுக்குப் பின் உம்மை எல்லாவற்றிலும் அதிகமாய் ஸ்நேகிக்கிறேன். உம்முடைய மன்றாட்டினால் எனக்கு இத்தனை நன்மை செய்து கொண்டு வருஞ் சர்வேசுரனையும் உம்மையும்விட்டு நானொருகாலும் அகலவொட்டாதேயும். மகா ஸ்நேகத்துக்குப் பாத்திரமான தாயே, நான் நரகத்தில் விழுந்து நித்தியகாலம் உம்மைப் பகைக்கவும், தூஷணிக்கவும் பார்த்திராதேயும். உம்மைச் சிநேகிக்கவும் உமது சொந்த அடிமையாகிய நான் நரகத்திற்குப்போகப் பார்த்திருப்பீரோ? மரியாயே, நான் நரகத்தில் விழுகிறதோ? நான் உம்மைக் கைவிட்டால் நரகத்தில் அலறி அழுவேனென்கிறதற்குச் சந்தேகமில்லை. நீர் என்பேரில் வைத்திருக்குஞ் சிநேகத்தை மறக்கவும் உம்மைக் கைவிடவும் எப்படிக்கூடும்? எண்ணிறந்த உபகாரங்களை எனக்குச் செய்துவருந் தாயே, என்னைக் கைவிடாமல் நீர் துவக்கின காரியத்தை நீரே



முடித்தருளும். உம்மை மறந்து இருக்கையில் நீரித்தனை உபகாரங்களை எனக்குச் செய்துகொண்டு வந்தீரோ, உம்மைச் சிநேகித்து உமது அநுக்கிரகத்தை மன்றாடும்பொழுது எனக்கு உதவிசெய்யாம லிருப்பீரோ? உம்முடைய உதவியைத்தேடி வராதவர்கள் கெட்டழிவார்களே யல்லாமல் உம்மை நாடிவந்தவர்களில் ஒருவரும் ஒருகாலுங் கெட்டுப் போகிறதில்லை. பரலோக இராக்கினியே, நான் என் மனதின்படி நடந்தால் கெட்டழிந்து போவேனென்கிறதினால் என்மனதின்படி என்னைவிடாமல் எப்பொழுதும் உமதிஷ்டப்படி நடத்தும். மரியாயே, நீர் எனக்கடைக்கல மானதையால் என்னை நரகத்தில் தள்ளுகிற பாவத்தில் நின்று என்னை இரட்சித்துக் கொள்ளும்.—ஆமென்சேசு.

தூஷணப் பரிகாரமாக மூன்று பிரி. சொல்லவும்.

## வியாழக்கிழமை.

### மோட்சபாக்கிய மடைய வேண்டிக் கொள்ளத்தக்க செபம்.

சகல சம்மனசுக்களுக்கும் அர்ச்சிய சிஷ்டவர்களுக்கும் மேலா யுயர்த்தப் பட்டவளுமாய்ச் சர்வேசுரனை மிகவும் அடுத்திருக்கிறவளுமா யிருக்கிற பரலோக இராக்கினியே, இஷ்டப் பிரசாத நன்மைகளைத் தந்தருளும். உமது கிருபா கடாட்சத்தை என்பேரிற் திருப்பவேணுமென்று நிர்ப்பாக்கிய நிறைந்த பாவியாயிருக்கிற அடியேன் இந்தக் கண்ணீர்க் கணவாயில் நின்று உம்மைவாழ்த்தித் துதித்து வணங்கி நமஸ்கரித்து மன்றாடுகிறேன். மரியாயே, என் ஆத்துமத்தைக் கெடுத்து மோட்ச பாக்கியத்தைப் போக்கடித்துச் சர்வேசுரனை இழந்துபோகப் பண்ணத்தக்க ஆபத்துக்கள் எத்தனை என்னை அடர்ந்திருக்கிறதென்று பாரும். இத்தனை ஆபத்தில் அகப்பட்டிருக்கிற நான் உம்முடையபேரில் என் நம்பிக்கை முழுவதையும் வைத்து உம்மைச் சிநேகித்து நித்தியகாலம் மோட்ச இராச்சியத்தி லும்மைத் தரிசித்து உமது புகழைக்கூற ஆசைப்படுகிறேன். மரியாயே, நான் இரட்சணியத்தின் பலனை யடைந்து உமது திருப்பாதத்திற் சேர்ந்து நான் இரட்சணியத்தின் பலனை யடைய இத்தனைப் பிரயாசப்பட்ட என் தா

யும் என் சர்வேசுரன் தாயுமாகிற உம்மை முகமுகமாய்த் தரிசிக்
கத்தக்க காலம் எப்பொழுது வரும்? என் அக்கிரம தோஷத்தால்
எல்லாராலும் நிந்தித்துப் புறக்கணித்துக் கைவிடப்பட்டு நரக
பாதாளத்தில் அமிழ்ந்த இருந்த என்னை ஆதரித்துத் தாங்கி அர
வணைத்து இஷ்டப்பிரசாத நன்மைகளைத் திரளாய் அடையச்செ
ய்த உமது திருக்கரங்களை நான் எப்பொழுது முத்திசெய்வேன்?
இதுவரைக்கும் நீர் எனக்குச் செய்துவரும் எண்ணிக்கையில்லா
த நன்மைகளை எல்லாமறந்து நான் உமக்கு நன்றியறியாதவனா
யிருந்தேன். இனி நான் மோட்ச பாக்கியத்தை அடைந்தபின்
ஒருகாலும் உமது நன்றியை மறக்கப்போகிற தில்லை. மோட்சத்
தில் மாத்திரமே நித்தியகாலம் நான் உம்மை என்னாலானமட்டுஞ்
சிநேகிக்கவும், உம்மை வாழ்த்தி ஸ்துதித்து வணங்கி நமஸ்கரி
த்து என் நன்றிகெட்ட தன்மையைப் பரிகரிக்கவுங் கூடுமான
தா யிருக்கிறது. நான் பாவத்தில் விழாமல் காப்பாற்றி எனக்கு
வேண்டிய ஞானத் தெளிவையுந் தேவசித்தத்துக்கு இசைந்த வ
ண்ணம் நடக்கவேண்டிய சத்துவத்தையும் தந்து என்னைக் காப்
பாற்றுவீரென்று நம்புகிறேன். சேசுக்கிறீஸ்துவின் பேறுகளையு
ம் உமது மன்றாட்டையும்பற்றி எனக்கிந்த நம்பிக்கையைத் தந்த
ருளத் திருவுளமான ஆண்டவருக்கு என்னால் ஆனமட்டும் நன்றி
யறிந்த தோத்திரம் பண்ணுகிறேன். மரியாயே, உம்முடையபே
ரில் நம்பிக்கைவைத்த உமது தாசர்களில் ஒருவரும் மோசம்போ
னதில்லை என்கிறதினாலே நானும் மோசம்போகப் போகிறதில்
லை; உமது நேசமுள்ள திருக்குமாரன் தமது விலைமதியாத திரு
உதிரத்தின் பேறுகளைப்பற்றி எனக்கிந்த நம்பிக்கை குறையாம
லிருக்கத் தயைசெய்ய வேண்டுமென்று நீர் அவரை மன்றாடும்.
—ஆமென்சேசு.

அஷணப் பரிகாரமாக மூன்று பிரி. சொல்லவும்.

~~~~~~~~

## வெள்ளிக்கிழமை.

### சேசுநாதர் பேரிலும் தேவமாதாவின் பேரிலும் பத்தி உண்டாக வேண்டிக் கொள்ளத்தக்க செபம்.

சகல படைப்புண்ட வஸ்துக்களுக்கு மேலாக உயர்த்தப்ப
ட்டவளுமாய், எல்லாரிலு மதிக நிருமல பரிசுத்தமானவளுமாய்,



எல்லாரிலுமதிக ரூபலாவண்ணிய அலங்கார முள்ளவளுமாய், எல்
லாரிலு மதிக மதுரமான வளுமாய்ப், படைக்கப்பட்டவஸ்துக்க
ள் எல்லாவற்றிலும் அதிக ஸ்நேகத்துக்குப் பாத்திர மானவளு
மா யிருக்கிற மரியாயே, சகல மனுஷரும் உம்மை இன்னதென்
று கண்டுபிடித்து உண்மை வேண்டியபடி ஸ்நேகித்தா லல்லோ
தாவிளை? பரலோகத்திலும் பூலோகத்திலு முள்ள பரிசுத்தர்கள்
எல்லாரும் உமது நன்மையையும் ரூபலாவண்ணியத்தையுங் கண்
டு உம்மைச் சிநேகித்துக்கொண்டு வருகிறார்க ளென்கிறதினால்
சந்தோஷப்படுகிறேன். சகல சம்மனசுக்களும் மனுஷரும் ஏக
மாய்த்திரண்டு உம்மைச் சிநேகிக்கிறதை விடச் சர்வேசுரன் உம்
மை அதிகமாய்ச் சிநேகிக்கிறா ரென்கிறதினால் அதிலும் அதிக
சந்தோஷப்படுகிறேன். சிநேகத்துக்குப் பாத்திரமான பரலோக
இராக்கினியே, நான் நிர்ப்பாக்கிய நிறைந்த பாவியானாலும் உம்
மைச் சிநேகிக்கிறேன். நான் உம்மைச் சிநேகிக்குஞ் சிநேகம் மி
கவும் அற்பமானதாயாலும் உம்மை மட்டின்றிச் சிநேகிக்க விரும்
புகிறதினாலும் எனக்கு அப்படிப்பட்ட சிநேகத்தைக் கொடுக்கத்
தக்க பட்சத்தைத் தந்தருளச் சர்வேசுரனைப் பிரார்த்தித்துக்கொ
ள்ள வேண்டுமென்று உம்மையே இரந்து மன்றாடுகிறேன். ஸ்நே
கத்திற்குப் பாத்திரமான தாயே, உம்மைச் சிநேகிக்கிறது மோக்ஷ
த்துக்குக் குறிக்கப்பட்ட தென்கிறதற்கு அடையாளமா யிருக்கி
றதினாலேயும், இரட்சணியம் அடைகிறவர்களுக்கு மாத்திரமே
சர்வேசுரன் அந்த அச்சாரத்தைக் கொடுத்தருளுகிறா ரென்கிறதி
னாலேயும், எனக்கு உம்முடையபேரில் ஸ்நேகத்தைத் தந்தருள
வேண்டுமென்று சர்வேசுரனை மன்றாடும். தேவசுதனைப் பெற்
றெடுத்த தாயே, உமது நேசமுள்ள திருக்குமாரன் எனக்குச் செ
ய்துவரும் மட்டில்லாத நன்மையைப்பற்றி நான் அவரை மட்டில்
லாமல் ஸ்நேகிக்க வேண்டுமென்று தேவரீர் ஆசைப்படுகிறதினா
லேயும், எல்லாவற்றையும் பார்க்க நான் அவரைச் சிநேகிக்கவே
ண்டிய அநுக்கிரகத்தை எல்லாவற்றிற்கு முன் எனக்கு அவர்தந்
தருள மன்றாடும். நீர் மன்றாடுகிற மன்றாட்டுக்களை எல்லாந் தப்
பாமல் அடைவீ ரென்கிறதினால் என்மனது முழுதுந் தேவசி
நேகத்தோடு எரிந்திருக்க எனக்காக மன்றாடும். திரவிய சம்பத்
தையுங் கீர்த்தி பெருமையையும் எனக்குத் தந்தருள வேண்டு
மென்று உம்மைமன்றாடாமல் நீர் எனக்குத்தந்தருள ஆசைப்படுங்
~~~~~~~~

தேவசிநேகம் ஒன்றைமாத்திரமே தந்தருள மன்றாடுகிறேன். உமக்கு மிகவும் பிரியமாயிருக்கும் என் ஆசைக்கு இரம்மியங் கொடாமற் போவீரா? நீர் எனக்கு உதவியாயிருந்து எனக்காக மன்றாடிக்கொண்டு வருகிறீ ரென்கிறதற்கு அற்பமாகிலும் நான் சந்தேகப்படவில்லை. தயைநிறைந்த தாயே, இரக்கம் நிறைந்த மாதாவே, நானினி ஒருகாலுஞ் சர்வேசுரனை இழந்து போகாமல் நித்தியகாலம் ஸ்திரமா யவரைச் சிநேகிக்க நான் வான இராச்சியத்தில் வந்து சேருமளவும் எனக்காக வேண்டிக் கொள்ளுகிறதை விட்டு விடாதேயும்.—ஆமென்சேசு.

## சனிக்கிழமை.

### தேவமாதாவின் சலுகையை அடைய வேண்டிக்கொள்ளத் தக்க செபம்.

இரக்கமுள்ளதாயே, உம்முடைய மன்றாட்டினால் நான் சர்வேசுரன் கையிற்பெற்ற இஷ்டப்பிரசாத நன்மையின் விசாலமும் மற்றும் நான்செய்துவரும் நன்றிகெட்ட தன்மையும் எவ்வளவென்று தெளிவாய்க் கண்டுவருகிறேன். நன்றிகெட்டவன் நன்மையை அடையப் பாத்திரவா னல்லவென்றாலும், என் நன்றிகெட்ட தன்மையைவிட உமது நன்மைத்தனம் மிகவுங்கரைகடந்ததா யிருக்கிறதினால் நான் அவநம்பிக்கைப்படக் காரணமில்லை. பாவிகள் தஞ்சமே, என்பேரில் கிருபையாயிரும். மனுமக்களுக்காகத் தேவசமுகத்தில் மனுப்பேசுகிறவளே, என் பேரில் இரக்கமாயிரும். நிர்ப்பாக்கியம் நிறைந்தபாவிகளுக்குத் தேவ இஷ்டப்பிரசாதத்தைப் பரிமாறச் சர்வேசுரனால் குறிக்கப்பட்ட பொக்கிஷக்காரி நீராகையால் எங்கள் அவசரத்துக்கு உதவும்படி சர்வேசுரன் உம்மை இத்தனை இரக்கம் நிறைந்தவளுமாய், திரவிய சம்பத்துள்ளவளுமாய், வல்லப முள்ளவளுமாய் இருக்கச்செய்தார். கிருபை தயாபத்துக்கு மாதாவே, என் வறுமையில் என்னை விட்டுவிடாதேயும், நிர்ப்பாக்கியம் நிறைந்தவர்களுமாய்க் கைவிடப்பட்டவர்களுமா யிருக்கிற பாவிகளுக்காக நீர் மனுப்பேசுகிறவளாகையால் உம்மை நாடி வரும் பாவியாயிருக்கிற எனக்காகப் பரிந்து பேசும். என் இரட்சணிய காரியம் உம்முடைய பொறுப்பா யிருக்கிறதால் என்னாத்துமங் கெட்டலைந்து போனதென்றாலும் இன்னம் உமது மன்றாட்டினால் இரட்சணியம் அடையத்தக்கதாகஇருக்கிறது. உமக்கு பிரமாணிக்கமாய் ஊழியஞ்செய்து வருகிறவர்களில் நானும் ஒருவனாயிருக்க ஆசைப்படுகிறதினால் என்னைப் புறக்கணித்துத் தள்ளிவிடாதேயும். நிர்ப்பாக்கியம் நிறைந்தவர்களுக்கு உதவிசெய்ய நீர் தேடித் திரிகிறதினால் நிர்ப்பாக்கியப் பாவியா யிருக்கிற என்னைக் கைவிடாதேயும். உம்முடைய திருக்குமாரனிடத்தில் நீர் கேட்கிறமன்றாட்டெல்லாந் தப்பாமல் கைக்கொள்ளுவீ ரென்கிறதினால் எனக்காக உம்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும். என்னை உமது அடைக்கலத்திற் சேர்த்துக்கொள்ளும் எனக்கு அதுவேபோதும். நீர் என்பாவம்பரிகாரமாக வழி செய்வீரென்கிறதினாலும், நரகத்திலுள்ளபசாசுக்களை யெல்லாம் விட நீர் அதிக வல்லபமுள்ளவ ளென்கிறதினாலும், உமது மன்றாட்டினால் நீதிக் கர்த்தருடைய கோபம் முழுதுந் தணிந்துபோ மென்கிறதினாலும், நான் உமதடைக்கலத்தி லிருந்தால் பாவத்துக்கும் பசாசுக்களுக்கும் பரம நீதிக் கர்த்தருக்குந் தானே பயப்படவிடமில்லை. நான் உமது அடைக்கலத்தை அண்டிவர அசட்டைப்பண்ணினால் மாத்திரமே கெட்டழிந்து போவேனென்கிறதினால் உம்மை அண்டிவர அசட்டைப் பண்ணப் போகிறே னென்று மாத்திரமே அஞ்சி நடுநடுங்குகிறேன். இரக்கம் நிறைந்ததாயே, நான்பாவப்பொறுத்தலையும் சேசுக்கிறீஸ்துவின் இஷ்டத்தையும் அடையவும், புண்ணியவழியில் திடனாயிருக்கவும், நல்லமரணமடையவும், மோட்சபாக்கியத்தைக் கைக்கொள்ளவும், விசேஷமாய் நான் எப்பொழுதும் உம்முடைய அடைக்கலத்தை நாடி வரவும் எனக்காகமன்றாடும்; இந்த வரங்களை யடைகிறது எனக்கு மகா பெரிதென்றாலும் கேட்டவரமெல்லாங் கைக்கொள்ளுகிறஉமக்கு இதுபெரிதல்ல. ஆகையால் நீர்உமது திருக்குமாரனை மன்றாடத் தொடங்கினால் அவர் உடனே உமக்கு எல்லாந் தடையில்லாமல் தந்தருளுவார் என்கிறதினால் என்னை உமதடைக்கலத்திற் சேர்த்துக் கொண்டோமென்று சொல்லும்; அவரும் என்பேரிற் கிருபையா யிருப்பார். மரியாயே, நான் உம்மைமுழுதும் நம்பியிருக்கிறேன். இந்த நம்பிக்கையினால் பயமற்றுச் சீவிக்கவுஞ் சாகவுந் துணிந்திருக்கிறேன்.—ஆமென்சேசு.

அஷணைப் பரிகாரமாக மூன்று பிரி. சொல்லவும்.

உருபலாவர்ணிய அலங்காரமே, சன்மமாசு அணுகாதவளே, செருசலேயின் பிரதாபமே, இஸ்ராயேல் சந்தோஷமே, பிரசைகள் மகிமையே, பாவிகள் தஞ்சமே, மகா புத்தி யுடைத்தான கன்னிகையே, மரியாயே, உம்முடைய திருக்குமாரனை எங்களுக்காக மன்றாடும். சன்மதோஷ மில்லாமற் சனித்த கன்னிகையே, நீர் பெற்றெடுத்த சுதனை எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

உமது திருக்குமாரனுக்கு யோக்கியமான ஆலயமாயிருக்கும்படி பரிசுத்த கன்னியாஸ்திரீயைச் சன்மப்பாவ மில்லாமல் உற்பவிக்கத் திருவுளமான சர்வேசுரா. உமது திருக்குமாரன் திருமரணத்தின் பேறுகளைக் குறித்துத் தேவதாயிடத்தில் மாசணுகாமல் காப்பாற்றினபடியே அந்த ஆண்டவனுடைய மன்றாட்டினால் நாங்களும் மாசில்லாதவர்களாய் உமது பாதத்திற்சேர உமது திருக்குமாரனுடைய திருமுகத்தைப் பார்த்து எங்களுக்கு அநுக்கிரகம் பண்ணியருளும்.

நிர்மல பரிசுத்த மரியாயே, சன்மமாசில்லாத உமது உற்பத்தியையும் பழுதற்ற கன்னிமையையுங் குறித்து என் ஆத்துமத்தையுஞ் சரீரத்தையுஞ் சுத்திகரித்தருளும்.—ஆமென்சேசு.

## மாதா ஆராதனை.

பிதாவாகிய சர்வேசுரனுடைய குமாரத்தியே! சுதனாகிய சர்வேசுரனுடைய தாயாரே! இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரனுக்கு மிகவும் பிரியமுள்ள நேசமே! மனிதருக் கடைக்கலமே, சர்வ லோகத்திற்கும் ஆண்டவளே, உமக்குப் பிள்ளைகளா யிருக்கிற நாங்களெல்லோரும் உமது திருப்பாதத்திலே சாஷ்டாங்கமாக விழுந்து எப்படியாகிலும் எங்களைக் காப்பாற்ற வேணுமென்றும்மைப் பிரார்த்திக்கிறோம். தேவமாதாவே! நீர் சன்மப்பாவ மில்லாமலுற்பவித்தீரே, எங்களாத்துமஞ் சரீரத்தை விட்டுப் பிரிகிற நேரம் நாங்களும் பாவமில்லாதிருக்கச் செய்தருளும். மாதாவே, உம்மை நம்பினோம் எங்களைக் கைவிடாதேயும் மாதாவே, உம்மை நம்பினோம் எங்களைக் கைவிடாதேயும். தேவ



மாதாவே, உம்மை நம்பினோம் எங்களைக் கைவிடாதேயும். விசேஷமாய்ச் சாகிறதறுவாயிலே நாங்கள் மோசம்போகாதபடிக்குப் பசாசினுடைய தந்திரங்களை எல்லாந்தள்ளி நாங்கள் உம்முடைய திருக்குமாரன் அண்டைக்குவரத் துணையாயிரும். இதின் நிமித்தமாய் உம்முடைய பரிபூரண ஆசீர்வாதத்தைக் கேட்டு நிற்கிறோம், அதை எங்களுக்குத் தந்தருளும்.—ஆமென்சேசு.

## *ஆகமன காலத்தில் பண்ணத்தகுஞ் செபம்.

ஆதித்தாய் ஆதித்தகப்பன் சன்மத்திலே பிறக்கப்போகிற சகலரிலுந் திவ்விய குமாரனுக்குத் தாயாராயிருக்கத் தெரிந்து கொள்ளப் பட்டவளுமாய், அதற்காக வேண்டிய சகல வரங்களையுஞ் சம்பூரணமாய் அடைந்தவளுமாய், அடைந்த வரங்களைக் கொண்டு நடத்தின உன்னதமான புண்ணியங்களால் திருச்சுதனாகிய சர்வேசுரன் உம்முடைய திருவயிற்றில் வெகு சந்தோஷத்துடன் தீவிரமாய் வரப்பண்ணினவளுமா யிருக்கிற மாதாவே, உம்முடைய திருக்குமாரன் பிறக்கப் போகிறநாள் கிட்டிவருகிறதென்று நீர் அறிந்து, அவரைப் பார்க்கவும், அவருக்கு ஊழியஞ் செய்யவும், உமக்கிருந்த ஆசையைப்பார்த்து, எனக்கும் இந்தத் திருநாளில் அவர்பேரில் ஆசைவர வேண்டுமென்றும், அவரைப் பார்த்து அவருக்கு ஊழியஞ்செய்ய நீர் பாத்திரமாய் இருக்க வேண்டுமென்றும் பண்ணின ஆயத்தத்தைத் தியானித்து, நானும் அவருக்கு யோக்கியமான ஊழியஞ்செய்ய ஆயத்தப்பட வேணுமென்றும், நீர் பண்ணின ஆயத்தத்தினால் உமதுபேரில் திவ்விய குழந்தை பட்டசந்தோஷம் ஒருகாலும் என்பேரில் அவருக்கு வரக்கூடா திருந்தாலும், எப்படியாகிலும் நான் இந்தத்

*கார்த்திகைமாதம் முப்பதாந்தேதி துவக்கிச் சேசுநாதர் பிறந்த நாள்மட்டும் தினந்தினம் இந்தச் செபத்தையும், இதற்குப் பின்வரும் நாற்பதுமணிச் செபத்தையும், கடைசிநாளில் இவைகளைச் செபித்துப் பின் ஒப்புக்கொடுக்குஞ் செபத்தையுஞ் செபிப்பதே முறை.

திருநாளை கொண்டாடுகிறதில் உம்முடைய திருக்குமாரனுக்கு என்பேரில் கோபமில்லாமல் சந்தோஷம்வரச் செய்ய வேண்டுமென்றும் இந்த மூன்று மூகாந்தரங்களைக் குறித்து நான் செய்யப்போகிற செபத்தை உம்முடையதிருப்பாதத்தில் அணிந்து, என்னுடைய கருத்து வியர்த்தமாய்ப் போகாதபடிக்கு நீர் சாதுகொடுத்து என் மன்றாட்டைக் கேட்டருள வேண்டுமென்றும் உம்மை மன்றாடுகிறேன்.—ஆமென்சேசு.

அர்ச். மாதாவே, நீர் திவ்விய குமாரனுக்கு மாதாவாகக்குறிக்கப்பட்ட க்ஷணம் ஆசீர்வதிக்கப் பட்டதென்று சகலரும் ஆண்டவருக்குத் தோத்திரம் பண்ணக் கடவோம்.—க-திரி. ம-பிரி. க-திரி.

அர்ச். மாதாவே, நீர் திவ்விய குமாரனைப்பெற்ற க்ஷணம் ஆசீர்வதிக்கப் பட்டதென்று எல்லாரும் ஆண்டவருக்குத் தோத்திரம் பண்ணக் கடவோம்.—க-திரி. ம-பிரி. க-திரி.

அர்ச். மாதாவே, நீர் முதல்விசை உம்முடைய திருக்குமாரனைக் கட்டி அரவணைத்த க்ஷணம் ஆசீர்வதிக்கப் பட்டதென்று எல்லாரும் ஆண்டவருக்குத் தோத்திரம் பண்ணக் கடவோம்.—க-திரி. ம-பிரி. க-திரி.

அர்ச். மாதாவே, நீர் உம்முடைய திருக்குமாரனுக்கு முதல்விசை பால்கொடுத்த க்ஷணம் ஆசீர்வதிக்கப்பட்டதென்று எல்லாரும் ஆண்டவருக்குத் தோத்திரம் பண்ணக் கடவோம்.—க-திரி. ம-பிரி. க-திரி.

## இதற்குப்பின் வேண்டிக்கொள்ளும் வகையாவது.

மனிதருக்காகக் குழந்தையாய்ப் பிறந்த திவ்விய சேசுவே, அர்ச். மாதாவின் திருவயிற்றிலிருந்து மாட்டுக் கொட்டிலிலே நீர் பிறந்தபோது அவ்விடத்தில் உமக்கு இருந்த வருத்தமும், இக்கட்டும், ஈனமும், உம்முடைய திவ்விய திருத்தாயார் உம்மைக் கட்டி அரவணைத்த இன்பத்தினால் பரிகாரமானதுமன்றி உமக்குப் பிரியமா யிருந்ததே! அதை நான் தியானித்து நீர் மோக்ஷத்தி லிருந்து என் னிருதயத்தில் வருந் தருணத்தில் நீச அப்ப ரூபமெடுத்த உமது மட்டில்லாத தாழ்மைக்குப் பரிகாரம் பண்ணி, உமக்குப் பிரிய மாகத்தக்க விதமாய் உம்மை ஆராதித்து, ஸ்துதித்து, உமக்குத் தோத்திரஞ் செய்யவேண்டுமென்று ஆசை கொண்டிருக்கிறேன். நான் எத்தனை ஆசை கொண்டிருந்தாலும் என்னால் முடியாதென்று கஸ்திப் பட்டுக் கடைசியாய் நான் செய்கிற மன்றாட்டு யாதென்றால், என்னிருதயத்தில் என்னால் உமக்கு யோக்கியமான ஆராதனையும், தோத்திரமும் வருகிறதில்லை என்கிற கஸ்தியினாலும், உம்மை என் இருதயத்தில் அடைய வேண்டுமென்கிற ஆசையினாலும், நான் விடுகிற கண்ணீரை உம்முடைய தாயார் மாட்டுக் கொட்டிலிலே உமக்குப் பண்ணின உத்தம ஊழியத்தோடு ஒன்றாகக் கூட்டிக் கைக்கொள்ள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறேன். இந்த மன்றாட்டுக்கு இரங்குவீரானால் என் இருதயத்தில் உமக்கு வருகிற குறைகளைப் பாராமல் உம்முடைய திவ்விய தாயாரைப் பார்த்து, நீர் என்னிடத்தில் வந்ததினால் எனக்குச் செய்ய வேண்டிய சகாயங்களை யெல்லாந் தடையில்லாமல் சம்பூரணமாய்த் தயைசெய்வீரென்று நம்பியிருக்கிறேன்.—ஆமென்சேசு.



ஆகமனகாலத்திற் சொல்லவேண்டிய

## திருக்குழந்தையாகிய சேசுநாதருடைய பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்.
கிறீஸ்துவே கிருபையாயிரும்.
சுவாமீ தயையாயிரும், மற்றதும்.

மெய்யான தேவனாகிய திருக்குழந்தையாகிய சேசுவே,
எங்கள் பாவங்களைப் போக்கியருளுஞ் சுவாமீ.
மெய்யான தேவனாகிய திருக்குழந்தையாகிய சேசுவே,
எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.
மெய்யான தேவனாகிய திருக்குழந்தையாகிய சேசுவே,
எங்களுக்குத் தயைசெய்து இரட்சியுஞ் சுவாமீ.

சிரஞ்சீவியான தேவகுமாரனாகிய திருக் குழந்தையே,
கன்னி மரியாயுடைய திருக்குழந்தையே,
காலாகாலத்திற்கு முன்னே நியமித்திருந்த திருக்குழந்தை,
மாங்கிஷ அயிக்கியமான வார்த்தையாகிய திருக்குழந்தை,
உமது பிதாவின் ஞானமாகிய திருக்குழந்தையே,
உமது தாயின் கருப்பிணியாகிய திருக்குழந்தையே,
உமது பிதாவின் ஏகசுதனாகிய திருக்குழந்தையே,
உமது தாயின் தலைச்சன் பிள்ளையாகிய திருக்குழந்தையே,
உமது பிதாவின் சாயலாகிய திருக்குழந்தையே,
உமது தாயின் ஆதிமூலமாகிய திருக்குழந்தையே,
உமது பிதாவின் பேரொளியாகிய திருக்குழந்தையே,
உமது தாயின் அருஞ்சிறப்பின் திருக்குழந்தையே,
உமது பிதாவுக்குச் சரிசமானமான திருக்குழந்தையே,
உமது தாயாருக் கமைந்து பணியுந் திருக்குழந்தையே,
உமது பிதாவுக்கு இனியவன்பான திருக்குழந்தையே,
உமது தாயின் பெருஞ்செல்வமாகிய திருக்குழந்தையே,
உமது பிதாவின் அருள் வரமாகிய திருக்குழந்தையே,
உமது தாயாரால் காணிக்கையாக ஒப்புக் கொடுக்கப்பட்ட திருக்குழந்தையே,
கன்னியீன்ற கனியாகிய திருக்குழந்தையே,
மனுக்குலத்தை சிருஷ்டித்த திருக்குழந்தையே,
மனுக்குலத்தை இரட்சித்த திருக்குழந்தையே,
எங்கள் தேவனாகிய திருக்குழந்தையே,
எங்கள் சகோதரமாகிய திருக்குழந்தையே,
பரலோக மகிமைப் பிரதாபத்தை அனுபவித்திருந்தும் வழிப்போக்கரான திருக்குழந்தையே,
இவ்வுலகத்தில் இருந்து பரலோக மகிமைப் பிரதாபத்தை யனுபவிக்குந் திருக்குழந்தையே,
உமது தாயின் கர்ப்பத்திலேதானே உத்தம மனுஷனான திருக்குழந்தையே,
விருத்தாப்பியருக் கடுத்த ஞானமும், விவேகமுமுள்ள திருக்குழந்தையே,
காலாகாலங்களுக்குப் பிதாவான திருக்குழந்தையே,
காலாகாலத்திற்கு முன்னிருந்த திருக்குழந்தையே,
தீர்க்கதரிசிகள் குறித்தகாலத்திற் பிறந்த திருக்குழந்தையே,
எல்லாத்தையும் உயிர்ப்பித்து உமது உயிர்பிழைக்கப் பால் அமுதுண்ட திருக்குழந்தையே,
வார்த்தையாய் இருந்தும் மவுனமான திருக்குழந்தையே,
தொட்டிலி லிருந்தழுத திருக்குழந்தையே,
வானத்தினின்று இடிமுழங்கச் செய்யுந் திருக்குழந்தை,
நரக நாடு அஞ்சி நடுங்கச்செய்யுந் திருக்குழந்தையே,

எங்களுக்குக் கிருபைசெய்து இரட்சியுஞ் சுவாமி.



மோட்ச இராச்சியத்திற்குச் சந்தோஷம் வருத்துந் திருக்குழந்தையே,
கொடியவர்களுக்குப் பயம்வருத்துந் திருக்குழந்தையே,
மூவரசர் ஆவலுடன் தேட விஷயமான திருக்குழந்தை,
ஏரோதிராயனால் கொல்ல வுசாவுதல் செய்யப்பட்ட திருக்குழந்தையே,
தன்னாடுவிட்டுப் பரதேசத்தில் ஒளித்த திருக்குழந்தையே,
விக்கிரகங்களை யுடைத்தழித்த திருக்குழந்தையே,
பிதாவின் மாட்சி விளங்கவருத்துந் திருக்குழந்தையே,
சிறுப்பல பருவத்தில் அற்புத வல்லவரான திருக்குழந்தை,
தாழ்மையில் தானே பெரியவரான திருக்குழந்தையே,
வரப்பிரசாதத்தின் பொக்கிஷமான திருக்குழந்தையே,
மகிமை சோபனத்தின் பிரகாசமான திருக்குழந்தையே,
நேசப் பெருக்கத்தில் ஊறும் அழகிய நதியாகிய திருக்குழந்தையே,
பரிசுத்த தனத்திற்கு ஊற்றாகிய திருக்குழந்தையே,
திருவருள் பொழியு மோக்ஷமாகிய திருக்குழந்தையே,
உலக வசதிகளை யொழித்து நன்னிலையில் நிறுத்தின திருக்குழந்தையே,
சம்மனசுக்களுடைய ஆண்டவரான திருக்குழந்தையே,
பிதாப் பிதாக்களுடைய அபேட்சையாகிய திருக்குழந்தை,
தீர்க்க தரிசிகளுடைய திருவாக்கியமான திருக்குழந்தை,
சனங்களுடைய ஆவலுக்கு விஷயமான திருக்குழந்தையே,
ஆயருக் கானந்தமாகிய திருக்குழந்தையே,
மூன்று இராசாக்களுக்கு வழிகாட்டிய நக்ஷத்திரத்தால் குறிக்கப்பட்ட திருக்குழந்தையே,
குழந்தைகளுக்கு இரக்ஷணையாகிய திருக்குழந்தையே,
புண்ணியாத்துமாக்கள் காத்திருந்த திருக்குழந்தையே,
சாஸ்திரிகளுக்கு உபாத்தியாயராகிய திருக்குழந்தையே,
சகல அர்ச்சிய சிஷ்டர்களுக்கும் ஆதிமூலமாகிய திருக்குழ,

எங்களுக்குக் கிருபைசெய்து இரட்சியுஞ் சுவாமி.

முதலோதி.—தயாபரராயிருந்து,

துணைவர்.—எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்.

முதலோதி.—திருக்குழந்தையாகிய சேசுவே,

துணைவர்.—எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.

முதலோதி.—கிருபாகரனாயிருக்கிற திருக்குழந்தையே,

துணைவர்.—எங்களை யிரட்சியுஞ் சுவாமீ.

ஆதித்தகப்பனால் வந்தபாவத்தின் அடிமைத்தனத்தினின்று
பசாசின் சிறையினின்று,
உலகபாசக் கொடுமையினின்று,
உடலின் துராசையினின்று,
ஆங்கார நடத்தையினின்று,
சகல முறைமைதப்பின ஆசையினின்று,
புத்தியின் குருட்டாட்டத்தினின்று,
ஆகாத இச்சையினின்று,
எங்கள் பாவங்களினின்று,
உமது நிருமல உற்பத்தியைப் பார்த்து,
நீர் உலகத்திற் பிறந்த தாழ்மையைப் பார்த்து,
நீர் அழுத கண்ணீரைப் பார்த்து,
நிர்ப்பந்தமான விருத்த சேதனத்தைப் பார்த்து,
நீர் உம்மை மகா மகிமைப் பிரதாபத்தோடு வெளியாக்கின
 தைப் பார்த்து,
உம்மைக் கோயிலில் காணிக்கையாக வைத்ததைப்பார்த்து,
நீர் உத்தம வகையாய் உலகத்தோடு பழகினதைப்பார்த்து,
உமது தெய்வீகமான மனுஷீகத்தைப் பார்த்து,
உமது பாடுகளைப் பார்த்து,
உமது தாரித்திரத்தைப் பார்த்து,
உமது யாத்திரையையும் பிரயாசத்தையும் பார்த்து,
உலகத்தினுடைய பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய
 செம்மறிப் புருவையாயிருக்கிற சேசுவே,
எங்கள் அக்கிரமங்களைப் போக்கியருளுஞ் சுவாமீ.

எங்களை இரட்சியும் சுவாமீ.

மற்றதும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

ஆண்டவரான திருக்குழந்தையாகிய சேசுவே! யுமது மனுஷீகமான தெய்வீகத்தையும், தெய்வீகமான மனுஷீகத்தையும் மனுமக்களுக்காக மிகவுந் தாழ்த்திச் சிறுகுழந்தையாய்ப் பிறக்கச் சித்தமானதை நாங்கள் கண்டு பாலத்துவத்தில் உமது வல்லமையுந், தெய்வீக ஞானத்தையுந், தாழ்மையிலுமது பிரதாபத்தையும் அறிந்து பரலோகமகிமைப்பிரதாபரான உம்மைத் தரிசித்துத் தியானிக்கவும் அநுக்கிரகஞ் செய்ய வேணுமென்று காலாகாலங்களிலுஞ் சீவியருமாய் இராச்சிய பரிபாலகருமான தேவனுகிற திருக்குழந்தையாகிய சேசுவே! தேவரீரைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம். ஆமென்சேசு.



## கடைசிநாளிலே எல்லாவற்றையும் ஒப்புவிக்கிற வகையாவது.

அர்ச். தேவமாதாவே, இந்த ஆகமனகாலத்திலே நான் உம்முடைய பாதத்தில் வேண்டிக் கொண்ட ஆயிரம் பிரியதத்தமந்திரங்களை நீர் கைக்கொண்டு, அதினால் உம்முடைய திருக்குமாரனுக்கு ஒரு முடிசெய்து சூட்ட வேண்டுமென்று உம்மைமன்றாடுகிறேன். நான் ஒப்புவிக்கிற காணிக்கை வெகு கொஞ்சமாய் நிந்தைக்குப் பாத்திரமுமாயிருந்தாலும், அது உம்முடைய திருக்கையிலிருந்து வருகிறதினால் அவருக்கு விலையேறப் பெற்றதுமாய்ப் பிரியமுமாயிருக்குமென்று நிச்சயத்துடனே நம்பியிருக்கிறேன். ஆகையால் இந்த முடியை நீர்சூட்டுவிக்கிறபோது அவரைப் பார்த்து எனக்காகக் கேட்க வேண்டியது யாதெனில், உம்முடைய திருக்குமாரனுக்கு ஓர் அற்ப காரியத்திலும் நான் ஒரு குறை வருத்தி விக்கிறதைவிடவும், அவருடைய சித்தத்தைவிட்டு எந்தக் காரியத்திலாகிலும் வேறு வழியாகப்போகிறதைவிடவும், அவர் எனக்கு நல்லமரணத்தைக் கொடுத்து என்னை அழைத்துக்கொள்ள வேண்டுமென்று மன்றாடுகிறேன்.—ஆமென்சேசு.

---

## திருச்சபையில் ஆகமன காலத்தில் செபிக்கப்படுகிற மகா வாக்கியங்கள்.

## ஆகமன காலத்தின் முதல் ஞாயிறு.

### செபம்.*

மகா உந்நத தேவனுடைய திருநாவிலிருந்து புறப்பட்டு வந்து வீர வேகத்துடனேயும், மதுர இன்பத்தோடேயும், ஒரு இறுதிதொட்டு இன்னொரு இறுதி மட்டும் பிடிப்பாய்ச் சார்ந்து எல்லா வற்றையும், சீர்ப்படுத்துகிற ஞானமே, எங்களுக்கு விமரிசையின் பாதையைப் படிப்பிக்க வாரும். முட்செடியில் பற்றிக்கொண் டெரிந்த அக்கினியில் மோயீசருக்குத் தரிசனையானவரும், இசுரவேலரின் சந்ததிக்குக் கர்த்தரும் எசமானு மானவரே, அவருக்குச் சீனாய் பர்வதத்தில் முறைமை தந்தவரே, உமது புச

பல வீரத்தால் எங்களை இரட்சிக்க வந்தருளும். சனங்களுடைய விருதுக்கொடியாக இருக்கின்ற இசயாவின் ஆதிமூலமே, தேவரீர் முன்பாக இராசாக்கள் வாய்புதைத்துக் கொண்டு இருக்கவும், சனங்கள் பணி புரிந்து மன்றாடவும் வேண்டி யிருப்பதால் இனி யாதிலுந் தாமதம் பண்ணாமல் எங்களை மீட்க வாரும். தாவீதின் திறவுகோலே, இஸ்ரவே லிராச்சியத்தின் கிரீடமே, தேவரீர் திறப்பதை ஒருவ ரடைக்கவும், தேவரீர் அடைப்பதை ஒருவர் திறக்கவும் கூடாதே, தேவரீர்வந்து சிறைச் சாலையில் அடைபட்டிருப்பவனை மீட்டு அந்தகாரங்களிலும், மரணத்தின் நிழலிலுமிருக்கிறவனை விடுவித்தருளும். கிழத் திசையோனே, நித்திய பிரகாசத்தின் சோதியே, நீதிஆதித்தனே, தேவரீர்வந்து இருள்களிலுஞ் சாவின் இரவிலும் அகப்பட்டுக் கொண் டிருக்கிறவர்களுக்கு ஒளியைத் தந்தருளும். சனங்களுடைய இராசாவே, அவர்களா லாசிக்கப் பட்டவரே, இரண்டையு மொன்றாக்கிற மூலைக்கல்லே, தேவரீர் மண்ணா லுண்டு பண்ணின மனிதனை இரட்சிக்க வாரும். ஓ, இம்மானுவேலே! எம்மோ டிருக்குந் தேவனே, எங்களுக்குக் கற்பனை கொடுக்கும் இராசாதிபதியே, பிரசைகள் ஆவலோடு காத்திருக்கிறவருமாய் அவர்க ளிரட்சகரு மானவரே, எங்களாண்டவராகிய சர்வேசுரா, எங்களைக் காப்பாற்ற எழுந்தருளி வாரும். இதோ பூமியின் இராசாக்களுக்கெல்லாம் இராசாதிபதி யானவர் வருவார். அவருக் கெதிர் கொண்டுபோ யவரைச் சந்திக்க முஸ்திப்பா யிருக்கிறவர்களே பாக்கியவான்கள். மனுமகன் வரும்போது பூமியின் பேரில் விசுவாசத்தை யவர் காண்பா ரென்று நினைக்கிறாயா? கடவுள் தமது சுதனை உலகி லனுப்புங் காலஞ் சரியாய் வந்து விட்டது. இரட்சக ருடைய வூற்றுகளில் சந்தோஷத்தோடு சலத்தைமொள்ளுவீர்கள். ஆண்டவர் தமது பரிசுத்த ஸ்தலத்தி லிருந்து எழுந்தருளித் தமது பிரசைகளைக் காப்பாற்ற வருவார். பரமண்டலங்களே, மேலே யிருந்து வருஷியுங்கள். மேகங்கள் நீதிமானைக் கீழே யிறக்கட்டும். பூமி வாய் திறந்து இரட்சகரை எழுந்தருளப் பண்ணட்டும். ஆண்டவரே, வனாந்தரத்தின் கற்பாறையி லிருந்து உலக சக்கிரவத்தியாகிய செம்மறிப் புருவையைச் சீயோன் பர்வதத்திற் கனுப்புங் கர்த்தரே, நாங்கள் பூமியி லுமது வழியையும், எல்லா சனங்களிடத்திலும் உமது இரட்சணியத்தையுங் கண்டு கொள்வோம். ஆண்டவரே, உமது தீர்க்கதரிசிகள் சொன்ன தெல்லாஞ் சரியாகும் படிக்கு உம்மை யண்டி யிருக்கிற எங்களுக்குச் சம்பாவனையைத் தந்தருளும். முறைமை மோயீசனாற் கொடுக்கப் பட்டது. அநுக்கிரகமும், உண்மையும் சேசுக் கிறீஸ்துவால் அருளப்பட்டது. கன்னிமரி யம்மா ளிடத்தி லிருந்து இரட்சகர் பிறப்பதாய்த் தீர்க்கதரிசிகள் அறிவித்தார்கள். ஆண்டவருடைய இஸ்பிரீத்து என்னிட முண்டாகி எளியவர்கட்குச் சுவிசேஷஞ் சொல்ல என்னை யனுப்பினது. அவரது நீதியின் சோதிப் பிரகாசம் எழுந்தருளுகிறவரையில் சீயோனைப்பற்றி நான் பேசுவேன். பிரபுக்களோடு ஆசனங் கொள்ளவு மகிமைப் பிரதாபத்தின் பத்திராசனத்தில் எழுந்தருளவும், இதோ ஆண்டவர் வருவார். இதோ தேவனுடைய இரட்சகர் வருகிறாரென்று சனங்களுக்கு அறிவித்துச் சொல்லுங்கள். சர்வ வல்லவராகிய ஆண்டவர் தமது பிரசையை இரட்சிக்க சீயோனி லிருந்து வருவார். ஆண்டவரே, சற்றே கடைக்கண் பாரும். உமது தாசர்களிடம்வரத் தாமதியாதேயும். அரசாளப் போகிற ஆண்டவர் சீயோனி லிருந்து வருவார். இதோ என் தேவன், அவரை நான் தொழுதுகொள்வேன். அவரென் பிதாவின் கடவுளாகையால் நானவரை எத்தி ஸ்துதிப்பேன். எங்களாண்டவர் எங்களுக்கு முறைமை கொடுப்பவர், எங்களாண்டவ ரெங்களுக்கு இராசாதிபதி, அவரே வந்து எங்களை இரட்சிப்பார். தைரியமா யிருங்கள், உங்கள் மேல் ஆண்டவ ராதரவைக் காண்பீர்கள். ஆண்டவரே, என் ஆத்துமம் உம்மையேநோக்குகின்றது. தேவரீர் வந்தென்னை மீட்டருளும். ஆண்டவரே, நான் தேவரீரிடத்தில் அடைக்கலம் புகுந்தேன். வாரும் ஆண்டவரே, தாமதம் பண்ணாதேயும். உமது இசரவேல் பிரசையினுடைய தோஷத்துரோகங்களைப் பொறுத்தருளும். லீபானி லிருந்து சுவாமி வருவார். அவருடையமகிமை பிரகாசம் போலிருக்கும். நானோ வென்றால் ஆண்டவரை நோக்கிக் காத்துக்கொண் டிருப்பேன். என்னிரட்சகருக் கெதிர்பார்த்திருப்பேன்.—ஆமென்சேசு.

## ஆகமன காலத்தின் இரண்டாம் ஞாயிறு. செபம்.

சர்வ வல்லபம் பொருந்தியவரும், மகா இரக்கமுள்ளவருமான சர்வேசுரா, அகண்ட ஞானமும், அளவறுக்கப்படாத கிருபா கடாட்சமுங் கொண்டிருக்கிற தீர்க்கதரிசியாகிய என் ஆண்டவரே, தேவரீர் உலக முடிவையும், அதற்கு முன் வரப் போகிற அடையாளங்களையும் எங்களுக்கு அறிவித்து அதற்கு எப்படி ஆயத்தம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று கற்பித்தீரே. என் தேவனே! எப்போது நீர் வருவீரென்று சந்தோஷத்தோடும், நடுநடுக்கத்தோடுங், காத்துக்கொண்டிருக்கிறேன். அக்காலம் மின்னலைப்போலத் திடீரென வருமென்று தேவரீர் திருவுளம்பற்றினீரே. வானங்கள் அதிரப், பூதியங்கள் நிலைகுலையப், பூமி அக்கினிக்கு இரையாகும்போது எம்மாத்திரம் பயங்கரம் உண்டாகும். மனிதர்கள் என்னென்ன கெட்டு மடிவார்களோ. இதையோசித்துத் திகிலடையாதவர்களார்? புதிய வானத்திற்கும் புதிய பூமிக்குங் காத்திருக்கிற நாங்கள் வரப்போகிற பயங்கரங்களுக்குப் பயப்படாமல் உமது ஆறுதலினால் நம்பிக்கையோடு நிமிர்ந்து தலைகளை எடுத்து உமது வருகைக்குக் காத்திருக்கப்பண்ணியருளுஞ் சுவாமி. நாங்கள் பரலோக இராச்சியத்துக்காக இந்த நீசத்தனமான அற்ப உலகிலின்று மீட்கப் பட்டவர்களாயிருப்பதால் அக்காலத்தில் எங்களுடைய நம்பிக்கை எவ்வளவோ பெரிதாயிருக்கும். உயர்ந்த நிலையில் இரட்சிக்கப் பட்ட நாங்கள் இதோ எங்கள் ஆண்டவர் வருகிறாரென்று சந்தோஷத்தால் அகமகிழ்ந்து உமது வருகைக்கு எதிர்பார்த்து நிற்போம். எங்கள் ஆத்தும மணவாளராகிய சேசுவே! நாங்கள் புத்தியுள்ள கன்னியாஸ்திரீகளைப்போல எங்கள் நற்கிரிகைகளாகிய தீவட்டிகளை ஆயத்தப்படுத்தி உமக்கு எதிர்கொண்டு நித்திய கலியாண வீடாகிய மோட்சத்தில் நாங்கள் பிரவேசிக்கச் செய்தருளும். உத்தம நாயகனைப்போல எப்போது வருவீரோ என்று காத்துக் கொண்டு விசுவாச நம்பிக்கை தேவசிநேகத்தோடு நாங்கள் இருக்கத் தயைசெய்தருளுஞ் சுவாமி.

இந்தப் பொல்லாத உலகத்தை விட்டு நித்தியானந்த மோட்சத்தில் நாங்கள் பிரவேசிக்க எப்போதும் முஸ்திப்பாயிருக்கச்



செய்தருளுஞ் சுவாமி. உப்புச் சிலையாய்ப்போன லோத்தின் பெண்சாதியைப்போல நான் துவேஷித்து விட்டுவிட்ட உலக பொய் வாழ்வைத் திரும்பிப் பார்ப்பதினால் மோசம் போகாதபடி செய்தருளும். நித்திய வெளிச்சத்திற்கும் அத்தியந்த செல்வத்திற்கும் காத்திருக்கிற நாங்கள் தேவரீர் எப்போது வருவாரோ என்று ஏங்கி நிற்கிறோம். எங்களுடைய விசுவாசங் குளிர்ந்து போனதால் விசுவாசத்தைத் தொடங்குகிறவரும், முடிக்கிறவருமாகிய எங்கள் ஆண்டவரே, எங்கள் விசுவாசத்தை உயிருள்ளதாக்கியருளும். இந்த நாள் குறுக்கப்படாதே போனால் மிகுந்த தின்மைகளைக் காட்டிய தேவனே, தின்மைகளின் நாள்களைக் குறுக்கி நற்கோதும்பைகளைப்போல உமது களஞ்சியமாகிய மோட்சத்தில் எங்களைச் சேர்த்தருளும். அழுது நடந்து விதைகளைத் தெளித்து வருகிறோம். அவைகளை எங்கள் இருத[illegible] ராகும்படி தயைபுரியுஞ் சுவாமி. ஆமென் சேசு.

## ஆகமன காலத்தின் மூன்றும் ஞாயிறு. செபம்.

சகல பரிசுத்த தேவ வாக்கியங்களையும் எங்களுக்குப் போதனையாக எழுதுவித்த கிருபையுள்ள ஆண்டவரே! எங்கள் இரட்சகராகிய சேசுக்கிறீஸ்துவின் மூலமாய்த் தேவரீர் எங்களுக்கு அருளிச்செய்த பாக்கியமுள்ள நித்திய சீவிய நம்பிக்கையை உமது பரிசுத்த வசனத்தால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் நாங்கள் பற்றிக்கொண்டு, எப்பொழுதும் உறுதியாய்க் கைக்கொள்ளத் தக்கதாக அந்த வாக்கியங்களை நன்றாய்க் கேட்டு, வாசித்துக், கவனித்துக், கற்றறிந்து உட்கொள்ள, எங்களுக்குக் கிருபை செய்தருளும். தேவாதிதேவா! மனுக்குலத்திநேசா! உமதுபேரில் அன்புகூர்ந்த ஆத்துமாக்களுக்கு அமிர்த வாரியே, நித்திய பிரகாசா! உற்பனங்களைக் கடந்த தயையைப் பெருக்கி மனுக்குலம் ஈடேற அநுக்கிரகம் புரிந்த சர்வேசுரா, புத்தியின் அந்தகாரத்தில் மூழ்கிப் பூலோக மாய்கையிற் சிக்கித் தந்திரங்களால் தத்தளித்துக் கொண்டிருக்கும் எங்களை இப்புவியின் பொய்வாழ்வின் அடிமைத்தனத்தில் நின்று நீக்குவது எப்போ? முன்னொருவிசை மனுக்குலத்தைமீட்டு இரட்சித்ததுபோல ஒட்

டோலக பொதுத் தீர்வைநாளில் பூலோகத்தில் முன்பிறந்தவர்கள் இப்போது பிறந்திருக்கிறவர்கள், இனி பிறக்கப் போகிறவர்கள் எல்லோரும் உமது சமுகத்திற் பொதுத் தீர்வைக்கு வரும் நாளில் நான் உமது இடதுபாரிசத்தில் இருந்து நாணிக்குன்றி நித்திய நரகத்துக்குப் போகாதபடிக்கு இப்போதே நான் கொண்ட பாவ விஷத்தைத் தீர்த்து, அக்ஷயம், இலகு, சூட்சம், பிரகாசங்கொண்டு ஒளிருஞ் சரீரமுள்ளவனாய் உமது வலது பாரிசத்தில் இருந்து எல்லோரு மகிழ நான் ஆனந்த மோக்ஷம் அடையச் செய்தருளுஞ் சுவாமீ.—ஆமென்சேசு.

## ஆகமன காலத்தின் நாலாம் ஞாயிறு.

### ஜெபம்.

எங்கள் இரட்சகரா யிருக்கிற சேசுக்கிறீஸ்துவே, தேவரீர் முதலாந்தரம் வருகையில், உமக்கு முன்பாக உமதுவழியை ஆயத்தம்பண்ண உமதுதூதனை அனுப்பினீரே. அதுபோலவே தேவரீர் உலகத்தை நியாயந்தீர்க்க இரண்டாந் தரம் வருகையில், நாங்கள் உமக்கு முன்பாகப் பிரியமுள்ள சனங்களாய் நிற்கத் தக்கதாக அநுக்கிரகித்தருளுஞ் சுவாமீ. இப்பொழுது உமது இரகசியங்களின் பொக்கிஷக்காரரும், பணிவிடைக்காரருமான ஒரே மேய்ப்பனுக்குக் கீழ்ப்படியாதவர்களின் இருதயத்தை நீதிமான்களுடைய ஞானத்துக்குச் சரியாய்த் திருப்பி, உமக்கு முன்பாக உமது வழியை ஆயத்தம்பண்ணக் கிருபைசெய்தருளவேண்டுமென்று, பிதாவோடும் இஸ்பிரித்து சாந்துவோடும் ஒரேதேவனாக என்றென்றைக்குஞ் சீவியருமாய், இராச்சியபரிபாலனம்பண்ணுகிறவருமான உம்மைவேண்டிக் கொள்ளுகிறோம். மிகவும்பாக்கியஸ்தரும், மெத்தவும்அர்ச்சியசிஷ்டவருமாகிய எங்கள் பிதாவே! எங்கள்சிருஷ்டிகரே, எங்கள் இரட்சகரே, எங்களைத் தேற்றுகிறவரே, பரமண்டலங்களிலேயிருக்கிற சம்மனசுக்களிடத்திலும் அர்ச்சியசிஷ்டவர்களிடத்திலும் வியாபித்திருந்து அவர்கள் உம்மை அறியும்படி அவர்களுக்கு ஞானப்பிரகாசம் தந்தருளி அவர்களிடத்தில் உமதுசிநேக அக்கினியைப் பற்றியெரியச் செய்கிறீர். அதேதெனில் தேவரீரே ஆண்டவர்பிரகாசமும், சிநேகமுமாயிருக்கிறீர்.

115926



ஆதலால் அவர்களிடத்தில் வாசம்பண்ணி, அவர்களுக்குச் சுகிர்த ஒளியாய் விளங்கி அவர்களைச் சிநேக அக்கினி மயமாக்கிப் பேரின்ப பாக்கியத்தால் அவர்களை நிரப்புகிறீர். நித்திய பரம நன்மை நீரே, உம்மிடத்தில் நின்று சகல நன்மைகளும் வருகிறது மன்றித் தேவரீர் இல்லாமல் அவைகளில் ஒன்றாகிலும் வராது. உம்முடைய நாமம் அர்ச்சிக்கப் படுவதாக, தேவரீருடைய உபகாரங்களின் விஸ்தாரத்தையும், வாக்குத்தத்தங்களின்மாட்சிமையையும், மகத்துவத்தின் உந்நதத்தையும், உம்முடைய நித்தத்தீர்மானங்களின் ஆழ்ந்த கருத்தையும் நாங்கள் கண்டுபிடிக்கத் தக்கதாகக் காந்தியுள்ள பிரகாசக் கதிர்களால் உம்மை எங்களுக்குத் தெரியப்படுத்தியருளும். உம்முடைய இராச்சியம் வருக, தேவரீர் உம்முடைய இஷ்டப் பிரசாதத்தினால் எங்களிடத்தில் இராச்சிய பரிபாலனஞ் செய்யத் தக்கதாகவும், உம்முடைய பேரின்ப இராச்சியத்தில் எங்களைச் சேர்ப்பிக்கத் தக்கதாகவும் கிருபை செய்தருளும். அதிலே தேவரீர் பிரத்தியக்ஷமாய்த் தரிசிக்கவும், உத்தம விதமாய்ச் சிநேகிக்கவும், நித்தியமாய் அநுபவிக்கவும் படுகிறீர். மீளவும் உம்மோடேகூட இருக்கிறதினால் அநந்தபாக்கியமுங் கிடைக்கின்றது. நாங்கள் உமது பேரிலே மாத்திரஞ் சிந்தனை வைக்கிறோம். நாங்கள் முழு இருதயத்தோடு உம்மை எப்போதும் அபேட்சிக்கிறோம். எங்கள் முழு ஆத்துமத்தோடு எங்கள் கருத்தெல்லாம் உம்மிடத்திற் செலுத்தி எல்லாவற்றிலும், உமது தோத்திரத்தை நாடி நிற்பதினாலும், எங்கள் முழுப் புத்தியோடு எங்கள் ஆத்துமங்களிலுஞ், சரீரங்களிலு முள்ள தத்துவங்களை எல்லாம் மற்ற எந்த காரியங்களுக்கும் உபயோகிக்காமல் உம்மைப்பற்றி உம்முடைய ஊழியத்தில் அவைகளை உபயோகிப்பதினாலும், எங்கள் சர்வ பல சத்துவங்களோடு அடியோர்கள் உம்மைச் சிநேகிக்கத் தக்கதாகச் செய்தருளும். உம்முடைய சித்தம் பரமண்டலங்களிலே செய்யப் படுமாப்போலப் பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக. மீளவும் அடியோர்கள் உம்முடைய சிநேகத்திற்கு எல்லா மனுஷர்களையும் இழுக்கப் பிரயாசமும்பட்டு, அவர்களுக்கு நேரிடுகிற நன்மை எங்களுக்கு நேரிட்டாற் போலச் சந்தோஷமும்பட்டுத், துன்பங்களில் அவர்கள்மேல் மனமும் இரங்கி, எந்தக்காரியத்திலும் எவனுக்குந் தின்மை அவமானஞ் செய்யாமல் எங்களைப்போலே புறத்தியாரையுஞ் சிநேகிக்கக் கடவோமாக.

அன்றன்றுள்ள எங்கள் அப்பம் எங்களுக்கு இன்றுதாரும். எங்கள் ஆண்டவருந் தேவரீருக்கு அத்தியந்த நேசகுமாரருமாகியசேசுக்கிறீஸ்து நாதரை எங்களுக்குத் தந்தருளும். அவர் எங்களுக்குக் காட்டின பட்சத்தையும் எங்களுக்காக அவர் சொல்லிச்செய்து சகித்துக் கொண்டுவந்ததையுந் தேவரீர் எங்களுக்கு ஞாபகப்படுத்திச் சரியாய்த் தெளிவித்து அவர்பேரில் எங்களுக்குத் தக்க வணக்கம்பற்றுதல் கொடுக்கும்படி உம்மிடத்தில் இந்த மன்றாட்டு செய்கிறோம். மனோவாக்குக்கெட்டாத உமதுகிருபையையும், உமது நேசகுமாரனுடையதிருப்பாடுகளின்பேறுபலன்களையும், முத்திப்பேறுபெற்ற கன்னி மரியம்மாளும் உம்முடைய சகல அர்ச்சிய சிஷ்டவர்களும் அடைந்தபுண்ணிய பலன்களையும், வேண்டுமன்றாட்டுக்களையும் பற்றி எங்கள் கடன்களை எங்களுக்குப்பொறும். எங்கள்[illegible]ன்காரர்களுக்குநாங்கள்பொறுக்குமாப்போல எங்களுக்கு மன்னித்தருளும். உம்மைப்பற்றி எங்கள்பகையாளிகளை மெய்யாகவே சிநேகித்து அவர்களுக்காகத் தேவரீரைப் பத்தியோடே வேண்டிக் கொள்ளுகிறோம். எவனுக்குந் தின்மைக்குப்பிரதி தின்மை செய்யாமல் உமது நிமித்தமாக நாங்கள் எல்லோருக்கும் நன்மை செய்யப் பிரயாசைப்படுவோம். எங்களால் முழுதும் மன்னிக்கப்படாதிருப்பதை நாங்கள் குறையறமன்னிப்பதற்கு எங்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருளும் சுவாமீ. மறைவும், பிரசித்தமுஞ், சடுதியும், அலட்டுமாகியசோதனையில்எங்களைப்பிரவேசிப்பியாதேயும். கடந்ததும், இருக்கிறதும்,வருவதுமாகிய தின்மையிலே நின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்.— ஆமென்சேசு.

---

## * அர்ச். பூசை விளக்கம்.

ஒன்றாகிய மெய்யான கடவுள் எல்லாவற்றையும் உடையவராகி அவரனைத்தையும் ஆளுகின்ற ஆண்மை விளங்கவும், அவருக்கு நாம் கீழ்ப்படிந்து உரிய வணக்கத்தைச் செய்யவும், ஸ்தாபிக்கப்பட்டகுருக்களால் யாதொரு ஞானார்த்தத்தைக் காட்டும் புறச்சடங்கோடே லவுகீகப் பொருளைத் தேவ பலியாகும்படிக்குத் திருப்பொருளாகச் செய்தபின்பு, அந்தப் பலி அழிக்கப்பட்டுக்

*வேத விளக்கம் க௫-ம். அதிகாரம். ௫௯-ம். பிரிவு முதற்காண்க.



கடவுளுக்கு மாத்திரஞ் செய்யப்படும் படைப்புப் பூசையென்று சொல்லப்படும். இந்த மெய்யான பூசையானது வணக்கப் பூசை, தோத்திரப்பூசை, பாவப்பொறுத்தற்பூசை, வரம்பெறுபூசை, என நான்கு வகையாக வகுக்கப்படும்.

ஆண்டவர் ஆளுகையைக் காட்டச் செய்யப்படுவது வணக்கப்பூசை யெனவும், அவர் நமக்குத்தந்த நன்றியை யறிந்து அவருக்குத் தோத்திரமாகச் செய்யப்படுவது தோத்திரப்பூசை எனவும், ஆண்டவர் கோப மாறவும், பாவிகள்மேல் மன மிரங்கவும், அவர்கள் திரும்பி மனஸ்தாபப்பட்டுப் பாவப் பொறுத்தற்கு வேண்டிய தெல்லாஞ் செய்யத் துணிவதற்கு ஆண்டவர் அவரவர்களுக்கு உதவி புரியும்படியாகச் செய்யப்படுவது பாவப்பொறுத்தற் பூசை யெனவும், பகை, படை, பஞ்சமுதலிய துயர்கள் தீரவும், இஷ்டப் பிரசாத முதலிய ஞான நன்மைகளை அடையவும், ஆரோக்கிய முதலிய லவுகீக நன்மைகளைப் பெறவுஞ் செய்யப்படுவது வரம்பெறு பூசை யெனவுமாம்.

---

## பூசையின் மகத்துவம்.

¶ அர்ச். அகுஸ்தீனென்பவர் சொல்லுமாப்போல திருச்சபையிலே நடக்கும் பூசைப் பலி ஒப்புக்கொடுக்கிறவரும் சர்வேசுரன். ஒப்புக் கொடுக்கிறதுஞ் சர்வேசுரனுக்கு. ஒப்புக்கொடுக்கப்படுகிறவருஞ் சர்வேசுரன். ஒப்புக்கொடுக்கப்படுகிறதுஞ்சர்வேசுரனுக்காக. என்கிறதினாலே இந்தப் பூசைப்பலி ஒருகாலுஞ் சர்வேசுரனுக்குப் பிரிய மில்லாமற் போகவுங் கூடாது, இதைவிடச் சர்வேசுரனுக்குப் பிரியமானது ஒன்றும் இருக்கவுங் கூடாது.

¶ இந்தப் பூசையின்பலன் சர்வலோக பாவத்தைப் பொறுக்க வல்லதா யிருக்கிறதல்லாமல் இன்னம் அநேகங் கோடாகோடி உலகத்தின் பாவங்களையும், பொறுக்க வல்லதா யிருக்கின்றது. இத்தனை வல்லபமுள்ள பூசை ஒருகாலிலும், ஓரிடத்திலும், ஒரு நேரத்திலு மாத்திரம் ஒப்புக் கொடுக்கப்படத் திருவுள மாகாமல் எந்நாளும், எவ்விடத்திலும், எந்நேரமுந் தானே கொடுக்கப்படச் சர்வேசுரன் திருவுளமானார். இப்படிப்பட்ட பூசை உலகத்தில் இல்லாவிட்டால் இப்பொழுது உலகத்திலே நடந்துவரும் அக்கிரமத்தால் உலகமெல்லாம் வெந்து அழிந்து சோதும் கொமோரா என்ற பட்டணம்

களைப் போல ஆகலாம். அந்த மேறாந்த இந்த உலகத்தின் பேரில் சர்வேசுரனுக்கு வருங் கோபத்தை இந்தப் பலி ஒன்றேமாற்றித் தயை வருவிக்கின்றது. இந்தப் பூசையை எல்லாருங்காணலாம் என்கிறதும் அல்லாமல் எல்லாருந்தானே குருவோடு கூட ஒப்புக் கொடுக்கலாம் என்கிறதினால் இந்தப் பூசைப் பலியின் மகத்துவத்தை வருணித்துச் சொல்ல ஒருவராலேயும் ஆகாது.

## பூசை காணப் போகும் ஒழுங்கு.

ஸ்ரீ பூசை காணப் போகையில், பற்பல காரியங்களிற் பலவிதமாய்ப் பிரிந்து அலையும் உனது சிந்தனைகளை யெல்லாம் ஒன்றுபடுத்தி ஓர் நிலையாக நிறுத்த உன்னால் இயன்றமட்டும் முக்கியமாய்ப் பிரயாசைப் படக் கடவாய். உனது இரட்சகரானவர் தாம் பலியாகப் போகிறதை நீ காணவும் தம்மோடு நீ ஐக்கியமாகவும் உன்னைக் கூப்பிடுகிற இனிய சத்தம் உனது காதிற் கேட்கப் படுகிறதாக எண்ணிக்கொள்வாயாக.

## கோவிலுக் குள்ளே போகிறபோது.

ஆண்டவரே நானும்முடைய செபத்தியானத்தின் ஆலயத்திலே பிரவேசிக்கிற இந்நேரத்திற் சகல லோக நினைவுகளைப் புறத்திற்றள்ளி உம்மை அகத்தபக்தியோடே தியானித்து நேசிக்கவும், தேவரீருடைய சந்நிதியில் தக்கமேரை மரியாதையோ டிருந்து கவனமாய்ச் செபிக்கவும் அனுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமி.— ஆமென்சேசு.

## தீர்த்தத்தைத் தொட்டுச் சிலுவை வரைகிற போது.

சர்வேசுரா சுவாமி யித்தத் தீர்த்தத்தின் முயற்சியால் உம்முடைய திருக்குமாரனுடைய சேசுக்கிறீஸ்துவின் இரத்தத்தைக்கொண்டு என்னாத்துமத்தைக் கழுவி என் பாவங்களைப் பொறுத்துப் பசாசினுடைய தந்திரங்களை யெல்லாம் விலக்கி உம்முடைய ஆசீர்வாதம் அடியேனுக்குத் தந்தருளும்.—ஆமென்சேசு.

## பூசைக்கு முன் ஆயத்தச் செபம்.

கருணை நிறைந்த பிதாவே! இரக்கம் நிறைந்த கர்த்தாவே! பாவத்தாற் கெட்டழிந்த மனுஷசந்ததியை மீண்டு இரட்சிக்கும்படி உமது ஏக சுதன் முன்னொருநாள் கொடிய வேதனைப்பட்டுச் சிலுவையில் உயிர்விடத் திருவுளமானது மல்லாமல் அவர்



அன்று சிலுவையில் உமக்கு ஒப்புக்கொடுத்த பலியைத் தேவரீர் என்றும் மறவாதிருக்கவும், நாங்கள் அதினால் அடையவேண்டிய பலனை இடைவிடாமல் அடையவுந் திருவுளமாகி இந்தப் பூசைப்பலி எந்நாளுந் திருச்சபையிற் கொடுக்கப்படும்படி சித்தமானீரல்லோ? உமது மட்டற்ற வல்லபமும், அளவற்ற ஞானமுங், குறையற்ற நன்மைத்தனமும் விளங்குகிற ஆச்சரியமான இந்தப் பூசையில் அடியோர் சாவதானத்தோடும் பயபத்தியோடும் இருக்கவும், உதிரஞ்சிந்தாத இந்தப் பலியைக் கொண்டு உதிரப்பலியின் பேறுகளைக் குறைவில்லாமற் கைக்கொள்ளவும் அநுக்கிரகம்பண்ணியருள வேணுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். ஆ! மட்டற்ற பிரதாப முடைத்தான பிதாவே! அடியேன் தேவரீருடைய கிருபா கடாட்சத்துக்கு அபாத்திரனாயினும் உம்முடைய நேச குமாரன் எனக்காகச் சிந்தின விலை மதியாத திரு விரத்தத்தைப் பார்த்து எனக்குத் தயைசெய்தருளும். ஆராதனைக்குப் பாத்திரமான கர்த்தாவே! உமது திவ்விய பூசையின்பலியைக் காணவேணுமென்று உமது பீடத்தை அண்டிவருகிறேன். இந்தத் திவ்விய பலியினால் அடியேனுக்கு வரவேண்டுமென்று தேவரீர் சித்தமாயிருக்கிற நன்மைகள் யாவையும் நான் குறைவில்லாமல் அடையவும், அதற்கு என்னிடத்திலுள்ள குற்றங்களை மாற்றவுந் தேவரீர் சித்தம் வைத்தருள வேணுமென்று உம்மை மன்றாடுகிறேன்.

தேவரீருடைய இனிய கருணையைப்பெற என் இருதயத்தைத் தக்கதாக்கி எனதுபொறிகள் போம்வழி விடாமல் நிறுத்திப் பாவியான அடியேனுடையபாவங்களை உமது திருஉதிரத்தாற் போக்கி என் ஆத்துமத்தைப் பரிசுத்தப் படுத்தி யருளும். தயாபரரான சர்வேசுரா, தேவரீர் அடியேனுடைய பாவங்களைப் பாராட்டாதேயும்; அதேனெனில் தேவரீருக்குப் பொருந்தாதென்கிறதினாலே இவைகளை முழுதும் வெறுத்துத் தள்ளுகிறேன். ஆகிலும் எனக்குப் பொல்லாப்பு செய்திருந்தால் அவர்களுடைய குற்றங்களை நான் நல்லமனதோடு பொறுத்துக்கொள்ளுகிறேன்; தேவரீரும் அடியேனுடைய பாவங்களைப் பொறுத்தருள வேணுமென்று மகா தாழ்ச்சியுடனே வேண்டிக் கொள்ளுகிறேன். என் மதுர சேசுவே! தேவரீர் அடியேனுக்காக முழுதும் உம்மைப்பலியாகத் தந்தீரே, அவ்வண்ணமாய்த் தேவரீருடைய திருவுளத்

தோடு என் கருத்தையும் ஒன்றுபடுத்தி அடியேனை முழுதும் உமக்குப் பலியாகக் கொடுக்கிறேன்.—ஆமென்சேசு.

## பூசை ஒப்புக் கொடுக்க வேண்டிய கருத்து.

முதலாவது.—சர்வேசுரன் அர்ச். தேவமாதாவுக்கும்மற்ற அர்ச்சிய சிஷ்டவர்களுக்குஞ் செய்த உபகாரங்களைக் குறித்து அவருக்குத் தோத்திரமாகவும். ௨-வது.—நாமும், பிறரும் அடைந்தநன்மைகளுக்கு நன்றியறிந்த தோத்திரமாகவும். ௩-வது. நாமும் பிறரும் இனி வேண்டிய நலங்களைப் பெறுவதற்காகவும். ௪-வது.—உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருக்கிற ஆத்துமாக்களுக்கு ஆறுதல் கிடைக்கவும், இந்நான்கு வகை முகாந்தரங்களைத் தொகுத்தும், அவரவர் பத்திக்கு அவசர மானபடியே தனித்தும் பூசையை ஒப்புக்கொடுக்கலாம்.

## பூசை ஒப்புக்கொடுக்கிற செபம்.

அகண்டமும், நிர்மலமுமான திரித்துவ ஏகசர்வேசுரா, எங்கள் நாதரான சேசுக்கிறீஸ்து பாடுபடுகோளுக்கு முதல்நாள் இரவு செய்யும் பொழுதுஞ், சிலுவைப் பீடத்திற் பலியாகும் பொழுதுந் தேவரீருக்குக் கொடுத்த மாசற்றபலியோடும், உலகமெங்குஞ் சகல குருக்களால் ஒப்புக்கொடுக்கப்பட்ட பலியோடும், இனி ஒப்புக்கொடுக்கப்படப்போகிற பலியோடும், நீசப் பாவியா யிருக்கிற அடியேனும் மகா பத்தி நம்பிக்கையோடும், தாழ்ச்சி வினயத்தோடும், சேசுநாதருடைய கருத்தோடும், என் கருத்தையும் ஏகரித்துக் குருவின் கைங்கிரியத்தைக் கொண்டு இந்தப்பலியைத் தேவரீருக்குக் காணிக்கையாக வைக்கிறேன். ஆண்டவரே! உமது மகிமைப் பிரதாபத்திற்கு அர்ச்சனையாகவும், கர்த்தத்துவத்திற்குக் கப்பமாகவும், சேசுக்கிறீஸ்துவின் பாடுகளை எப்பொழுதும் நினைப்பூட்டும்*ஸ்மரணமாகவும், தேவமாதா முதலிய சகல அர்ச்சிய சிஷ்டவர்களுக்கும், நீசப்பாவியா யிருக்கிற அடியேனுக்கும், இதுவரைக்குந் தேவரீர் செய்துவருகிறமட்டில்லாத உபகாரங்களுக்கும், இனி நித்தியமுஞ் செய்யப்படும் உபகாரங்களுக்கும் நன்றியறிந்த தோத்திரமாகவும், சீவித்திருக்கிறவர்கள் மரித்திருக்கிறவர்களான சகல விசுவாசிகளுடைய

* நினைப்பு.



பாவப் பொறுத்தலுக்கும் (*இன்னார் இன்னார் இன்னின்ன) உதவி சகாயம் அடையும்படிக்கும், நான் ஆராருக்காக வேண்டிக் கொள்ள வேண்டியிருக்குமோ அவர்களெல்லாருக்கும் கடைசியாய் மரித்தவர்கள் இளைப்பாற்றி அடையவும், உயிரோடிருக்கிறவர்கள் தேவரீரை அறிந்து சிநேகித்து இந்தப் பரதேசத்தில் உம்மைத் தோத்திரித்தபின் நித்தியமுந் தங்கள்சுயசீமையில் உம்மை வாழ்த்தி ஸ்துதித்து வணங்கும் படிக்குங் குருவின் கைங்கிரியத்தைக் கொண்டு அடியேன் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிற இந்தப் பூசைப்பலியைத் தேவரீர் கையேற்றுக்கொண்டு நீசனாயிருக்கிற அடியேன் மன்றாட்டுக்குச் செவி கொடுத்தருள வேணுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் உமது ஏகசுதனான சேசுநாதருடைய திருமுகத்தைப் பார்த்துத் தந்தருளும்.—ஆமென்சேசு.

---

# பூசைகாணும் வகை.

## குரு, தீர்த்தந்தெளிக்கிற பொழுது.

தூய பரிசுத்தத்தனங் கொண்டிருக்கிற அநாதி பிதாவே, தேவரீர் மனிதர்களுக்கு வரிவேதத்தைத் தந்தருளினபோது கட்டளையிட்ட தீர்த்தத்தைக் கொண்டு சுத்திகரிக்கப் படாத யாவருந் திருச்சபையில் நின்று சிதைந்துபோகக் கடவாரென்று திருவுளம் பற்றினதால் உம்முடைய திருச்சுதனாகிய சேசுநாதர் இரத்தத்தைக்கொண்டு பரிசுத்த மாகாத யாவரும் நித்தியகேட்டுக்குள் ஆவார்களென்று கற்பித்த தாயிற்றே, ஆகையால் கிருபை நிறைந்த பிதாவே! அந்தத் திவ்விய இரட்சகர் நாமத்தால் மந்திரிக்கப்பட்ட இந்தத் தீர்த்தத்தின் முயற்சியினாலே அவருடையதிரு இரத்தத்தைக் கொண்டு எங்கள் பாவ அழுக்கெல்லாம் போக்கி எங்கள் ஆத்துமங்களைச் சுத்திகரித்து இரட்சித்தருளுஞ் சுவாமி, தாவீதென்கிற இராசா தன் பாவங்க[illegible]யாய் அழுது துக்கப்பட்டுத் தேவரீரை நம்பிக்கையோடே நோக்கி, நீரும் ஈசோப்பென்கிற புல்லினால் என்மேற் றெளித்தருளுவீர், நானுஞ்

* அவர்கள் பெயரையும், வேண்டுங் காரியங்களையுங் குறித்துச் சொல்லவும்.

சுத்தமாவேன், நீர் என்னைக் கழுவுவீர், வெண் பனிக்கட்டியிலுந் தூய்மையாவேன் என்று வேண்டினதுபோலே அடியோர்களும் எங்கள் பாவங்களி னிமித்தம் மனஸ்தாபப் பட்டுத் தேவரீர் எங்களைக்கழுவிச் சுத்தமாக்க வேண்டுமென்று மன்றாடுகிறோம். குருவானவர் இந்தத் தீர்த்தத்தை மந்திரிக்கையில் தேவரீரை வேண்டிக் கொண்டபடியே உம்முடைய திருக்குமாரன் முகத்தைப் பார்த்து இந்தத் தீர்த்தத்தின் முயற்சியினால் எங்கள் சத்துருவாகிய பசாசையும் அதின் தந்திரச் சோதனைகளையும் விலக்கி வியாதிகளையும் நீக்கி இஸ்பிரீத்து சாந்துவின் இஷ்டப் பிரசாதத்தினால் அடியோர்களை அர்ச்சித்துக் காத்தருள வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்.

## பூசை ஆரம்பிக்கிறபொழுது.

ஆராதிக்கப் பாத்திரமான ஏக திரித்துவமே, நீசப்பாவியாயிருக்கிற அடியேன் தேவரீருடைய உந்நத மகிமைப்பிரதாப சோபனத்திற்குச் செய்யவேண்டியபணிவிடை நமஸ்காரங்களைச் செய்யவேண்டுமென்கிற சுத்த கருத்துடனே உமதுதிருநாமத்தைக்குறித்து இந்த உந்நதபரம பூசையைக் காண்கிறேன். என் திவ்விய இரட்சகரே, என் ஈடேற்றத்திற்காகக் கொடுக்கப்படுகிறஇந்தமாட்சிமைபொருந்திய பலியைக்கொடுக்கிற குருவுடனே கூடநானும் என் கருத்தினாலே ஏகித்து இந்தப் பலியைக் கொடுக்க எனக்கு விடைகொடுத்தருளும். என்பாவங்களுக்காகத் தேவரீர் கபால மலைமேற் சிலுவையில் அறையுண்டு கொடுத்த இரத்தப்பலியை நான் கண்ணாற்கண்டால் என்னிருதயத்தி லெத்தன்மையான தேவ பற்றுதல் உண்டாகத்தகுமோ, அத்தன்மையான உத்தமக்கருத்தை இரத்தஞ்சிந்தாதபலியாகிற இந்தப்பூசை நேரத்திலும் என் இருதயத்திற் பிறப்பித்தருளுஞ் சுவாமீ.

## குரு, பாவசங்கீர்த்தன மந்திரஞ் சொல்லுகிறபொழுது.

என் சர்வேசுரா, நான் தேவரீருக்குச் செய்த பாவதுரோகங்களை யெல்லாந் தேவரீருடைய திருச்சமுகத்திலே சங்கீர்த்தனம் பண்ணுகிறேன். நானென் சிந்தனை வாக்குக் கிரியைகளினால் அநேகம் பாவதோஷங்களைக் கட்டிக்கொண்டபடியினாலே, கன்னியர் எல்லாரிலுந் தூய்மையான பரிசுத்த கன்னியாஸ்திரீயாகிய அர்ச்சியசிஷ்ட மரியாயி, சகல அர்ச்சியசிஷ்டவர்கள், சமஸ்த விசுவாசிகள் இவர்கள் முன்பாக என்பாவங்களையெல்லாம் வெளிப்படுத்துகிறேன். என் பாவமே, என் பாவமே, என் பெரும்பாவமே. ஆகையால் எப்பொழுதுங் கன்னியாகிய அர்ச். மரியாயியையுஞ், சகல அர்ச்சியசிஷ்டவர்களையும், எனக்காக ஆண்டவரை வேண்டிக்கொள்ள வேணுமென்று மன்றாடுகிறேன். என்னாண்டவரே! தயையோடு என் மன்றாட்டைக் காதுகொடுத்துக் கேட்டு எனக்குப் பாவவிமோசனமும், பொறுத்தலும், இஷ்டப்பிரசாதமுந் தந்தருள வேணுமென்று உம்மை மன்றாடுகிறேன் சுவாமீ.



## குரு, சுவாமி கிருபையாயிரும் என்கிற மந்திரஞ் சொல்லுகிற பொழுது.

எங்கள் ஆத்தும சிருஷ்டிகரான கர்த்தாவே! உம்மாலே படைக்கப்பட்ட எங்கள் ஆத்துமங்கள் பேரில் இரக்கமாயிரும். தயாளசம்பூரணரானபிதாவே, உமது பிள்ளைகள் பேரில் தயவாயிரும். எங்கள் இரட்சணியத்தின் காரணருமாய், எங்களுக்காகப்பலியானவருமா யிருக்கிற கர்த்தாவே, உமது திரு இரத்தத்தினாலுந், திருமரணத்தினாலும் வந்த பலன்களை எங்களுக்குக் கட்டளைபண்ணியருளும். மகாநேயத்திற்குப்பாத்திரமான மதுரயேசுவே, எங்கள் நிர்ப்பாக்கியத்தைக் கண்டிரங்கி எங்கள்பாவங்களைப்பொறுத்தருளுஞ் சுவாமீ.

## குரு, சம்மனசுக்கள் பாடின தேவஸ்துதி சொல்லுகிற பொழுது.

உந்நத பரமண்டலத்திற் சர்வேசுரனுக்குத் தோத்திரமும், பூலோகத்திற் சுத்தமனதுள்ளவர்களுக்குச் சமாதானமும் உண்டாகக்கடவது. ஆண்டவரே இராசாக்களுக்கு அதிபதி இராசாவே, உந்நத பரம கடவுளே, மெய்யான தேவனே, சர்வவல்லபமுள்ள பிதாவே, தேவரீரைவாழ்த்தி ஸ்துதித்து ஆராதித்து வணங்கி நமஸ்கரித்து மிகுந்ததாழ்ச்சி வினயத்துடனே உமக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்கிறோம். ஆராதிக்கப்பாத்திரமான சேசுநாதரே, பிதாவின் ஏககுமாரனே, சர்வ[illegible] கர்த்தாவான சர்வேசுரா உலகத்தினுடைய பாவங்களைப் போக்கவந்த சர்

வேசரனுடைய செம்மறிப் புருவையே, எங்கள்பேரிலே இரக்கமாயிரும். பரமண்டலத்தில் உமது பிதாவோடு கூட இராச்சியபாரம் பண்ணுகிற நீர் எங்கள்பேரில் உமது கருணைக்கண்ணைத்திருப்பும். எங்கள் கர்த்தரான சேசுவே, தேவரீர்ஒருவர்மாத்திரமே மட்டற்ற பரிசுத்தருமாய், அளவற்ற வல்லபமுள்ளவருமாய், பிதாவினுடைய மகிமை சோபனத்தில் இஸ்பிரீத்துசாந்துவோடேகூடமுடிவற்ற தோத்திரத்திற்குப் பாத்திர மானவருமா யிருக்கிறபடியினாலே தேவரீர் ஒருவர்மாத்திரமே எங்களை இரட்சிக்கக்கூடுமென்கிறதினாலே எங்களை இரட்சித்தருளும்.

செபம்.

என்னாண்டவரே! அர்ச். தேவமாதாவினுடைய மன்றாட்டையும், நாங்கள் கொண்டாடுகிற அர்ச்சியசிஷ்டவர்களுடைய மன்றாட்டையுங் குறித்துக் குருவானவர்தமக்காகக்கேட்கிற மன்றாட்டையும், நான் ஆருக்காக வேண்டிக்கொள்ளவேண்டியிருக்குமோ அவர்கள்கேட்கிற மன்றாட்டையுங் கட்டளையண்ணியருளும். பின்னும் என்னாண்டவரே, நானும் அவர்களும் மோட்சக்கரைசேர எங்களுக்கு வேண்டிய வரப்பிரசாதங்களையெல்லாஞ் சேசுக்கிறீஸ்து நாதருடைய திருமுகத்தைப் பார்த்துத் தந்தருளும்.

குரு, நிருபம் வாசிக்கிறபொழுது.

என் சர்வேசுரா, உமது சத்தியவேதத்தை அறியாத அநேகமாயிரம் பேர்களுக்குள்ளே அடியேனைத் தெரிந்தெடுத்துக்கொண்டு உமது திருமறையை எனக்குப்போதித்தீர். இந்த தேவமறையை நான் முழுமனதோடு கைக்கொண்டு, தீர்க்கதரிசிகளைக்கொண்டு தேவரீர் அறிவித்த சத்தியங்களை எல்லாம் மிகுந்த பூச்சியத்துடனே செவிகொடுத்துக் கேட்கிறதுமல்லாமல், அவைகள் தேவவசனங்களாகையால் மிகவும் பணிந்த மனதோடு அவைகளை வந்தித்து மனமகிழ்ச்சியோடு அந்த வசனங்கள் நிறைவேறுகின்றதைக் கண்டு களிகூருகிறேன்.

என் சர்வேசுரா, பூருவ வேதத்திலிருந்த அர்ச்சியசிஷ்டவர்களைப்போலவாகிலும் இருந்தாலல்லோ தாவிலே, நான் பிதாப்பிதாக்களைப்போல உம்மை அபேட்சித்துத் தீர்க்கதரிசிகளைப்போல உம்மை அறிந்து நமஸ்கரித்து, அப்போஸ்தலர்களைப்போல உம்மை ஸ்நேகித்து முழுதும் உமது பாரிசமாயிராமல் இருப்பதென்னே?



குரு, சுவிசேஷம் வாசிக்கிறபொழுது.

என் சர்வேசுரா, இனி நான் நடக்கவேண்டிய வழியை அப்போஸ்தலருந் தீர்க்கதரிசிகளு மல்ல, உம்முடைய ஏக சுதன்றானே யெனக்குப் படிப்பிப்பவர் அவருடைய திருவசனங்களைத் தானேகேட்கப்போகிறேன், ஆனால் ஐயையோ! என்னாண்டவராகிற சேசுவே! இந்தவசனங்கள் உமது திருவசனங்களென்று விசுவசித்தும் என் விசுவாசத்திற் கொத்தபிரகாரம் நடவாமற் போனேனாகில் எனக்கென்ன பிரயோசனம்? உமது திருச்சமுகத்தில் நான் தீர்வைக்கு வரும்பொழுது என்னிடத்தில் தேவஸ்நேகமும், உத்தமக்கிரிகையுமில்லாமல் விசுவாசமாத்திரமிருந்தால் எனக்குவரும் பலனென்ன? நான் விசுவசித்தாலும், விசுவாசியாதவனைப்போலவும் ஒன்றில் உமது சுவிசேஷத்திற்கு விரோதமான மற்றொன்றை விசுவசிக்கிறவனைப்போலவும் நடந்துவருகிறேனே! என் சர்வேசுரா, உமது போதனைக்கும் என்னுடைய நடத்தைக்குமுண்டாயிருக்கிற மாறுத விரோதத்திற்குத் தக்கபடி என்னைத் தீர்வையிடாதேயும். என்னாண்டவரே நான் முழுமனதோடு உமது சத்தியத்தை விசுவசிக்கிறேன். என்விசுவாசத்திற்கு ஒத்தவண்ணம் நான்நடக்க எனக்குவேண்டிய தயிரியமும், பலமுங் கட்டளையண்ணியருளும். ஆண்டவரே அதினால் உமக்கே ஸ்துதியுந் தோத்திரமு முண்டாம்.

குரு, விசுவாச மந்திரஞ் சொல்லுகிற பொழுது.

சகலத்தையும் படைத்தவருமாய்ச், சர்வ வல்லபமுள்ள பிதாவுமா யிருக்கிற சர்வேசுரன் ஒருவரை மாத்திரமே விசுவசிக்கிறேன். அர்ச்சியசிஷ்டதனத்திலும், வல்லபத்திலும், நித்தியத்திலும், தேவத்துவத்திலும், பிதாவுக்குச் சரிசமானமா யிருக்கிற அவருடைய ஏகசுதனாகிய நமது ஆண்டவர் சேசுக்கிறீஸ்து நாதரையும் விசுவசிக்கிறேன். இவர் மனிதர் பேரில் வைத்த பட்சமிகுதியால் *மனிதாவதார மெடுத்துக்கஸ்திபாடுபட்டு மரித்து,

* இவ்விடத்தில் சேசுநாதருடைய மனுஷாவதாரத்தின் பரமயிரகசியத்தை ஆராதிக்கும்படி முழந்தாளிலிருக்கவும்.

உயிர்த் தெழுந்தருளி மோட்சத்திற்கு ஆரோகணமாயினு ரென்றும், இனி மனுஷரை நடுக்கேட்க எழுந்தருளி வருவா ரென்றும், பிற்பாடு நித்திய காலம் முடிவற்ற பாக்கியமான இராச்சிய பாரம் பண்ணிக்கொண் டிருப்பாரென்றும் உறுதியாக விசுவசிக்கிறேன். பிதாவையுஞ், சுதனையும் போலச் சரிசமான தேவனு யிருந்து அவர்க ளிடத்திலே நின்று புறப்பட்டு அவர்களோடொத்த மகிமையை அடைந்திருக்கிறவருமாய், நித்திய சீவியத்தின் ஊருணியுமாய் மனிதரை அர்ச்சிக்கும் காரணருமாய்த் தீர்க்கதரிசிகளுக்கு ஞானங் கொடுக்கிறவருமாயிருக்கிற இஸ்பிரீத்து சாந்துவையும் விசுவசிக்கிறேன். அப்போஸ்தலர்களாற் போதிக்கப் பட்டுப் பொதுவா யிருக்கிற ஒரே திருச்சபையையும் பாவப் பொறுத்தலுக்காக உண்டு பண்ணப்பட்ட ஞானஸ்நானத்தையும் விசுவசிக்கிறேன். சர்வேசுரனுடைய கிருபையினால் மரித்தவர்களிடத்திலே நின்று எழுந்து நித்திய சீவியத்தை அடைவே னென்று முழு நம்பிக்கையுடனே விசுவசிக்கிறேன்.—ஆமென் சேசு.

## குரு, அப்பத்தைக் கையிலேந்திக் காணிக்கை கொடுக்கிற பொழுது.

மட்டற்ற வல்லபத்தையும் அளவற்ற பரிசுத்தத் தன்மையையுங் கொண்டிருக்கிற நித்திய சர்வேசுரா, நானுமது திருச்சமுகத்திலே நிற்க எவ்வளவு அபாத்திரனு யிருந்தாலும் என்னுடைய இரட்சகராகிற சேசுக்கிறீஸ்துவானவர் இந்தப்பலியை உண்டுபண்ணின பொழுதும், எனக்காக இந்தப் பீடத்தின்பேரில் இன்னம் பலியாகிற இந்தத்தருணத்திலும் அவருக்குள்ள கருத்துடனே என்கருத்தையும் ஒன்றாகக் கூட்டிக், குருவின் கைங்கிரியத்தைக் கொண்டு உமக்கு இந்தப்பலியை ஒப்புக்கொடுக்கிறேன், பின்னும் அடியேன் மேலுஞ் சர்வ படைப்புண்ட வஸ்துக்கள் பேரிலுந் தேவரீருக்குள்ள மேலான கர்த்தத்துவத்தை யறிந்து நமஸ்கரிக்கவும், என்பாவங்களுக்குப் பொறுத்தலடையவும், எனக்கு நீர் செய்த எண்ணிறந்த உபகாரங்களுக் கெல்லாம் நன்றியறிந்த தோத்திரமாகவும், தேவரீருக்கு இந்தப்பலியை ஒப்புக்கொடுக்கிறேன் சுவாமி.



கடைசியா யென் சர்வேசுரா, சகலபாவப் பொறுத்தலுக்காகப் பலியானவருமாய், எல்லாவற்றிலும் பரிசுத்தருமா யிருக்கிற உமது ஏக சுதனுடைய புண்ணியங்களைக் குறித்துப் பாவிகளுக்காகத் தந்தருளப்பட்ட இரட்சணியத்தின் இஷ்டப்பிரசாதப்பலன்களை அடியேன் என்தந்தைதாய், உறவின்முறையார், உபகாரிகள், சிநேகிதர், பகைவர், எல்லோரும் அடையும்படிக்கு, இந்தத் திவ்விய பலியைத் தேவரீருக்கு ஒப்புக் கொடுக்கிறேன். பின்னுந் தேவரீருக்கு ஒப்புக் கொடுக்கிற இந்தப் பூசையின் பலனை அர்ச்சியசிஷ்ட பாப்பு, மேற்றிராணிமார், குருக்கள், இராசாக்கள், பிரபுக்கள், சகலமான கிறீஸ்துவர்களும் அடையப் பண்ணியருளும். என்னாண்டவரே, உம்முடைய திருக்குமாரன் பேறுபெற்ற பலன்களைப் பார்த்து, உத்தரிக்கிற ஸ்தலத்திலே இருக்கிற ஆத்துமாக்கள்மேல் இரங்கி, அவர்களுக்கு இளைப்பாற்றியும், பிரகாசமும், சமாதானமு முள்ள இடத்தைக் கட்டளை யிட்டருளும். என் சர்வேசுரா, உமது சத்துராதிகளையும் என் விரோதிகளையும், மறந்துவிடாதேயும், அஞ்ஞானிகள், பதிதர், பொல்லாத கிறீஸ்துவர்கள்பேரில் இரக்கமாயிரும்; என்னை உபத்திரவப் படுத்துகிறவர்களை ஆசீர்வதித்தருளும், அவர்கள் எனக்குச் செய்கிறகுற்றங்களை நான் நல்லமனதோடு பொறுத்துக்கொள்ளுகிறதுபோல, அடியேன் தேவரீருக்குச் செய்த குற்றங்க ளெல்லாவற்றையும் பொறுத்தருளும்.

## குரு, பலிஒப்புக்கொடுக்க ஆயத்தம் பண்ணுகிற பொழுது.

சம்மனசுக்களுக்கும், மனிதருக்கும், அதிபதி இராசாவானவர் இதோ இந்தப் பீடத்தின்மேல் எழுந்தருளி வரப்போகிறார். உலக காரியங்களின்மேல் என் சிந்தை கவிழ்ந்துழலாமல் உம்மை மாத்திரமே நாடியிருக்க, ஆண்டவரே எனக்கு உமது ஞானத்தை நிரம்பத் தந்தருளும். பரலோகத்திற்கும், பூலோகத்திற்கும், பரம கர்த்தருமாய்ச் சர்வ வல்லபமுள்ளவருமா யிருக்கிற நித்திய பிதாவே, நான் எக்காலத்திலும் எவ்விடத்திலும் உம்மை வாழ்த்தி ஸ்துதித்துக்கொண்டுவர எனக்குக் கடனுண்டே, ஆகையால் தேவரீரை இடைவிடாமல் ஆராதித்துக்கொண்டு வரும்படிக்குச் சேசுக்கிறீஸ்து நாதரோடு ஐக்கியப்படுவதைவிட வேறொன்றுங்

காணேன் சுவாமீ. சகல முத்திப்பேறு பெற்றவர்களும் அவரைக்கொண்டு தேவரீருக்கு அர்ச்சனை பண்ணுகிறார்கள். சகலசம்மனசுக்களும் பூசித அச்சத்தோடு நடுக்கமுற்றுத் தங்களில் ஒருமித்து அவரைக் கொண்டு தேவரீரை ஸ்துதித்துப் புகழுகிறார்கள். ஆண்டவரே எங்கள் அற்பப்புகழை அந்தச் சம்மனசுக்களுடைய திருப்புகழோடு ஒன்றாகக் கூட்டித் தேவரீருக்குக் காணிக்கையாக வைக்க எங்களுக்கு உத்தாரந் தந்தருளும்.

### குரு, பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், என்னுந் திருப்புகழ் கூறுகிற பொழுது.

நாங்கள் சந்தோஷத்தினால் அகமகிழ்ந்து பிரமித்துப் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் தளத்திற்குக் கர்த்தராகிய தேவனென்றும், அவருடைய மகிமைப் பிரதாபம் உலகங்களெங்கும் நிறைந்திருக்கிறதென்றும் முத்திப்பேறு பெற்றவர்கள் அவரைப் பரலோகத்திலே ஸ்துதிக்கக் கடவார்களென்றும், பிதாவினால் அனுப்பப்பட்டுப் பிதாவுக்குச் சரிசமான தேவனாயிருந்து பூலோகத்தில் எழுந்தருளி வருகிறவருக்கு மாறாத தோத்திரமுண்டாகக் கடவதென்றும் சம்மனசுக்களுடனே நாங்களும் உம்மைப் புகழுவோம்.

### குரு, பரிசுத்தர் என்கிற மந்திரஞ் சொன்னபிறகு.

மட்டற்ற தயைநிறைந்த பிதாவே, தேவரீருக்கு ஏகசுதனுமாய் எங்கள் ஆண்டவருமாயிருக்கிற சேசுக்கிறீஸ்து நாதருடைய திருமுகத்தைப் பார்த்து நாங்கள் தேவரீருக்குக் கொடுக்கிற இந்தக் காணிக்கையைக் கையேற்றுக் கொண்டு மெய்யான பொதுச் சபையாகிற திருச்சபையையும் அதின் அவயவங்களாகிற அர்ச். பாப்பு, மேற்றிராணிமார்களையும், சகலவிசுவாசிகளையும், ஆண்டளித்துக் காத்தருள வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம். பின்னையும் எங்கள் தந்தை, தாய், உறவின் முறையார், சினேகிதர், உபகாரிகள், பகையாளிகளுக்கும், இந்தத் திவ்விய பூசையைக் கேட்கிறவர்களுக்கும் விசேஷமாய் (*இன்னார் இன்னாருக்கு) வேண்டிய உதவி சகாயங்களைக் கட்டளையிட்டருளுஞ் சுவாமீ, நாங்கள் கேட்கிற மன்றாட்டுத் தேவரீருக்கு அதிக

* அவர்கள் பெயரைக் குறித்து வேண்டிக் கொள்ளவும்.



பிரியமாகும்படிக்கு அர்ச். தேவமாதா, அப்போஸ்தலர், வேதசாட்சிகள், இவர்களுடைய மன்றாட்டுக்களுடனே எங்கள் மன்றாட்டுக்களையுங் கூட்டித் தேவரீருக்குக் காணிக்கையாக வைக்கிறோம். முன்னாள் பிதாப்பிதாக்கள் உலக இரட்சகர் எப்பொழுது வருவாரோவென்று ஆவலோடு காத்துக்கொண்டிருந்தாப்போலே, இப்பொழுது நானும் அவர் இந்தப்பீடத்தின்மேல் எப்பொழுது எழுந்தருளி வருவாரென்று காத்திராமல் இருப்பேனோ? அவர்களிடத்திலே விளங்கின விசுவாசமுந், தேவ சிநேகமும் என்னிடத்திலும் விளங்காதிருக்குமோ? ஆண்டவராயிருக்கிற சேசுக்கிறீஸ்துவே! உலக பாவங்களைப் போக்குகிறவரே எழுந்தருளிவாரும். உமது அற்புதங்களில் மேலான அற்புதமாகிற இந்தப் பரம இரகசியத்தை நிறைவேற்றவாரும், இதோ லோகத்தினுடைய பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையானவர் எழுந்தருளி வருகிறார்.

### குரு, தேவநற்கருணை எழுந்தருளப் பண்ணுகிற பொழுது.

மாம்சமாயின வார்த்தையே, திவ்விய சேசுவே, மெய்யான தேவனும் மெய்யான மனிதனும் ஒன்றாயினவரே, தேவரீர் இந்தப்பீடத்தின்பேரில் மெய்யாகவே எழுந்தருளி வந்திருக்கிறீரென்று உறுதியாக விசுவசித்து மிகுந்த தாழ்ச்சியோடு வணங்கி ஆராதித்து, முழுமனதோடு உம்மை அபேட்சித்து நேசிக்கிறேன். என்மேல்வைத்த நிகரில்லாத அன்பினால் தேவரீர் இந்தப் பீடத்தின்மேல் எழுந்தருளி வந்தமையால், என்னைமுழுதும் உமக்குத் தேவவசீகரம் பண்ணுகிறேன் [illegible]மீ. சகல மனிதருக்காகத் தேவரீர் சிந்தின இந்த விலை [illegible] இரத்தத்தை ஆராதனை பண்ணுகிறேன். என் சர் [illegible]ச்சிந்தின இந்தத் திரு இரத்தம் வீண்போகாதென [illegible]. உமது திரு இரத்தத்தின்பலன்களை நான் அடையும் ப [illegible]டாக அநுக்கிரகம் பண்ணியருளும். மகா அன்புக்குரிய என் திவ்வியசேசுவே, எனக்காக உம்முடைய இந்தத் திரு இரத்தத்தைச்சிந்த உண்டாயிருந்த அளவில்லாத உமது சிநேகத்திற்கு நன்றியறிந்த தோத்திரமாக நானும் என் இரத்தத்தையெல்லாந் தேவரீருக்கு முழுதும் ஒப்புக் கொடுக்கிறேன் சுவாமீ.

### குரு, தேவநற்கருணை எழுந்தருளப் பண்ணின பின்பு.

என் ஆண்டவரே, தேவரீர் செய்த இந்த அற்புதத்தை நான் கண்ணுற் கண்டிருந்துந் தேவரீருக்கு ஒருத துரோகங்களைச் செய்யத் துணிந்தேனாகில், என் அக்கிரமமும் நன்றிகெட்ட தன்மையும் இவ்வளவென்று சொல்லி முடியுமோ? இந்தப் பூசிதமான சடங்கைக்கொண்டு தேவரீர் எனக்குக்காட்டுகிற உம்முடைய பாடுகளின் கடின வேதனைகளையும் உத்தானத்தின் ஒட்டோலகத்தையும், நான் ஒருபோதும் மறப்பதில்லை சுவாமீ. அடிகளாற் கிழிந்து தெறிபட்ட உமது திருச்சரீரமும் எங்களுக்காகச் சிந்தின திரு இரத்தமும், இதோ என்கண்முன்பாக இந்தப்பீடத்தின் மேற் பிரத்தியக்ஷமாய் எழுந்தருளி இருக்கின்றதாமே, நித்திய ஆனந்த மகிமைப்பிரதாபமுள்ள பிதாவே, இதோ தேவரீர் மெத்த மிரங்கி அடியார்களுக்குத் தந்தருளின மாசற்ற செம்மறிப்புருவையைத் தேவரீருக்கு மெய்யாகவே பலியாக ஒப்புக் கொடுக்கிறோம். முன்னாள் அபேல், அபிராம், மெல்கிசேதேக்கென்கிற மகாத்துமாக்கள் கொடுத்த பலியெல்லாம் இந்த மெய்யான பலியின் சாயலாயிருந்ததொழிய வேறல்ல; உமது நித்திய நேசரான சுதனுமாய் எங்கள் ஆண்டவருமாயிருக்கிற சேசுக்கிறீஸ்து ஒருவர் மாத்திரமே உமது பீடத்திற்கு யோக்கியமான பலியாயிருக்கிறார், நாங்களும் அவரைத்தானே தேவரீருக்குப் பலியாக ஒப்புக்கொடுக்கிறோம். இந்த உந்நதபலியைத் தேவரீருக்குத் தங்கள் தங்கள் மனமொழிகளாற் கொடுக்கிறவர்கள் எல்லாரும் அதினால் வரும் பலனை அடையக் கடவார்கள். *

என் ஆண்டவரே, திருச்சபையில் உட்பட்டு மரித்த சமஸ்த விசுவாசிகளுடைய ஆத்து[illegible]களுக்கும் இந்தத் திவ்விய பலியின் பலன் பலிக்[illegible]க்கடவது. விசேஷமாய் இந்தத் திவ்விய பலியை [illegible] இன்னார் இன்னாருடைய) ஆத்துமங்களின் வேதனையை நீக்கி அவர்களுக்கு இளைப்பாற்றியைக் கட்டளையிட்டருளும்.

அநந்த தயாபரரான பிதாவே, இனி ஒருநாள் எங்களுக்கும் இந்த உபகாரத்தைக் கட்டளையிட்டு நித்தியகாலம் நாங்கள், அப்

* அவர்கள் பெயரைக்குறித்து வேண்டிக் கொள்ளவும்.



போஸ்தலர், வேதசாட்சிகள், சகல அர்ச்சியசிஷ்டவர்களுடனே கூடத் தேவரீரைச் சிநேகித்து ஸ்துதித்துத் தோத்திரித்துக்கொண்டிருக்கும் படியாய் எங்களுக்கு அநுக்கிரகம் பண்ணியருளுஞ் சுவாமீ.

### குரு பரமண்டல மந்திரஞ் சொல்லுகிற பொழுது.

என் சர்வேசுரா தேவரீர் எனக்குப்பிதாவாயிருக்கிறதினால் எத்தனை பாக்கியம்! தேவரீர் வீற்றிருக்கும் மோட்சவிராச்சியமே, ஒருநாள் என் குடியிருப்பாகுமென்று நினைக்கும்பொழுது எனக்கு எத்தனை அகமகிழ்ச்சி, உமது திருநாமம் உலகமெங்கும் ஸ்துதிபெறக்கடவது. சகல மனிதர் இருதயத்திலும் நினைவிலும் ஏகாதிபதியாய்நின்று ஆண்டருளும், உமது பிள்ளைகளுக்குவேண்டிய ஆத்துமசரீர வுணவுகள் குறைவுபட வொட்டாதேயும். புறத்தியாருடைய குற்றங்களைநாங்கள் முழுமனதோடுபொறுத்துக் கொள்ளுகிறோம். தேவரீரும் எங்கள் குற்றங்களைப் பொறுத்தருளும். இந்த நிர்ப்பாக்கியம் நிறைந்த உலகத்தில் நாங்கள் ஜீவித்திருக்குமட்டும் எங்களை அடர்ந்துவருஞ் சோதனையில் நாங்கள் அகப்பட்டு மோசம் போகவொட்டாதேயும், சகல கேட்டிலுங் கொடிய கேடாகிற பாவத்தில் எங்களை விழவொட்டாமற் காத்திரட்சியும்.—ஆமென்சேசு.

### குரு, உலகபாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையே என்கிற மந்திரஞ் சொல்லிப் பிழை தட்டிக் கொள்ளுகிற பொழுது.

எனக்காகப் பலியான சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையே, என்மேல் இரக்கமாயிரும், என் இரட்சணியத்திற்காக ஒப்புக்கொடுக்கப்பட்ட அர்ச்சிக்கப்பட்ட பலியே, என்னை இரட்சித்துக் கொள்ளும், பிதாவினிடத்தில் எனக்காக மனுப்பேசும் பரம கர்த்தரே, உமது பிதாவினிடத்தில் எனக்குவேண்டிய, இஷ்டப்பிரசாதத்தை நான் அடையச் செய்து உமது சமாதானத்தை எனக்குத் தந்தருளும்.

### குரு, தேவநற்கருணையை உட்கொள்ளுகிற பொழுது.

என் ஆத்தும நேயரான இரட்சகரே, சுத்தஇருதயமும் உருக்கமுள்ள பத்தியும் மேலிட்டதினால் நான்தோறுந் தேவரீரு

டைய திவ்விய நற்கருணையை அருந்த வருகிற பாக்கியவான்களில் நானும் ஒருவனாயிருக்கிறது எனக்கினிய ஆனந்தமாமே, இந்தத் தருணத்தில் உம்மை என் இருதயத்தில் அடைந்து வணங்கி நமஸ்கரித்து என் அவசரங்களை எல்லாம் உமக்கு வெளியாக்கி, மெய்யாகவே தேவரீரை உட்கொள்ளுகிற பாக்கியவான்களுக்குத் தேவரீர் கொடுத்தருளுகிற இஷ்டப் பிரசாதங்களுக்கு நானும் பங்காளியானால் எனக்கு எத்தனை நன்மை! ஆனால் என் கர்த்தரே, நான் முழுதும் அபாத்திரனாயிருக்கிறபடியினால் என் ஆத்துமத்தின் குறைகளைத் தீர்த்தருளும்; நான் செய்தபாவதோஷங்களை எல்லாம் பொறுத்தருளும்; அவைகள் தேவரீருக்குப் பொருந்தாதென்கிறதினால் அருவருத்துத் தள்ளுகிறேன். நான் உம்மோடு ஐக்கியமாக வேண்டுமென்று மிகவும் அபேட்சிக்கிற உண்மையான என் ஆசையைக் கையேற்றுக் கொள்ளும். உமது கடைக்கண்ணாற் பார்த்து, என்னைச் சுத்திகரித்தருளும். தாமதமின்றியே உம்மை நான் உரிய முறையோடு உட்கொள்ள என்னை ஆயத்தப் படுத்தும். அந்தப்பாக்கியமான நாள் வருகிறதற்குள்ளாகக் குருவானவர் தேவநற்கருணையை உட்கொண்டதினால் இந்தத் திவ்விய பூசையைக் காண்கிற சகல விசுவாசிகளுக்கும் வரவேண்டியபலன் அடியேனுக்கும் பங்குண்டாயிருக்கக் கிருபை செய்தருள வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறேன். இந்தத் தேவதிரவிய அநுமானத்தின் பலத்தினால் என் விசுவாசத்தை வளரப்பண்ணும், என்னம்பிக்கையை உறுதிப்படுத்தும், என்னிடத்திலுள்ள அன்பைச் சுத்தமாக்கும், நான் உம்மைநாடி உமக்காகவே சீவித்திருக்கும்படி உமது அன்பை எனக்கு நிறையக் கொடுத்தருளும்.

### குரு, கடைசிச்செபஞ் சொல்லுகிற பொழுது.

என் கர்த்தரே, தேவரீர் என்னுடைய இரட்சணியத்திற்காகப் பலியானதினால், என்னை முழுதும் உமது தோத்திரத்திற்குப் பலியாக ஒப்புக்கொடுக்கிறேன். உமக்குப் பலியான என்னை உமது சித்தத்திற்கு ஒத்தவண்ணமாய் நடத்தும். நான் அநுபவிக்கவேண்டுமென்று தேவரீர் சித்தமாயிருக்கிற துன்ப துரிதங்களை முழுமனதோடு அங்கீகரிக்கிறேன். அவைகள் தேவரீர் கையிலிருந்து வருகிறபடியினாலே அவைகளைப் புகழ்ந்து கையே



ற்றுக்கொண்டு, தேவரீருடைய துன்ப துரிதங்களோடு ஒன்றாகக்கூட்டி உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.

இந்தத் திவ்விய பூசையின் பலனால் என்னைச் சுத்திகரித்தருளும். அற்பப் பாவங்களையும் அருவருத்துத் தள்ளுவேன். விசேஷமாய் என்னிடத்தில் இருக்கிற துர்க்குணத்தினால் மேற்கொள்ளுகிற பாவத்தில் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருப்பேன். உமது திருக்கற்பனைகளின்படியே பிரமாணிக்கமாய் நடக்க வருந்துவேன். உமது திருக்கற்பனைகளை மீறுகிறதைவிடச் சகல துன்பதுரிதங்களை அநுபவிக்கவும் உயிரைமுதலாய் இழக்கவுந் துணிந்திருக்கிறேன் சுவாமி.

### குரு, ஆசீர்வாதங் கொடுக்கிறபொழுது.

என் சர்வேசுரா, நான் பண்ணின இந்த நல்லபிரதிக்கினைகளை ஆசீர்வதித்தருளும். பின்னையும் உமது திருப்பணிபுரியுங் குருவின்கையால் எங்களை ஆசீர்வதித்தருளும். அந்த ஆசீர்வாதத்தின்பலன் நிரந்தரம் எங்கள்மேற் குடிகொண்டிருக்கக்கடவது. + பிதாவுடையவும், சுதனுடையவும், இஸ்பிரீத்து சாந்துடையவும் நாமத்தினாலே.—ஆமென்சேசு.

### குரு, கடைசிச் சுவிசேஷம் வாசிக்கிறபொழுது.

திவ்விய வார்த்தையுமாய்ப் பிதாவினுடைய ஏக குமாரனுமாய், மோக்ஷவழியை அடியோர்களுக்குக் காண்பிக்கப் பரலோகத்திலே நின்று எழுந்தருளிவந்து இவ்வுலகத்திற்குப் பிரகாசமுமாயிருக்கிற சேசுவே, தேவரீர் பிதாவினால் அனுப்பப் பட்டுமென்று ஏற்றுக்கொள்ளாமற் புறக்கணித்துத் தள்ளிவிட்ட அவிசுவாசிகளைப்போல நானும் ஒருவனாகாமற் காத்தருளும். சர்வேசுரனுடைய பிள்ளைகளாகத் தேவரீர் சித்தமாயிருந்த மகிமையான சுவீகாரத்திற்குப் பங்காளிகளாகிறதைப் பார்க்கிலும் பசாசின் அடிமைகளாகிறது தாவிளையென்று எண்ணின அந்த நிர்ப்பாக்கியருடைய குருட்டாட்டத்திலே நானும் விழச் சம்மதிப்பீரோ? மாம்சமாகப் பண்ணப்பட்ட வார்த்தையே, உம்மை மகா தாழ்ச்சி விநயத்துடனே வணங்கி நமஸ்கரிக்கிறேன். நீர் என்னுடைய கர்த்தாவுமாய்ச் சகல மனிதரையும் இரட்சிக்க மனுஷனாகிய தேவனுமாயிருக்கிறதினாலே, நான் அர்ச்சியசிஷ்டவனாகவும், உம்

மை நிரந்தரம் பரலோகத்திற் றரிசித்திருக்கவும் வேண்டிய வரப்பிரசாதங்களைக் கட்டளை யிடுவீரென்று உறுதியாக விசுவசித்து உமதுமேல் மாத்திரம் என்னம்பிக்கை யாவும் வைத்திருக்கிறேன்.—ஆமென்சேசு.

## பூசை முடிந்தபின் செபம்.

ஆண்டவரே, இந்தப்பூசை காண்கிறபாக்கியம் அநேகம் பேர்களுக்குக் கிடையாமலிருக்க அடியேனுக்குக் கிடைக்கத் தயைபுரிந்ததினால், உமக்கு நன்றியறிந்த தோத்திரம் பண்ணுகிறேன். உம்முடைய திருச்சமுகத்தில் என்னுடைய அசட்டையினாலேயும், பராக்கினாலேயும், செய்த தப்பிதங்களையும், அனாச்சாரங்களையும் பொறுத்தருள வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறேன். சர்வேசுரா சுவாமீ, இந்தத் திவ்விய பலியினால் நான் செய்த பாவங்களுக்குப் பொறுத்தலும், இனி அவைகளில் விழாதபடிக்கு இஷ்டப்பிரசாதமும் பலமுந் தந்தருளும். இதோ தேவரீரை நம்பிக்கொண்டு என் அலுவல்களை உம்முடைய சித்தத்தின்படியே நடத்தப்போகிறேன். நீர் எனக்கு இப்பொழுது செய்த உபகாரத்தை இந்தநாள் முழுதும் நினைத்துக்கொண்டு வருகிறதன்றியே, நான் இப்பொழுது அடைந்த பூசையின்பலனை இழந்துபோகப் பண்ணக்கூடுமான அற்ப துராசைக்கும், நினைவுக்கும், வார்த்தைக்கும், நான் இடங்கொடாமலிருக்க உமது திவ்விய அநுக்கிரக உதவியாற் றீர்மானித்தேன் சுவாமீ.—ஆமென்சேசு.

பூசை காணும்வகை முற்றிற்று.



## பதின்மூன்றாஞ் சிங்கராய னென்கிற நாமதேய முள்ள அர்ச். பாப்பானவர்

கட்டளையிட்ட உத்தாரப்படி இதனடியில் வருஞ் செபங்களைக்கோயில்களில் தனிப்பூசைக்குப் பிறகு முழங்காலிலிருந்து வேண்டிக் கொள்ளுகிறவர்கள்

௩௱-நாட் பலனடையலாம்.

குருவானவர் பிரசைகளோடு மூன்றுவிசை பிரியதத்த மந்திரஞ்சொல்லிப் பின்பு கிருபைதயாபத்து மந்திரஞ் சொல்லுவார்.

**கிருபை தயாபத்து மந்திரம். ௧௬-ம். பக்கம் காண்க.**

முதலோதி.—சேசுநாதருடைய திருவாக்குத் தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரவான்களா யிருக்கத்தக்கதாக.

துணைவர்.—பரிசுத்த தேவமாதாவே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

### பிரார்த்திக்கக்கடவோம்.

எங்களடைக்கலமும், பலமுமாகிய சர்வேசுரா! உம்மை நோக்கிக் கூப்பிடுகிற பிரசைகளின் மன்றாட்டுக்குச் செவிகொடுத்தருளும், மகத்துவம்பொருந்திய அமலோற்பவ கன்னிகையும், தேவதாயாருமாகிய அர்ச். மரியம்மாளும் தமது பத்தாவாகிய அர்ச். சூசையப்பரும், உம்முடைய அப்போஸ்தலராகிய அர்ச். இராயப்பர், சின்னப்பர் முதலிய சகல அர்ச்சிய சிஷ்டவர்களும், வேண்டிக்கொள்ளுகிற மன்றாட்டுக்குத் தேவரீர் இரங்கிப்பாவிகள் மனந்திரும்பவும், பரிசுத்த தாயாகிய திருச்சபைக்குச் சுதந்தரமும், ஜெயமும் உண்டாகவும், நாங்கள் இடைவிடாமல் செய்யுஞ் செபங்களை அங்கீகரித்து நாங்கள் அவைகளை அடையும்படி தயைபுரியும், இந்தமன்றாட்டை எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும்.—ஆமென்சேசு.

### வேறொரு மன்றாட்டு.

அதிதூதராகிய அர்ச். மிக்கேலென்கிற சம்மனசானவரே! போராட்டத்தினின்று எங்களைக்காத்து இரட்சியும்; பசாசினு

டைய மாய தந்திரத்திலும், சோதனையிலும், நாங்கள் அகப்படாதபடி எங்களைக் காப்பாற்றி யருளும். சர்வேசுரன் அந்த சத்துருவைக் கீழ்ப்படுத்தக் கடவாராக. பரலோக சேனைகளுக்கு முதன்மையானவராகிய நீருந் தேவபலத்தைக் கொண்டு பசாசையும் ஆத்துமங்களைக் கெடுக்க இவ்வுலகத்திற் சுற்றித்திரியும் அலகைகளையும், நரக பாதாளத்தில் தள்ளிப்போட தாழ்ச்சியோடு உம்மைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.

---

## ஞாயிற்றுக்கிழமைகளிலேயும், கடன்திருநாட்களிலேயும், பூசை யில்லாத இடங்களிற் சொல்லுகிற *பூசைமந்திரம்.

¶ பூசையிலே சேசுநாதசுவாமி எழுந்தருளுகிறார். அவருடைய சந்நிதியிலே நானிருந்து பூசைத்தியானம் பண்ணப் பாத்திரமாகாதவனாக விருந்தாலும், அவருடைய அளவில்லாத தயையை நம்பிக்கொண்டு பத்தியோடு செபஞ் செபிக்கப் போகிறேன்.

¶ பூசையிலே அர்ச். தமதிரித்துவத்திற்குத் தோத்திரம், சம்மனசுக்களுக்கு ஆனந்த சந்தோஷம், பாவிகளுக்குப் பாவப்பொறுத்தல், புண்ணியவான்களுக்கு இஷ்டப்பிரசாதம், உத்தரிப்பு ஸ்தலத்திலே வேதனைப்படுகிறவர்களுக்கு ஆறுதல், திருச்சபைக்குச் சேசுக்கிறீஸ்துவினால் விசேஷவுதவி, பூசைபண்ணுகிற குருவானவருக்கு ஞான அவுழ்தமும், பரமசஞ்சீவியுமா யிருக்கிறதல்லாமல், தேவநற்கருணையை உட்கொள்ளுகிறதினால் பாவப்பொறுத்தலும், ஆசாபாசக்கட்டவிழ்தலும், ஞானத்தெளிவும், ஆத்தும சம்பூரணமும், புண்ணியத்தைச் செய்யத்திடமும், பசாசின் சோதனையைச் செயிக்க உதவியும், விசுவாசத்தில் உறுதியும், நம்பிக்கையில் நாட்டமும், சிநேகத்திற் சுறுக்கும், பத்தியில் அபிவிருத்தியும் அடைந்து, சேசுக்கிறீஸ்துவோடுந் திருச்சபையோடும், ஒன்றுபட்டிருக்கலாம்.

¶ முந்தமுந்தப் பூசையிலே சேசுநாதசுவாமி நம்மைத்தாமே நம்முடைய பாவங்களுக்காக அநாதி பிதாவுக்குப் பலியாக ஒப்புக் கொடுத்தாரென்று அறிந்து, பூசைபண்ணுகிற குருவினிடத்தில் அவர் இருக்கிறதாகச் சிந்தித்து மகாபத்தி நம்பிக்கையோடு பூசை காண்போம்.

---

*பூசையிலேயும் இதைச் செபிக்கலாம்.





¶ அதிகமான பலனோடு பூசைகாணத்தக்கதாகப் பூசைக்கிருத்தியங்களும், பரம அர்த்தங்களும், அவைகளுக்கானவேண்டுதல்களும் வருமாறு.

### குரு, முந்தி ஒருசிறியவஸ்திரத்தைத் தமது சிரசின்மேற் போடுகிறபொழுது.

சுவாமியினுடைய திருமுகத்திலே யூதர்கள் வஸ்திரத்தைக்கட்டி, அடித்து உன்னை அடித்தவனாரென்று கேட்டார்களென்று விசாரித்துக்கொள். சுவாமீ, நாங்கள் இந்தஉலகத்தின்வெகுமானத்தைப் பாராமல் பரலோகத்திலே தேவரீர் உம்முடையவர்களுக்குப் பண்ணுகிற வெகுமானத்தை விசாரிக்க எங்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருளவேணுமென்று தேவரீரைவேண்டிக்கொள்ளுகிறோம்.

### குரு, வெள்ளைச்சட்டையைத் தொடுத்துக்கொள்ளுகிற பொழுது.

எரோதன் என்கிற இராசாவானவன் சுவாமியைப்பயித்தியக்காரனென்று விசாரித்துப், பயித்தியக்காரனுக்கு அடையாளமாக வெள்ளைஅரைச்சட்டையைத் தொடுப்பித்து மீளவும் போஞ்சுபிலாத்தன் அண்டைக்கு அனுப்பினானென்று விசாரித்துக்கொள். சுவாமீ, நாங்கள் தருமகாரியஞ்செய்கிறதினாலே உலகத்தார் எங்களைப் பயித்தியங்கொண்டவர்கள் என்று விசாரித்து, நிந்தித்தால், அவைகளை நாங்கள் பொறுமையோடு சகிக்க எங்களுக்கு அநுக்கிரகஞ்செய்தருள வேண்டுமென்று தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம்.

### குரு, சூத்திரத்தை இடையிலே கட்டிக்கொண்டு இடதுகையிலும், கழுத்திலும், நீடியபட்டுகளை அணிந்துகொள்ளுகிற பொழுது.

யூதர்கள்சுவாமியை அரையிலேயுங் கைகளிலேயும், கழுத்திலேயும், கயிறுகளாற்கட்டித் தோட்டத்தினின்று இழுத்துக்கொண்டு போனார்களென்று விசாரித்துக்கொள்; சுவாமீ, ஆசாபாசம் என்கிற கட்டுக்களினாலே பசாசு எங்களைக்கட்டி நரகத்தில் இழுத்துக்கொண்டு போகாதபடி தேவரீர்கட்டுண்டு எங்களை மீட்

டிரட்சித்தீர் என்கிறதினால், உமக்கே தோத்திரம் உண்டாகக் கடவதென்று தேவரீரை வேண்டிக் கொள்ளுகிறோம்.

## குரு, பெரியபட்டு தரித்துக் கொள்ளுகிறபொழுது.

யூதர்கள் சுவாமியைப் பரியாச இராசாவாக ஸ்தாபித்து, அவர்மேல் சிவப்புப் பட்டைத் தரித்தார்களென்று விசாரித்துக் கொள். சுவாமீ, உலகத்தாராலேவருகிற வெகுமானம் விளையாட்டு வெகுமானமென்று எண்ணி அதை நாங்கள் ஆசைப்படாதபடிக்கு எங்களுக்கு நல்ல புத்தி தந்தருளவேணுமென்று தேவரீரை வேண்டிக் கொள்ளுகிறோம்.

## குரு, பீடத்தின்முன்பாக நாலைந்து அடியிலே நிற்கிறபொழுதும், பீடத்தின் கிட்டேபோய் இடதுபக்கத்தில் ஒரு சின்ன செபம் செபிக்கிறபொழுதும், பீடத்தின் நடுவிலே நின்று சுவாமீ கிருபையாயிரும், கிறீஸ்துவே கிருபையாயிரும், என்கிற மந்திரத்தைச் சொல்லுகிறபொழுதும்.

ஆதித்தகப்பன் பாவம்பண்ணின பிற்பாடு சர்வேசுரனை அந்த புண்ணியாத்துமாக்கள் தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபமாயிருந்து சர்வேசுரன் தங்கள்பாவங்களைப் பொறுக்க உலக இரட்சகரை அனுப்பவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்களென்று விசாரித்து, நாமுஞ்செய்த பாவங்களுக்காக மனஸ்தாபமாயிருந்து, பாவசங்கீர்த்தன மந்திரத்தைச் சொல்லுவோம்.

சுவாமீ கிருபையாயிரும் ௩. விசை.
கிறீஸ்துவே கிருபையாயிரும் ௩. „
சுவாமீ தயையாயிரும் ௩. „

## குரு, பீடத்தின் நடுவேநின்று சம்மனசுக்கள் பாடின தேவஸ்துதி சொல்லுகிறபொழுது.

சுவாமி பிறந்தாரென்றும், சம்மனசுக்கள்வந்து பாடினார்களென்றும், விசாரித்துக்கொள். சுவாமீ, உமதுமட்டற்ற கிருபையால் எங்களை மீட்டிரட்சிக்க வேண்டுமென்று மனிதாவதாரமெடுத்து இவ்வுலகத்தில் எழுந்தருளிவரத் திருவுளமானீரே உமக்கே தோத்திரம் உண்டாகக்கடவதென்று தேவரீரைவேண்டிக்கொள்ளுகிறோம். பரமண்டலமந்திரமும், பிரியதத்தமந்திரமுஞ் சொல்லவும்.



## குரு, பீடத்தின் இடதுபக்கத்திலே புஸ்தகத்தை வாசிக்கிற பொழுது.

தீர்க்கதரிசிகளைக் கொண்டும் விசேஷமாய் ஸ்நாபக அருளப்பரைக் கொண்டும், சர்வேசுரன் உலகத்திற்குச் சத்தியவேதத்தைஅறிவித்தாரென்று விசாரித்துக்கொள். சுவாமீ, தேவரீர் அறிவித்த சத்தியங்களை நாங்கள் உறுதியாக விசுவசிக்கவுந், தேவரீர் கற்பித்த நெறிவழியிற் சுமுத்திரையாக நடக்கவும், அநுக்கிரகஞ் செய்தருள வேண்டுமென்று தேவரீரை வேண்டிக் கொள்ளுகிறோம்.—பத்ருக்கற்பனை மந்திரஞ் சொல்லவும்.

## குரு, பீடத்தின் வலதுபக்கத்திலே சுவிசேஷம் வாசிக்கிற பொழுது.

சுவிசேஷ போதனையைச் சேசுநாதர் உலகத்திற்கு அறிவிக்கத் திருவுளமானாரென்று விசாரித்துக்கொள். சுவாமீ, உமக்கு உகந்த பிள்ளையாகிற சேசுக்கிறீஸ்துவின் திருவசனங்களைக் கேட்கச்சொல்லித் தபோர் என்ற மலையில் மூன்று சீஷர்களுக்கு அற்புதமாக உமது திவ்விய சத்தத்தால்அறிவிக்கத்திருவுளமானீரே, அப்படிப்பட்ட உம்முடைய ஏகசுதன் போதனையை நாங்கள் விநயவோடு கேட்கும்படி எங்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருளவேண்டுமென்று தேவரீரை வேண்டிக் கொள்ளுகிறோம்.

## குரு, பீடத்தின் நடுவிலேநின்று விசுவாச மந்திரஞ் சொல்லுகிற பொழுது;

சேசுநாதருடைய சீஷர்கள் உலகமெங்குஞ் சுற்றித்திரிந்து சுவிசேஷத்தைப் போதிக்க, அதைக்கேட்ட அநேகமாயிரம் பிரசைகள் பசாசின் ஆராதனையை விட்டுச் சத்தியவேதத்தை விசுவசித்தார்களென்று விசாரித்துக்கொள். நாமும் பத்தியோடு விசுவாச மந்திரத்தைச் சொல்லுவோம். சுவாமீ, பாவிகளாயிருக்கிற அடியோர்கள்பேரில் உமது கிருபையைத்தானே பாராட்டி அடியோர்களுக்கு உமது சத்தியவேதத்தை அறிவிக்கத் திருவுளமானீரல்லோ? நாங்கள் அப்படிப்பட்ட சத்தியவேதத்தை விசுவாசம், நம்பிக்கை, பத்தியோடுகைக்கொண்டு அதின்படியே சுமுத்திரையாய் நடந்து மோக்ஷத்தை அடையக் கிருபைசெய்தருள வேண்டுமென்று தேவரீரை வேண்டிக் கொள்ளுகிறோம்.

## குரு, தேவநற்கருணைக்குக் கோதும்பை அப்பத்தையும், திராக்ஷக்கனி இரசத்தையும் வைத்து ஆயத்தஞ் செய்கிறபொழுது.

யூதர்கள் சுவாமியைப்பிடிக்க உத்தியோகமாயிருந்த சமயத்திலே, சுவாமி செருசலேமென்கிற பட்டணத்தைவிட்டு மறைந்து வேறே ஊர்களிற் சஞ்சரித்தாரென்று விசாரித்துக்கொள். சுவாமீ, எங்களாலே தேவரீருக்குப் பூசையும், தோத்திரமும் உண்டாகிற நாளளவும் பொல்லாதவர்கள் எங்களை உபாதித்து உம்முடைய பூசைக்குந், தோத்திரத்திற்கும் விக்கினஞ் செய்யவொட்டாதபடி காத்தருள வேண்டுமென்று தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம்.

## குரு, பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், என்கிற மந்திரஞ் சொல்லுகிற பொழுது.

சேசுநாதசுவாமி நமக்காகப் பாடுபடவேண்டுமென்று மிகுந்த தாழ்ச்சி பொறுமையுள்ள இராசாவாக நீசவாகனத்தின் மீதில் எழுந்தருளிச் செருசலேம் என்கிற பட்டணத்திற் பிரவேசிக்கும்பொழுது, அந்தப்பட்டணத்துச் சனங்கள் சுவாமிக்கு எதிராகப் போய் மரத்தின் கொப்புகளை ஒடித்துப்போட்டு, வழியை அலங்கரித்துச் சுவாமிக்கு முன்னும்பின்னுமாகப் புகழ்கூறிக்கொண்டு போகும்பொழுது அந்தப்பட்டணத்துச் சனங்கள் செய்யுங் கொடியபாவத்தால் அவர்கள் இனி அநுபவிக்குங் கடினமான நிர்ப்பந்தங்களை நினைத்து, சுவாமி மனமிரங்கி அழுதுகொண்டு போனாரென்று விசாரித்துக்கொள். சுவாமீ, எங்களுக்குச் சந்தோஷம் வந்தால் அதினாலே நாங்கள் அங்காரிகளாகாமல், எங்கள் சந்தோஷத்தில் தேவரீரைத் தோத்திரஞ் செய்யும்படி எங்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருள வேண்டுமென்று தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம்.

## குரு, இரகசியத்திலே சற்றுநேரம் ஒரு சின்னசெபஞ் செபிக்கிற பொழுது.

சேசுநாதர் தம்முடைய சீஷர்களோடுகூடப் பூங்காவனத்திற் பிரவேசித்து, நம்முடைய நிமித்தமாகக் கடினமான துக்கங்களை அநுபவித்தாரென்றும், தீர்க்க செபஞ்செய்து தாம் அநுப



விக்கிற மனோவியாகுலமுதலான துக்க துயரங்களை மனிதர் பாவங்களுக்குச் செல்லுங் கொடிதான ஆக்கினைக்கு உத்தரிப்பாக ஒப்புக் கொடுத்தாரென்றும், தாம் அநுபவிக்கப்போகிற மகா கொடிதான வேதனைகளை மாற்றவேண்டுமானாலும், மாற்றாமல் இருக்கவேண்டுமானாலும், பிதாவே, உம்முடைய சித்தம், என்மனதின்படிவேண்டாமென்று வேண்டிக் கொண்டாரென்றும் விசாரித்துக்கொள். சுவாமீ, எங்களுக்குக் கஸ்தி துக்கம் வரும்பொழுது நாங்கள் அதிகமாய்ச் செபஞ்செய்யவும், எங்கள் சத்துருக்கள் கையில் அகப்பட்டு நாங்கள் மோசம்போமல் இருக்கவுங் கிருபைசெய்தருள வேண்டுமென்று தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம். பரமண்டலமந்திரம்.

## குரு, நற்கருணையை உயர எழுந்தருளச் செய்கிற பொழுது.

சிலுவையில் அறையுண்ட சேசுநாதர் நமது பாவங்களுக்காகத் தம்மைத்தாமே அநாதிபிதாவுக்குப் பலியாக ஒப்புக்கொடுத்தாரென்று விசாரித்துக்கொள். சுவாமீ, அளவில்லாத விலையேறப்பெற்ற அந்தப் பலியைப்பார்த்துப் பாவிகளாயிருக்கிற எங்களுக்குத் தயைசெய்ய வேண்டுமென்று தேவரீரை வேண்டிக் கொள்ளுகிறோம்.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ, தேவரீருடைய திருச்சிலுவையினால் உலகத்தை மீண்டு இரட்சித்தீர் என்கிறதினாலே, தேவரீரை வணங்கித் தோத்திரஞ் செய்கிறோம்.

எங்களுக்காகக் கொடுக்கப்பட்ட சேசுநாதருடைய திருச்சரீரமே, உமக்கே நமஸ்காரம். அர்ச். பாடுகளைக்கொண்டு எங்களை இரட்சித்த சேசுநாதரே, உமக்கே தோத்திரம் உண்டாகக்கடவது.

## குரு, பாத்திரத்தை உயர எழுந்தருளப் பண்ணுகிற பொழுது.

மிகவும் மிகுந்த மதுரமான சேசுக்கிறீஸ்துவின் விலைமதியாத திருஇரத்தமே, மனிதர் செய்தபாவங்களுக்காகச் சிலுவைமரத்திலே நின்று சிதறப்பட்ட உமக்கே நமஸ்காரம். பாவவிமோசனத்திற்காகச் சிந்தப்பட்ட திருஇரத்தமே, எங்கள் பாவங்களைப்

போக்கியருளும். சேசுநாதருடைய திருக்காயங்களிலே நின்று ஓடி விழுந்த திரு இரத்தமே, உமக்கே நமஸ்காரமுந், தோத்திரமும் உண்டாகக் கடவது.

வர்ணம், வாசனை, உருசி, பிரமாண முதலான குணங்களில் மெய்யாகவே மறைந்திருக்குந் தேவத்துவமே, உம்மைவணங்கி நமஸ்கரிக்கிறேன். உம்மை யோசிக்கிறதில் என் இருதயம் முழுதும் அயர்ந்துபோகிறதினால் என்சித்தம் முழுதும் உமக்கே கீழ்ப்படிந்திருக்கிறது. சத்தம், ஸ்பரிசம், ரூபம், இரசம், கந்தம் தோற்றப்படாமல் கேள்வித்தனத்தால் மாத்திரமே விசுவசிக்கவேண்டியிருக்கிறது. சத்திய வார்த்தையான தேவசுதன் வார்த்தையைவிட்டுச் சத்தியமானது ஒன்றுமில்லை என்கிறதினாலே, அவர் திருவுளம்பற்றின எல்லாவற்றையும், உறுதியாக விசுவசிக்கிறேன். தேவத்துவமாத்திரமே சிலுவையில் மறைந்திருந்தது; இதிலோவென்றால்தேவத்துவமும், மனுஷத்துவமுங்கூட மறைந்திருக்கிறது. தேவநற்கருணையிலே தேவசுபாவமும், மனிதசுபாவமுங் கூட இருக்கிறதென்று விசுவசித்துச் சங்கீர்த்தனம் பண்ணிப் பச்சாத்தாபக் கள்ளன் கேட்ட வரத்தை நானுங் கேட்கிறேன். அர்ச். தோமையாரைப்போலே முறிவுகளைக் காணேனென்றாலும், உம்மை என்தேவனென்று பிரசித்தமாகச் சொல்லுகிறேன். நான் உம்மிலே எப்பொழுதும் அதிகமதிகமாய் விசுவாசம், நம்பிக்கை, பத்தியாய் இருக்கக் கிருபைசெய்தருளும்.

நாதன் மரணத்தை ஞாபகப்படுத்தி மனிதனுக்கு உயிர்அளிக்குஞ் சீவனுள்ள அப்பமே, ஆத்துமம் உம்மிலே சீவிக்கவும், எக்காலமும் நீர்அதற்கு மதுரமாயிருக்கவுங் கிருபைசெய்யும். குறையற்ற கருணையுள்ள பெலிக்கானான சேசுவே, பாவத்தினால் அசுத்தனாயிருக்கிற அடியேனை உம்முடைய திரு இரத்தத்தாற் சுத்தனாகச் செய்தருளும். உமது திருஇரத்தத்தின் ஒருதுளி சகலஉலகபாவங்களையுங், கழுவித் துடைக்க வல்லதாகையால் மிகுந்த அசுத்தனா யிருக்கிற என்னை உமது இரத்தத்தினால் சுத்திகரித்தருளும். சேசுவே, இப்பொழுது மறைவில் உம்மைத் தரிசிக்கிற நான் இனி மறைவின்றித் தரிசிக்கவும், அபேட்சிக்கிற உமது ஆனந்த தரிசனையால் பாக்கியவானாகும்படிக்குங் கிருபைசெய்யவேண்டுமென்று மன்றாடுகிறேன்.—ஆமென்சேசு.



மிகுந்த வியாகுல காரணத்தினாற் சரீரத்தில்நின்று வெயர்வையாகப் புறப்பட்டு நிலத்தில் சிந்தப்பட்ட சேசுவின் விலைமதியாத திரு இரத்தமே, இந்தப் பாத்திரத்தில் உம்மைவணங்குகிறேன். கிருபை யுடைத்தான சேசுவைப்பார்த்து, என்பாவத்தால் எனக்குவந்த ஒழியாத துக்கத்தை நீக்குவீராக. கற்றூணோடு கட்டப்பட்டு, ஆண்டவர் வெகுவாய் அடிபட, அடியின்வழியாய்ப் புறப்பட்டு, அவருடைய திவ்வியாங்க நிறத்தைப்பேதித்துத் திருமேனியில்நின்று விழுந்து பூமியை நனைத்த சேசுவின் விலைமதியாத திரு இரத்தமே, இந்தப் பாத்திரத்தில் உம்மை வணங்குகிறேன். கிருபையுடைத்தான சேசுவைப்பார்த்து என்பாவத்தின் கட்டறுபடப் பாவரூபத்தைத் தள்ளி இஷ்டப்பிரசாதத்தால் என்னை அழகுள்ளவனாகச் செய்வீராக.

முள்ளாலே முடிசெய்து நாதருடைய திருச்சிரசிலே வைத்து அடித்ததினால் முள்ளுக்கள் தைத்த காயங்கள் வழியாய் வடிந்த விலைமதியாத திரு இரத்தமே, இந்தப் பாத்திரத்தில் உம்மை வணங்குகிறேன். கிருபையுடைத்தான சேசுவைப் பார்த்துப்பாவகர்வத்தால் எனக்கு வந்த அஞ்ஞான இருளை நீக்குவீராக.

பாவத்தில் நின்று என்னை மீட்டிரட்சிக்கப் பீரஆணிகளாற் சிலுவையில் அறையுண்டு பலியான கைகால்களின் துவாரத்திலே புறப்பட்டுப் பேய்க்கு அடிமையாயிருந்த என்னைமீட்ட [illegible]யமான என் சேசுவின் விலைமதியாத திரு இரத்தமே, இந்தப் பாத்திரத்தில் உம்மை வணங்குகிறேன். உம்மோடுகூட நான் மோட்ச இராச்சியத்திற்கு எழுந்தருளும்படி கிருபை யுடைத்தான சேசுவைப் பார்த்து, என்னை அவர் திருப்பாதத்திற் சேர்த்தருளுவீராக.

நாதன் திருவிலாவை நிஷ்டூரன் ஒருவன் ஈட்டியினாற் குத்தித் திறக்க அதிலேநின்று அற்புதமாகத் தண்ணீரோடு கூடப் புறப்பட்டு ஞான அபிஷேகத்தினாலே பாவிகளைச் சுத்தமாக்கும் என் சேசுவின் விலைமதியாத திரு இரத்தமே, இந்தப் பாத்திரத்தில் உம்மை வணங்குகிறேன். கிருபை யுடைத்தான சேசுவைப்பார்த்து உம்மால் மீட்டிரட்சிக்கப்பட்ட என்னை முழுதும் உமது கைவசப்படுத்தினால் உம்மையல்லாமல் மற்றப் பொருளென்னப்பட்ட யாவையும் மறப்பேன்.

குரு, நற்கருணையைக் கையிலெடுத்து மூன்றுமுறை பிறை தட்டிக் கொள்ளுகிற பொழுது.

சேசுநாதர் ஏழரை நாழிகை சிலுவையில் உயிரோடு இருந்து, மனிதர் மோட்சத்தில் சேரவேண்டிய ஞான உபதேசத்தைப் போதித்து, மனிதர் இரட்சணியத்திற்காகத் தலைகுனிந்து மரணம் அடைந்தாரென்று விசாரித்துக்கொள். சுவாமி, நாங்கள் மரணம் அடையுமுன் செய்யத்தக்க தருமங்களை எல்லாங் குறையறச்செய்து முடித்து மரணம் அடையச்செய்யத் தேவரீரை வேண்டிக் கொள்ளுகிறோம்.

குரு, பரமண்டலமந்திரஞ் சொல்லுகிற பொழுது.

மிகவும் பரிசுத்த மதுரமான அர்ச்சிக்கப்பட்ட தேவநற்கருணையே, எங்கள் பாவங்களைப் போக்கியருளுஞ் சுவாமீ.—இப்படி மூன்றுவிசை சொல்லுகிறது.

குரு, நற்கருணையைப் பிட்கிற பொழுது.

சுவாமியினுடைய திரு ஆத்துமந் திருச்சரீரத்தை விட்டுப் பிரிந்ததென்று விசாரித்துக்கொள். பிதாவாகிய சர்வேசுரா, உமக்கு மிகவும் பிரியமுள்ள திருக்குமாரன் மகா நிர்ப்பந்தத்தோடு கற்றூணில் கட்டுண்டு வெகுவாய் அடிபட்டதையும், கூர்மையுள்ள முண்முடியைத் திருச்சிரசில் அழுத்தி முள்ளுக்கள் உருவின காயங்களால் திருமுகம் வீங்கி இருந்ததையும், அந்தக் காயங்களின் வழியாகப் புறப்பட்ட இரத்தத்தால் திரு முகத்து அழகு மங்கி இருந்ததையும், திருக்கன்னத்தில் அநேகமுறை பட்ட அடியால் திருக்கன்னம் வீங்கிக் கன்றிக்கறுத்து இருந்ததையும், கொட்டக்காரருடைய அசுத்த உமிழ்நீர்களினால் அவர் திருமுகம் அழுக்கடைந்து இருந்ததையும், திருச் சரீரத்திற்பட்ட அடிகளால் அவர் திருத்தசை கிழிந்து துண்டுதுண்டாய் விழுந்ததையும், திருப்பாதந் துவக்கித் திருச்சிரசு பரியந்தம்பட்ட காயங்களாற் சர்வாங்கமும் நொந்திருக்கிறவர் பாரமான சிலுவையைத் திருத்தோளிற் சுமந்ததையும், இரண்டு கள்ளருக்கும் நடுவிலே நிஷ்டூரமாய் அறையப்பட்டுச் சிலுவையிற் றொங்கி இருந்ததையும், பலபல தூஷண அவமான நிந்தையைக் கேட்டதையும், பேரொலியாகக்கூப்பிட்டுத் திருச்சிரசு குனிந்து திருக்கண் பஞ்சடைந்து



திருவாய் திறந்து மரித்ததையுங் குறித்து, இப்படியே தயைவருத்துவிக்கிற உம்முடைய திருக்குமாரனுடைய திருமுகத்தைப் பார்த்துத் தயையுள்ள பிதாவே, எங்களுக்குத்தயைசெய்தருளும்.

ஆண்டவராயிருக்கிற சேசுக்கிறீஸ்துவே, உலகத்தினுடைய பாவங்களைப் போக்குகிறவரே, எங்கள்பேரில் இரக்கமாயிரும்.—இப்படி மூன்றுவிசை சொல்லுகிறது.

எங்களுக்குப் பொல்லாப்புச் செய்கிறவர்களுக்கு நன்மை செய்து அவர்களை இரட்சியும், அஞ்ஞானிகள் உம்முடைய சத்தியவேதத்திற் பிரவேசிக்கச் செய்யுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம்.

குரு, நற்கருணையை உட்கொள்ளுகிற பொழுது.

அநாதி பிதாவுக்கு ஏகசுதனுமாய் நமது ஆண்டவருமாயிருக்கிற சேசுநாதர் மனிதாவதாரம் எடுத்து மனிதரை இரட்சிக்கும் பொருட்டாய்ச் சிலுவையில் அறையுண்டு கடினமரணத்தை அடைந்து கல்லறையில் அடக்கப்பட்டாரென்று விசாரித்துக்கொள். சுவாமீ, நாங்கள் இவ்வுலகத்திற்குச் செத்தவர்களாய் உமக்குமாத்திரஞ் சீவித்திருக்கக் கிருபைசெய்ய வேண்டுமென்று தேவரீரை வேண்டிக் கொள்ளுகிறோம்.

திருச்சபை மந்திரம்.

கிறீஸ்துவின் மரணத்தை நினைப்பூட்டுதலுமாய்க், கிறீஸ்துவைத்தானே போசனமாகக்கொள்ளுதலுமாய், இஷ்டப்பிரசாதத்தை ஆத்துமத்திற்குத்தந்தருளுஞ் சம்பூரணமுமாய், இனி அடையப்படும் மோட்ச சம்பாவனையின் அச்சாரமுமாய் இருக்கிற அர்ச்சிக்கப்பட்ட விருந்தே, உமக்கே நமஸ்காரம். இதோ உலகத்தினுடைய பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறியாட்டின்குட்டி. ஆண்டவரே, அடியேன் குச்சுக்குள்ளே தேவரீர் எழுந்தருள நான் பேறுபெற்றவனல்ல, தேவரீர் ஒருவார்த்தை மாத்திரந் திருவுளம்பற்ற என் ஆத்துமம் வியாதியில் நின்று விடப்பட்டு, ஆரோக்கியத்தை யடையும்.

கிறீஸ்துவினுடைய ஆத்துமமானதே, என்னை அர்ச்சியசிஷ்டவனாகச் செய்தருளும். கிறீஸ்துவினுடைய திருச்சரீரமே,

என்னை இரட்சித்துக்கொள்ளும். கிறீஸ்துவினுடைய திரு இரத்தமே, என்னை உம்முடைய வசமாக்கி எனக்குத் திருப்தி உண்டாகச் செய்தருளும். கிறீஸ்துவினுடைய பாரிசத்தில் நின்று ஓடிவிழுந்த திருத்தண்ணீரே, என்னைக்கழுவும், கிறீஸ்துவினுடைய திருப்பாடுகளே, எனக்குத் தேற்றரவு உண்டாகச்செய்தருளும். நல்லவராயிருக்கிறசேசுக்கிறீஸ்துவே, நான்கேட்கிறதைத்தந்தருளும். உமது திருமுறிவுக்குள்ளே என்னைமறைத்துக்கொள்ளும். என்னை உம்மைவிட்டுப் பிரியவொட்டாதேயும். துஷ்டசத்துருக்களிடத்திலே நின்று என்னை இரட்சித்துக்கொள்ளும். என் மரணதறுவாயிலே நீர் என்னை அழைக்கவும், உமது சந்நிதியிலே உட்பட்ட சகல அர்ச்சியசிஷ்டவர்களோடேகூட ஊழியுள்ளகாலம் நானும்மைத் தோத்திரஞ் செய்யும்படிக்கு அடியேன் வரவுங் கற்பித்தருளும் ஆண்டவரே.—ஆமென்சேசு.

### குரு, நற்கருணையை உட்கொண்டபின் ஆசிர்வாதங் கொடுக்கிற பொழுது.

சேசுநாதர் எழுந்தருளின காலந்துவக்கி நடுத்தீர்வைவரைமட்டுங் கிறீஸ்துவர்கள் சர்வேசுரனைத் தோத்திரஞ் செய்கிறதை விசாரித்துக்கொள். சுவாமீ, தேவரீர்பேரில் பத்தியாயிருக்கிற இத்தனை ஆயிரம் பேர்களைக்கண்ட நாங்களுந் தேவரீர்பேரில் பத்தியாய் இருந்து தேவரீரைத் தோத்திரஞ்செய்யக் கிருபைசெய்தருள வேண்டுமென்று தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம்.

### குரு பூசைமுடித்து ஆசிர்வாதங் கொடுக்கிற பொழுது.

உலகமுடிந்தபின் மரித்தவர்கள் எல்லாரையும், அவரவர் ஆத்தும சரீரத்தோடு கூட எழுப்பிப் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்குஞ் சுதனாகிய சர்வேசுரன் மகா மகிமைப்பிரதாபத்தோடு எழுந்தருளிவந்து, அவரவர்செய்த பாவபுண்ணியங்களை அவரவர்களுக்கு அறியச்செய்து அளவற்ற நீதியால் தமது இடது பாரிசத்திலிருக்கிற பொல்லாதவர்களைச் சபித்து ஆத்தும சரீரத்தோடு நரகத்தில் தள்ளி மட்டற்ற தயவால் தமது வலது பாரிசத்தில் இருக்கிற நல்லவர்களுக்கு, ஆசிர்வாதங்கொடுத்து, ஆத்துமசரீரத்தோடு அவர்களை மோட்ச இராச்சியத்திற்குக் கூட்டிக்கொண்டு போவாரென்று விசாரித்துக்கொள். சுவாமீ, தேவரீரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்குள் நாங்களும் ஒருவராயிருந்து தேவரீருடைய பரிபூரண ஆசிர்வாதம் அடைந்து நித்தியகாலமும் உம்மைப் போற்றிப் புகழ்ந்து, இறைஞ்சி, தொழுது, தோத்திரஞ்செய்ய எங்களுக்கு அநுக்கிரகந் தந்தருளுமென்று தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம்.—ஆமென்சேசு.

பூசைமந்திரம் முற்றிற்று.

---



## பூசைத் தியானம்.

### சேசுக்கிறீஸ்து நாதருடைய திருப்பாடுகளைத்தியானித்துக் கொண்டு பூசை காணும் வகை.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ! நித்தியபிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே! தேவரீர்எங்கள்பாவங்களுக்காகப் பிதாவாகிய சர்வேசுரனுக்குப் பிணையாகிப் பாடுபடுகிறதற்கு முன்னே ஒலிவேத்துமலைப் பூங்காவிலே உம்முடைய திரு ஆத்துமத்தில் எண்ணிக்கையில்லாத கஸ்தி, நிர்ப்பந்தம், வியாகுலம், இவைமுதலாகிய துன்ப துரிதங்களை அநுபவித்தீரே; பாவியாயிருக்கிற அடியேன் இந்தக் கண்ணீர்க் கணவாயாகிற உலகத்தில் அநுபவிக்கிற கஸ்தி, நிர்ப்பந்தம் இவைமுதலான சஞ்சலங்களைத் தேவரீருக்குப்பாதகாணிக்கையாக வைத்துப் பொறுமையுடன் அநுபவிக்கவும்; அந்தக் கஸ்திகள்எல்லாம் என் ஆத்துமத்திற்கு இரட்சணியமாயிருக்கவுந் தயைசெய்தருளுஞ் சுவாமீ.

### குரு, பூசைக்கு வருகிற பொழுது.

சேசுக் கிறீஸ்துநாதரே சுவாமீ! நித்திய பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, தேவரீர் பூங்காவில் முகங் குப்புறவிழுந்து வேண்டிக்கொண்டு என்பிதாவே, கூடுமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு அகலக்கடவது. ஆயினும் என்மனத்தின்படியல்ல, உமது சித்தத்தின்படியே ஆகட்டுமென்று வேண்டிக்கொள்ளும் பொழுது, சம்மனசுவினால் ஆறுதல் சொல்லப்பட்டீரே, பாவியாயிருக்கிற அடியேன் காவலான சம்மனசுவின் நல்ல புத்தியைக் கேட்டு நடக்கக் கிருபை செய்தருளுஞ் சுவாமீ.

### குரு, பாவசங்கீர்த்தன மந்திரஞ் சொல்லுகிற பொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ, நித்திய பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏக சுதனே, தேவரீர் பூங்காவில் எங்களுக்காகப் பிதாவாகிய சர்வேசுரனை வேண்டிக்கொள்ளும்பொழுது உமது திருச்சரீரத்தில் நின்று இரத்த வெயர்வை துளித்துளியாகப் பூமியில் விழுந்து ஓட அவஸ்தைபட்டீரே, பாவியாயிருக்கிற அடியேன் தேவரீரைச் சிநேகிக்கவும், உமக்காக என்னுடைய இரத்தத்தைச் சிந்தாமற்போனாலும், உம்மைப்பற்றி உம்முடைய திருச்சமுகத்தில் எப்பொழுதும் அழுதுகொண்டிருக்கத் தயைசெய்தருளுஞ் சுவாமீ.

### குரு, பீடத்தின் நடுவிலே முத்தஞ்செய்கிற பொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ, நித்திய பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, தேவரீர் துரோகியான யூதாசு உம்மைக்கட்டி முத்தமிட்டபொழுது, மகா மதுரகுணத்தோடும் பொறுமையோடும் இருந்தீரே, பாவியாயிருக்கிற அடியேன் தேவரீருடைய மதுரகுணத்தையும், பொறுமையையுங் கண்டு எனக்குத் துரோகம் பண்ணினவர்களை நான் முழுமனதோடு நேசிக்கவும், சாவானபாவத்தோடு நன்மைவாங்கி உமக்குத் துரோகஞ்செய்யாமலிருக்கவுந் தயைசெய்தருளுஞ் சுவாமீ.

### குரு, இடதுபக்கத்திலே கிதம்வாசிக்கிறபொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ, நித்தியபிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏக சுதனே, தேவரீர் யூதர்களாலே கட்டுண்டு ஆனாசன் வீட்டிற்கொண்டுபோகப்பட்டீரே, பாவியாயிருக்கிற அடியேன் என்னுடைய பாவத்தின்பாசத்தை அறுத்துப் பசாசின் தந்திரத்தில் அகப்படாதபடிக்கு அநுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமீ.

### குரு, பீடத்தின் நடுவிலே சுவாமீ கிருபையாயிரும் என்கிற செபஞ் செபிக்கிற பொழுதும், சம்மனசுக்கள்பாடின தேவஸ்துதி சொல்லுகிற பொழுதும்.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ, நித்தியபிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, தேவரீர் கைப்பாசன் வீட்டில் அப்போஸ்தலர்களுக்குள்ளே பிரதான அப்போஸ்தலரான அர்ச். இராயப்பராலே மூன்றுமுறை மறுதலிக்கப்பட்டீரே, பாவியாயிருக்கிற அடியேன்பொல்லாதவர்களுடைய கூட்டத்திற் போகாமலும் பாவத்தினால் உம்மைவிட்டுப் பிரியாமலும் இருக்க அநுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமீ.



### குரு, திரும்பிச் சனங்களை வினவுகிற பொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ, நித்தியபிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, தேவரீர் உமக்குப்பிரிய சிஷனான அர்ச். இராயப்பரை மகா இரக்கமாய்த் திரும்பிப்பார்த்து அவருக்கு மிகவுங் கைப்பான கண்ணீரை வருத்திவைத்தீரே, பாவியாயிருக்கிற அடியேன் செய்த பாவங்களுக்காக உத்தம மனஸ்தாபத்தோடு அழும்படி அநுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமீ.

### குரு, பீடத்தின் இடதுபக்கத்தில் நிருபம் வாசிக்கிற பொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ, நித்தியபிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, தேவரீரைப் பிலாத்தன் என்கிறவன் முன்பாகக்கொண்டுபோய்ப் பொய்ச்சாட்சிசொல்லப்பட நின்றதினபொழுது அத்தியந்த தாழ்ச்சியோடு கேட்டுக்கொண்டிருந்தீரே, பாவியாயிருக்கிற அடியேன்பொல்லாதவர்களுடைய உபாயதந்திரங்களையெல்லாஞ் சட்டைபண்ணாமல் இருக்கவும், உம்முடைய பேரில் எனக்குள்ள விசுவாசத்தை நற்கிரியைகளினால் விளங்கச்செய்யவும் அநுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமீ.

### குரு, பீடத்தின் நடுவில் வணக்கஞ் செய்கிற பொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ, நித்தியபிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, தேவரீர் எரோதேசன் அருகிற் கொண்டுபோகப்பட்டுப் பொய்ச்சாட்சிசொல்லப்பட்டபொழுது ஒருவார்த்தைமுதலாய்ச் சொல்லாமல் மவுனமாக இருந்தீரே, பாவியாயிருக்கிற அடியேனும் எனக்குத் தூஷணவார்த்தைகளையும், அவதூறுகளையும், பொறுமையோடு சகித்துக்கொண்டிருக்க அநுக்கிரகஞ்செய்தருளுஞ் சுவாமீ.

### குரு, பீடத்தின் வலதுபக்கத்தில் சுவிசேஷம் வாசிக்கிற பொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரோ சுவாமீ, நித்திய பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, ஏரோதேசன், தேவரீர் மவுனமாக இருந்ததைக்கண்டு, பயித்தியக்காரருக்கு அடையாளமான வஸ்திரத்தைத் தரிப்பித்துப் பிலாத்தன் அருகில்அனுப்பினானே, பாவியாயிருக்கிற அடியேன் கபடு பதிவிடைகளுக்கெல்லாந் தப்பிப் பசாசின் கண்ணியிற் சிக்காமல் இருக்கவும் அநுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமீ.

### குரு,கிறேதோவென்னும்விசுவாச உச்சாரணம்பண்ணுகிற பொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரோ சுவாமீ, நித்திய பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, பிலாத்தனிடத்தில் தேவரீரைக்கொண்டு போனாலும் அவன்உம்மிடத்தில் ஒரு குற்றமுங்காணாமல்விட்டுவிட மனதுகொண்டானே, பாவியாயிருக்கிற அடியேன் செய்த பாவ துர்க்குணங்களை எல்லாம் முழுதும் வெறுத்துவிட்டுத் தேவரீர்பேரில் அதிக விசுவாசத்தைக் கொண்டிருக்க அநுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமீ.

### குரு, விசுவாசமந்திரஞ் சொல்லிப் பாத்திரத்தை மூடியிருக்கிற வஸ்திரம் எடுக்கிறபொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரோ சுவாமீ, நித்தியபிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏக சுதனே, தேவரீர் அடிமையைப்போலப் பிலாத்து என்பவனுடைய அரண்மனையில் அவமானமாய் வஸ்திரம் உரியப்பட்டீரே, பாவியாயிருக்கிற அடியேன் செய்த பாவங்களினால் என் ஆத்துமத்திற் படிந்த அசுத்தங்களை என் கண்ணீரினால் கழுவித்துடைக்க உம்முடைய திவ்விய பிரகாசவஸ்திரத்தை எனக்குத் தந்தருளுஞ், சுவாமீ.

### குரு, அப்பத்தைக் காணிக்கை கொடுக்கிற பொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரோ சுவாமீ, நித்திய பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, தேவரீர் கற்றூணோடு கட்டுண்டு கடினமாக



அடிபட்டீரோ; பாவியாயிருக்கிற அடியேனுக்குஎந்தெந்தக்காரணத்தினாலே யாகிலும் வருகிற [illegible]யத்தைத் தாழ்ச்சி, பொறுமையோடு சகிக்க அநுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமீ.

### குரு, பாத்திரத்தில் இரசம்வார்த்து மூடுகிற பொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரோ சுவாமீ, நித்திய பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, தேவரீர் அடியேனை இரட்சிக்க உம்முடைய திருச்சிரசில் நிஷ்டூரராலே முண்முடி வைத்து ஊடுருவப்படப் பொறுமையோடு அநுபவித்தீரே; பாவியாயிருக்கிற அடியேனுடைய அவயவங்களெல்லாந் தேவ பத்தியினால் ஊடுருவப்படவும், நித்திய ஆனந்தமோக்ஷத்தில், அழியாத கிரீடம் தரிக்கப்படவுந், தயைசெய்தருளுஞ் சுவாமீ.

### குரு, கரங்கழுவுகிறபொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ, நித்தியபிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, தேவரீர்பேரில் பிலாத்தன் தீர்வையில் குற்றமில்லை என்று பிரசித்தமாய் அறிந்தாலுந் துரோகிகளான யூதர்கள் சிலுவையில் உம்மை அறையவேண்டுமென்று வர்மமாகக் கூப்பிட்டபொழுது மிகுந்த பொறுமையோடு இருந்தீரே; பாவியாயிருக்கிற அடியேன் அவரவர்கள் எனக்குச்செய்கிற அநியாயங்களைப் பொறுமையோடு அநுபவிக்கவும், குற்றமில்லாமற் புண்ணியவழியிலே நடக்கவும் அநுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமீ.

### குரு, சனங்களை வினவிச் செபஞ் செய்யுங்களென்று சொல்லுகிற பொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரோ சுவாமீ, நித்தியபிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, தேவரீருடைய திருமுகம் பொல்லாதவர்களுடைய அசுத்த உமிழ்நீரால் அழுக்கடைந்து, அடியும், இடியும் பட்டுத், திருச்சிரசில் முண்முடிதரித்துப், பீற்றற்சகல[illegible]த் திருமேனியிற் போர்த்தி, இந்தக் காலாகோலத்தோடு அஞ்ஞானியாகிற பிலாத்தென்கிறவனால் யூதருக்கு இதோ மனிதனென்று காட்டப்பட்டபொழுது அவர்கள் சற்றும் இரங்காமல் உம்முடையபேரில் மிகவும் வர்மமாய் இருந்தார்களே, பாவியாயிருக்கிற அடியேன்பேரில் மனிதர் சொல்லுகிற ஸ்துதி தோத்திரங்க

ளினாலேயும், முக இச்சைகளினாலேயும், என்னுடைய புத்தியும் மனதும் மோசம்போகாதபடிக்கு அநுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமீ.

### குரு, பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், என்கிற செபஞ் செபிக்கிறபொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ, நித்திய பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, தேவரீரைச் சிலுவையில் அறையப் பிலாத்தென்பவன் உத்தாரங் கொடுத்ததினால் எங்களுக்குப் பாவப்பரிகாரமாகும்படிக்குத் தேவரீர் தாமே உம்முடைய திருமேனியைச் சத்துருக்கள் கையில் வலிய ஒப்புக்கொடுத்தீரே; பாவியாயிருக்கிற அடியேன் நிர்ப்பந்த அவமானங்களையெல்லாம் உம்மைப்பற்றிப் பொறுமையுடன் அநுபவிக்க அநுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமீ.

### குரு, கைகுவித்துச் சீவியர்களுக்காக மன்றாடுகிற பொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ, நித்தியபிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, தேவரீருடைய திருத்தோளின்மீது பொல்லாதவர்கள் மிகவும் பாரமான சிலுவையைச் சுமத்தினதினால் சகல மனிதருடைய மகாபாவச் சுமைகளைச் சுமந்துகொண்டு போனீரே; பாவியாயிருக்கிற அடியேன்செய்த பாவங்களுக்கு வருகிற துக்கம், கஸ்தி, இக்கட்டு, நிந்தை, அவமானம் இவைமுதலான சிலுவைகளை நல்ல மனதுடனே சுமந்து கொண்டு உம்முடைய திருவடியைப் பின்சென்று நடக்க அநுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமீ.

### குரு, இரண்டு கைகளையும் பாத்திரத்தின்பேரில் வைக்கும்பொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ, நித்திய பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, தேவரீர் சிலுவை சுமந்துகொண்டு போகும்பொழுது உம்மைப் பின்சென்று அழுதுகொண்டுவந்த புண்ணியவதிகளைப் பார்த்து எனக்காக அழவேண்டாம், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் என்று திருவுளம்பற்றினீரே; பாவியாயிருக்கிற அடியேனுடைய இருதயம் உத்தம மன



ஸ்தாபத்தினால் உருகி என் பாவங்களுக்காக முழுமனதோடு அழுது நீர் எனக்காகப்பட்ட மகாபாடுகளைக் கண்டு மனமிரங்கி அழவுந் தயைசெய்தருளுஞ் சுவாமீ.

### குரு, பாத்திரத்தின்பேரிலும், அப்பத்தின்பேரிலும் சிலுவை வரைகிறபொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ, நித்திய பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, தேவரீர் அடியேனை இரட்சிக்கச் சிலுவையில் இருப்பாணிகளினால் அறையப்பட்டீரே; பாவியாயிருக்கிற அடியேன் சரீர இச்சைகளையும் உலக இன்பங்களையும் ஒறுத்து உம்முடைய திருப்பாடுகளுக்குப் பங்காளியாயிருக்கக் கிருபை செய்தருளுஞ் சுவாமீ.

### குரு, நற்கருணை எழுந்தருளச் செய்கிறபொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ, நித்திய பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, தேவரீர் பூலோகத்திற் சிலுவையில் உயர்த்தப்பட்டபொழுது எல்லாவற்றையும் உமது பின்செல்லச் செய்வோமென்று திருவுளம் பற்றினீரே; இப்போது தேவரீர் குருவின்கையினால் உயர்த்தப்படுவதைக் காணும்பொழுது பாவியாயிருக்கிற அடியேன் உலக ஆசையெல்லாம் வெறுத்துப் பரலோக காரியங்களின்பேரில் கவலையாயிருக்கக் கிருபைசெய்தருளுஞ் சுவாமீ.

### குரு, பாத்திரத்தை எழுந்தருளச் செய்கிறபொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ, நித்திய பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, தேவரீர் சகல மனிதருடைய பாவங்களைப் போக்க உம்முடைய திரு உதிரத்தைச் சிந்தினீரே; பாவியாயிருக்கிற அடியேனுக்காகச் சிந்தப்பட்ட திரு இரத்தத்தைப்பார்த்து அடியேன்செய்த பாவங்களைப்பொறுத்து நான் நரகத்தில் விழாதபடிக்குத் தயைசெய்தருளுஞ் சுவாமீ.

### குரு, சேசுநாதருடைய திருமேனியின் பேரிலும், திரு உதிரத்தின்பேரிலும் சிலுவை வரைகிறபொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ, நித்திய பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, தேவரீருடைய சிலுவையானது மனிதர்

பேரில் உமக்குள்ள அளவிறந்த அன்பை விளங்கச் செய்கிறதுந் தவிர, தேவரீர் மரணத்தை அடைந்ததற்கு ஒரு திருமஞ்சமுமாய் இருந்ததே; பாவியாயிருக்கிற அடியேன் இந்தச் சிலுவையின் வழியாக விளங்கிய உமது அளவில்லாத அன்பைக்கண்டு மனமுருகி உம்மைச் சிநேகிக்கவும், எனக்கு வருகிற கஸ்தி நிர்ப்பந்தம் இவைமுதலான சிலுவைகளைப் பொறுமையோடு சகிக்கவும் அநுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமீ.

### குரு, மரித்தவர்களுக்காக மன்றாடுகிற பொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ, நித்திய பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, தேவரீர் சிலுவையில் அறையுண்டிருக்கும்பொழுது உம்மைப் பாடுபடுத்தினவர்களுக்காக உமது பிதாவை மன்றாடினீரே; பாவியாயிருக்கிற அடியேன் தேவரீர் பாவனையாகச் சாந்தமுந், தாழ்ச்சியு முள்ளவனாயிருந்து, எனக்குப் பொல்லாங்கு செய்கிறவர்கள் பேரில் பட்சமாயிருந்து, அவர்களுக்கு என்னால் ஆன நன்மையைச் செய்யத் தயை செய்தருளுஞ் சுவாமீ.

### குரு, மார்பிலே ஒருவிசை தட்டிக்கொண்டு பாவிகளுக்காக மன்றாடுகிற பொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ, நித்திய பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, தேவரீர் சிலுவையில் அறையுண்டிருந்த பச்சாத்தாபக் கள்ளனுக்கு இன்றுதானே நம்முடன் மோட்சத்தில் இருப்பாயென்று திருவுளம் பற்றினீரே, பாவியாயிருக்கிற அடியேன் செய்தபாவங்களை உம்முடைய மகாதயையினாற் பொறுத்து என்மரணநேரத்திற் காத்து இரட்சித்து உம்முடைய நித்திய மோட்சத்தைக் கட்டளையிட்டருளுஞ் சுவாமீ.

### குரு, பரமண்டல மந்திரஞ் சொல்லுகிறபொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ, நித்திய பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, தேவரீர் சிலுவையில் அறையுண்டிருக்கும்பொழுது உம்முடைய மாதாவை உமக்கு மிகவும் பிரியசிஷ்ஷனை அர்ச். அருளப்பருக்கு மாதாவாகக் கட்டளையிட்டதினால் சகல மனிதருக்கும் மாதாவாகக் கட்டளையிட்டதாயிற்றே; பாவியாயிருக்கிற அடியேன் உம்முடைய மாதாவுக்கு யோக்கிய



மான பிள்ளையாக இருக்கிறதால் உம்முடைய பாக்கியத்திற்கும் இராச்சிய பாரத்திற்கும் பங்காளியாயிருக்கக் கிருபை செய்தருளுஞ் சுவாமீ.

### குரு, தேவநற்கருணையைப் பிட்கிறபொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ, நித்திய பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, தேவரீர் உம்முடைய திரு ஆத்துமத்தைப் பிதாவாகிய சர்வேசுரன் கையில் ஒப்புக்கொடுத்து, எங்கள் பாவங்களுக்காகத் திருச்சிரசு கவிழ்ந்து மரணமடைந்தீரே; பாவியாயிருக்கிற அடியேன் பாவதோஷங்களை எல்லாம் விட்டு உலகவெகுமான பாக்கியத்திற்குஞ், சரீர சுகத்திற்கும் மரித்தவனாயிருக்கத் தயை செய்தருளுஞ் சுவாமீ.

### குரு, தேவநற்கருணையின் துண்டைப் பாத்திரத்தில் விடுகிறபொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ, நித்திய பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, தேவரீர் பிதாப்பிதாக்கள் ஸ்தலத்திலே இறங்கி அவர்களுடைய சிறையை நீக்கினீரே; இப்பொழுது உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருக்கிற ஆத்துமாக்கள்பேரில் இரங்கி அவர்களுடைய வேதனையை நீக்கி மோட்சபாக்கியத்தைக் கட்டளையிட அநுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமீ.

### குரு, பிழைதட்டிக் கொள்ளுகிறபொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ, நித்திய பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, தேவரீர் மரித்தவுடனே சூரியன் மங்கி இருளடைய, மலைகள் பிளக்கக், கல்லறைகள் திறந்து கோவிற்றிரைச்சீலை கிழிய இவைமுதலான புதுமைகளைச் சிலர் ஆச்சரியமாய்க் கண்டுபயந்து தாங்கள் செய்த குற்றத்திற்காக உத்தம மனஸ்தாபப்படத் தயைசெய்தீரே; பாவியாயிருக்கிற அடியேன் புண்ணியவழியில் அதிகமதிகமாய் வர்த்திக்கவும், தேவரீருடைய திருப்பாடுகளைத் தியானித்து மனஸ்தாபத்தோடு மனம் நொந்து உருகவுங் கிருபைசெய்தருளுஞ் சுவாமீ.

### குரு, தேவநற்கருணையை உட்கொள்ளுகிறபொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ, நித்திய பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, தேவரீருடைய திருமேனி பரிமள தயிலத்

னினாற் பூசப்பட்டுப் பரிவட்டத்தினால் மூடப்பட்டு வெகுபூச்சியமாகப் புதுக்கல்லறையில் அடக்கப்பட்டீரே; பாவியாயிருக்கிற அடியேனுடைய இருதயஞ் சகலபுண்ணிய பரிமளங்களினாலே அலங்கரிக்கப்பட்டு உமக்கு உகந்த இருப்பிடமா யிருக்கவும், என்னுடைய ஆத்துமத்திலுள்ள பாவ இருள் நீங்கி ஞானத்தெளிவோ டிருந்து உம்மோடு மோக்ஷ விராச்சியத்தில் இருக்கவும் தயைசெய்தருளுஞ் சுவாமீ.

குரு, பீடத்தின் இடது பக்கத்திற் போகிறபொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ, நித்திய பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, தேவரீர் திருவுளம்பற்றின தின்படி மரணம் அடைந்த மூன்றாம்நாட் கல்லறையை விட்டுச் செயசீலராய் எழுந்தருளினீரே; பாவியா யிருக்கிற அடியேன் உம்முடைய பாவனையாய் இவ்வுலகத்தில் ஞானவிதமாய் மரித்து ஞானசீவியத்தை அடைந்து வாழவும் பொதுத்தீர்வை நாளிலே ஆத்துமத்தோடுஞ் சரீரத்தோடும் புண்ணியவான்களைப்போல உயிர்த்தெழுந்திருக்கவுந் தயை செய்தருளுஞ் சுவாமீ.

குரு, திரும்பிச் சனங்களை வினவுகிற பொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ, நித்திய பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, தேவரீர் உயிர்த் தெழுந்தருளின பொழுது துக்கசாகரத்தில் அமிழ்ந்தியிருந்த உமது மாதாவுக்கும், மற்றப் புண்ணியவான்களுக்கும், புண்ணியவதிகளுக்கும் தரிசனையாகி அவர்களுடைய மகா துயரத்தைநீக்கி அவர்கள் இருதயத்திற்கு அத்தியந்த சந்தோஷமகிமையான மனோகரத்தை வருவித்தீரே; பாவியாயிருக்கிற அடியேன் இந்த சஞ்சல வுலகத்தில் இருக்கிற மட்டும் உம்மை ஞான அறிவினால் தரிசிக்கவும், உம்முடைய திவ்விய அன்பினால் மனங்களிகூரவும், மோட்சத்தில் உம்மைப் பிரத்தியட்சமாய்த் தரிசிக்கவுந் தயைசெய்தருளுஞ் சுவாமீ.

குரு, கடைசிவேண்டுதல் சொல்லுகிறபொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ, நித்திய பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, தேவரீர் உத்தானமாயினநாற்பதுநாள் அளவும் அநேகமுறை அப்போஸ்தலர்களுக்கும், அர்ச்சியசிஷ்டவர்க



ளுக்கும்அநேகம்பரம இரகசியங்களைக்கற்பித்தீரே; பாவியாயிருக்கிறஅடியேன் எல்லாவற்றையும்பார்க்கஉம்முடையஇராச்சியத்திற்குஉரிய காரியங்களைப் பராமரிக்கவும், உம்முடையதிவ்வியகற்பனையின்படி வழுவாமல் நடக்கவுந் தயைசெய்தருளுஞ் சுவாமீ.

குரு, திரும்பிச் சனங்களை வினவுகிறபொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ, நித்திய பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, தேவரீர் சீஷர்கள் பார்த்துக்கொண்டிருக்கப் பிதாவாகிய சர்வேசுரனுடைய பத்திராசனத்திற்கு மகா ஒட்டோலகராய் ஆரோகணமானீரே, பாவியா யிருக்கிற அடியேன் பூலோக காரியங்களை எல்லாம் வெறுத்துப் பரலோக நன்மைகளின் பேரில் ஆசைவைத்து என்மனதினால் உம்மைப் பின்சென்றுவர அநுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமீ.

குரு, சனங்களுக்கு ஆசீர்வாதங் கொடுக்கிற பொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ, நித்திய பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, தேவரீர் பரலோகத்திற்கு ஆரோகணமாகிய பின்பு அப்போஸ்தலர்களுக்குத் திவ்விய ஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரனின் வரப்பிரசாதங்களைத் தந்தருளினீரே; பாவியாயிருக்கிற அடியேனுடைய ஆத்துமத்திலே அவர் எழுந்தருளிவந்து என்னுடைய புத்திக்கு ஞானப்பிரகாசத்தையும், என் இருதயத்தில் தேவ சிநேகத்தின் அக்கினியையும் வருத்திவிக்கத் தயைசெய்தருளுஞ் சுவாமீ

குரு, பூசை முடிந்து ஆசீர்வாதங் கொடுத்துப் பீடத்தின் வலது பாரிசத்தில் சுவிசேஷம் வாசிக்கிற பொழுது.

சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமீ, நித்திய பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஏகசுதனே, தேவரீர் சர்வசங்கார காலத்தில் நடுத்தீர்வை இடும்பொழுது உம்முடைய இடது பாரிசத்தில் இருக்கிற பாவிகளைச் சபித்து நரகத்திற் றள்ளி, உம்முடைய வலது பாரிசத்தில் இருக்கிறபுண்ணியவான்களைமகாபிரியமுகத்துடன் ஆசீர்வதித்து, ஆத்தும சரீரத்தோடு ஆநந்தமோக்ஷ பாக்கியத்திற்கு அழைத்துக்கொண்டு போவீரே; பாவியாயிருக்கிற அடியேன் அந்தச்சமயத்தில் இடதுபாரிசத்தில் இருக்கிற பாவிகளுடன் இராமலும், உம்முடைய கோபாக்கினிக்குஞ், சாபத்துக்கும் நித்திய ஆக்கினை

க்கும், உள்ளாகாதபடிக்கும் உம்முடைய வலதுபாரிசத்தில் இருக்கும் புண்ணியவான்களுக்குத் தேவரீர் கட்டளையிடப் போகிற ஆசிர்வாதத்திற்கும் நித்திய பாக்கியமுள்ள மோட்ச இராச்சியத்திற்கும், பங்காளியா யிருக்கத் தயைசெய்தருளுஞ் சுவாமி.—ஆமென்சேசு.

---

நாலு முகாந்தரத்திற்காகப்

## பூசை ஒப்புக்கொடுக்கிற வகையாவது.

முதலாவது தேவாராதனை,

¶சுவாமியானவர் ஒன்றுமில்லா திருக்கையில் உன்னை ஒரு பொருளாக்கி நீகொண்ட யாவையும், உனக்கவசரமான ஆகாசங்கொண்ட யாவையும், பூமிகொண்ட யாவையும் உனக்குக் கொடுத்துச் சுபாப வரங்களையும், அருள் வரங்களையும், கட்டளை யிட்டதற்கு ஆதிமனிதன் பாவத்தால் கெட்டுப்போன நீ பூலோகமுழுயுமட்டும் தபசு பண்ணிச் செபம் பண்ணினாலும் சுவாமிக்கேற்த் தகுந்த வாராதனைசெய்ய வுன்னால்முடியாது, தேவபலியாலாகுங் கருமமாம்.

---

## முதலாவது.

### பூசைதுவக்கம் முதற்கொண்டு சுவிசேஷம் வாசிக்கிற வரையில் ஆராதனைச் செபம்.

ஆ! என் சர்வேசுரா! தாழ்ச்சியோடே உம்மை ஆராதிக்கிறேன். உம்மை என் ஆண்டவராகவும், என்ஆத்துமத்தின் கர்த்தாவாகவும், ஒத்துக்கொள்ளுகிறேன். நானிருக்கிறதும் எனக்கிருக்கிறதுமாகிய சகலத்தையுந் தேவரீரிடத்திற் பெற்றிருக்கிறேனென்று நிச்சயிக்கிறேன். மட்டில்லாத மகத்துவமுள்ள தேவரீர் அளவில்லாத தோத்திர வணக்க ஆராதனைக்குப் பாத்திரமா யிருக்கிறதினால் நியாயத்தோடே மட்டில்லாத நமஸ்கார ஆராதனையைக் கேட்கிறீர். நானோவெனில் இந்தப்பெரிய கடனைச் செலுத்தக்கூடாத எளியவனா யிருக்கிறேன். ஆதலால் அளவில்லாத மகத்



துவமுள்ள சேசுநாதர் இந்தப்பீடத்தில் தேவரீருக் கொப்புக்கொடுக்கிறபணிவு வணக்கங்களை நானுமக் கொப்புக்கொடுக்கிறேன். சேசுநாதர் அதற்குச்செய்கிறதை நானுஞ்செய்ய விரும்புகிறேன். தேவரீருடைய சந்நிதானத்திலே அவரோடேதாழ்ந்து பணிகிறேன். என் திவ்விய சேசுநாதர் உம்மை எப்படிப்பட்ட தாழ்ச்சிப்பற்றுதலோடே ஆராதிக்கிறாரோ, அப்படிப்பட்ட பற்றுதலோடே நானும் உம்மை ஆராதிக்கிறேன். என்னேசத்துக்குரிய சேசுநாதர் எனக்காகத் தேவரீருக்குச் செலுத்துகிற மட்டில்லாத கிரவணக்கிழ்ப்படிதலைப் பற்றி மனதில் அத்தியந்த சந்தோஷப் படுகிறேன்.

ஆம். என் சர்வேசுரா! இத்திவ்விய [illegible]னால் தேவரீருக்குண்டாகிற அளவில்லாத வணக்கத்தைப்பற்றி மிகவும் அகமகிழ்ந்து சொல்லி முடியாத மனத்திருப்தி கொண்டு, சந்தோஷப்படுகிறேன்.—ஆமென்சேசு.

இரண்டாவது பிராயச்சித்தம்,

[illegible]கற்பனையைமீறிக் கொண்ட வரங்களைத் துர்ப்பிரயோகம் பண்ணினதால் அதற்குப் பரிகாரம்பண்ணவேணும். அன்னத்தை முழுதுந் தள்ளிப், பூலோகத்திலிருக்கப்பட்ட தபப்பானகாரியங்களை எல்லாம்புசித்துச் சாவுங்கால பரியந்தம் ஆத்துமத்திலுஞ் சரீரத்திலும் புத்திக்கெட்டாத துன்பங்களைப் பட்டாலும் நம்மால் பிராயச்சித்தம் தீராது, தேவபலியால் மாத்திரம் முடியுங் கருமமாம்.

---

## இரண்டாவது.

### சுவிசேஷம் வாசிக்கப்படுகிற நேரமுதல் தேவநற்கருணை எழுந்தேற்றம் வரையில் பிராயச்சித்தச் செபம்.

என் சர்வேசுரா ! இதோ அநந்தமுறை உமக்குத் துரோகஞ்செய்த பாவியாகிய அடியேன் உமதுசமுகத்திலே கிடக்கிறேன். ஐயோ! மிகுந்த துயரப்பட்டு எண்ணிக்கையில்லாத என்பாவங்களை என் முழு இருதயத்தோடே அருவருத்து வெறுக்கிறேன். என்பரிசுத்த மத்தியஸ்தராகிய சேசுநாதசுவாமி பீடத்தில் உமக்குச் செய்கிற பரிகாரத்தைத் தேவரீருக்கு உத்தரிப்பாக ஒப்புக்

கொடுக்கிறேன். சர்வேசுரனு மனுஷனு மொன்றாயிருந்து எனக்காகப்பலியாகி இன்னம் என்னைப்பற்றித் தம்மைப் பீடத்தில் ஒப்புக்கொடுக்கிற சேசுநாதருடைய சகல புண்ணியப் பேறுகளையும் அவருடைய திருவிரத்தத்தையும், அத்திவ்விய சேசுநாதனைமுழுமையும் தேவரீருக்குக் காணிக்கை யிடுகிறேன். இப்படியே என் ஆராதனைக்குரிய சேசுநாதர் பீடத்தின்பேரில் எனக்காக மத்தியஸ்தராகவும், மனுப்பேசுகிறவ ராகவும் எழுந்தருளித் தமது விலையேறப்பெற்ற திருவிரத்தத்தால் எனக்காகக் கிருபை கேட்கிறப[illegible]னாலே இத்திரு விரத்தத்தின் விண்ணப்பத்தோடே என் விண்ணப்பத்தையுங் கூட்டி அடியேன் செய்த அத்தனைக்கொடிய பாவங்களுக்குக் கிருபையையும், பொறுத்தலையும் இரந்து கெஞ்சுகிறேன். சேசுநாதருடைய திரு விரத்தம் உம்மிடத்தில் எனக்காகக் கிருபைகேட்கிறது. என்னிருதயமுந் துயரப்பட்டு அதைத்தான்கேட்குமென்றாடுகின்றது. ஆ! என் இ[illegible] தேவனே! தேவரீர் என் கண்ணீர்களுக்கு இரங்காதே[illegible]னேச சேசுவின் பெருமூச்சுகளுக்காவது இரங்[illegible] நீ பூலோ[illegible]வையில் மனுக்குல மெல்லாத்துக்குங் கிருபை[illegible] சுவாமி[illegible], மெய்யாகவே என்னேசுவின் முடிவு பரியந்தங், கண்ணீர்விட்டழுது நான் பரிகரிக்க நியமித்திருக்கிற என் பாவங்களை யெல்லாந் தேவரீருடைய விலைமதியாத இத்திரு விரத்தத்தின் பலனால் பொறுத்தருளுவீரென்று முழுமனதுடனே நம்பி யிருக்கிறேன்.

என்னேச சேசுவே! அடியேன் இத்திவ்விய பூசையின் பலனால் என்பாவங்களுக்கு முழுதும் பொறுத்தலை யடையத்தக்கதாக அர்ச். இராயப்பருடைய கண்ணீர்களையும், மதலேனம்மாளுடைய மனஸ்தாபத்தையும், பாவிகளாயிருந்து மெய்யான தபசிகளான சகல அர்ச்சியசிஷ்டவர்களின் மனத்துயரத்தையும் எனக்குத் தந்தருளுஞ் சுவாமீ.—ஆமென்சேசு.

### மூன்றாவது விண்ணப்பம்.

¶ஆத்துமமானது தெய்வகற்பனைப்பிரகாரம் நடந்து கொள்ளவும் வருந் தந்திரங்களைச்செயித்து பாசங்களை யடக்கவும் சுபாவ நூலைக்கடந்த அநேக இஷ்டப்பிரசாதங்கள் வேணும். சரீரம் பிழைக்க அநேக அவசரங்களுமுண்டு. இவைகளை மனிதன் தன் சுயபலத்தால் அடையமாட்டான், தேவபலியால் அடையுங் கருமங்களாம்.



## மூன்றாவது.

### தேவநற்கருணை எழுந்தேற்ற முதற்கொண்டு குருவானவர் அதை உட்கொள்ளுகிற வரையில் விண்ணப்பச் செபம்.

என்னிருதய அன்புக்குரிய கர்த்தாவே, இதோ தேவரீர் என்னிடத்திற் பொழிந்தருளியசாதாரணமும், விசேஷமுமான நன்மை உபகாரங்களைத் திரளாய்ப்பற்றிக் கொண்டிருக்கிறேன். மீளவும் இவ்வுலகத்திலும், மறுவுலகத்திலும் நித்தியமாய் வேறநேக நன்மைகளை எனக்குத் தந்தருளக் காத்திருக்கிறீர். என்ம[illegible]முடைய கிருபை தயாளம் முன்னிலும் இப்[illegible]து மட்டில்லாததென்று ஒத்துக்கொள்ளுகிறேன். இத்தனை நன்மைகளுக்குரிய பிரதி நன்றிசெய்ய என்னியல்பு[illegible] எளிமைத்தனத்தினாற் கூடாதாயினும் உமது கிருபையால் சேசுநாதசுவாமியின் மூலமாக இத்தனை நன்றிக்கடனைத்தீர்க்க என்னாலேகூடும், ஆதலால் இத்தனை நன்மை உபகாரங்களினாலே அடியேன் தேவரீரிடத்திற்ப[illegible]ன்றியறிதலின் [illegible]னை முழுதுந்தீர்க்கவிரும்பி இந்தச் சந[illegible] க[illegible]ம் உத்தரிப்பாகவும் நன்றியறிந்த காணிக்கையாகவுங் குருவானவருடைய கரங்களால் மாசற்ற பலியாகிற சேசுநாதருடைய விலைமதியாத திருச்சரீரத்தையும்இரத்தத்தையுந் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறேன். இந்தக் காணிக்கையானது தேவரீரெனக்குத் தந்தருளிய ஈகை எல்லாத்தையுஞ்சரிக்கட்டுதற்குப் போதுமென்று நிச்சயமா யறிந்திருக்கிறேன், ஏனெனில் அளவில்லாத விலையேறப்பெற்ற இத்திவ்ய பலி இதுவரைக்கும் நான் தேவரீரிடத்தில் பெற்றுக்கொண்டதும், எந்நேரமும் பெற்றுக்கொள்ளுகிறதும், இனிப்பெற்றுக் கொள்ளுவதுமாகிய மற்ற சகல தானங்களுக்கும் மேலானதாய் அல்லது ஒத்ததாயிருக்கிறதென்கிறதற்குச் சந்தேகமில்லை. ஆயினும்ஆண்டவருடைய சம்மனசுக்களே! பாக்கியம்நிறைந்த மோட்சவாசிகளே! நீங்களெல்லாரும் என்சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்த வெனக்குதவிசெய்து, நான்பெற்றுக்கொண்ட இத்தனை உபகாரங்களுக்கும் பிரதி நன்றியாக இந்தப்பூசையைமாத்திரமல்லவே, இந்நேரத்தில் சர்வலோகத்திலுஞ்செய்யப்படுகிற திவ்விய பூசைகளையெல்லாம் அவருக்கு ஒப்புக்கொடுங்கள். இவ்விதமே

அவர் எனக்குப் பொழிந்தருளினதும், இப்போதுசெய்தருளுகிறதும், இனி அனவரதசதாகாலமும் எனக்குச் செய்தருளுவதுமாகிய சகல நன்மை வரப்பிரசாதங்களினிமித்தம் அவருடைய அன்புள்ள தயாளத்துக்குச் சம்பூரணமாய்ச் சரிக்கட்ட விரும்புகிறேன்.

எனக்குப் பரிபாலகராகிய தயை நேசம் நிறைந்த அர்ச்சியசிஷ்டவர்களே, நான் நன்றியறியாமையிற் சீவித்து மரிக்காதபடிக்கு எனக்காக என் சர்வேசுரனுடைய தயாளத்துக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்துங்கள். அவர் என் நல்ல மனதையேற்றுக்கொள்ளவும், என் திவ்விய சேசுநாதர் என்னைப்பற்றி இத்திருப் பூசைப்பலியில் அவருக் கொப்புக்கொடுக்கிற நேச மிகுதியுள்ள நன்றியறிந்த தோத்திரங்களைக் கிருபா கடாட்சத்தோடே அங்கீகரிக்கவும் வேண்டுமென்று அவரை மன்றாடிக்கொள்ளுங்கள்.—ஆமென்சேசு.

### நான்காவது நன்றியறிதல்.

நம்முடைய சரீரம் பிழைக்கப்பூமிகொண்ட சகலவஸ்துக்களையும், சரீரங்கொண்ட இந்திரியங்கள் முதலான உபகாரங்களையும் பெற்றுக்கொண்டோம். ஆத்துமத்திற்கு மெய்வேதத்தில் ஞானஸ்நான முதலிய தேவதிரவிய அநுமானங்களும், இன்னங் கொஞ்சத்தில் அடையப்போகிற பேரின்பநித்திய மோட்சபாக்கியமுமுண்டு. இவைகளுக்கு நம்மால் நன்றியறிந்த தோத்திரம் பண்ணி முடியாது, தேவபலியாலாகும் கருமமாம்.

## நான்காவது.

### குருவானவர் தேவநற்கருணை யுட்கொண்ட நேரமுதல் பூசைமுடிவுமட்டும் நன்றியறிதற் செபம்.

என் ஆண்டவரே! ஆத்துமத்தின் தேவனே! உமது தயை வரங்களுக்கு நான் அபாத்திரவானென்று ஒத்துக்கொள்ளுகிறேன். உள்ளபடி என் அயோக்கியம் மிகுதியென்றும், என்பாவங்களின் கடினத்தையுந் திரளையும்பற்றித் தேவரீரிடத்திற் கேட்கிற வரங்களைப்பெற்றுக்கொள்ள நான்எவ்விதமும் பாத்திரவானல்ல



வென்றும் நிச்சயிப்பது நியாயந்தானே, ஆயினும் ஆராதனைக்குரிய உம்முடைய திருக்குமாரன் இந்தப்பீடத்தின்மேல் என்னைப்பற்றித் தம்முடையபிராணனையும், இரத்தத்தையும் ஒப்புக்கொடுத்து எனக்காகத் தேவரீரைக்கேட்கிற மன்றாட்டை நீர்புறக்கணித்து மறுக்கக்கூடுமோ? என் இருதயத்தின் பரமதேவனே! தேவரீரிடத்தில் அவர் எனக்காக மனுப்பேசிச் செய்கிற விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளும், அவருடைய திருமுகத்தைப்பார்த்து என் இரட்சணியமாகிய பெரியகாரியம் அநுகூலமாவதற்கு எனக்குத்தேவையென்று தேவரீர் அறிந்திருக்கிற வரப்பிரசாதங்களையெல்லாம் எனக்குத்தந்தருளும். அடியேன் முந்தின காலங்களிலுந் துணிந்ததைவிட இப்போது சேசுநாதருடைய புண்ணியபலன்களை நம்புகிறதினால் அதிகமாய்த்துணிந்து என்சகல பாவங்களுக்குஞ் சாதாரண பொறுத்தலையும், புண்ணியத்தில் கடைசிமட்டும் நிலைமையாவதற்குரிய வரப்பிரசாதத்தையுங் கேட்கிறேன். மேலும் என்திவ்விய இரட்சகர் உமக் கொப்புக்கொடுக்கிற செபங்களின் பேரில் என்னம்பிக்கையெல்லாம் வைத்து மேலான தன்மையில் சகல வரப்பிரசாதங்களையும் மெய்யான அர்ச்சியசிஷ்டவனாவதற்குப் பலிப்புள்ள சகல உதவிகளையும்எனக்காக இரந்துகேட்கிறேன். மீளவுஞ் சகல அக்கியானிகளும், எல்லாப்பாவிகளும், உறவினாலாவது ஞானசம்பந்தத்தினாலாவது என்னோடே பந்தனமானவர்களும் மனந்திரும்பும் வரத்தைத் தேவரீர் தந்தருளவேணுமென்றுமன்றாடுகிறேன். அல்லாமலும்இப்போது உத்தரிக்கிற ஸ்தலத்திலே சிறைபட்டிருக்கிற ஒரு ஆத்துமத்துக்கு மாத்திரமல்லவே, அதிலே வேதனைப்படுகிற எல்லா ஆத்துமங்களுக்கும்மீட்பு தந்தருளவேணுமென்று உம்மைப்பிரார்த்திக்கிறேன். அவர்களெல்லாரையும் விடுதலைசெய்தருளும், இத்திவ்விய பூசையின்பலனால் வேதனையுள்ள அந்த உத்தரிப்பு ஸ்தலமுழுதும் வெறுமையாகக்கடவது. ஆண்டவரே! நிர்ப்பாக்கியமுள்ள இவ்வுலகந் தேவரீருக்கு முதலா யின்பஸ்தல மாகும்பொருட்டுச் சீவியர்கள் ஆத்துமங்களை நன்னெறியிற் திருப்பியருளும். இப்படியே நாங்கள் இவ்வுலகத்தில் தேவரீரைப் பத்தியோடே சிநேகித்துஸ்துதித்து வாழ்த்தி யாராதிக்கவும், பரலோகத்தில் நித்தியமாயும்மை ஆநந்தத்தோடேபுகழ்ந்து தோத்திரம் பண்ணவும் எங்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருளும்.—ஆமென்சேசு.

## பூசைமுடிந்தபின் நன்றியறிந்த தோத்திரம்.

பிதாவுக்குஞ் சுதனுக்கும் இஸ்பிரீத்து சாந்துவுக்குந் தோத்திர முண்டாகக்கடவது.

ஆதியிலுமிப்பொழுது மெப்பொழுதும் அனாதி சதாகால மு மிருக்கும்படியே.—ஆமென்சேசு.

பிதாச், சுதன், இஸ்பிரீத்து சாந்துவாகிய மகா பரிசுத்த திரித்துவ ஏகத்துவமான சர்வேசுரா, தேவரீரைத் தாழ்ச்சியோடு வணங்கி நமஸ்கரிக்கிறோம். கன்னி சுத்தங் கெடாத அத்தியந்த பரிசுத்த மரியம்மாள் மாசற்றகற்பமடையத் தேவரீர் சித்தமிரங்கி யவளுக்களித்த பேறு பலன்களுக்காக நாங்கள் நன்றியறிந்தவர்களாய் மனோவாக்குக் காயமொத்து உமக்குத் தோத்திரஞ் செய்கிறோம்.—௩-திரி. ௧-பிரி.

பிதாச், சுதன், இஸ்பிரீத்து சாந்துவாகிய மகாபரிசுத்த திரித்துவமே! தேவரீரைத் தாழ்ச்சியோடு வணங்கி நமஸ்கரிக்கிறோம். அத்தியந்த பரிசுத்த மரியம்மாளின் மகிமைபொருந்திய சனனத்தில் தேவரீர் அவளுக் களித்த சிறந்த பேரருளின் பலனுக்காக நாங்கள் நன்றியறிந்தவர்களாய் மனோ வாக்குக் காயமொத்து உமக்குத் தோத்திரஞ் செய்கிறோம்.—௩-திரி. ௧-பிரி.

பிதாச், சுதன், இஸ்பிரீத்து சாந்துவாகிய மகா பரிசுத்த திரித்துவமே! தேவரீரைத் தாழ்ச்சியோடு வணங்கி நமஸ்கரிக்கிறோம். அத்தியந்த பரிசுத்த மரியம்மாளைத் தேவவூழியத்துக்குத் தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கத் தேவரீர் சித்தமிரங்கி அவளுக் களித்த சிறந்த பேறு பலனுக்காக நாங்கள் நன்றியறிந்தவர்களாய் மனோவாக்குக் காயமொத்து உமக்குத் தோத்திரஞ்செய்கிறோம்.—௩-திரி. ௧-பிரி.

பிதாச், சுதன், இஸ்பிரீத்து சாந்துவாகிய மகா பரிசுத்த திரித்துவமே! தேவரீரைத் தாழ்ச்சியோடு வணங்கி நமஸ்கரிக்கிறோம். அத்தியந்த பரிசுத்த மரியம்மாளுக்குச் சம்மனசானவர் மங்களவார்த்தை சொல்லத் தேவரீர் சித்தமிரங்கி அவளுக் களித்த சிறந்த பேறு பலனுக்காக நாங்கள் நன்றியறிந்தவர்களாய் மனோவாக்குக் காயமொத்து உமக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்கிறோம்.—௩-திரி. ௧-பிரி.



பிதாச், சுதன், இஸ்பிரீத்து சாந்துவாகிய மகா பரிசுத்த திரித்துவமே! தேவரீரைத் தாழ்ச்சியோடு வணங்கி நமஸ்கரிக்கிறோம். அத்தியந்த பரிசுத்த மரியம்மாள் ஸ்நாபக அருளப்பரின் திருத்தாயாரைத் தரிசிக்கத் தேவரீர் சித்தமிரங்கி அவளுக்களித்த சிறந்த பேறு பலனுக்காக நாங்கள் நன்றியறிந்தவர்களாய் மனோவாக்குக் காயமொத்து உமக்குத் தோத்திரஞ் செய்கிறோம்.—௩-திரி. ௧-பிரி.

பிதாச், சுதன், இஸ்பிரீத்து சாந்துவாகிய மகா பரிசுத்த திரித்துவமே! தேவரீரைத் தாழ்ச்சியோடு வணங்கி நமஸ்கரிக்கிறோம். அத்தியந்த பரிசுத்த மரியம்மாளைத் தேவரீர் மாசற்ற கர்ப்பமாகச் சித்தமிரங்கி யவளுக்களித்த பேறு பலனுக்காக நாங்கள் நன்றியறிந்தவர்களாய் மனோவாக்குக் காயமொத்து உமக்குத் தோத்திரஞ்செய்கிறோம்.—௩-திரி. ௧-பிரி.

பிதாச், சுதன், இஸ்பிரீத்து சாந்துவாகிய மகா பரிசுத்த திரித்துவமே! தேவரீரைத் தாழ்ச்சியோடு வணங்கிநமஸ்கரிக்கிறோம். அத்தியந்த பரிசுத்த மரியம்மாள் ஒட்டோலகத்துடன் மோட்சத்துக் காரோகணமாகத் தேவரீர் சித்தமிரங்கி யவளுக்களித்த பேறுபலனுக்காக நாங்கள் நன்றியறிந்தவர்களாய் மனோவாக்குக் காயமொத்து உமக்குத் தோத்திரஞ் செய்கிறோம்.—௩-திரி. ௧-பிரி.

கடைசியாய்த் தேவரீர் மகா மதுரம்பொருந்திய பரிசுத்த மரியம்மாளின் திருநாமத்தை மகிமைப்படுத்தி உயர்த்தி இப்பிரபஞ்ச முழுதிலும் பரம்பச் செய்ததற்காக நாங்கள் நன்றி யறிந்தவர்களாய் மனோவாக்குக் காயமொத்து உமக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்கிறோம்.—ஆமென்சேசு.

## மகா பரிசுத்த கன்னிமரியம்மாளுக்குச் செபம்.

மரியாயே, அன்பு நிறைந்த அன்னையே, மனோரஞ்சித மாதாவே, கிருபைநிறைந்த மாதாவே, உமது வேதபோதகர்களுக்கும், உமது பிள்ளைகளுக்கும் அளிக்கச்சம்பூரணமாய் நேசத்தையும் மதுரத்தையுங் கொண்டிருப்பவளே, இப்பொழுது நாங்கள் பரிசுத்த திரித்துவத்துக்குச்செலுத்திய இந்த நன்றியறிந்ததோத்திரத்தால் எங்களாத்துமத்தின் இச்சைகளை ஆண்டவருடைய மகிமை

க்கொத்த விதமாய் நீங்கள் நடத்தி எங்களுக்கு வேண்டியஅருளை நாங்கள் அடையவும் மூன்றாட்களாகிய ஏக சர்வேசுரன் தமக்குப் பிரியமாக விருக்க எங்களை நடத்தவும் நீர் பூலோகத்தி லிருக்கும்பொழுது தேவனை நேசித்ததுபோல நாங்கள் எங்கள் முழுவிருதயத்தோடு அவரை நேசிக்கவும் இப்பொழுது மெப்பொழுதும் நித்தியகாலமும் ஆண்டவருடைய பேரின்ப பாக்கியத்தைப் பரலோகத்தில் அநுபவித்துவரும் உம்மோடுகூட நாங்கள் பங்காளிகளாய் வந்து சேரவுஞ் செய்தருள உம்மைப்பார்த்து மன்றாடுகிறோம்.

பிதாச் சுதன், இஸ்பிரீத்து சாந்துவினுமத்தினாலே எங்களை ஆசிர்வதித்தருளும்.—ஆமென்சேசு.

கிருபை தயாபத்துமந்திரஞ் சொல்லவும்.

பின்னும்.

முத.—பிதாச்சுதன், இஸ்பிரீத்து சாந்துவை நமஸ்கரிக்கக்கடவோமாக,

துணை.—சாஸ்வதகாலமுஞ் சகலத்தையும் பார்க்கிலுஞ்சிறந்தவராகிய சர்வேசுரனைப் புகழக்கடவோமாக.

பிரார்த்திக்கக்கடவோம்.

நித்திய திரித்துவத்தின் மகிமையையும் ஐக்கியத்தையும் அங்கீகரித்து ஆராதனைசெய்ய உமதடிமைகளாகிய வெங்களுக்கு உத்தம விசுவாசத்தைக் கட்டளையிடக் கிருபைகூர்ந்த நித்திய சர்வேசுரா! எங்கள் மரணபரியந்தம் எங்களுக்கு நேரிடுஞ் சகலவிதமான சோதனைகளை நாங்கள் எங்கள் விசுவாசத்தால் ஜெயிக்க எங்களாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதரின் மூலமாக எங்களுக்கு விசுவாசவுறுதியைக் கட்டளையிட்டருளும்.—ஆமென்சேசு.

---

## தியானிகள் யோசித்துக்கொண்டு

## பூசைகாணும் வேறுவகை.

முதலாவது—வெளிவிசாரங்கள் முழுமையும்விட்டுத் தனக்குள்ளே புகுந்து; சேசுநாதர் பூங்காவனத்தில் நமது பாவங்களை



நினைத்து இரத்தவெயர்வை வெயர்த்ததையும், ௨-வது.—யூதர்களால் நிந்தை யவமானத்தோடு பிடிபட்டதையும், ௩-வது.—அநேக நீதி யாசனங்களுக்கு முன் மானபங்கமாய்க் கூட்டிக்கொண்டு போகப்பட்டதையும், ௪-வது.—தெய்வமும் பரிசுத்தத்துக்கு ஊற்றுமாகிய சேசுநாதரை விட்டுப் பாதகனான பரபாசென்பவனைச் சகலமான நன்மைகளையும் பெற்றுக்கொண்ட யூதர்கள் தெரிந்து கொண்டதையும், ௫-வது.—சேசுநாதர் கற்றூணில் கட்டப்பட்டு இம்மலந் தெரிபட அடிக்கப்பட்டதையும், ௬-வது.—அவர் முண்முடி தரிக்கப்பட்டதையும், ௭-வது.—அவர் நம்மைப்பற்றி மரணத்தீர்வைக் குட்பட்டதையும், ௮-வது.—அவர் உண்டுபண்ணின உலகத்தாரில் அநேகர் அவரைக்கண்டு நகைக்கச் சிலுவை சுமந்துகொண்டு போனதையும், ௯-வது—அவர் சிலுவையி லுயர்த்தப் பட்டதையும், ௰-வது.—அவர் நல்ல கள்ளனுக்கு மோட்சபாக்கியங் கட்டளையிட்டதையும், ௧௧-வது.—அவர் தாயார் படும் வியாகுலத்தைக்கண்டு சிலுவையில் துக்கப்பட்டதையும், ௧௨-வது.—அவர் சிலுவையில் சகலராலுங் கைவிடப்பட்டதையும், ௧௩-வது.—அவர் மனுக்குலத்துக்காக மரணமடைந்து, அடக்கம் பண்ணப்பட்டதையுங் குறித்து பூசையிற் கவனங், கருத்து, நம்பிக்கை, நல்லுறுதி இவைகளோடு தியானம் பண்ணலாம்.

---

## உத்தரிக்கிற ஆத்துமாக்களைக் குறித்துப

## பூசைகாணும் வகை.

### பூசை ஒப்புக்கொடுக்கிற செபம்.

கருணை நிறைந்த பிதாவே! இரக்கமுள்ள கர்த்தாவே! பாவத்தாற் கெட்டழிந்த மனுஷரை மீட்டிரட்சிக்கும்படி உமது ஏகசுதனான சேசுநாதர் முன்கொடிய வேதனைப்பட்டுச் சிலுவையில் உயிர்விட்டுத் தம்மைப் பலியாக ஒப்புக் கொடுக்கத் தேவரீர் திருவுளமானது மல்லாமல் அவர் அப்போது சிலுவையில் செலுத்தின பலியை யெப்போதுந் திவ்விய பூசையினால் வரக்கூடுமான நன்மைப்பலன் யாவற்றையுந் தேவரீருடைய சித்தத்துக்குத் தக்

கது, உத்தரிக்கிற சகல ஆத்துமாக்களுக்கும் விசேஷமாய் *இன்னான் இன்னாளுடைய ஆத்துமத்துக்குந் தந்தருளவேணுமென்று தேவரீரைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.

சர்வேசுரா சுவாமீ, உத்தரிக்கிற ஸ்தலத்திலே யிருக்கிற ஆத்துமாக்கள் வேதனைகுறைய அநுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமீ.

௧-பரமண்டலம், ௧-பிரியதத்த மந்திரஞ் சொல்லவும்.

விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் சமாதானத்திலே இளைப்பாறக்கடவது.

திவ்வியபூசை துவக்குகிறபோது.

சர்வேசுரா சுவாமீ! உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்து அவர்களுக்கு நித்திய பிரகாசம் விளங்கச் செய்தருளும். சீயோனிலும் உமக்கு ஸ்துதியும்ஜெருசலேமிலும் உமக்கு வேண்டுதலு முண்டாகக் கடவது. என்னுடைய மன்றாட்டுக்கிரங்கும். சகலமனுஷரும் உமதண்டையில் வருவார்களாக. சர்வேசுரா சுவாமீ, உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு நித்திய இளைப்பாற்றியைத்தந்து அவர்களுக்கு நித்திய பிரகாசம் விளங்கச் செய்தருளும்.

சர்வேசுரா சுவாமீ, உத்தரிக்கிற ஸ்தலத்திலே யிருக்கிற ஆத்துமாக்கள் வேதனை குறைய அநுக்கிரகஞ் செய்தருளுஞ்சுவாமீ.

௨-பர. ௨-பிரி. விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்—மற்றதும்.—ஒருவிசை சொல்லவும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சகல விசுவாசிகளுடைய சிருஷ்டிகரும் இரட்சகருமாகிய சர்வேசுரா! மரித்த உமது அடியோர்களுக்காகச் செய்யப்படுகிற

*ஓர் ஆத்துமத்தைக்குறித்துப் பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டிருந்தால் இன்னான் இன்னாளுடைய ஆத்துமம் வேதனை குறையவெனச்சொல்லவும். ஆரைக்குறித்துப் பூசை செய்விக்கிறார்களோ அவர்களின் உறவின் முறையார்அன்று நன்மைவாங்கி அந்த ஆத்துமாக்களுக்கு ஒப்புக் கொடுப்பதே முறை.



பத்தியுள்ள மன்றாட்டுக்களை அங்கீகரித்து அவர்கள் ஆவலோடே இச்சிக்கிற பாவமன்னிப்பைக் கிருபைசெய்தருள வேணுமென்று உம்மை மன்றாடுகிறோம். சதாகாலமுஞ் சீவியரான சர்வேசுரா! இந்த மன்றாட்டைத் தயவோடேகேட்டருளுஞ் சுவாமீ.—ஆமென்சேசு.

நித்திய பிதாவே! பெற்றோர், பந்துக்கள், சிநேகிதர், உபகாரிகள் முதலியவர்களைத் தக்கவிதமாய் நேசித்து அவர்களுக்குவேண்டிய நன்மைசெய்யக் கற்பித்தருளினீரே; ஆகையால் எங்களைப்பெற்று அன்போடே வளர்த்து ஆதரித்தவர்களும் பற்பல உபகாரங்களை எங்களுக்குச் செய்தவர்களுமாகிய எங்கள் பந்துக்கள், சிநேகிதர் முதலானவர்கள் வேதனை நீங்கி நித்தியகாலம் உம்மைச் சந்தோஷமாய்த் தரிசித்துக்கொண் டிருக்கத் தேவரீர் கிருபை செய்தருள் வேணுமென்று உம்மை மன்றாடுகிறோம்.—ஆமென்சேசு.

கிருபை நிறைந்த சர்வேசுரா! மரணத்தை யடைந்த எங்களுடைய சகோதரரைக் கிருபையாய்ப் பார்த்தருளும். அவர்களுடைய ஆத்துமாக்களைப் பிதாப் பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, இயாக்கோப்பு என்பவர்களுடன் என்றென்றைக்கும் வாழும் மோட்சவாசிகளிடத்திற் சேர்த்தருளும். அழுகை கஸ்தி வருத்தம் அறியாத ஸ்தலமான எவ்வித பேரின்பமும் நிறைந்த உமது பரகதியில் இந்த ஆத்துமாக்களை வைத்துக்கொள்ள வேணுமென்று தேவரீரைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.

நித்திய பிதாவாகிய சர்வேசுரா! எங்களுடைய தாய்தகப்பனைச் சங்கிக்கவேணுமென்று கற்பித்திரு[illegible]த்த எங்களுடைய தாய் தகப்பன் ஆத்துமாக்களுக்குக் கிருபைசெய்து அவர்களுடைய பாவங்களைப் பொறுத்து நாங்கள் அவர்களை நித்திய பிரகாசமுள்ள உம்முடைய இராச்சியத்தில் பார்க்கும்படிக்குச் செய்யவேணுமென்று தேவரீரைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறேஞ் சுவாமீ.—ஆமென்சேசு.

சர்வேசுரா சுவாமீ, உத்தரிக்கிற ஸ்தலத்திலே, மற்றதும், ௩-பர. ௩-பிரி. விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் மற்றதும்.

அப்போஸ்தலரான

# அர்ச். அருளப்பர் காட்சி ஆகமத்தி லெழுதிய

## நிருபம்.

அக்காலத்தில் பரமண்டலத்தி லிருந்து ஓர் சத்தம் எனக்கு உண்டாகக்கேட்டேன். அதாவது: சர்வேசுரனுடைய சமாதானத்தில் சாகிறவர்கள் பாக்கியவான்கள்தான்; அதேதெனன்றால், அவர்களுடைய நற்கிரியைகள் அவர்களைத் தொடருகிறதினாலே அவர்கள் பட்டவருத்தங்களிலே நின்று அவர்கள் இளைப்பாற வேணுமென்று இஸ்பிரீத்து சாந்துவானவர் சொல்லுகிறாரென்கிறதாக எழுதவேணுமென்று எனக்குச் சத்தங் கேட்கப்பட்டதாமே.

சர்வேசுரா சுவாமீ, உத்தரிக்கிற ஸ்தலத்திலே.—மற்றதும்.

பர-பிரி. விசுவாசிகளுடைய—மற்றதும்.

சர்வேசுரா சுவாமீ, உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்து அவர்களுக்கு நித்திய பிரகாசம் விளங்கச் செய்தருளும்.

நீதிமான் நித்திய கீர்த்தியைக் கொண்டிருப்பான், அவனுடைய கேள்விகளால் அவனுக்குப் பயமிராது.

சர்வேசுரா சுவாமீ, மரித்த சமஸ்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்களை எவ்விதப் பாவக்கட்டுகளிலேயும் நின்று மீட்டுக்கொள்ளும். இந்த ஆத்துமாக்களுங் கோபாக்கினியிலே நின்று உமது அநுக்கிரகத்தால் இரட்சிக்கப்பட்டு நித்திய பிரகாசத்தின் பாக்கியத்தை அநுபவிக்கக் கடவார்கள்.

## DIES IRÆ, DIES ILLA.

### தியெஸ் ஈரே, தியெஸ் இல்லா என்கிற சல்லாபம்.

க.—அந்தநாள் பெரியநாள் எந்தநாளோ வென்றால், தாவீதென்கிற இராசாவும் சிபீலென்கிறவளுஞ்சொன்னாப்போல உலகத்திலுண்டான தெல்லாம் நிர்மூலமாய்ச் சாம்பலாய்ப் போகப்படுகிறநாள்.



உ.—அந்தநாள் ஆண்டவருடைய நாளாகையால் நம்மை இரட்சித்த ஆண்டவர் சகல கணக்குங் கேட்கும் அகோரமான பயங்கரமுள்ள நாள்.

ங.—அந்தநாள் உலகத்தில் அடக்கப்பட்டவர்களெல்லாரும் இங்கே வாருங்களென்று எக்காளத் தொனியால் அழைக்கப்படுகிற நாள்.

ச.—அந்தநாளையிற் சிருஷ்டிக்கப்பட்ட சகல சீவப்பிராணிகளும் அதிர்ந்து நடுநடுங்கி, மரணத்தை யடைந்த பிரசைகளெல்லாருந் தங்கள் கல்லறைகளைவிட்டு உயிர்த்தெழுந்திருக்கிற நாள். என்றாத்துமமே இதைக் கெட்டியாய் நம்பிக்கொள்.

ரு.—அதேதெனன்றால், அந்தநாளையில் அவரவர்செய்த பாவபுண்ணிய மெல்லாம் எழுதியிருக்கப்பட்ட புஸ்தகந் திறக்கப்படுகிற நாள். ஆகையால் தீர்வை சொல்லுகிற சர்வேசுரனுடைய கேள்வி யுண்டாகப்படுகிற நாள்.

சு.—அந்தநாளி லிப்படிப்பட்ட நீதியுள்ள ஆண்டவர், தீர்வைசொல்லத் தக்கதாக மகா உந்நதமான பத்திராசனத்தி லெழுந்தருளி வருவதால் பிரசைகளுடைய மறைந்திருக்கப்பட்ட குற்றங்களெல்லாம் வெளியாக்கியபின் நல்லவர்களுக்கு நித்திய மோட்ச வெகுமானத்தைச் சந்தோஷமாகவும், பொல்லாதவர்களுக்கு நித்திய நரக ஆக்கினையைக் கரோமாகவும், வகையறுக்கப்படுகிற நாளாம்.

எ.—அந்நாளிற் புண்ணியவான்கள் முதலாய் நடுநடுக்கமுற்றிருக்கிற தென்றால் பாவியான எனக்குச் சுமுத்திரையான தீர்வை சொல்லும்பொழுது நானென்ன சொல்லப் போகிறேன்? அப்போதெனக்காக வேண்டிக்கொள்ளப் போகிறவர்களார்? நான் எவரடைக்கலத்தைப்பற்றி மன்றாடப் போகிறேன்.

அ.—திவ்விய பிரதாப மகிமையான பரலோக இராசாவே, கரையேறுவோர்கள் உமது மகா இரக்கத்தினாற் கரையேறுவார்களென்றால் மகா குற்றமும், பொல்லாப்பும் நிறைந் திருக்கப்பட்ட என்னை உம்முடைய இரக்கத்தினால் இரட்சித்தருளுஞ் சுவாமீ.

௯.—என் சேசுவே, தேவரீர் பரலோகத்தில் நின்றெழுந்தருளிவந்து மகா இளைப்போடே தேடப்பட்ட அடிமை நான் தானே.

௧௦.—அப்படிப்பட்ட எனக்காகத் தேவரீர் மகா கஸ்தி நிர்ப்பந்தங்களைக் கையேற்றதுமல்லாமல்சிலுவையில் அறையுண்டு என்னை இரட்சித்தீரென்பதினால் எனக்காகத் தேவரீர் பாடுபட்ட இத்தனைப் பலனும் நானிழந்து போகாதபடிக்கு அந்த நாளையில் என்னை நினைத்தருளுஞ் சுவாமீ.

௧௧.—அந்தநாளையில் நீதிக்குச் சமுத்திரையாகப் பாவிகள் மேற் பழிவாங்குகிற மெய்யான நீதியுள்ள நடுவனே, உம்மாலல்லாமல் வேறொருவராலும் எனக்குப் பாவப்பொறுத்தல் கிடையாதென்பதாலும் உமதுபேரில் நம்பிக்கை வைத்திருக்கிறேன் சுவாமீ.

௧௨.—தேவரீர் தீர்வைசொல்லுகிற நாள் வருமுன்னே குற்றவாளனாகிய அடியேன் இத்தனை மகா பாவதோஷங்களைக் கட்டிக்கொண்டிருப்பதினால் மிகவும் நடுநடுங்கியிருக்கிறேன். இதுவன்றியே அப்படிப்பட்ட குற்றத்தினால் என்முகம் மிகவும் வாடியிருப்பதல்லாமல் என்மனமுழுதும் விதனப்படுகின்றது. என் பாவங்களைப் பொறுத்தருளுஞ் சுவாமீ.

௧௩.—அதேனென்றால், தேவரீர் மரியமக்தலேனாள் என்பவளின் குற்றங்களைப் பொறுத்துக்கொண்டது மல்லாமல் உம்மைப் பார்த்து வேண்டிக்கொண்ட கள்ளனையும் உமது அடிமையாக்கிக் கொண்டீரென்கிறதினால் அப்படியே என் குற்றங்களையும் பொறுத்துக் கொள்ளுவீரென்று உம்மையே நம்பியிருக்கிறேன் சுவாமீ.

௧௪.—என்னுடைய வேண்டுதலானது தேவரீருடைய திருச்சமுகத்துக்குப் பாத்திரமல்லாததாயிருந்தாலுந் தேவரீருடைய திருக்கண்களானது மகா சாதாரண தயாப நிறைந்திருக்கிற நேத்திரங்களாயிருப்பதால் அப்படிப்பட்ட திருவிழிகளால் இரங்கி நித்திய நரக அக்கினியில் விழாதபடிக்கு என்னையிரட்சித்துக்கொள்ளுஞ் சுவாமீ.



௧௫.—அப்படியே அந்த நாளிற் பொல்லாதவர்களுடைய கூட்டத்தில் நின்றென்னை விலக்கி உமது வலது பாரிசத்தில் இருக்கப்பட்ட செம்மறி யாடுகளாகிய ஆசீர்வதிக்கப் பட்டவர்களின் கூட்டத்தில் என்னைச் சேர்த்துக்கொள்ளுஞ் சுவாமீ.

௧௬.—அந்த நாளில் நித்திய அக்கினிக்குக் குறிக்கப்படுகிற பொல்லாதவர்கள் தள்ளப்படுவதுபோல, நித்திய மோட்சத்திற்குரியவர்களாய் உம்மால் ஆசீர்வதிக்கப் படுகிறவர்களுடன் என்னையுங் கூட்டிக் கொண்டுபோகக் கிருபைசெய்யுஞ் சுவாமீ.

௧௭.—என்னிருதயமானது பச்சாத்தாபத்தால் வெந்து நீறாயிருக்கின்றது. ஆகையால் என்னாண்டவரே! அடியேனுக்குப் பாவப்பொறுத்தல் கட்டளையிட்டருளுஞ் சுவாமீ.

௧௮.—அந்தநாளொரு அற்பப் பாவத்துக்கு முதலாய் மிகுந்த வியாகுலப் பிரலாபத்துடனே கணக்குக் கொடுக்கவேண்டிய பயங்கரமுள்ள கொடிதான நாளாயிருக்கும். ஆகையால் என்பேரில் இரக்கமாயிருந்து, என் பாவங்களை எல்லாம் பொறுத்து, நான் நித்திய நரக அக்கினியில் அவியாத கட்டையாய் இராதபடிக்கு என்னை இரட்சித்துக் கொள்ளுஞ் சுவாமீ.

௧௯.—இதுவன்றியே இரக்கமுள்ள ஆண்டவராயிருக்கிற என் சேசுவே, நித்திய ஆறுதலைத் தந்தருளுஞ் சுவாமீ.—ஆமென் சேசு.

சர்வேசுரா சுவாமீ, உத்தரிக்கிற ஸ்தலத்திலே—மற்றதும்.

பா. பிரி. விசுவாசிகளுடைய—மற்றதும்.

அப்போஸ்தலான

## அர்ச். அருளப்பர் எழுதின சுவிசேஷம்.

அக்காலத்திலே சேசுக்கிறீஸ்து நாதர் யூதர்களுடைய கூட்டங்களுக்குத் திருவுளம் பற்றினதாவது: நானே பரமண்டலத்திலே நின்று இறங்கின ஜீவியமுள்ள அப்பமாயிருக்கிறேன். இந்த அப்பத்தில் யாதொருவன் புசிப்பானேயாகில் என்றென்றைக்கும் பிழைப்பான். மேலும் நான் கொடுக்கும் அப்பம்

பூலோக சீவியத்துக்காக என் மாமிஸமா யிருக்கிறதென்றார். அதைப்பற்றி யூதர்கள் ஒவ்வொருவரோடே வாக்குவாதஞ் செய்து இவர் தன் மாமிஸத்தைப் புசிக்க நமக்கு எப்படி கொடுக்கக் கூடுமென்றார்கள். ஆதலால் சேசுநாதர் அவர்களுக்குத் திருவுளம்பற்றின தாவது: நீங்கள் மனுமகனுடைய மாமிஸத்தைப் புசியாமலும் அவனுடைய இரத்தத்தைக் குடியாமலுமிருந்தால் உங்களிடத்தில் சீவியத்தை நீங்கள் கொண்டிருப்ப தில்லையென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் மாமிஸத்தையும் புசித்து என் இரத்தத்தையும் பானஞ் செய்கிறவனுக்கு நித்திய சீவியமுண்டு. பின்னும் நான் கடைசிநாளையிலே அவனை உயிர்ப்பிப்பே னென்றார்.

சர்வேசுரா சுவாமீ, உத்தரிக்கிற ஸ்தலத்திலே.—மற்றதும்.

பர-பிரி. விசுவாசிகளுடைய—மற்றதும்.

ஆண்டவரே, சேசுக்கிறீஸ்துநாதரே! பிரதாபமுள்ள இராசாவே! ஆக்கினைகளிலே நின்றும், உத்தரிக்கிற ஸ்தலத்திலே நின்றும் மரித்த சமஸ்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்களை மீட்டுக்கொள்ளும். தேவரீர் முற்காலத்தில் பிதாப் பிதாவாகிய ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததியாருக்குங் கொடுப்போமென்று வார்த்தைப் பாடு தந்த பேரின்ப பிரகாசத்துக்கு இந்த ஆத்துமாக்களை அதிதூதரான அர்ச். மிக்கயேல் சேர்ப்பிக்கச் செய்தருளுஞ் சுவாமீ.

நாங்கள் இத்தினத்தில் குறித்த ஆத்துமாக்களுக்கு எங்களுடைய செபங்களுந் துதிகளும் பலிகளும் பலிக்கச் செய்தருளும். இந்த ஆத்துமாக்கள் தேவரீர் பிதாப் பிதாவாகிய ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததியாருக்குங் கொடுப்போமென்று வார்த்தைப்பாடு தந்த நித்திய சீவியத்திற் பிரவேசிக்கப் பண்ணியருளுஞ் சுவாமீ.

சர்வேசுரா சுவாமீ, உத்தரிக்கிற ஸ்தலத்திலே.—மற்றதும்.

பர-பிரி. விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்—மற்றதும்.

பிரார்த்திக்கக் கடவோம்.

ஆண்டவரான சர்வேசுரா! ஸ்திரீ பூமான்களான உமது அடியோர்களுடைய ஆத்துமாக்களின்பேரில் உம்முடைய கிருபை



யை யேராளமாய்ப் பொழியப்பண்ணி அவர்கள் ஞானஸ்நானம் பெறும்படிக்குத் தேவரீர் திருவுளமானீ ரென்கிறதினாலே நித்திய பேரின்பத்தில் முடியாத சந்தோஷத்தையும் அவர்களுக்குத் தரவேணுமென்று உம்மை மன்றாடுகிறோஞ் சுவாமீ. மட்டற்ற கிருபையுடைத்தான சர்வேசுரா! எங்களுடைய தாழ்மையான மன்றாட்டுக்களைக் கிருபாகடாக்ஷமாய் ஏற்றுக்கொள்ளும். எங்களுடைய சகோதரர், சிநேகிதர், உறவின்முறையார், [illegible] பிரதாபமுள்ள உம்முடைய நாமதேயத்தை அறியவும் ஸ்துதிக்கவும் தேவரீர் செய்தாப்போலே இந்தத் திவ்விய பூசையின் பலனைக்கொண்டு அவர்கள் செய்த சகல பாவங்களுக்கும் மன்னிப்பைத் தரவேணுமென்று தேவரீரைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோஞ் சுவாமீ.

சர்வேசுரா சுவாமீ, எங்களுடைய தாய் தகப்பனுடைய ஆத்துமாக்களுக்காக நாங்கள் ஒப்புக்கொடுக்கிற இந்தத் திவ்விய பூசையைக் கிருபையாய் ஏற்றுக்கொள்ளும். அவர்கள் சீவியர்களுடைய இராச்சியத்தில் என்றென்றைக்கும் வாழவும் நாங்கள் அவர்களுடன் சகல மோட்சவாசிகளுடைய பாக்கியத்தை அடையவுஞ் செய்தருளுஞ் சுவாமீ.

சர்வேசுரா சுவாமீ, உத்தரிக்கிற ஸ்தலத்திலே.—மற்றதும்.

பர-பிரி. விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்.—மற்றதும்.

குரு பரிசுத்தர் என்கிற மந்திரஞ் சொன்னபிறகு.

மட்டற்ற மகிமைநிறைந்த பிதாவே! தேவரீருக்கு ஏகசுதனுமாய் எங்களாண்டவருமாயிருக்கிற சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப்பார்த்து நாங்கள் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிற இந்தத் திவ்விய பூசையைக் கிருபையா யேற்றுக்கொண்டு சத்திய சாதாரண திருச்சபையையும், அர்ச். பாப்பானவரையும், மேற்றிராணிமார்களையும், சகல விசுவாசிகளையும் ஆண்டவரித்துக் காத்தருள வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்.

பின்னையும் எங்கள் தந்தை, தாய், உறவின்முறையார், சிநேகிதர், உபகாரிகள், பகையாளிகளுக்கும் "விசேஷமாய் இன்னான் இன்னாளுக்கும்" வேண்டிய உதவி சகாயங்களைச் செய்தருளுஞ் சுவாமீ. நாங்கள் கேட்கிற மன்றாட்டு தேவரீருக்கு

அதிக பிரியமாகும்படிக்கு அர்ச். தேவமாதா, அப்போஸ்தலர் வேதசாட்சிகள் இவர்களுடைய மன்ருட்டுக்களுடனே எங்கள் மன்ருட்டுக்களையுங் கூட்டித் தேவரீருக்குக் காணிக்கையாக வைக்கிறோம்.

சர்வேசுரா சுவாமீ, உத்தரிக்கிற ஸ்தலத்திலே.—மற்றதும்.

பர. பிரி. விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்—மற்றதும்.

குரு; தேவநற்கருணை எழுந்தருளப் பண்ணும் போகிற போது.

ஆண்டவராயிருக்கிற சேசுக்கிறீஸ்துவே! பூலோக பாவங்களைப் போக்குகிறவரோ, எழுந்தருளிவாரும். உம்முடைய அற்புதங்களின் மேலான அற்புதமாகிய இந்தப் பரம விசுவாசத்தைக் குறைவேற்றவாரும். இதோ பூலோகத்தினுடைய பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய திவ்விய செம்மறிப் புருவையானவர் எழுந்தருளிவருகிருர். என்னை உண்டாக்கி இரட்சித்த கர்த்தர் உந்நத மோட்சத்தில் நின்று என்னைப்பற்றிப் பலியாய் இறங்கிவருகிருர். என்னுத்துமமே பத்தியோடே அவரை ஸ்துதித்து ஆராதிப்பாயாக.

அவதரித்த வார்த்தையே, திவ்விய சேசுவே, மெய்யான தேவனும் மெய்யான மனுஷனும் ஒன்ருனவரோ, தேவரீர் இந்தப்பீடத்தின்பேரில் மெய்யாகவே யெழுந்தருளி வந்திருக்கிறீரொன்று உறுதியாக விசுவசித்து மிகுந்த தாழ்ச்சியோடு வணங்கி ஆராதித்து முழுமனதோடு உம்மை அபேட்சித்து நேசிக்கிறேன். என்மேல்வைத்த அளவில்லாத அன்பினுல் தேவரீர் இந்தப் பீடத்தின்மீதே எழுந்தருளி வந்தமையால் என்னை முழுதும் உமக்குத் தேவவசீகரம் பண்ணுகிறேன்.

சர்வேசுரா சுவாமீ, உத்தரிக்கிற ஸ்தலத்திலே—மற்றதும்.

பர. பிரி. விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்.—மற்றதும்.

குருவானவர் மரித்தோர் ஆத்துமாக்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறபோது.

என்னுண்டவரே, திருச்சபையில் மரித்த சமஸ்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்களுக்கும் இந்தத்திவ்விய பூசையின் பலன் பங்குண்டா யிருக்கக்கடவது. விசேஷமாய் இந்தத் திவ்விய



பலியைப்பார்த்து "இன்னுன் இன்னுளுடைய" ஆத்துமாக்களின் வேதனையைநீக்கி அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியைத்தந்து பிரதாபமுள்ள உம்முடைய இராச்சியத்தில் அவர்களைப் பிரவேசிக்கப் பண்ணவேணுமென்று தேவரீரை மன்ருடுகிறோஞ்சுவாமீ.

அநந்த காருண்ணியரான பிதாவே! இனி ஒருநாள் எங்களுக்கும் இந்த உபகாரத்தைக் கட்டளையிட்டு நித்தியகாலம் நாங்கள் அப்போஸ்தலர், வேதசாட்சிகள், சகல அர்ச்சியசிஷ்டவர்களுடனே கூடத் தேவரீரைச் சிநேகித்து ஸ்துதித்துத் தோத்தரித்துக் கொண் டிருக்கும்படியாய் எங்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருளுஞ்சுவாமீ.

சர்வேசுரா சுவாமீ, உத்தரிக்கிற ஸ்தலத்திலே—மற்றதும்.

பர. பிரி. விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்.—மற்றதும்.

குரு, பரமண்டல மந்திரஞ் சொல்லுகிறபோது.

பரமண்டலங்களிலே இருக்கிற—மற்றதும்.

சர்வேசுரா சுவாமீ, உத்தரிக்கிற ஸ்தலத்திலே—மற்றதும்.

பர. பிரி. விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்.—மற்றதும்.

குரு, உலோகபாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையே என்கிற மந்திரஞ் சொல்லுகிற போது.

பூலோக பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையே, உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு இளைப்பாற்றியைத் தந்தருளும்.

பூலோக பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையே, உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு இளைப்பாற்றியைத் தந்தருளும்.

பூலோக பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையே, உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்தருளும்.

சர்வேசுரா சுவாமீ, உத்தரிக்கிற ஸ்தலத்திலே—மற்றதும்.

பர. பிரி. விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்.—மற்றதும்.

### குரு தேவநற்கருணை உட்கொள்ளும்போது.

ஆண்டவரே, நீர் என்வீட்டுக்குட் பிரவேசிக்க நான் பேறு பெற்றவனல்ல. நீர் ஒரு வார்த்தை மாத்திரமே திருவுளம் பற்றியருளும், அப்போது என்னாத்துமம் பாவ வியாதியிலே நின்று விடப்பட்டு ஆரோக்கியத்தை யடையும்.

ஆண்டவரே நீர் என் வீட்டுக்குட் பிரவேசிக்க நான் பேறு பெற்றவனல்ல. நீர் ஒருவார்த்தை மாத்திரமே திருவுளம் பற்றியருளும். அப்போது என்னாத்துமம் பாவ வியாதியிலேநின்று விடப்பட்டு ஆரோக்கியத்தை யடையும்.

ஆண்டவரே நீர் என் வீட்டுக்குட் பிரவேசிக்க நான் பேறு பெற்றவனல்ல நீர் ஒருவார்த்தை மாத்திரமே திருவுளம் பற்றியருளும். அப்போது என்னாத்துமம் பாவ வியாதியிலே நின்று விடப்பட்டு ஆரோக்கியத்தை யடையும்.

இரக்கச் சமுத்திரமான சேசுவே, [illegible]த்தியமாகத் தேவநற்கருணையி லிருக்கும் உமது திவ்விய சரீரத்தையும் உமது திவ்விய இரத்தத்தையும் பார்த்து உத்தரிக்கிற ஸ்தலத்திலே வேதனைப்படுகிற ஆத்துமாக்களுக்குப் பிரதாபமுள்ள உமது தரிசனத்தைக் கொடுக்க வேணுமென்று தேவரீரைப் பிராத்தித்துக் கொள்ளுகிறோம்.

சர்வேசுரா சுவாமீ, உத்தரிக்கிற ஸ்தலத்திலே—மற்றதும்.

பர. பிரி. விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்.—மற்றதும்.

### குரு, தேவநற்கருணை உட்கொண்ட பிற்பாடு.

சர்வேசுரா சுவாமீ, உமது மட்டில்லாத இரக்கத்தைப் பார்த்து உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு நித்திய பிரகாசம் மோட்ச ராச்சியத்தில் விளங்கச்செய்தருளும். உமது மட்டற்ற இரக்கத்தைப்பார்த்து அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியைத்தந்து நித்திய பிரகாசம் விளங்கச் செய்தருளும்.

### பிரார்த்திக்கக்கடவோம்.

ஆண்டவரான சுவாமீ, ஸ்திரீ பூமான்களான உமது அடியோர்களுடைய ஆத்துமாக்களுக்கு எங்களுடையமன்றாட்டுக்கள்பலிக்கச் செய்தருளும். இந்த ஆத்துமாக்கள் கட்டிக்கொண்ட எவ்



வித பாவங்களையும் நீக்கி உமது இரட்சிப்பின் பங்கடையக் கட்டளையிட்டருளும்.

சர்வவல்லபமுஞ் சர்வ கிருபையு முடைத்தான சர்வேசுரா, அடியோர்கள் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிற இந்தப் பலிகளும் ஸ்துதிகளுங் குறித்த எங்களுடைய பந்துக்கள், சகோதரர், உபகாரிகளுடைய ஆத்துமாக்களுக்கு உதவவும், இந்தத் திவ்விய பூசையின் பலனைப்பற்றி அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பை யடைந்து உமது கிருபையினால் நித்திய பிரகாசத்தைப் பெற்றுக்கொள்ளவுஞ் செய்யவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்.

சர்வேசுரா சுவாமீ, இந்தத் திவ்விய பூசையின் வல்லபத்தினால் எங்கள் [illegible]ய் தகப்பனுடைய ஆத்துமாக்களுக்கு நித்திய பிரகாசமும் குளிர்ந்த இளைப்பாற்றியுங் கட்டளையிட்டு நாங்கள் அவர்களுடன் பேரின்ப விசுவாசியத்தில் என்றென்றைக்கும் வாழக் கிருபைசெய்ய வேணுமென்று தேவரீரைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.

சர்வேசுரா சுவாமீ, உத்தரிக்கிற ஸ்தலத்திலே—மற்றதும்.

பர. பிரி. விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்.—மற்றதும்.

### பூசை முடியும்போது சொல்லத்தகும் சங்கீதம்.

சுவாமீ பாதாளத்தில் நின்று உம்மைநோக்கிக் கூப்பிடுகிறேன்; என் சத்தத்தைக் கேட்டருளுஞ் சுவாமீ.—எனது விண்ணப்பத்தின் பேரொலியை உமது செவிதந்து கேட்டருளும். ஆண்டவரே நீர் எங்கள் பாவங்களைப் பாராட்டுவீராகில் உமக்கு முன்பாக நிர்வாகஞ் செய்கிறவனார்?—ஏனெனில் தேவரீரிடத்தில் தயாளமான மன்னிப்பிருக்கிற படியாலும் உமது வேதமுறைமையைப் பற்றியுஞ் சுவாமீ, உம்மை நம்பிக் காத்திருக்கிறேன்.—என் ஆத்துமம் ஆண்டவருடைய திருவசனத்தின்மேல் ஊன்றிக் காத்திருக்கின்றது. என் ஆத்துமம் ஆண்டவரிடத்தில் நம்பிக்கைவைத்திருக்கிறது. உதய சாமக்காவல் நோக்கி யிராவுபரியந்தம் இஸ்ராயேல் சனம் ஆண்டவரை நம்பிக் [illegible]க்கக் கடவது, —ஏனென்றால் சுவாமி [illegible]யையுள்ளவர்; [illegible] இரட்சணியம் ஏராளமாய் இருக்கின்றது.—அ[illegible] சனத்தை அதின் சகல பாவங்களில் நின்று

சர்வேசுரா சுவாமீ, உத்தரிக்கிற ஸ்தலத்திலே—மற்றதும்.

ப்ர. பிரி. விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்.—மற்றதும்.

கடைசியிலே உத்தரிக்கிற ஆத்துமாக்களைக் குறித்து ௫-பரமண்டலமந்திரஞ் சொல்லவும்.

விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் சமாதானத்திலே இளைப்பாறக்கடவது.

---

## வியாகுலப் பூசைத் தியானம்.

### பூசை காண்கிறவர்களுக்கு விவேகம்.

¶இரக்கம் நிறைந்த கர்த்தரான சேசுக்கிறீஸ்து நமது பாவங்களினால் நமக்குவந்த கேடுகளுக்கு இரங்கித் தம்மைத்தாஞ் சிலுவையிலே பலியாக ஒப்புக்கொடுத்தாரே. அந்தப்பலியின் நினைப்பாகக் குரு பண்ணுகிற பூசைச் சடங்கெல்லாம் அவருடைய பீடைக் குறிப்பாயிருக்கிறதென் றறியக்கடவோம்.

¶ஆனதினால் அப்படிப்பட்ட வியாகுலங்களைத் தக்கபடி நினைக்கப் பத்தியுள்ள ஆத்துமாக்கள் அந்தச்சடங்குகளிலே குறிக்கப்பட்ட பாடுகளை முதற்றுவக்கிக் கடைசிமட்டும் ஒழுங்கொழுங்காய் நினைத்து அந்தச் சகல வியாகுலங்களையுந் துயரநிறைந்த மனதோடுங்கண்ணீரைவிடு மழுகைப் பிரலாபத்தோடுந் தியானிக்கக் கடவார்கள். அப்படியே யவைகளின் பலனடைவார்கள்.

¶முதலாவது பூசைபண்ணுகிற குருவானவர் அணிகிற வஸ்திராபரணங்கள் எதுக்கடையாளமா யிருக்கிறதென்றால்: யூதர்களாண்டவரை நிந்தைபடுத்தத்தக்கதாய் அவருக்குடுத்தின வஸ்திரங்களையுங் கட்டினகட்டுகளையுங் குறிக்கிற அடையாளமாமே. அவைகளை யவர் நல்ல மனதோடே ஏற்றுக்கொண்டாரென்று நினைப்போம்.

ஒவ்வொருவன் தனித்தனியே சற்றுநேரஞ் சொன்னவை நினைத் தியானிக்கிறது.

குருவானவர் பூசைபரிசாரகனோடு பீடத்தின்முன்னேவந்து பூசைச்செபந் துவக்குறபோது: ஆண்டவர் தம்முடைய சீஷர்களோடு கெத்செமனியென்ற தோப்பிற்போய்த் தியானத்திலி



ருந்து. தமக்கு வரப்போகிற கஸ்தி யுபத்திரவங்களையும் பாவிகளுடைய பாவ நிஷ்டூரங்களையும் நினைத்துச் சர்வாங்கமு மிரத்தவேர்வை வேர்த்து விழுந்தாரென்று நினைப்போம். அதினால் நாம் நம்முடைய பாவங்களுக்காக நமதிருதய மிளகுந்தனையுந் தக்க விதனப்பட்டுப் பிழைதட்டிக்கொண்டு பாவமெல்லாம் வெறுத்துச் சொல்லுவோம் என்பாவமே, என்பாவமே, என்பெரும்பாவமே.

முன்சொன்னதுபோலே தியானிக்கிறது.

குருவானவர் பீடத்தின்கிட்டப்போய் முத்திசெய்கிற போது: யூதாஸ் இஸ்காரியோத்தென்கிற துரோகியானசீஷன் ஆண்டவருடைய திருக்கன்னத்திலே முத்தியிட்டுக் காட்டிக்கொடுத்ததை நினைப்போம்.

முன்சொன்னதுபோலே தியானிக்கிறது.

குருவானவர் சற்றுநேரம் புஸ்தகம் வாசித்துச் சபையைத் திரும்பிப் பார்க்கிறபோது: ஆண்டவர் தம்மைப் பிடிக்கவந்த யூதர்களைப்பார்த்து ஆரைத்தேடி வந்தீர்கள், சேசுநசரேனுவைத் தேடி வந்தீர்களென்றால் அவர் நாம்தாமென்று தம்மை யொப்புக்கொடுத்ததை நினைப்போம்.

முன்சொன்னதுபோலே தியானிக்கிறது.

குரு மறுபடியும்புஸ்தகம் வாசிக்கிறபோது: யூதர் ஆண்டவரைச்சிறைப்படுத்திப் பிரதான ஆசாரியர் சபையிலே கூட்டிக்கொண்டுபோய்ப் பொய்யான குற்றங்களைச் சாட்டியிருந்ததையுந் திருக்கன்னத்திலே யடித்ததையும் நினைப்போம்.

முன்சொன்னதுபோலே தியானிக்கிறது.

குரு நடுவில்வந்து தலைகுனிந்து வேண்டிக் கொள்ளுகிறபோது: யூதர்ஆண்டவருடைய திருக்கண்களை மறைத்துத் திருச்சிரசிலடித்து ஆகடியம் பண்ணினதை நினைப்போம்.

முன்சொன்னதுபோலே தியானிக்கிறது.

பரிசாரகன் பூசைப்புஸ்தகத்தை மறுபுறத்துக்குக் கொண்டுபோகிறபோது: ஆண்டவர்பிரதானஆசாரியர் சபையிலே நின்று பிலாத்துவினைக்குக் கூட்டிக்கொண்டுபோகப்பட்டதை நினைப்போம்.

முன்சொன்னதுபோலே தியானிக்கிறது

சுவிசேஷம் வாசிக்கிறபோது: பிலாத்து கேட்ட வார்த்தைகளுக்கு ஆண்டவர் தம்முடைய தேவ இராசாங்க மகிமையைத் தெளிவித்து வசனித்த சத்தியங்களை நினைப்போம்.

முன்சொன்னதுபோலே தியானிக்கிறது.

குருவானவர் கிரேதோவென்னும் விசுவாச உச்சாரணம் பண்ணுகிறபோது: ஆண்டவர் வசனித்த வார்த்தைகளைப் பிலாத்து விசுவசித்து அவரை விட்டுவிட மனதுகொண்டதை நினைப்போம். விசுவாச மந்திரஞ் சொல்லவும்.

முன்சொன்னதுபோலே தியானிக்கிறது.

குருவானவர் பூசைப்பாத்திர மூடின பட்டையெடுத்துத் திறந்து வைக்கிறபோது: கொடியசேவகராண்டவருடைய திருச்சட்டைகளைக் கழற்றி யவரைக் கற்றூணிலேகட்டி வைத்ததை நினைப்போம்.

முன்சொன்னதுபோலே தியானிக்கிறது.

குருவானவர் கோதும்பை அப்பத்தையும் முந்திரிகை இரசத்தையும் ஒப்புக்கொடுக்கிறபோது: ஆண்டவர் தம்மைக்கட்டி யடிக்கப்பட்ட கசை யடிகளையுந் தமக்குண்டான மற்றச் சகல வாதைகளையும் நமது பாவங்களுக்காக ஒப்புக்கொடுத்தாரென்று நினைப்போம்.

முன்சொன்னதுபோலே தியானிக்கிறது.

குருவானவர் பாத்திரத்தின் மேல்மூடியைவைத்து மந்திரிக்கிறபோது: சேவகராண்டவருடைய திருத்தலையிலேமுண்முடிவைத்தடித்ததை நினைப்போம்.

முன்சொன்னதுபோலே தியானிக்கிறது.

குருவானவர் கைசுத்தி பண்ணுகிறபோது: பிலாத்து ஆண்டவரை வதைக்கிறதிலே தன்பேரிற் குற்றமில்லையென்று கை கழுவினதை நினைப்போம்.

முன்சொன்னதுபோலே தியானிக்கிறது.

குருவானவர் சபையினித் திரும்பிப்பார்த்து ஒறாத்தே யென்னும் வசனஞ் சொல்லுகிறபோது: பிலாத்து ஆண்டவர் பேரிலே இரக்கமாய்க் காயம்பட்டிருந்த அவருடைய சரீரத்தை யூதாளைப



யிலே காண்பித்து இதோமனிதனைப் பாருங்களென்று கூப்பிட்டுச் சொன்னதை நினைப்போம்.

முன்சொன்னதுபோலே தியானிக்கிறது.

சாந்துஸ் சாந்துஸென்கிறதற்கு மணிதட்டுகிறபோது: ஆண்டவரை வதைக்கத் தீர்வையான பிறகு பறைசாற்றப்படவே சேசுநாதர் தமது சிலுவையைக்கொண்டுபோனதை நினைப்போம்.

முன்சொன்னதுபோலே தியானிக்கிறது.

குருவானவர் கைகுவித்து மனதுக்குள்ளே தியானிக்கிறபோது: ஆண்டவர் தமது மாதாவைச்சந்தித்த விடத்திலே துக்கத்தினாலிருவரும் பேசமாட்டாமல் மனதிலே துயரம் நிறைந்து அழுததை நினைப்போம்.

முன்சொன்னதுபோலே தியானிக்கிறது.

குருவானவர் பாத்திரத்தின்மேலே இருகைகளையு முயர்த்தி வைக்கிறபோது: ஆண்டவர் சிலுவையோடு கபாலமலை யுச்சியிலே சென்றதை நினைப்போம்.

முன்சொன்னதுபோலே தியானிக்கிறது.

குருவானவர் குனிந்து அப்பமு மிரசமுந் தேவதேசிகரமாகப் பண்ணுகிறபோது: யூதர் சேவகர் ஆண்டவரைச் சிலுவையிலே கிடத்தித் திருக்கரங்களிலுந் திருப்பாதங்களிலும் ஆணியறைந்ததை நினைப்போம்.

முன்சொன்னதுபோலே தியானிக்கிறது.

குருவானவர் சற்பிரசாதமெழுந்தேற்றம் பண்ணுகிறபோது: சேவகர் ஆண்டவரைச் சிலுவையிலே உயர்த்தினதை நினைப்போம்.

முன்சொன்னதுபோலே தியானிக்கிறது.

தோத்திர மந்திரஞ் சொல்லுவோம்.

எங்களுக்காகக் கையளிக்கப்பட்ட தேவ சரீரமே. உமக்கே நமஸ்காரம்.

சிலுவையிலே பாடுபட்டு லோகத்தை யீடேற்றினவரே, உமக்குத் தோத்திரம்.

தேவதிரவிய பொக்கிஷமாகிய மகாபூச்சியமுள்ள சற்பிரசாதமே, உமக்கே ஆராதனை.

குருவானவர் பாத்திரத்தை எழுந்தேற்றம் பண்ணுகிற போது: ஆண்டவருடைய காயங்களாலே யிரத்தமுந் தண்ணீருஞ் சிந்தினதை நினைப்போம்.

தோத்திரஞ் சொல்லுவோம்.

பாவிகளுக்காகச் சிந்தப்பட்ட திவ்விய உதிரமே, உமது விலைமதியாத பேறுகளாலே எங்களை இரட்சித்துக் கொள்ளும்.

தேவவிலாவில் நின்று இரத்தத்தோடு சொரிந்த தண்ணீரே எங்களாத்துமங்களைக் கழுவும். சுகிர்தத்தை விளைவிக்கிற பிரசாத ஊருணியே, உமது பிரசாதங்களாலே எங்களாத்துமத்திலே சுகிர்ப்பலனை யுண்டாக்கிக் கொள்ளுவோம்.

முன்சொன்னதுபோலே தியானிக்கிறது.

குரு மறுபடியுங் கைகுவித்து மரித்தவர்களுக்காக வேண்டுதல் பண்ணுகிறபோது: ஆண்டவர் தம்மை வாதிக்கிற யூதர்களுடைய பாவத்தைப் பொறுக்கப் பிதாவை மன்றாடினதை நினைப்போம்.

முன்சொன்னதுபோலே தியானிக்கிறது.

குரு ஒருதரம் பிழைதட்டுகிறபோது: வலதுபக்கத்தி லிருந்த கள்ளன் தன் பாவத்துக்கு மனஸ்தாபப்பட்டுச் சேசுநாதரைப் பிரார்த்தித்ததினாலே யவனுக்கு மோட்சங் கொடுக்கஆண்டவர் திருவுளமானதை நினைப்போம்.

முன்சொன்னதுபோலே தியானிக்கிறது.

குருவானவர் பாத்திரத்தின்மேலே சற்பிரசாதங்கொண்டு மூன்றுமுறை சிலுவை வரைகிறபோது: ஆண்டவர் மூன்றாணிகளாற் சிலுவையிலே தொங்கி மூன்றுமணிநேரம் பிராணனுடனே யிருந்ததை நினைப்போம்.

முன்சொன்னதுபோலே தியானிக்கிறது.

குருவானவர் பரமண்டல மந்திரஞ் சொல்லுகிறபோது: ஆண்டவர் சிலுவையிலே யிருந்து ஏழுவாக்கியங்களைத் திருவுளம் பற்றினதை நினைப்போம்.

பரமண்டல மந்திரஞ் சொல்லவும்.



குருவானவர் சற்பிரசாதத்தை இரண்டாய்ப்பிரித்து அதிலொரு சிறு துண்டைப் பாத்திரத்திலே விழவிடுகிறபோது: ஆண்டவருடைய ஆத்துமஞ் சரீரத்தைவிட்டுப் பிரிந்து பாதாளங்களி லிறங்கினதையும் யூதர்களுடைய கோவிற் றிரைச்சீலை இரண்டாய்க் கிழிந்ததையும் நினைப்போம்.

முன்சொன்னதுபோலே தியானிக்கிறது.

குரு முட்டிட்டெழுந்து ஆகுனூஸ் தேயி என்று மூன்றுமுறை பிழைதட்டுகிறபோது: ஆண்டவர் மரித்தமாத்திரத்திற் பூமியதிர்ந்து கல்லறைகள் திறக்கப்பட்டு யூதர்களி லநேகம்பேர்கள் தங்கள் பாவங்களுக்கு மனஸ்தாபப்பட்டுப் பிழைதட்டிக் கொண்டதை நினைப்போம்.

முன்சொன்னதுபோலே தியானிக்கிறது.

குருவானவர் சற்பிரசாதம் உட்கொள்ளுகிறபோது: ஆண்டவருடையதிருச்சரீரம் அடக்கம் பண்ணப்பட்டதையும் அதைமூடின பரிவட்டத்தில் அவர்சாயல் சுரூபம் உருபிக்கப் பட்டதையும் நினைப்போம்.

முன்சொன்னதுபோலே தியானிக்கிறது.

குரு மறுபடியும் வலதுபக்கத்திற் புஸ்தகம் வாசிக்கிறபோது: பரிசுத்த தேவமாதா தம்முடைய குமாரன் மரணமடைந்ததினாலே துக்கசாகரத்திலே அமிழ்ந்தி யிருந்தாலும் மீளவும் உயிர்ப்பாரென்று நம்பிக்கையோடிருந்து பிரார்த்தித்துக் கொண்டதை நினைப்போம்.

முன்சொன்னதுபோலே தியானிக்கிறது.

குருவானவர் சனங்களைத் திரும்பிப்பார்த்து மினவுதல் பண்ணுகிறபோது: ஆண்டவருயிர்த்துத் தம்முடைய மாதாவை மினவிக்கொண்டதையும் அர்ச். மரியமதலேனம்மாளுக்கும் பத்தியுள்ள மற்றவர்களுக்குந் தரிசனையானதையும் நினைப்போம்.

முன்சொன்னதுபோலே தியானிக்கிறது.

குரு ஆசீர்வாதங் கொடுக்கிறபோது: ஆண்டவர் பரலோகத்துக் கெழுந்தருளிப்போகிற சமயத்தில் அவ்விடத்தி லிருந்த எல்லாருக்கும் ஆசீர்வாதங் கொடுத்ததை நினைப்போம்.

முன்சொன்னதுபோலே தியானிக்கிறது.

குருவானவர் பூசைமுடிந்து பீடத்திலிருந்து இறங்குகிற போது: மலையினின்று அவர் பரலோகத்துக்கு எழுந்தருளிப் போனதைப் பார்த்திருந்தவர்கள் அவ்விடத்தை விட்டிறங்கின தை நினைப்போம்.

முன் சொன்னதுபோலே தியானிக்கிறது.

கடைசியிலே பூசைப்பலனடையத்தக்கதாக அதில் நினைத்த ஆண்டவருடைய சகல வியாகுலங்களையும் அவருக்குத்தானே யொப்புக்கொடுத்து அவைகள் நமது ஆத்துமங்களில் உண்டான உருக்கமான பத்தி தேவசிநேகமுதலிய பற்றுதல் நிலைக்கவேணு மென்று பிரார்த்தித்துக் கொள்ளுவோம்.—ஆமென்சேசு.

## பாவசங்கீர்த்தன விளக்கம்.

பாவசங்கீர்த்தனம் பண்ணாத அசட்டையால் வருங்கேடுகள் எழு, அவையாவன:—ஆத்துமத்தில் இருள் உண்டாதல், ஞான அறிவின்மை உண்டாதல், பாவங்கள் அதிகப்படுதல், விலலங்க முண்டாதல், தெய்வத்தோடு பகைத்த லுண்டாதல், தந்திரத்தில் தோல்வி யுண்டாதல் இவைகளேயாம்.

பாவசங்கீர்த்தனம் பண்ணுவதால் வரும் நன்மைகளேழு; அவையாவன:—சுவாமிக்குப் புகழுண்டாதல், இருதய சமாதானமுண்டாதல், ஆத்துமத்திலொளியுண்டாதல், புண்ணியத்திலிழுப்புண்டாதல், தெய்வத்தோடு சிநேகமுண்டாதல், தந்திரத்தில் நடையுண்டாதல், மோட்சத்துக்குச் சகாயமுண்டாதல் இவைகளேயாம்.

¶ஞான சன்மத்தை எடுத்த மனிதனுக்கு ஞானமுறையாக வருகிற வியாதியானது பாவமென்று சொல்லத்தகும். அப்படிப்பட்ட வியாதியாகிற பாவத்திற்கு நிவாரணம் உண்டாகக் கர்த்தர் கற்பித்தருளின ஞானச்சிகிச்சையான பரம அவிழ்தம் பாவசங்கீர்த்தனமாகும். ¶இப்படிப்பட்ட பாவசங்கீர்த்தனத்திலே பச்சாத்தாபம் பிரதானமாய் வேண்டியிருக்கிறபடியால் பாவசங்கீர்த்தனத்திற்குப் பச்சாத்தாபம் என்கிற நாமமானது செல்லுமென்று அறிவாயாக. அவ்வண்ணமே கிரமத்தோடு பெறப்பட்ட ஞானஸ்நானத்



தின் நிமித்தமாக மனிதனானவன் ஞானமேனியாகச் சன்மித்துச் சன்மப்பாவ முதலான பாவங்களுடைய நிவாரணத்தை அடையுமாப்போல ஞானவிதமாய்ப் பிறந்த மனிதன் செய்த பாவமாகிற வியாதியில் நின்று பாவசங்கீர்த்தனம் என்கிற தேவதிரவிய அநுமானத்தினால் எழுந்திருக்கிறான்.

¶பாவசங்கீர்த்தனம் உண்டென்பதற்கும், கிறீஸ்துவேதச் சபையிலுள்ள குருக்களுக்குக் கட்டவும் அவிழ்க்கவும் பாவங்களைப் பொறுக்கவும் பொறுதிருக்கவும் சேசுநாதர் கட்டளையிட்ட முறையாய்த் தீர்வையிடும் வல்லமை உண்டென்பதற்கும் வேத உதாரணங்கள்: அர்ச். மத். சுவி. ௲-அதி. ௲-வச, அப்போஸ்தலர் நடபடியாகமம் ௧௯-அதி. ௧அ-வச, அர்ச். யாகப்பர் ௫-அதி. ௧௬-வச, அர்ச். மத். ௧அ-அதி. ௧அ-வச, அர்ச். அருளப்பர் ௨௦-அதி. ௨௨. ௨௩-வச, வேதவிளக்கம் ௧௩. ௧௩-ம் பிரிவில் ௬-வது பச்சாத்தாபத்தைக் காண்க.

¶அதின் அவசரத்தை முறையாய்க் காண்பிக்கிற உவமைகளாவன: முதலாம் உவமையாவது.—கப்பலில் ஊறுகின்ற தண்ணீரை அடிக்கடி இறையாவிட்டால் கப்பல் நிறைந்து அதிற் காப்பாற்றப்பட்ட பொருளும் அழிந்து கப்பலுஞ் சிதைந்து கடலில் அமிழ்ந்திப் படியப் பாயுமே, அப்படியே மெய், வாய், கண், மூக்கு, செவி என்கிற பொறிகள் வழியாலும், மனமுதலான கரணங்கள் மாறுபடும் நெறியாலும் வந்துசேருகிற பாவங்களை அடிக்கடி பாவ நிவாரணம் செய்யாவிட்டால் அடர்ந்து மிகுந்த பாவச்சலத்தின் அதிக பாரத்தால் ஆத்துமமாகிற அரும்பொருள் கெட்டு ஆத்துமத்திற்கு இடமாய் இருந்த அழகிய உடலும்பட்டு அகோரமான நரக அக்கினிக்கடலிலே அமிழ்ந்தி அலறி வருந்தலாகுமே. இதை அறிந்த எல்லோர் மனஊக்கமாகிய பாய்மரத்தை மகா உறுதியாக நாட்டித் தேவபத்தியும் பயமுமாகிய இரண்டு பாய்களையும் விரித்துக் கடவுள்தருந் தெளிந்த வரங்களாகிய காற்றுவீச நாள்தோறும் விடாத தியானமாகிய மீகாமனால் அக்கப்பலை நடத்திக்கொண்டு போகையில், ஊறுகின்ற தண்ணீரை ஒட்ட இறைத்துவிடுவதுபோல உற்றபாவங்களைப் பாபோச்சாரணத்தால் விமோசனஞ் செய்தால் நிறைந்த வினைகளாகிய பாவக்கடலைக் கடந்து, வானுலகாகிய மோட்சக்கரை சேர்ந்து நிறைந்த பேரின்பத்தில் வாழ்ந்திருப்பார்கள்.

¶இரண்டாம் உவமையாவது.—தனது தோட்டம், வயல், உத்தியானம், இவைகளை அடிக்கடி உழுது சுத்தமாக்கிப் பயிரிடாதிருந்தால் ஒழியாத களையும் ஊடுருவும் முள்ளுக்களும் அடர்ந்து உயிரைக்கொல்லும் விஷ சர்ப்பமுதலிய துஷ்டஜெந்துக்கள் ஒருங்குடன் மிகுந்து அக்கினிக்கே ஒழிய வேறொன்றுக்கும் உதவாமற் பலனெல்லாம் அற்றுப் பாழாய்ப்போகும்; அவ்வண்ணமாய் நிலமாகிற இருதயத்தைப் பாவசங்கீர்த்தனத்தால் உழுது பரிசுத்தமாக்காவிட்டால், நற்பயிராகிய சுகிர்தபலன் விளையாமல் புற்பயிராகிய துர்ப்பாவமே விளைந்து விஷசர்ப்பமாகிய வெறியலகை சேர்ந்து வேகும் நரகத்திற் போவதாயிருக்கும்.

¶மூன்றும் உவமையாவது.—தனது வயலுக்குத் தண்ணீர் வருகி[illegible]யமறித்தால் நிலம் உலர்ந்து வறண்டு ஒரு வித்தாகிலு முளைத்துப் பலன் தரமாட்டாதே, அப்படியே இஷ்டப்பிரசாத சலப்பிரவாகம் வரும்வழியாகிற பாபோச்சாரணமில்லாமற்போனால், இருதயமாகிய நிலங் காய்ந்து தருமப்பலன்கள் விளைவு அற்றுப் பலனில்லாமற் கெட்டுப்போகும்.

¶நான்காம் உவமையாவது.—தகப்பனுக்குத் துரோகஞ்செய்த பிள்ளை மறுபடியும் பொறுத்தல் அடைய வராமல் எத்தனை நாள் மறைந்து பயந்து விரோதமாய் இருப்பானோ அத்தனைக்கும் பிதாவின் கோபம் அதிகரிக்க ஓர் உரிமையுங் கொடாமல் தள்ளிவிடுவானே, அத்தன்மையே சடுதியாய்ப் பாவப்பொறுத்தல் அடையவராத பாவமுடையோன் சர்வேசுரனுடைய அதிக கோபத்துக்குப் பாத்திரமாகி அவருடைய இரக்கத்தையும் மோட்ச உரிமையையும் இழந்து போவதற்குச் சந்தேகமில்லை.

¶இப்படியே அநேககாலமாய் அசுத்தமான வஸ்திரத்தைச் சுத்திசெய்யவும், நெடுங்காலம் வளர்ந்த மரத்தின் வேரைப் பறித்துப் பிடுங்கவும், வெகு தண்டிப்பாவதுபோல, அநேககாலம் பாவநிவாரணஞ் செய்யாத மனிதருடைய பூ[illegible]து மாசற்றுத் தெளிவது அரிதாமென்று அறியவும்.

## சொற்பபாவங்களால் வருங்கேடுகள் காணப்படுவது.

¶முதலாவது.—தண்ணீர்க் குடத்திற்குச் சிறிய சில்லி உண்டானால் துளித்துளியாய் ஒழுகித் தண்ணீர் எல்லாம் போய் வெறுங்குடமாவதுபோல, நாளுக்குநாள் செய்கிற சொற்ப பாவங்



களால் மனதில் இருந்த தேவபத்தி குறைந்து வெறுமையாகித் தேவப்பிரசாதமென்கிற ஜீவியத்தைப் போக்கடிக்கிற பெரும்பாவங்களில் விழ இடமாயிருக்கும்.

¶இரண்டாவது.—உருப சவுந்தரியமான ஸ்திரீயின் முகத்திற் சிறிது புண், குஷ்டம், உண்டானால் எத்தனை அவலட்சணமாமோ, அலங்காரமான வஸ்திரத்திற் கொஞ்சம் அசுத்தம் பட்டால் எப்படி அசங்கிதமாய்ப் போமோ, அப்படியே சொற்ப பாவப் பழுதுகளால் ஆத்துமத்தின் சுகிர்த அலங்காரங் கெட்டு அது தேவசமுகத்திற்கு அருவருப்பாகும்.

¶மூன்றாவது.—எந்தெந்தச் சொற்பவியாதியும் அதிகரிக்க இடங்கொடாமல் அதற்கான அவுழ்தம் அருந்துவது போலவும், அழுக்கான ஆடைகளை வெளுப்பதுபோலவும் அனுதினம், அந்திசந்தி நீரால் முகம், கை, கால், கழுவிச் சுத்தஞ்செய்து அசுத்தம் நீங்கி இருப்பதுபோலவும், பாவப் பழுதுகளைப் பாபோச்சாரண மனஸ்தாபக் கண்ணீராற் கழுவிப் பரிசுத்தமாக்கித் தேவசமுகத்திற்குப் பிரியமாகக் கடவாய்.

## பாவசங்கீர்த்தனத்திற் கடுத்த ஐந்து காரியமாவது.

முதலாவது.—பாவசங்கீர்த்தனம் பண்ணுகிறதற்குச் சாதாரணமான காரியம் ஐந்து, அவையாவன: செய்த பாவங்களை நினைத்தல், அதற்காக மனஸ்தாபப்படுதல், இனிமேல் ஒருகாலும் இப்படிப்பட்ட பாவங்களைச் செய்வதில்லையென்று கெட்டியான மனதுடனே பிரதிக்கினை பண்ணுதல், ஒன்றுமொளியாமற் குருவுடனே சொல்லுதல், குரு கட்டளையிட்ட அபராதத்தைத் தீர்த்தல் என ஐந்தாம்.

இரண்டாவது.—நல்ல மனஸ்தாபத்துக்குரிய அடையாளங்கள் ஐந்து, அவையாவன: இருதயத்திற்பிறந்ததாயிருத்தல், சுபாவத்துக்கு மேற்பட்டதாயிருத்தல், சாதாரணமாயிருத்தல், தேவசிநேகங் கலந்திருத்தல், பாவத்தை வெறுத்ததாயிருத்தல் என ஐந்தாம்.

மூன்றாவது.—நல்ல பிரதிக்கினைக்குரிய அடையாளங்கள் ஐந்து, அவையாவன:-நடந்த வர்த்தமானங்களை யோசித்தல், பாவவிஷத்தின் அகோரத்தை யோசித்தல், பாவம் ஒழியத் தகுந்த

உபாயங்களை யோசித்தல், தன் துர்ப்பலத்தின் விரைவை யோசித்தல், சேசுநாதர் தேவமாதாவின் பேரில் உறுதியான நம்பிக்கை வைத்திருத்தல், என ஐந்தாம்.

நான்காவது.—பாவசங்கீர்த்தனத்துக்குரிய அடையாளங்கள் ஐந்து. அவையாவன: குடங் கவிழ்த்தாற்போல முழுமையாயிருத்தல், பாலர்களுடைய குணம்போலச் சாதுவா யிருத்தல், ஆழ்ந்த தாழ்ச்சியுள்ளதா யிருத்தல், கபடற்றதா யிருத்தல், குருக் கட்டளைக்கு அமைந்ததா யிருத்தல், என ஐந்தாம்.

ஐந்தாவது.—அபராதம் அல்லது பிராயச் சித்தத்துக் குரிய அடையாளங்கள் ஐந்து, அவையாவன: குரு கட்டளையிட்டதை நிறைவேற்றுதல், அடிக்கடி பூசைகாணுதல், பிச்சைகொடுத்தல், தனக்குநேரிடும் தின்மைகளைப் பொறுமையோடு சகித்தல், தான் விட்ட பாவங்களுக்கு விரோதமான புண்ணியங்களைச் செய்தல், என ஐந்தாம்.

¶பாவசங்கீர்த்தனம் அடிக்கடி செய்து எச்சரிக்கையோடு நடக்கிறவர்கள் ஆத்தும சோதனை செய்கிறதற்கு வெகுகாலம் செலவழிக்க வேண்டியதில்லை. போன பாவசங்கீர்த்தனத்திற்கு பிறகு எந்தெந்த இடங்களில் எந்தெந்த மனிதரோடு கூடி யிருந்தோமென்று நினைத்து அந்தந்தச் சமயத்திலே வந்த பாவங்களை எல்லாம், க-வது.—பத்துக் கற்பனைப் பிரகாரமாகவும், உ-வது.—திருச்சபைக் கற்பனைப் பிரகாரமாகவும், ங-வது.—தலையான பாவங்களின் பிரகாரமாகவும், ச-வது.—தங்கள் பாசங்கள் வழக்கமாயிழுக்கும் பாவங்கள் பிரகாரமாகவும், ரு-வது.—தாங்கள்செய்யவேண்டிய கடமைகளை விட்டுவிட்டுஞ் செய்யவேண்டிய நன்மைகளைக் குறைத்துங் கட்டிக் கொள்ளுகிற பாவங்கள் பிரகாரமாகவும், முந்தி யோசிக்கவேண்டியது. சிலபேர் தங்கள்பாவங்களை ஒவ்வொன்றாய் நினையாமல் ஒரு புத்தகத்திலெழுதியிருக்கிற ஆத்துமசோதனை ஒழுங்கை வாசித்தாலும், உபதேசிசொல்லுகிற ஆயத்தத்தைக் கேட்டாலும் போதுமென்று விசாரித்து, உடனே பாவசங்கீர்த்தனஞ்செய்யப் போவார்கள், இது மகா கெட்டவாடிக்கை. முன்னே தன் பாவங்களை யெல்லாம் நினைத்த பிற்பாடு அசந்து மறந்திருக்கிறதை நினைக்கத் தக்கதாக ஒருபுத்தகத்தில் எழுதி யிருக்கிற ஆத்துமசோதனை மற்றதையும், அதற்கு அடுத்த செபங்களையும் வாசிக்கவும்.



¶கடைசியாய்ப் பாவசங்கீர்த்தனத்திற்கு ஆயத்தஞ்செய்கிறதற்கு முன்னே தேவசந்நிதானத்தில் முழங் காலிலேயிருந்து திவ்விய இஸ்பிரீத்து சாந்துவை மன்றாடுகிற வகையாவது:—

திவ்விய இஸ்பிரீத்து சாந்துவே! தேவரீர் எழுந்தருளிவந்து உம்முடைய திவ்விய பிரகாசத்தின் கதிரை என் ஆத்துமத்திலே வரவிட்டு, அதினுடைய கண்களைத் திறந்து அந்தகாரத்தில் அமிழ்ந்திருக்கிற பாவங்களையும், அவைகளுடைய தின்மையையுங் கனத்தையுங் கண்டுகொண்டு, உமக்கு அந்தப் பாவங்கள் எத்தனை அருவருப்பாயிருக்கிறதென்று அறிந்து, அவைகளுக்காக மிகவும் வியாகுலத்துடனே மனஸ்தாபப்படவும், என் கண்ணீரால் அந்தப் பாவ அசுத்தங்களைக் கழுவவும் அநுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமீ.—ஆமென்சேசு.

அதன்பிறகு அர்ச். தேவமாதாவை வேண்டிக் கொள்ளுகிறது.

மிகவும் இரக்கமுள்ள கன்னிமரியாயே, ஆறுதல்தருந் தாயாரே! கஸ்தி வியாகுலப்படும்பொழுது உம்மையும் உமது திருக்குமாரனை சேசுவையும் நம்பி அடைக்கலமென்று வந்தவர்களில் ஒருவராகிலுந் தேற்றரவு அடையாமற் போனார்களென்று உலகத்திலே சொல்லக் கேள்விப்பட்டதில்லை என்கிறதினாலே, பாவியாயிருக்கிற நானும் வெகு நம்பிக்கையோடு உம்முடைய திருப்பாதத்தை அண்டி வருகிறேன். விரத்தர்களுக்குப் பிரிய தாயே! நான் முழுமனதோடும் அழுகையோடும் பெருமூச் செறிந்துகொண்டு உம்மை மன்றாடி உம்முடைய உபகார சகாயத்தைக் கேட்கிறேன். என் அழுகையைப் பார்க்கவும் என்வேண்டுதலைக் கேட்கவும் சித்தம் வைத்தருளும்.

அர்ச். மரியாயே! சர்வேசுரனுடைய மாதாவே! பாவியாயிருக்கிற நான் நல்ல ஆத்துமசோதனை செய்து, மெய்யான உத்தம மனஸ்தாபப்பட்டு, உறுதியான பிரதிக்கினைசெய்து, பாவப்பொறுத்தலையுந் தேவ இஷ்டப்பிரசாதத்தையும் அடைய எனக்காக உம்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ள உம்மை மன்றாடுகிறேன்.—ஆமென்சேசு.

[illegible] சம்மனசை மன்றாடுகிறது.

உத்தம மகிமையுள்ள அரூபியுமாய், என்னை ஆதரவுடன் காத்துக்கொண்டிருக்கிறவருமாயிருக்கிற சம்மனசானவரே! இந்தச்சமயத்திலே எனக்குச் சகாயமாய்வந்து, நான் உத்தமப்பிரகாரமாக ஆத்துமசோதனைசெய்ய எனக்கு உமது ஒத்தாசையைக் கட்டளையிட்டருளும்படி உம்மைப் பிரார்த்திக்கிறேன்.—ஆமென்சேசு.

---

## ஆத்தும சோதனை.

### பத்துக்கற்பனையின் ஒழுங்கு.

முதற் கற்பனை.—மனதுபொருந்தி விசுவாச சத்தியத்தில் சந்தேகப்பட்டதும், விசுவாச சத்தியத்திற்கு விரோதமான விசாரங்களைச் சோம்பலினாலே உடனே தள்ளாமல் இருந்ததும், வேதத்திற்கும் புண்ணியத்திற்கும் அடுத்த காரியங்களை அசட்டையினால் படியாமற் போனதும், ஒன்றில் அறிந்தாலும் அப்படி நடக்கவேண்டியிருக்கும் என்கிற திருட்டு நினைவினாலே படித்து அறியாமலிருந்ததும்; கோவிலிலே ஆசாரக்குறைவாய்இருந்ததும், பேசினதும், சிரித்ததும், தேவவூழியத்திற் கடுத்த காரியங்களைச் சங்கையீனமாகத் தொட்டதுஞ், சொன்னதும், அசட்டை செய்ததும், பிறகு பாவசங்கீர்த்தனஞ் செய்வேனென்கிற நினைவோடு பாவங்களைத் துணிந்து செய்ததும், சாவானபாவத்தைக் கட்டிக்கொண்டு தேவ இஷ்டப்பிரசாதத்தை இழந்திருக்கிறபொழுது பாவசங்கீர்த்தனஞ்செய்து தேவ இஷ்டப்பிரசாதத்தை மறுபடி அடையத் தாமதஞ்செய்ததும், சர்வேசுரனை நம்பாமல்தன் தாய் தகப்பன் சுற்றத்தார் மற்றவர்களை நம்பினதும், சர்வேசுரனுடைய தயையின்மேல் அவநம்பிக்கை வைத்ததும், சுவாமி தனக்குச்செய்த உபகாரங்களுக்கு நன்றியறிந்து அடிக்கடி தோத்திரஞ்செய்யாமல் இருந்ததும், சர்வேசுரனை, அடிக்கடி நினைத்து அவருடையதிருச்சமுகத்தில்இராமற்போனதும், அந்தந்தக்காரியங்களைச் சர்வேசுரனுடைய தோத்திரத்திற்காகச் செய்யாமல் மனிதருடைய முகப்பிரீதிக்காகவும் வெகுமானத்திற்காகவுஞ் செய்ததும், தான் செய்கிற காரியங்களைச் சுவாமிக்கு ஒப்புக்கொடாமற்போனதும், தான் எப்பொழுதும் வாடிக்கையாகச் செய்



கிற செபம், தியானம் இவை முதலான நற்கிருத்தியங்களைச் சோம்பலினால் விட்டுவிட்டதும், ஒன்றிற்குறைத்ததும், தன்னுடைய ஆத்தும ஈடேற்றக்காரியத்தை நன்றாய் நினையாமலும், பாவங்களைத்தள்ளி ஆத்துமத்தைச் சுத்தஞ் செய்யாமலுந்தாமசமாயிருந்ததும், சர்வேசுரன் கட்டளையிட்ட நல்லவிசாரங்களைக் கைக்கொண்டு பிரயோசனப்படாமல் அவைகளுக்கு விரோதஞ்செய்ததும், காலமே மிருகம்போலே விழித்துச் செபஞ்செய்யாமல் இருந்ததும், செபஞ்செய்தாலும் பத்திக்குறைவோடுமுயற்சியில்லாமல் தூங்கிவிழுந்துகொண்டு செபஞ்செய்ததும், இராத்திரி படுக்கிறதற்குமுன்னே சாவான பாவத்தோடு இருந்தாலும் உத்தமமனஸ்தாபப்படாமல் சும்மா படுத்துக்கொண்டதும், பகடிபேசுகிறபொழுது வேதவாக்கியங்களைக்கொண்டுபேசினதும், காற்று மழை உஷ்ணம் இவைமுதலானகாலவேற்றுமையின்மேல் முறையிட்டதும், இழவுமழை இழவுகாற்று என்று இவை முதலான வார்த்தைகளைச்சொன்னதும், முன்செய்த பாவங்களை நினைத்து மனதிலே சந்தோஷப்பட்டதும், அதைப்பெருமையாகப் பேசினதும், பாவத்திற்குமிகவும் ஏதுவான சமயத்திலே மனம்பொருந்தி உட்பட்டதும், மற்றவர்கள் புண்ணிய வழியிலே நடக்கிறதற்கு விக்கினஞ் செய்ததும், பத்தியோடு நடக்கிறவர்களைப் பரியாசஞ் செய்ததும், யாதொரு வார்த்தைப்பாடு பொருத்தனை சொல்லி அதைச் செலுத்தாததும், குறத்தி சாஸ்திரம், வள்ளுவ சாஸ்திரங் கேட்டதும்,கேட்டதை விசுவசித்துச்சந்தேகப்பட்டதும், கண்திருஷ்டிப்பட்டதென்றுஅதற்கு மந்திர தந்திரங்களைச் செய்துகொண்டதும், இப்படிப்பட்டவைகள் உண்டானால் எத்தனைத்தரமென்று நன்றாய் நினைத்துப்பார்த்துப் பாவசங்கீர்த்தனத்திலே வெளிப்படுத்துகிறது.

இரண்டாங்கற்பனை.—மெய்யான காரியத்திற்குஞ் சந்தேகமான காரியத்திற்குஞ் சர்வேசுரனைச் சாட்சிக்கழைத்ததும், சத்தியம் பண்ணினதும், மெய்யான காரியமாயிருந்தாலும் அற்ப காரியமாயிருந்ததற்குச் சத்தியஞ்செய்ததும் மனதில் ஒன்று வைத்துக்கொண்டு வாயில் ஒரு காரியத்தைச் செய்வேனென்று சத்தியஞ்செய்துகொடுத்தபிறகு பின் வாங்கி அதைச் செய்யாமற்போனதும், உன்னாணை என்னாணை கண்ணாணை யென்று சொன்னதும்,புறத்தியார் முறையற்ற விதமாய்ச் சத்தியஞ் செய்யக்

காரணமாயிருந்தது, புறத்தியார்செய்த வார்த்தைப் பாட்டைச் செலுத்தாதபடிக்கு விக்கினஞ் செய்ததும், தனக்குத்தானே சபம் போட்டுக்கொண்டதும், பாவை இட்டுக்கொண்டதும், புறத்தியாரைச் சபித்ததும், இன்ன நன்மையான காரியத்தைச் செய்யேன் இன்ன தீமையான காரியத்தைச் செய்வேனென்று பற்றுகூறினதும், இப்படி ஆணையிடுகிற பொல்லாத வாடிக்கையைத் தள்ளப் பிரயாசைபடாமற் போனதும், சர்வேசுரனுக்கும் அர்ச்சியசிஷ்டவர்களுக்கும் விரோதமாகத் தூஷணஞ் சொன்னதும், இப்படிப்பட்டவைகள் உண்டானால் எத்தனைத்தரமென்று நன்றாய் நினைத்துப் பார்த்துப் பாவசங்கீர்த்தனத்தில் வெளிப்படுத்துகிறது.

மூன்றாங்கற்பனை.—ஞாயிற்றுக்கிழமை கடன்திருநாளிலே முழுப்பூசை காணாமற்போனதுங் கண்டாலும் பராக்காய் ஒடுக்கம் வணக்கமின்றிப் பூசைகண்டதும், அந்த நாளை முழுதும்வீணாய் விளையாட்டிலுஞ் சாரியிலுஞ் செலவழித்ததும், அந்தநாளிலே உத்தாரமில்லாமல் விலக்கப்பட்ட வேலையைச் செய்ததும், செய்வித்ததும்பாவம். இவைகள்உண்டானால்எத்தனைத்தரமென்று நன்றாய் நினைத்துப்பார்த்துக் குருவுடனே பாவசங்கீர்த்தனத்தில்வெளிப்படுத்துகிறது.

நான்காங்கற்பனை.—தகப்பன், தாய் முதலானவர்களையும், குருக்கள்துரைகள் முதலானபெரியோர்களையும், அசட்டைசெய்து நிந்தித்துப் புறக்கணித்து அவர்கள்பேரில் அருவருப்பா யிருந்ததும், அவர்கள் வார்த்தையைக்கேட்டுஅவர்களுக்குக் கீழ்ப்படியாமல் இருந்ததும், அவர்களுக்குச் சங்கைசெய்யாமற் போனதும், பிதா மாதா வானவர்களுக்குச் செய்யவேண்டிய பணிவிடை ஊழியங்களைச் செய்யாமற்போனதும், அவர்களுக்கு அன்னவஸ்திரங் கொடுத்து விசாரியாமற் போனதும், அவர்களை அடித்ததும், அவர்கள் சாகவேணுமென்று மனதா யிருந்ததும் பாவம்; இவைகள் உண்டானால் எத்தனைவிசையென்று நன்றாய் நினைத்துப்பார்த்துப் பாவசங்கீர்த்தனத்தில் வெளிப்படுத்துகிறது.

ஐந்தாங்கற்பனை.—புறத்தியார்பேரில் பகை வர்மமாயிருந்ததும், அந்தப்பகை மனதில் எத்தனைநாள் எந்நேரம் நின்றதென்றுஞ் சொல்லுகிறது. சண்டைபோட்டதும், கோபமாய்ப் பேசினதும், வர்மத்தினால் பேசாமலுஞ் சங்கைசெய்யாமலும் இருந்த



தும், மனிதர்பேரில் வெறுப்பாய் இருந்ததும், அவர்களை மிகவும் நீசமாய்ப் பார்த்ததும், புறத்தியாருக்கு வந்த பொல்லாப்பைக்கண்டு சந்தோஷப்பட்டதும், அவர்களுக்குவந்த நன்மையைக்கண்டு கஸ்திப்பட்டதும், அவர்கள் பாவத்தில் விழக் காரணமாயிருந்ததும், அவர்களுக்குச் சாவு, கேடு வரவேணுமென்று ஆசைப்பட்டதும், பழிவாங்கினதும், பழிவாங்க மனதா யிருந்ததும், அடித்ததும், புறத்தியாருக்கு வருகிற பொல்லாப்பைத் தன்னாலே ஆனமட்டும் விலக்காமல் இருந்ததும், தாய் தகப்பன் தங்கள் பிள்ளைகளுக்கு மந்திர, உபதேசம் புண்ணியவழி கல்வி இவைமுதலானவைகளைப் படிப்பியாமற் போனதும், அவர்களுடைய துர்க்குணங்களை அடக்கிக் கண்டியாமற் போனதும், புறத்தியாருடைய குற்றங்களை அவரவர்களுடனே சொன்னதும், அவரவர்களுடைய இரகசியங்களை வெளிப்படுத்தினதும், கோள்குண்டணி பேசினதும், கேட்டதும், இவைகள், பெரியகாரியத்திலோ சின்னகாரியத்திலோ, இதனாலே புறத்தியாருக்கு மெத்த மோசம் வந்ததோ இல்லையோ, எத்தனைப்பேர் முன்பாக அப்படிப்பட்ட காரியங்களைப் பேசினதோ என்று நன்றாய் ஆராய்ந்து யோசித்து அவைகளை எத்தனை விசையென்று வெளிப்படுத்துகிறது.

ஆறாங்கற்பனை.—கற்புக்கு விரோதமான மோகபாவஞ் செய்ததும், செய்யக் கருத்தா யிருந்ததும், கற்புக்கு விரோதமான அங்கசேஷ்டைகளைத் தான் தனக்கும் பிறர்க்குஞ் செய்ததும், செய்வித்ததும், கண்ணினாலே கெட்டபார்வைகளைப் பார்த்துக் கெட்ட புஸ்தகங்களை வாசித்ததும், உதாசன வார்த்தைகளைப் பேசி, சிற்றின்பப்பாட்டு பாடினதும், கேட்டதும், வஸ்திர அலங்கோலையா யிருந்ததும், காமவிகாரத்தைப்பற்றித் தன்னை அலங்கரித்ததும், தூதுநடந்ததும், பேசினதும், பேசிவித்ததும், மோகவிகாரத்திற்கு அடுத்த மயக்கமான வஸ்துக்களைச் செய்ததும், தின்றதும், குடித்ததும், பாவஞ்செய்யத் தெரியாதவர்களுக்குச் செய்யப் படிப்பித்ததும், புறத்தியாரைப் பாவத்தில் விழக் கட்டாயஞ் செய்ததும், காரணமா யிருந்ததும், பாவத்திற்கு எதுவான இடங்களிற் போனதும் பாவம், இப்படிப்பட்ட பாவங்கள் உண்டானால் நன்றாய் நினைத்துப் பாவசங்கீர்த்தனத்தில் வெளிப்படுத்துகிறது.

ஏழாங்கற்பனை.—திருடினதும், திருட்டுடைமை வாங்கினதும் திருடச் சொன்னதும், உதவிசெய்ததும், கொள்ளல் விற்றலிலே அளவுநிறையிலே கூட்டாளிகளுக்கு வஞ்சனை துரோகஞ் செய்ததும், செல்லாப் பணங்களைச் செலுத்திக் கெட்டதை நல்லதென்று அடுத்தவனை மோசஞ்செய்ததும், திருடினதைத் உத்தரியாமற் போனதும், கண்டெடுத்த உடைமைகளை அதற்கு உடையவர்களை விசாரித்துக் கொடாமற்போனதும், உடன்படிக்கை தப்பினதும், ஊழியங்களிலே அசட்டைசெய்ததும், இவைகளெல்லாம் ஏத்தனைத் தரமென்றும், எவ்வளவென்றும், இவைகளாற் புறத்தியாருக்கு என்ன பொல்லாங்கு, எவ்வளவுஞ்சேதம் வந்ததென்றும் வகைகண்டு சொல்லவும்.

எட்டாங்கற்பனை.—பகடி பரியாசத்திற்கும் புறத்தியார் முகப்பிரீதிக்கும் பொய்சொன்னதும், ஒருவரை. மோசம் போக்கத்தக்கதாக அவர்கள் இடத்திலே இல்லாத நன்மைகளைச்சொல்லிப் பசப்பினதும், தான்செய்த குற்றத்தை மறைக்கப் பொய்சொன்னதும், புறத்தியார்பேரிலே அவதூறு சொன்னதும், அநியாயமாய்ப் புறத்தியாருடைய கருத்திற்குங் கிரியைக்கும் வார்த்தைக்கும் விரோதார்த்தஞ் செய்து விபரீதஞ் சொன்னதும் பாவம். இப்படிப்பட்டபாவங்கள் உண்டானால் எத்தனைத்தரமென்று நன்றாய் ஞாபகஞ்செய்து பாவசங்கீர்த்தனத்தில் விளக்கமாக்கவும்.

ஒன்பதாங்கற்பனை.—சர்வேசுரனுடைய சந்நிதியிலே வார்த்தைப்பாடுகொடுத்த தன் தாரந்தவிரப்பிறர்தாரத்தை அபேட்சித்துப் பாவப் பழக்கஞ் செய்ததும், பாவத்திற்கு அடுத்த வார்த்தை கிரியை நினைவு விசாரங்களுக்கு இடங்கொடுத்துச் சரச[illegible]ஞ்செய்ததும், பாவப்பழக்கமான யாதொருவர் உண்டோவென்றும் அப்படிப்பட்டவர்கள் கலியாணக்காரிகளோ கலியாணமில்லாதவர்களோ, கைம்பெண்சாதிகளோ, கிட்டின உறவோ, தூரத்து உறவோ, அந்நியரோ வென்று அவர்கள் அந்தஸ்துகளைச் சொல்லிக் காண்பிக்கவும்.

பத்தாங் கற்பனை.—புறத்தியார் உடைமையின்மேல் ஆசைவைத்ததும், புறத்தியாருக்குக் கொடுக்கவேண்டிய கடன்களைக் கொடுக்க அவகாசமிருந்துங் கொடாமல் அலைக்கழித்து மறுதலித்துப் புறத்தியார் பிழைப்பைக் கெடுத்துச் சேதம் வருத்தித் தா



னமாத்திரம் பிழைக்கப் பேராசைப்பட்டதும், அடைக்கலமாக வைத்ததை அபகரித்துக் கொண்டதும், சேவித்து வேலைசெய்கிறவர்களுக்கு உண்டான சம்பளங் கூலி கொடாமற் போனதும், ஏழை பரதேசிகள்உடைமைகளைக்கட்டாயமாய்ப் பறித்ததும், கபடு தந்திரஞ் செய்து கைப்பற்றினதும், கவனித்து எத்தனைத்தரமென்றும், புறத்தியாருக்கு எவ்வளவு நஷ்டம் என்ன பொல்லாப்பு வந்ததென்றும் வெளிப்படுத்தவும்.

## தலையான பாவங்களின் ஒழுங்கு.

முதலாவது அகந்தை.—தனக்குள்ள புத்தி கல்வி சரீர அலங்காரம் இவைகளைக் கண்டு மனதில் அகங்கரித்துச் சந்தோஷப்பட்டுத் தன்னைத்தானே பெரிதாயெண்ணித் தனக்குத் தோத்திரமுங் கீர்த்தியும் மகிமையும் வர அந்தந்தக் காரியங்களைச் செய்ததும், சொன்னதும், நன்றாய்நினைத்துச் சங்கீர்த்தனஞ்செய்கிறது.

“சாந்த மனமுந் தாழ்ச்சியும் உள்ளவராயிருக்கிறேன்” என்று சேசுநாதர் திருவுளம் பற்றினார்.—அர்ச். மத் ௧௧-அதி, ௨௯-ம் வசனம்.

௨-வது. கோபம்.—கோபங்கொண்டதும், மூர்க்கமாயிருந்ததும், கோபித்துச் சண்டையிட்டுச் சச்சரவுபட்டதும், ஆற்றாமற் சஞ்சல முற்றதும், கடின தண்டனை செய்ததும், உண்டானால் ஆராய்ந்து சொல்லவும்.

“நாம் உங்களை நேசித்ததுபோல நீங்களும் உங்களுக்குள் ஒருவர் ஒருவரைச் சிநேகியுங்கள்.”—அர்ச். அருளப்பர். ௧௩-ம். அதி. ௩௪-ம். வச, அர்ச். மத். ௧௧-ம். அதி. ௨௯-ம். வசனம்.

௩-வது.—மோகம்.—ஆத்துமசோதனை. ஆறுங்கற்பனை ௧௬௫-ம். பக்கங் காண்க.

௪-வது.—உலோபம்.—திரவியத்தின்மேல் மிகுந்த ஆசையினாலே அதைச் சம்பாதிக்க வெகு கருத்தாய் எந்நேரமும் அதுவே விசாரமாய் இருந்ததும், ஏழைபரதேசிகளுக்கு மனமிரங்கி ஈயாம லிருந்ததும், திரவியத்தின்மேல் இருந்த ஆசையினாலே அதைத் தன்சீவனைப்போலப் பார்த்ததும், சர்வேசுரனுக்கு ஏற்காத

காரியமாயிருக்கும். இந்தப்பாவங்களை யெல்லாம் நினைத்து, அவைகள் சுவாமிக்கு எத்தனைப் பொருந்தாததென்று விசாரித்து, இருதயத்திலே விதனமுந் துக்கமும் வருத்தி நன்றாய்ச் சோதித்துச் சொல்லவும்.

“உன்னைக் கைநெகிழவு மாட்டோம், விட்டுவிடவு மாட்டோம்” என்று ஆண்டவர் திருவுளம் பற்றினபடியால் உங்களுக்கு உள்ளதேபோதுமென்று [illegible] உலோபத்துவ மின்றி இருக்கக்கடவது.—அர்ச். சின்னப்பர் எபிரேயர் நிருபம் கங-ம். அதி. ரு-ம். வசனம்.

“நாம் இவ்வுலகத்தில் [illegible] கொண்டுவந்ததும் [illegible] சந்தேகமின்றி, யாதொன்றையுங் கொண்டுபோகக் கூடாது”—அர்ச். சின். திமோ. நிருபம் சு-ம் அதி. எ-ம் வசனம்.

“ஐயோ! ஐசுவரியவான்களே! நீங்கள் உங்கள் ஆறுதலை அடைந்து ஆயிற்று.”—அர்ச். லூக். சு-ம். அதி. உச-ம். வசனம்.

ரு-வது.—போசனப்பிரியம்.—போசனத்திலே மட்டுத் திட்டங்கடந்து ஆவலோடு புசித்ததும், கடனுருசந்திஇராமற்போனதும், வெள்ளி, சனி சுத்தபோசன நாட்களிலுந் தபசு நாட்களிலும் மாம்சஞ் சாப்பிட்டதும், புத்தி மயங்கச் சாராயங், கள், இவைமுதலான மயக்க வஸ்துக்களைச் சாப்பிட்டதும், இனி நரகத்திலே நித்தியதாகத்தைத் தணிக்கத்தக்கதாக ஒருதுளியுங்கிடையாமல் தவிப்பதற்கு ஏதுவாய் நேரந்தப்பினபொழுதும் பெருண்டியாய் உண்டுங் குடித்துஞ் சரீர இன்பத்திற்கு மாத்திரஞ் சாருவதாய் அடிமைப்பட்டுச் செபதப முதலான தேவவூழியங்களிற் சிரணித்துத் தீயமிருகம்போலே திரிந்ததும், செவ்வையாய்ச் சிந்தித்துச் சொல்லவும்.

“இலவுகீகப் பொருள்களை நாடித் திரிகிறவர்களுடைய முடிவு அழிவுமாய், அவர்களுடைய தெய்வம் வயிறுமாய், அவர்களுடைய மகிமை வெட்கக்கேடுமாய் இருக்கிறது.”—அர்ச். சின். பிலிப். நிருபம். ங-ம் அதி. கசு-ம் வசனம்.

சு-வது.—காய்மகாரம்.—பொறாமையாற் புறத்தியாருக்குவந்த வாழ்வைக்கண்டு வருந்தித் தாழ்வைக்கண்டு களித்துப் புறத்தியாரையும் அவர்கள்பொருளையும் நிந்தித்துப்பழுதுபேசினதும்



காய்மகாரத்தால் தனக்கு ஒருலாபம் இல்லாமற் போனாலும் தன் மனங் காய்ந்து கவலைப்பட்டதுங் கவனித்து உரைக்கவும்.

“காய்மகாரங்கள், கொலைகள், வெறிகள், பெருந் தீனிகள் முதலியவைகளை அநுசரிக்கிறவர்கள் சர்வேசுரனுடைய இராச்சியத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நாமுரைத்தபடியே யிப்பொழுது முங்களுக் குரைக்கிறோம்.”—கலாத்தியர் நிருபம் ரு-ம். அதி. உக-ம். வசனம்.

எ-வது.—சோம்பல்.—சீவியகாலம் [illegible] கொஞ்சமென்றும் அதில் அறியவேண்டிய நற்காரியங்கள் எத்தனை [illegible]மென்றும், நித்தியகாலமும் அநுபவிக்கப்போகிற முடியாத பாக்கியத்தை இகத்தில் இருக்கும் இந்தக் கொஞ்சகாலத்திலே சம்பாதித்துக்கொள்ளக் கூடுமானதாயிருக்கையில், ஒரு நிமிஷமாகிலும் வீண்பொழுது போக்கப்படாதென்று நினையாமல் இந்த அரியகாலத்தை விருதாவாய்ச் செலவழித்ததும், விசேஷமாய்த் தன்னுடைய அந்தஸ்திற்கு அடுத்ததொழில்களைச் சோம்பலினாலே செய்யாமற் காலத்தை விளையாட்டிலுந் தூக்கத்திலுஞ் செலவழித்ததும், உண்டோ இல்லையோவென்று ஆராய்ந்து பார்த்துவெளிப்படுத்துகிறது.

“கெட்டவனுஞ் சோம்பேறியுமான ஊழியக்காரா! நான் விதைக்காத இடத்தில் அறுக்கிறேன் என்றும், தெளிக்காத இடத்திற் சேர்க்கிறேன் என்றும், அறிந்திருக்கின்றாய்.”—அர்ச். மத். உரு-ம். அதி. உசு-ம். வசனம்.

“நற்கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிற் போடப்படும்.”—அர்ச். மத். எ-ம். அதி. கக-ம். வசனம்.

## பாவசங்கீர்த்தனம் பண்ணுகிறதற்குமுன் மனஸ்தாபப் பிரகரணம்.

ஆ! என் சர்வேசுரா சுவாமீ! உமது சமுகத்திலே இந்த முகத்தோடு வெட்கமில்லாமல் என்னென்று வருவேன்? எத்தனைவிசை இந்தப் பாவங்களைச் செய்யேனென்று பிரதிக்கினைச் செய்தேன். அற்ப முகாந்தரத்திற்காகவுங் கொஞ்ச நீசச்சுகத்திற்காகவும், இப்படி உமதுசமுகத்தில் கூச்சமில்லாமல் உமக்குப் பொருந்தாத இந்தப்பாவங்களைச் செய்கிறதோ? ஆ! என் திவ்வியபிதா

வே! என் திவ்விய கர்த்தரே! சகலபிதாக்களிலும் உத்தமபிதாவே! என்மேல் உமக்கு வந்த கோபத்தை அடக்கி, என் குற்றங்களை உமது திருக்காயங்களைப் பார்த்துப் பொறுத்துக்கொள்ளும். உம்முடைய நீதிப்பிரகாரம் என்னைத் தண்டியாதேயும் சுவாமீ. இந்தப் பாவங்கள் முகாந்திரமாக மட்டில்லாத சிநேகத்திற்குப் பாத்திரமாயிருக்கிற தேவரீருக்கு நான் குறை வருத்தினேனென்கிறதினாலே மிகவும் மனஸ்தாபமடைகிறேன். மெய்யாகவே மனஸ்தாபமாய் இருக்கிறேன். முழுமனதோடு மனஸ்தாபமாய் இருக்கிறேன். ஆகையால் சுவாமீ என்மேல் இரக்கமாயிரும்.

தயாபரராயிருக்கிற ஆண்டவரே, நான் செய்த பாவங்களையும், பிறத்தியாரால் செய்வித்தவைகளையும் பொறுத்துக்கொள்ளும். நான்செய்யவேண்டியதருமங்களைச் செய்யாமற்போனதையும் தாறுமாறாய்ச் செய்ததையும், பொறுத்தருளும். இந்தத் துரோக பாவங்களை எல்லாஞ் செய்ததினாலே மிகவும் விதனப்பட்டு அறியாமற் செய்தேன் என்றுசொல்லி அந்தப் பாவங்களுக்கெல்லாம் உத்தரிப்பாகவும், தேவரீருடைய தேவநீதிக்குப் பரிகாரமாகவும் என்னுடைய இரத்தமெல்லாஞ் சிந்தவும், உயிரை முதலாய்ச் செலவழிக்கவும் மனதாயிருக்கிறேன்.

ஐயோ என் ஆத்துமமே! நாம்செய்த இந்தப்பாவங்களுக்குச் சரியான மனஸ்தாபப்பட்டால் அல்லோதாவிளை. என் திவ்விய இரட்சகரே, என் மதுரசேசுவே, தேவரீர் பூங்காவனத்தில் எங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்படும்பொழுது உம்முடைய திரு இருதயத்தை முழுகடித்த துக்கசாகரத்தில்ஒருதுளி என்னுடைய இருதயத்திலேவிழச்செய்தருளும். அந்தத் துக்க மிகுதியினாலே உயிரைவிடவும் ஒன்றில் மரணபரியந்தம் இடைவிடாமல் அழுதுகொண்டு நாள்விடவும் மனதாயிருக்கிறேன் சுவாமீ.

## தன் பாவங்களைச் சர்வேசுரனோடு சங்கீர்த்தனஞ் செய்யும் பிரகரணம்.

ஐயோ! சுவாமீ, உமது திருச்சமுகத்தில்எனதுபாவதோஷங்களை மறைத்து ஒளிக்க வழிகாணேன். நீர் என்னிடத்தில்மிகவும் இரகசியமாயிருக்கிற பாவங்களையும், அவைகளுடைய தீமைகளையுந் தெளிவாய் அறிவீர். உம்முடைய மட்டில்லாதஞானத்திற்கு மறைவாயிருக்கிற காரியம் ஒன்றுமில்லையே, அப்படியிருந்தா



லும் அடியேன்தானே என்னுடைய பாவங்களை உமது சமுகத்திலே சங்கீர்த்தனஞ் செய்யவேண்டுமென்று திருவுளமாயிருக்கிறீரோ, அடியேன் உம்முடைய திருவுளப்படி எனக்கு நான்தானே விரோதியாயிருந்து, என்மேல் நானே மிகுந்த துக்கத்துடனே வியாகுலப்பட்டுமுறையிடத் துணிகிறேன் சுவாமீ. என் கர்த்தரே! அடியேன் உமக்குமாத்திரமே துரோகஞ்செய்தேன்; உமது சந்நிதியிலேதானே பாவதோஷங்களைக் கட்டிக்கொண்டேன், உம்முடையகண்கள் அதற்குச் சாட்சியாயிருந்தது. ஆ! என் திவ்விய பிதாவே! அடியேன் உமக்கு அருவருப்பாயிருக்கிற இந்தப் பாவங்களைச் செய்தபிறகு இன்னமும் உம்மை என் பிதாவென்று சொல்ல எப்படி மனந்துணிவேன்? ஐயோ சர்வேசுரா! இந்தப் பாவதோஷங்களினாலே உம்மை நிந்தித்து அசட்டைசெய்து, உம்மைவிட்டுப் பிரிந்து, உமக்குச்சத்துருவானபின்பு இன்னமும் உமது பிள்ளையென்கிற மகிமையான பேரைக்கொண்டிருக்க நான் பாத்திரமுள்ளவனோ? இன்னம் உமக்கும் எனக்கும் அப்படிப்பட்ட முறை நடக்கவேண்டுமென்று தேவரீரைக் கேட்க எனக்கு நாவுமுண்டோ? ஆகையால் சுவாமீ! அடியேன் இப்போது தேவரீரைக் கேட்கிற உபகாரம் என்னவென்றால்: உம்முடைய அரமனை வாசலிலே சேவித்து நிற்கும் ஊழியக்காரர்களில் ஒருவனாக அடியேனும் இருக்கத் தயைசெய்யும். இம்மாத்திரந் தயைபுரிந்தீரானால் அதுவேபோதும்; அதுவே எனக்குச் சம்பத்து; அதுவே எனக்கு ஆநந்தம்; அதுவேஎனக்கு மோட்ச பாக்கியம்.—ஆமென்சேசு.

## சுவாமியினுடைய திருநீதிக்கு மனதிலே பயம் வருத்தி மனஸ்தாபப்படும் பிரகரணம்.

ஆ! என் ஆத்துமமே, நித்திய சீவியமான சர்வேசுரனிடத்திலே ஆக்கினைப்பட அகப்படுகிறது எத்தனை அகோரம்! சுவாமீ தேவரீர் பாவாத்துமாக்களைத் தண்டிக்கிறபொழுது விளங்குகிற கோபாக்கினையின் அகோரத்தை நாவினாலே சொல்லுகிறவர்களார்? நடுக்கமுந் துணுக்கமும் இல்லாமல் நினைக்கிறவர்களார்? ஆகையால் சுவாமீ! தேவரீர் கோபத்துடனே எனக்குத் தீர்வையிடாதேயும், தேவரீர்பாவாத்துமாக்களுக்குச் செய்கிற பாரபத்தியத்தின் அநுக்கிரகத்தையும், என் பாவத்தின் அவலட்சணத்தை

யுங் கொடுமையையும் நினைக்கும்பொழுது எனக்குவருகிற பயத்தினால் என்னுடைய இருதயங்கலங்கிப்போகிறது, என்புத்திமயங்கிப்போகிறது; என் சரீரம் நடுநடுங்கி மயிர்க்கூர்ச்செறிகிறது சுவாமீ! தேவரீர் என் கண்களைத்திறந்து உமதுநீதியின் உக்கிரத்தைக்காண்பித்தபிறகு, என்பாவங்கள் இடைவிடாமல் என் கண்முன்பாக நிற்கிறது, அவைகளுடைய தீமைகளையும் அவலட்சணசுருபத்தையும் உற்றுப்பார்த்து, முன் அவைகளின்மேல் எத்தனைப் பிரிய சந்தோஷப்பட்டேனோ அத்தனைக்கும் இப்பொழுது துக்கப்பட்டு அதுகளை வெறுக்கிறேன்.

அன்ன பிரியகர்த்தரோ, நித்தியகாலமும் உம்மைவிட்டு எப்படிப் பிரிந்திருக்கிறது? சபிக்கப்பட்டவனே! நம்மைவிட்டுநித்திய அக்கினியிற் போவென்று கோடையிடிக்குச் சமானமாக உம்முடைய திருவாயில் நின்று புறப்படுந் தீர்வை வாக்கியத்தைஎன்னென்று கேட்பேன்! ஆர் இதற்குத் துணிந்து செவிகொடுக்கிறவர்கள்? தேவரீர் அடியேனை உம்முடைய நீதிப்பிரகாரத்திற்குத் தீர்வையிடாதேயும், உமது மட்டில்லாத தயையைப்பாரும். அதுஎனக்காக மனுப்பேசுகிறதைக் கேட்டு, உமக்குஎன்மேல் வந்த கோபத்தை அமர்த்தியருளும்.

¶ சர்வேசுரனுடைய ஆக்கினைக்கு மாத்திரம் பயந்து மனஸ்தாபப் படுகிறது போதாமல், அவரைச்சிநேகிக்க அநேக முகாந்தரங்கள் உண்டாயிருந்துஞ் சிநேகியாமற் பாவஞ் செய்தபடியினாலே மனஸ்தாபப்பட வருந்தவேண்டும்.

## பாவத்துக்காக மனஸ்தாபப்படும் பிரகரணம்.

என் சர்வேசுரா சுவாமீ, பாவவழியில் நடந்த அநேகம்பேர்கள் தங்கள்பாவங்களை விட்டுத் தவஞ்செய்தபொழுது அவர்களிடத்தில் நீர் விளங்கச்செய்த உம்முடைய தயாபத்தையும் இரக்கத்தையும் நினைத்துக்கொண்டு, அவர்களைப்போல மிகுந்த தாழ்ச்சி விநயத்துடன் உமதருகில் வருகிற அடியேனைப் புறக்கணித்துத் தள்ளாதேயும். உம்முடைய கிருபாகடாட்சத்தினால் துக்க வியாகுலத்தில் அமிழ்ந்தி யிருக்கிற என்னைப் பார்த்து என்மேல் இரக்கமாயிரும்; என் பாவங்களைப் பொறுத்தருளும. ஆ! சுவாமீ, இந்தமட்டுந் தேவரீர் மட்டில்லாத பொறுமையுடனே எனக்கு ஆக்கினையிடாமல் எனது தாறுமாறான நடக்கையைப் பார்த்துக்



கொண்டிருந்தீரோ, அந்தப் பொறுமையான தயாளத்தைக் கண்டாகிலும் நான் என்பாவங்களை அருவருக்கவும், இத்தனைத் தயாபரராயிருக்கிற தேவரீரை மிகுந்த பட்சத்துடனே சிநேகிக்கவும் நியாயமுண்டு. தேவரீர் இத்தனைக்கிருபையுள்ளவருமாய் மட்டில்லாத நன்மைத் தனமுள்ளவருமாய் இருக்க உமக்குத் துரோகஞ் செய்ததைக்கண்டு மிகவும் மனஸ்தாபமாய் இருக்கிறேன். சுவாமீ, அடியேன் உமது மட்டில்லாத தயையைத் தாவரமாக வேண்டிக்கொண்டு என் பாவங்களைவிட்டுத் தவஞ்செய்யாமற்போனால், என் தலைமேல் உமது கோபாக்கினியின் அகோர இடியை விழச்செய்யத் திருவுளமாயிருக்கிறீரென்று கண்டு அப்படிப்பட்ட உக்கிரமான கோபத்திற்குப் பயந்திருக்கிறேன் என்றாலும், இதிலும் மட்டில்லாத நன்மைத்தனமாயிருக்கிற தேவரீரை என்பாவத்தினால் இழந்துபோகிறேனென்கிறதினால் அதிகமாகப் பயப்படுகிறேன். என்மேல் இத்தனை உருக்கமான பட்சமாயிருக்கிற தேவரீருக்குத் துரோகஞ் செய்தேனென்று நினைக்கும்பொழுது என்னுடைய இருதயங் கஸ்தி வியாகுலத்தினால் மெழுகுபோலஉருகிக் கரைந்துபோகிறது. ஆ! சுவாமீ, இத்தனைத் தாழ்ச்சி விநயத்துடனே பாவதோஷங்களுக்காக மனஸ்தாபப்பட்டு உம்மை மிகவுஞ் சிநேகிக்கிற என்பேரில் இரக்கமாயிரும். உமது திருக்கடைக் கண்ணால் என் எளிமையைப் பார்த்தருளும். ஆ! என் சர்வேசுரா சுவாமீ, அடியேன் இந்தமட்டும் உமது இஷ்டப்பிரசாதத்தை இழந்திருக்கிற ஆத்துமத்தினுடைய நிர்ப்பாக்கியம் இன்னதென்று கண்டுபிடித்ததில்லை. ஆனால் சுவாமீ! இப்பொழுது உமது அநுக்கிரகத்தினாலே அது எவ்வளவு கேடென்று அறிந்து, அதை மிகவும் அருவருத்து, மறுபடியும் உமது திவ்விய இஷ்டப்பிரசாதத்தை அடையவேண்டுமென்கிறதினால், இதோ உமது ஆஸ்தான சந்நிதியை அண்டி வருகிறேன். மட்டில்லாத கருணைக்கடலாயிருக்கிற தேவரீர் எனது எளிமையையும் விதனத்தையுங் கண்டு என்னைப் புறக்கணித்துத் தள்ளாமல், எனக்குத் தயைபுரிவீரென்று முழு மனதோடு நம்பியிருக்கிறேன் சுவாமீ.

¶ உன்னுடைய பாவதோஷங்களுக்குச் சரியான மனஸ்தாபம் வரவில்லை என்று கண்டால், அப்படிப்பட்ட மனஸ்தாபம் வரவேண்டுமென்று மிகவும் ஆசைபடவேண்டும்.

## நல்ல மனஸ்தாபம்வர ஆசைப்படும் பிரகரணம்.

மட்டில்லாத நேசத்திற்குப் பாத்திரமாயிருக்கிற பரம கர்த்தரே, அடியேன் உமக்கு விரோதமாகச் செய்த தோஷ துரோகங்களுக்காக மரியமதலேனம்மாளைப்போலே மிகுந்த மனஸ்தாபப்பட ஆசையாயிருக்கிறேன். எனது இருகண்களிலேநின்று இரண்டுநதிபோலக் கண்ணீர் புறப்பட்டு ஓடவும், எனது இருதயத்தில் இருந்து பெருமூச்சு இடைவிடாமற் புறப்படவும் ஆசைப்படுகிறேன். ஆனால்; ஐயோ! அப்படிப்பட்ட மனஸ்தாபத்திற்கும் எனக்கும் வெகுதூரம். என் கர்த்தரே சுவாமீ! தாவீது என்கிறவர் முன்னால் தான்செய்த பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, என் சர்வேசுரா உமக்கு நான் துரோகஞ் செய்த நாள் முதற்கொண்டு அந்தத் துரோகங்களுக்காகப் பிரலாபித்து அழுகிறதே வேலையாயிருக்கிறேன், ஓர் இராத்திரி தப்பாமல் எனது நன்றிகெட்ட தன்மையை நினைக்கிறதினால் என் கண்களிலே நின்று கண்ணீர் வெள்ளம்போலப் பெருகி ஓடுகிறது; சற்றிளைப்பாற வேண்டுமென்று படுத்தெழுந்து பார்க்கும்பொழுது என் படுக்கையெல்லாம் என் கண்ணீரால் நனைந்து கிடக்கிறதென்று சொன்ன தன்மையாய்ச் சொல்ல மனதாயிருக்கிறேன் சுவாமீ.

¶பாவங்களை இனிமேல் செய்வதில்லையென்று உறுதியான மனது வைத்து, அந்தப் பாவங்களுக்கு ஏதுவாயிருக்கிற சமயங்களையும்இடங்களையும் முழுதும்விட்டுப், பாவங்கள் மேலுள்ள மனப்பற்றுதலை அறுத்துவிடாமற் போனால், அந்த மனஸ்தாபம் மெய்யான மனஸ்தாபமல்ல, ஆகையால் உறுதியான பிரதிக்கினை செய்யக்கடவாய்.

## பிரதிக்கினைப் பிரகரணம்.

என் சர்வேசுரா சுவாமீ, இனிமேல் உமக்குப் பொருந்தாத ஒருபாவத்தைக் கட்டிக் கொள்ளுகிறதிலும் படாதபாடுபட்டுப் பதினாயிரந்தரஞ் சாகத் துணிந்திருக்கிறேன் என்று, பரலோகமும், பூலோகமுஞ் சாட்சியாயிருக்க மனதோடும்; வாக்கோடும் உறுதியான பிரதிக்கினை செய்கிறேன் சுவாமீ. விசேஷமாய்இன்னின்ன பாவத்திற்கு ஏதுவான சமயத்திலும் இடத்திலும் உட்படுவதில்லை. இனி என்மேல் நானே கண்ணாயிருந்து வருகிற பொல்லாத விசாரங்களையும் இச்சைகளையுஞ் சுறுசுறுப்புடனே



தள்ளிப்போடுவேன். என் குருவானவர் எனக்குச் சொல்லுகிற நல்ல புத்திகளைத் தேவரீர் தாமே சொல்லுகிறதென்று விசாரித்து மிகுந்த பிரமாணிக்கத்துடனே அதின்படியே நடப்பேன். மனிதனைக் கெடுக்கத் திரிகிற துர்ச்சனப் பசாசே! அப்புறம்போ. இந்தமட்டும் உனது துர்ப்புத்தியைக்கேட்டு உன் தந்திரத்தில் அகப்பட்டுக் கெட்டாப்போலே இன்னமும் அகப்பட்டுக் கெடுவேனென்று எண்ணாதே, எனது ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துவினுடைய சகாயத்தினாலே உன் தந்திர மாயவலையில் அகப்படுவதில்லை. ஆ! என் ஆத்துமமே! துணிந்திரு; இனி ஒருபொழுதும் இன்னின்ன பாவங்களைச் செய்யத்தக்கதில்லையென்று உன்னன்புக்குரிய விரட்சகருக்குப் பிரமாணிக்கஞ் செய்யக்கடவாய். சுவாமீ! உம்முடைய திவ்விய அநுக்கிரகத்தை எனக்குக் கட்டளையிடும். உமது சந்நிதியிலே செய்த இந்தப் பிரதிக்கினைகளை உறுதியாகச் செலுத்தத் தயை செய்தருளுஞ் சுவாமீ.

---

## பாவ உச்சாரணத்தின் அநுசுத்தி.

¶மெய்யான பாவ உச்சாரணஞ் செய்யத்தக்கதாகத் தாழ்ச்சி அழுகை; நிர்வஞ்சகம், சுலபம் விளக்கமென்கிற இவ்வைந்து இலட்சணத்தோடு பாவங்களை உச்சரிக்கவேண்டும்.

முதலாம் இலட்சணம்.—தாழ்ச்சியோடே உச்சரிக்கிறதெப்படியென்றால்: மனதிற் பேசுகையில் இருக்கையில் உடுப்பினையில் அகந்தை காண்பியாமற் குற்றவாளி நடுக்காரன் முன்பாகப் பயந்திருக்கிறதுபோல மனதிற் பயங்கரம் உண்டாய்த் தலைகுனிந்து கைகுவித்துக் குரு பாதவடியிலே இருகால் முட்டிட்டுச் சாய்ந்திராமற் பயபத்தியோடு பாவங்களைச் சொல்லவும். ஸ்திரீகளானால் அதிக மரியாதையோடு தலைகுனிந்து தலைமூடிக்கொண்டு உச்சரிக்கவும்.

இரண்டாம் இலட்சணம்.—அழுகையோடு உச்சரிக்கிறவகையேதென்றால்: நகைமுகமின்றித் தன்னுடைய பாவத்தின் நினைவால் மனதிற் சலிப்புற்றுக் கண்ணீர் ததும்பி மரியமதலேனம்மாள் ஆண்டவர் திருப்பாதத்தில் அழுதிருந்த பிரகாரந் துக்கித்த சத்தமாய்ப் பாவங்களைச் சொல்லவும்.

மூன்றாம் இலட்சணம்:—நிர்வஞ்சகம் ஏதென்றால்: பயத்தினாலும் வெட்கத்தினாலும் யாதொரு பாவஞ் சொல்லாமலும் பெரியகுற்றத்தைச் சின்னதாக்கித் தன்குற்றங் குறைக்க மற்றவர்களுடைய குற்றங்களையும் போக்குஞ்சொல்லாமலுந், தன்மேலேதானே குற்றமெல்லாஞ் சாட்டி மனதில் ஒன்றும் வையாமல் தண்ணீர்க்குடங் கவிழ்ந்ததுபோல நினைவில் இருக்கிறதெல்லாஞ் சொல்லவும், இப்படிச் செய்யாமல் யாதொன்றை ஒளித்தால் சொன்ன பாவங்களில் ஒன்றுக்கும் பொறுத்தல் இராது.

நான்காம் இலட்சணம்:—சுலபமாய் உச்சரிக்கிறது எப்படியென்றால்: பாவத்தின் கனந் தெரியவேண்டிய வார்த்தைகளை மாத்திரஞ் சொல்லுகிறதல்லாமல், முன்பின் நடந்த வீண்வார்த்தைகளைச் சொல்லாமலும், பாவத்தோடு கூடினவர்களுடைய பேர் ஊர் தன்னுடைய எய்ப்புஇளைப்பு எளிமை முதலானவைகளைச் சொல்லாமலும் ப[illegible]த்திற்கு அடுத்ததை மாத்திரஞ் சுருக்கமாய்ச் சொல்லவும்.

ஐந்தாம் இலட்சணம்.—விளக்கமாய் உச்சரிக்கிறது எப்படியென்றால்: விளங்காத வார்த்தையாகச் சொல்லாமலும், யாதொரு பாவந் தொகுக்காமலும், கண்ணால் காதால் வாயால் செய்ததெல்லாம் பாவமென்றும், இப்படிப்பட்ட பொதுத் தொகையான வார்த்தைகளைச் சொல்லாமலும் நியாயமாய் இன்னபாவம் இத்தனைமுறை செய்தேன் என்றுசொல்லி, அதின் விசேஷ வகைகளுங் கனமுந் தெரியத்தக்கதாக வெளியாக்கவேண்டும். இவ்வைந்து இலட்சணத்தோடு செய்கிற பாவவிமோசனஞ் சர்வேசுரனுக்கு வெகு பிரியமும் நமக்கு மிகுந்த பலனுமாம் என்றறியவும்.

### பாவசங்கீர்த்தனஞ் செய்யத் துவக்குகிறவகை.

¶குருவானவர் முன்பாக ஒருபக்கத்திலே முழந்தாளிலிருந்து சிலுவை வரைந்து "சுவாமீ பாவியாயிருக்கிறவென்னை ஆசீர்வதித்தருளும்" என்று அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றபின் சாதாரண பாவசங்கீர்த்தன மந்திரம் துவக்கி "என்பாவமே, என்பாவமே, என்பெரும்பாவமே" என்கிற வார்த்தைமட்டுஞ் சொல்லி நிறுத்திப் பாவங்களைச் சொல்லத் துவக்கவும்.

¶முதலாவது.—"பாவசங்கீர்த்தனஞ் செய்து இத்தனைநாள் ஆனதென்றும், குருவானவர் கற்பித்த "அபராதந் தீர்த்ததுந்



தீர்க்காததுஞ்" சொல்லி, ௨-வது.—பத்துக்கற்பனைப்பிரகாரமாகவும், திருச்சபைக் கற்பனைப் பிரகாரமாகவும், தலையான பாவங்களின் பிரகாரமாகவும், செய்யவேண்டிய புண்ணியங்களைக் குறைத்ததைக்குறித்தும், தன் கடமைகளைச் செய்யாமல் விட்டுவிட்டதைக்குறித்தும், புத்தி, மனது, நினைவென்கிற உள்ளிந்திரியங்களினாலேயும், மெய், வாய், கண், மூக்கு, செவி முதலான கருமேந்திரியங்களினாலேயும், வாக்குக் கிரியையினாலேயுங் கட்டிக்கொண்ட பாவங்களையெல்லாம் ஒழுங்காய்ச்சொல்லி இந்தப் பாவங்களோடு நினைவில்லாத பாவங்கள் யாவையுஞ் சொல்லுகிறேன். அவைகளாற் சர்வேசுரனுக்குச்செய்த துரோகங்களுக்காக மெத்த விசனப்பட்டு இனிமேற் செய்யாதபடிக்கு உறுதியான மனதாயிருக்கிறேன். ஆசீர்வாதமும் அபராதமும் தாருமென்று மன்றாடி முன்னிறுத்திவைத்த பாவசங்கீர்த்தனமந்திரத்தின்மற்றக் குறையையும் முடிவிற்சொல்லவும்.

¶அடிக்கடி பாவசங்கீர்த்தனஞ் செய்துவரும் வழக்கமுள்ளவர்கள் தங்களிடத்தில் இந்தப் பாவசங்கீர்த்தனத்தில் வெளிப்படுத்த சாவானபாவமில்லையேயென்று கலங்காமல், தாங்கள் முன் பாவசங்கீர்த்தனத்திற் சொன்ன அப்படிப்பட்ட பாவங்களையே மறுபடியும் மிகுந்த உத்தம மனஸ்தாபத்தோடு சொல்வதே முறை.

### பாவசங்கீர்த்தனஞ் செய்தபின் சந்தோஷப் பிரகரணம்.

என்னுடைய ஆத்துமமே! நாம் சந்தோஷமாயிருக்கக் கடவோம். இந்தமட்டுஞ் சாவான பாவத்தினாலே பசாசுக் கடிமையாயிருந்த நாம் இப்பொழுது சுவாமி அதைப்பொறுத்ததினாலே அந்த அடிமைத்தனம் நீங்கிச் சர்வேசுரனுடைய பிள்ளையானோம். ஆ! சுவாமீ, ஒருக்ஷணத்தில் என்னிடத்தில் எத்தனைமாற்றம் உண்டாயிற்று! உமக்குச் சத்துருவாயிருந்த நான் உமக்குப் பிரியமானவனானேன்; நரகத்திற்குப் பாத்திரமாயிருந்த நான் மோட்சத்திற்குச் சுதந்தரவாளனானேன்; பசாசுக்கு அடிமையாயிருந்த நான் உமக்கும் பிரிய குமாரனானேன். ஆ! என் சர்வேசுரா, தேவரீர் மகாநல்லவர், என் கேடுகளைத் தீர்த்து இத்தனைநன்மை அடைகிறதற்கு எளிதான உபாயங் கட்டளையிட்டீரே, நீர் மட்டில்லாத தயாளமுள்ளவர், தேவரீர் எனக்கு இந்தத் தயைசெய்யாமல் பாவத்திற்

ருத் தக்க ஆக்கினையிட்டீராகில் இந்நேரம் நரகபாதாளத்திற் கிட
ந்து வேகுவேனே சுவாமீ.

சுவாமீ உமக்கு நித்திய தோத்திரமும் புகழ்ச்சியும் உண்டா
கக்கடவது. சகல படைப்பான வஸ்துக்களே! ஆண்டவரைத்
தோத்திரஞ்செய்யுங்கள். என் ஆத்துமமே, உன் பூர்வ தோஷங்க
ளைப் பொறுத்து உன்வியாதியைக் குணமாக்கி உனக்குவந்த கே
ட்டை நீக்கி உன்னை இரட்சித்த ஆண்டவருக்கு நன்றியறிந்திரு.
அவருடைய திருநாமத்தை என்றென்றைக்கும் வாழ்த்திப் புகழ்
ந்து ஸ்துதிக்கக் கடவாய்.

¶ பிற்பாடு நீ மறுபடியும் பாவத்தில் விழாதபடிக்குச் சர்வே
சுரனுடைய அநுக்கிரகத்தைக் கேள், தேவமாதாவையுங் காவலா
ன சம்மனசுவையும் உனக்குச் சகாயமாயிருக்க வேண்டிக்கொள்.

---

## தேவநற்கருணை வாங்க ஆயத்தம்.

நீ நன்மை வாங்குகிறதற்குமுன் ஆத்துமஒறுத்தல் சரீரஒறு
த்தல்செய்து, யோக்கியமாகச் சுவாமியை உட்கொள்ளும்படிக்கு
அவர் தாமே உன் இருதயத்தைச் சுத்தஞ்செய்து தேவப்பிரசாத
ங்களினால் உன் ஆத்துமத்தை அலங்கரிக்கவேண்டுமென்று மன்
றாடு. தேவமாதாவையும், காவலான சம்மனசுவையும், உனக்குப்
பத்திக்காரணமா யிருக்கிற அர்ச்சியசிஷ்டவர்களையும் வேண்டிக்
கொள். அந்த அர்ச்சியசிஷ்டவர்கள் தேவநற்கருணை வாங்குகிற
பொழுது அவர்களுக்குண்டா யிருந்த பத்தி உனக்கும் எவ்வள
வாகிலும் வர வுதவிசெய்ய வேண்டுமென்று மன்றாடு. அந்த நினை
வோடு நித்திரைசெய்து விழித்தவுடனே உன்னிடத்திற் சேசுநா
தசுவாமி எழுந்தருளிவரப்போகிறா ரென்றும், அதனால் உனக்கு
எத்தனைப் பாக்கியமும் நன்மையும் வருகிறதென்றும் நினைத்து
அந்த நினைவோடு கோவிலுக்கு ஒடுக்க வணக்கத்துடன் சென்று
விசுவாச ஆராதனை, இவைமுதலானபிரகரணங்களை மனதோடும்
வாக்கோடுஞ் செய்வாயாக.

பின்பு நன்மைவாங்குந் தருணத்தில் நீயெழுந்திருந்து கிரா
திக்குச் சமீபத்தில் ஒடுக்க வணக்கத்துடனேபோய், முழங்காலி
லேயிருந்து பூசைக்கு உதவிசெய்யும் பிள்ளைகளோடு நீயும் "பாவ



சங்கீர்த்தன மந்திரத்தைச் சொல்லி" சுவாமி உன் பாவங்களைப்
பொறுக்க வேண்டுமென்று அவரைமன்றாடி குருவானவர் திரும்
பி யுனக்குப் பாவப் பொறுத்தல் ஆசீர்வாதங் கொடுக்கும்போது
நீ மிகுந்த ஆசைப் பற்றுதலோடும் வணக்கத்தோடும் தலைகுனிந்
து அதைப் பெற்றுக்கொண்டு, குரு மறுபடியும் தேவநற்கருணை
யிலொன்றைத் தம்முடைய கையிலெடுத்துக்கொண்டு இந்த மந்
திரத்தை மூன்றுவிசை சொல்லும்போது நீயும் சுவாமி உனக்கா
கப் பட்டபாடுகளைத் தியானித்துக் கொண்டு பத்தியோடு "இ
தோ உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய
செம்மறி யாட்டின் குட்டி, ஆண்டவரே அடியேன் குச்சுக்குள்
ளே தேவரீர் எழுந்தருளிவர நான் பேறுபெற்றவன் அல்ல, தே
வரீர் ஒருவார்த்தை மாத்திரந் திருவுளம்பற்ற என் ஆத்துமம் வி
யாதியில் நின்று விடப்பட்டு ஆரோக்கிய மடையும்" என்று அவ
ரோடு நீயும் மூன்றுவிசைசொல்லி, வெகு வணக்கத்தோடும்
நேசத்தோடுஞ் சற்பிரசாதத்தை உட்கொண்டு, வெகு
மரியாதையோடுந் தாழ்ச்சி பயபத்தியோடும் அவருக்கு
நன்றி யறிந்த தோத்திரஞ் செய்து, முன்னிருந்த இடத்துக்கு
த் திரும்பித் தாழ்ச்சி பயம் நம்பிக்கைமுதலிய பிரகரணங்களைச்
செய்யக்கடவாய். அந்தநாளில் மற்றை நாளைப்பார்க்கிலும் அதிக
ஒடுக்க வணக்கமாயிருந்து ஞான புஸ்தகங்களை வாசித்துச்
சாயங்காலம் கோவிலுக்குப்போய்த் தேவநற்கருணையைச் சந்தித்
து வணங்கித் தாழ்ச்சிநேசம் ஆசை முதலான பிரகரணங்களைச்
செய்யக்கடவாய்.

## தேவநற்கருணையை உட்கொள்ளுமுன் விசுவாசப் பிரகரணம்.

என் ஆண்டவராயிருக்கிற சேசுக்கிறீஸ்துவே! அடியேன்
தேவநற்கருணையை உட்கொள்ளும்பொழுது தேவரீர் திரு ஆத்
துமத்தோடுந் தேவ சுபாவத்தோடும், அர்ச். கன்னிமரியாயி திரு
வுதரத்தில் எடுத்த திருச் சரீரத்தோடும் எழுந்தருளி என்னிடத்
தில் வருகிறீரென்று உறுதியாய் விசுவசிக்கிறேன். சுவாமீ, இ
து சத்தியமான காரியமென்று ஒப்புவிக்கிறதற்கு என்னுடைய
இரத்தமெல்லாஞ் சிந்தி உமக்காகச் சீவனை இழக்கவேண்டி யிருந்
தாலும் நல்ல மனதோடிழக்கத் துணிகிறேன், எனது விசுவாச
த்தை இன்னம், உறுதிப்படுத்தியருளுஞ் சுவாமீ.

¶இப்படிவிசுவாசத்தினாலே தேவநற்கருணையிற் கொண்டசுவாமியை வணங்குகிறதற்குச் சகல அர்ச்சியசிஷ்டவர்களையுஞ் சம்மனசுக்களையுங் கூவி அழைத்து அவர்களோடேகூட மிகுந்த தாழ்ச்சி விநயத்துடனே ஆராதனைசெய்வாயாக.

ஆராதனைப் பிரகரணம்.

என்னைப்படைத்து இரட்சித்து அநுசரணைஞ்செய்துவருகிற என் ஆண்டவரே! நித்திய பரமகடவுளான கர்த்தாவே! உமது திருச்சமுகத்தில் என்னுடைய புத்தி மனதை மிகவுந் தாழ்த்தி மகா தாழ்ச்சி விநயத்துடனே உம்மைவணங்குகிறேன்; தேவரீர்மாத்திரமே சகல தோத்திரங்களுக்கும் ஆராதனைக்கும் பாத்திரமா யிருக்கிறீர்.

¶சுவாமி எத்தனை மகிமையுள்ளவரென்றும், நீ எத்தனை நீசவஸ்துவென்றுஞ் சற்று நினைத்துத் தாழ்ச்சியாயிருக்கிறது.

தாழ்ச்சிப் பிரகரணம்

ஆ! சுவாமீ, தேவரீரார்? நானார்? தேவரீரிடத்தில் அற்பமிதிலும் பழுதில்லை, நான் மட்டில்லாத பழுதுள்ளவன்; தேவரீர் என்னைப் படைத்தவர், நான் உம்மால் படைக்கப்பட்டவன்; தேவரீர் மட்டில்லாத மகிமையுள்ளவராகையால், உமது சமுகத்தில் பத்திராசனரென்கிற சம்மனசுக்கள் முதலாய் நடுநடுங்குகிறார்கள், நான் நிலத்தின் ஊத்தைக்குள் உதிக்கிற புழுவுக்குச் சமானமா யிருக்கிறவன்; தேவரீர் மட்டில்லாத பரிசுத்தர், நான் அவலட்சண பாவச்சேற்றிலே புரண்டு அசுத்த நாற்றமா யிருக்கிறவன்; இப்படிப்பட்ட நானோ தேவரீரை உட்கொள்ளுகிறது? இத்தனை நீசனாயிருக்கிற என்னிடத்தில் எழுந்தருளிவர எப்படி மனந்துணிந்தீர்? அற்பப் புழுவுக்குச் சமானமாயிருக்கிற என்னிடத்தில்என்ன நன்மை கண்டீர்? ஆ, சுவாமீ! மெய்யாகவே தேவரீர் என்னிடத்தில் எழுந்தருளிவர நான் பேறுபெற்றவனல்ல, தேவரீர் ஒரு வார்த்தை மாத்திரந் திருவுளம் பற்றினீரானால் என் ஆத்துமம் வியாதியினின்றுவிடப்பட்டு ஆரோக்கியத்தையடையும்; என் ஆத்துமமே, உன் கர்த்தருடைய மகிமையையும் உனது நீசத்தனத்தையுங் கண்டு அவருடைய சமுகத்தில் வெட்கி நாணக்கடவாய்.



பயமும் நம்பிக்கையுமுள்ள பிரகரணம்.

சுவாமீ, அடியேன் உமது பரிசுத்த தன்மையையும், மகிமைப் பிரதாபத்தையும், என்னுடைய பாவங்களையும், கொஞ்சத்தன்மையையும், நினைக்கும்பொழுது உம்மைத் தேவநற்கருணை வழியாக உட்கொள்ளப் பயப்படுகிறேன். பின்னை ஒருபக்கத்தில் உம்மை உட்கொள்ளாமற் போனால் எனக்குநித்தியசீவியமில்லாமல் உமது கோபத்துக்கு உள்ளாவேனென்று நினைத்து நடுநடுங்குகிறேன். இனிநான்போம்வழி என்ன சுவாமீ? அடியேன் எத்தனை அபாத்திரமானவனாய் இருந்தாலும், உமதுகிருபையை நம்பி நீர் கட்டளையிட்டபடி உம்மை உட்கொள்ளத் துணிகிறேன். தேவரீர் தாமே எனது ஆத்துமத்தை உமது பிரசாதங்களினால் அலங்கரித்து, உமக்கு யோக்கியமான இருப்பிடமா யிருக்கத் தயைசெய்தருளுஞ் சுவாமீ.

¶இப்பொழுது சேசுநாதர் உன்னிடத்தில் எழுந்தருளிவரப்போகிறாரென்று நினைத்துச் சந்தோஷப்படுகிறது.

சந்தோஷப் பிரகரணம்.

என்னாண்டவரே! தேவரீர் என்னை ஒன்றுமில்லாத காலத்தில் உண்டாக்கினீரே, உமக்கே தோத்திரம் உண்டாகக் கடவது. என் ஆத்துமமே என்ன நினைக்கிறாய்? நீசெய்யுங் காரியம் இன்னதென்று அறிவாயோ? உனக்கு எத்தனைக்கனமானமகிமை வருமென்று விசாரிக்கிறாயோ? நித்திய சர்வேசுரனுடைய ஏகசுமாரனாகிய திவ்விய சேசுநாதர் திரு ஆத்துமத்தோடுந் திருச் சரீரத்தோடுந் தேவசுபாவத்தோடும் அவருக்குள்ள பாக்கியங்களோடும் நம்மிடத்தில் வருவாரே, அவரும் நாமும் ஏகமாய் ஒருமித்திருப்போமே, அவர் நம்மிடத்திலேயும், நாம் அவரிடத்திலேயும் இருக்குமாப்போலாயிற்றே, ஆ! என் ஆத்துமமே நமக்குஎத்தனைப்பாக்கியமும், எத்தனை மகிமையும் வருகிறதென்று பார்த்துச் சந்தோஷப்படக் கடவோம்.

நன்மை வாங்குகிறதற்கு மனதிலே மிகுந்த ஆசை வருத்துகிறது.

ஆசைப் பிரகரணம்.

என் திவ்விய அன்பனுமாய் நாதனுமாயிருக்கிற பரமகர்த்தாவே! எனக்கு மிகவும் பிரியசேசுவே! என்பாக்கியமே, என் சந்

தோஷமே, என் இருதயமே, என் கண்மணியே, ஆ! என் அன்பே, என் இருதயத்தில் எழுந்தருளிவாரும். பசிதாகத்தை அநுபவிக்கிறவர்கள் எத்தனை ஆவலுடன் போசனமுந் தண்ணீருந் தேடுகிறார்களோ அப்படியே என் ஆத்துமந் தேவரீரை மிகுந்த ஆவலுடன் தேடுகிறது. சுவாமீ, சீக்கிரமாகவாரும், தாமதஞ் செய்யாதேயும், நீர் ஒருநாழிகை தாமதஞ்செய்கிறது எனக்கு ஒருவருஷம்போலிருக்கிறது. உம்முடனே ஒன்றிக்க வேண்டுமென்கிற ஆசையின் மிகுதியினால் என் ஆத்துமம் மயங்கிக் களைத்துப் போகிறது சுவாமீ.

¶பிற்பாடு மிகுந்த வணக்கம், தாழ்ச்சி ஆசையுடனேயும் தேவநற்கருணையை உட்கொண்டு பஞ்சேந்திரியங்களையும் உள்ளிந்திரியங்களையும் அடக்கி அங்கங்கே பராக்குப் பாராமலும், புறத்தி விசாரங்களுக்கு இடங்கொடாமலும் உள்ளத்தில் வசமாய் உன் இருதயத்தில் எழுந்தருளி வந்திருக்கிற சேசுநாதருக்குத் தோத்திரஞ் செய்யவும் அவரோடு பேசிக்கொண்டிருக்கவும் செய்வாயாக.

## தேவநற்கருணையை

### உட்கொண்டபின் செபம்.

¶சேசுநாதர் மெய்யாகவே உள்ளத்தில் எழுந்தருளிவந்திருக்கிறதைப்பற்றி ஆச்சரியப்படுகிறது.

### ஆச்சரியப் பிரகரணம்.

சேசுநாதர் மெய்யாகவே இப்பொழுது எனக்குள்ளே இருக்கிறார், இதென்ன ஆச்சரியம்! ஆ, சுவாமீ! இதென்ன அதிசயம் இந்த நீசனாயிருக்கிற என்னிடத்திலே தேவரீர் எழுந்தருளி வந்த காரணமென்ன? பரலோகத்தில் சம்மனசுக்களும் அர்ச்சியசிஷ்டவர்களும் உமக்கு யோக்கியமான ஆராதனையுந் தோத்திரமுஞ் செய்வார்களே என்னிடத்தில் உமக்கென்ன பிரியமான காரியங் கிடைக்கும்?

¶பிற்பாடு சுவாமிக்கு மிகுந்த தாழ்ச்சி விநயத்துடனே ஆராதனை செய்கிறது.



### ஆராதனைப் பிரகரணம்.

என் சர்வேசுராசுவாமீ! என்னைப்படைத்தவரே, அடியேன் உமது திருச்சமுகத்தில் மிகுந்த பத்தி வணக்கத்துடன் சாஷ்டாங்கமாக விழுந்து உம்மை வணங்குகிறேன். நீசனாயிருக்கிற அடியேனால் உமக்கு யோக்கியமான பிரகாரத்திற்கு ஆராதனை செய்யக்கூடாது என்கிறதினால், அர்ச். கன்னிமரியாயி, சகல சம்மனசுக்கள், அர்ச்சியசிஷ்டவர்கள் முதலானவர்களுடைய ஆராதனைகளை உமக்கு ஒப்புக் கொடுக்கிறேன் சுவாமீ.

¶சேசுநாதர் தேவநற்கருணை வழியாக உன்னிடத்தில் எழுந்தருளிவந்ததினால் உன்மேல் அவர் எத்தனைப்பட்சமாயிருக்கிறாரென்றும், நீயும் அவரைச் சிநேகிக்க எத்தனைக்கடமை உண்டென்றும் நினைத்து அவர் உன்னைப்பார்த்து என் மகனே நீ என்னைச் சிநேகிக்கிறாயோ என்று கேட்கிறதாக விசாரித்துக் கொள்வாயாக.

### சிநேகப் பிரகரணம்.

ஆ! என் பிரியசேசுவே! என் சீவமே, என் மதுரமே, உம்மை எல்லாவற்றையும் பார்க்கச் சிநேகிக்கிறேன். உம்மைமாத்திரஞ் சிநேகிக்கிறேன். அடியேன் தேவரீரைச் சிநேகிக்கிறேனோவென்று கேட்கிறீர் சுவாமீ, உமக்கு எல்லாந்தெரியுமே நான் உம்மைச்சிநேகிக்கிறதுஞ் சிநேகியாமல் இருக்கிறதும் நீர் அறிவீர். இந்தமட்டும் நான் உம்மை சிநேகியாமலிருந்ததுமெய்தான், ஆனால் இது துவக்கி என் மரணபரியந்தம் உம்மைமாத்திரஞ் சிநேகிக்கத் துணிகிறேன். ஆ! என் திவ்விய கர்த்தரே! இத்தனை நன்மையும் மகிமையுமுள்ளவருமாய் மட்டில்லாத தயை சுரூபியுமாய் மனோவாக்குக் கெட்டாத அலங்கிருத வடிவு சோபனமுள்ளவருமாயிருக்கிற தேவரீரைச் சிநேகியாதவர்களுக்குச் சாபம், நான் உம்மைச் சிநேகியாமற்போனால் எல்லாவற்றிற்கு முன்னே எனக்குத்தானே சாபம்.

### நன்றியறிந்த பிரகரணம்.

அர்ச்சியசிஷ்ட கன்னிமரியாயே! சகல சம்மனசுக்களே! அர்ச்சியசிஷ்டவர்களே! சுவாமி எனக்குச்செய்த உபகாரத்தின் பெருமை எத்தனையென்று உங்களுக்கு நன்றாய்த் தெரியுமென்கிற

தினாலே, அவருக்குத் தோத்திரஞ்செய்ய உங்களை மன்றாடுகிறேன். மட்டில்லாத சிநேகத்திற்கும் அளவில்லாத தோத்திரத்திற்கும் பாத்திரமாயிருக்கிற சர்வேசுரா! உமக்குச் சதாகாலத்திற்கும் புகழ்ச்சியும் வாழ்த்துதலும் உண்டாகக்கடவது.

¶சுவாமிக்குத் தன் ஆத்துமத்தையுஞ் சரீரத்தையும் இருதயத்தையும் ஒப்புக்கொடுத்து, அவருக்குத் தோத்திரமாக அவைகளை நடத்தத் துணிகிறது.

## காணிக்கைப் பிரகரணம்.

என் சர்வேசுரா! என் ஆத்துமத்தையுஞ் சரீரத்தையும் என் சிந்தனை வாக்குக் கிரியைகளையும் என் இருதயத்தையும் முழுவதும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். இனிமேல் அவைகளை எல்லாம் தேவரீருக்குத் தோத்திரமாகவும் உமக்குப் பிரியப்படவும் உம்மைச் சிநேகிக்கவும் ஏற்கையான பிரகாரத்திற்கு நடத்துவேன்.

¶பிற்பாடு சுவாமியினுடைய சிநேகத்தையும் பொறுமை தாழ்ச்சி இவைமுதலான புண்ணியங்களையும் உனக்கு வேண்டியகாரியங்களையுங் கேட்கிறது.

## மன்றாட்டுப் பிரகரணம்.

என் ஆண்டவரே சுவாமீ, என்னாத்துமத்துக்கு வேண்டிய காரியங்கள் உமக்கு நன்றாய்த் தெரியுமே, தேவரீருடைய தோத்திரத்திற்கும் எனது பிரயோசனத்திற்கும் உதவுகிற காரியங்களைக் கட்டளையிடும்; ஆனால் அடியேன் உம்மை மன்றாடவேண்டுமென்று தேவரீர் சித்தமாயிருக்கிறதினால் உம்மை நான் கேட்கிற மன்றாட்டு ஏதென்றால், தேவரீர் என்னுடைய ஆத்துமத்தையுஞ் சரீரத்தையும் அர்ச்சித்தருளும்; நீர் மனிதருக்காகப் பேறுபெற்றபலன்களை எனக்குக்கட்டளையிடும்; என்னிடத்தில் உமக்குத்தோத்திரம் உண்டாகச்செய்யும். எனக்கு உறுதியான விசுவாசத்தையும், நம்பிக்கையையும், கட்டளை யிட்டருளும், உலக வெகுமானம், பாக்கியம், செல்வம், சரீரசுகம், இன்பம் இவைகள் மேல் வெறுப்பு வருத்துவித்து உம்மைமாத்திரந் தேடவுஞ் சிநேகிக்கவுந் தயைசெய்யும், உமக்குப் பொருந்தாத ஒருஅற்பபாவத்தை முதலாய்ச் செய்யாமல் இருக்கவும், உமக்குப்பிரியமான புண்ணியங்களைச் சுறுசுறுப்புடனே செய்யவும் அநுக்கிரகஞ் செய்தரு



ளுஞ் சுவாமீ; விசேஷமாக என்னிடத்தில் இருக்கிற *துர்க்குணங்களைத் தள்ளி அதற்கு விரோதமானபுண்ணியங்களைச் செய்ய ஒத்தாசை செய்தருளுஞ் சுவாமீ. கடைசியாய் உலகத்தில் இருக்குமட்டும் உம்முடைய சித்தத்தின்படியே நடந்து, நல்லமரணத்தை அடைந்து, மோட்ச இராச்சியத்தில் உம்முடைய திவ்விய தரிசனத்தைக்கண்டு என்றென்றைக்கும் வீற்றிருக்கத் தயைசெய்தருளுஞ் சுவாமி.—ஆமென்சேசு.

¶பிற்பாடு அவரவர்கள் தங்களுக்கு வேண்டிய காரியங்களைக் கேட்கலாம். அவரவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளலாம். கடைசியாய்த் தன்னிடத்தில் உள்ள விசேஷ துர்க்குணத்தைத் தள்ளுகிலும், அதற்கு விரோதமான புண்ணியத்தைச் சம்பாதிக்க வென்கிலும் பிரயாசப்படுவேனென்று பிரதிக்கினை செய்கிறது.

# பாவசங்கீர்த்தனம் பண்ணச் சுருக்கமான ஆயத்தம்.

## மனஸ்தாபத்தியானம்.

ஐயோ! ஆண்டவரே! உம்முடைய திருப்பாதத்திலே நானென்னைச் சோதித்துப் பார்க்கப்போனால் உம்முடைய சந்நிதியிலே மனஸ்தாப மிகுதியினாலே சாகவேணுமென்று ஆசை வருகிறதே யல்லாமல் என்னுடைய சஞ்சலந் தீர்ந்துபோகிறதுக்கு எங்கே பார்த்தாலும் வேறே வழியில்லை; என் ஆத்துமத்தையுஞ் சரீரத்தையும் நீரே யுண்டாக்கினவரும், காப்பாற்றி நடத்திக்கொண்டு வருகிறவருமா யிருக்கிறீரே, நீர்தாமே யுமது முழுச்சொந்தமா யிருக்கிற இந்த அற்பப் புழுவுக்குச் சமானமான பாவியைப் பசாசின் அடிமைத்தனத்தில் நின்று காப்பாற்றினீர். நீர் தேவனாயிருந்தாலும் மனுஷனாய்ப் பிறந்து உம்முடைய சீவனையு மிரத்தத்தையுஞ் செலவழித்துக் கிரயமாகக் கொண்டீர்; என்னை இரட்சித்து வெகு நேர்த்தியாய் அலங்கரித்துத் தமதிரித்துவத்துக்குத் தேவாலயமாக்கி மோட்சத்துக்குச் சுதந்தரமுள்ளவனா

*இன்ன துர்க்குணத்தைத் தள்ளவேண்டுமென்றும், இன்ன நற்குணத்தைத் தரவேண்டுமென்றுங் குறித்து மன்றாடுகிறது.

க்கினீர். இது சூரிய னிருக்கிறதைப் பார்க்க அதிக நிச்சயமுள்
ளதாகையால், என் தலைபோனாலும் அதிலே யொருகாலும் நா
ன் சந்தேகத்துக்கு இடங்கொடுக்கப் போகிறதில்லை. ஆனாலு
மிப்படி விசுவசிக்கிற நான் இன்றுமட்டும் உம்முடைய சொந்
தத்துக்கும் இத்தனை நன்றிகளுக்கும் ஒருநாள், ஒருநாழிகை,
ஒருக்ஷணமாவது உமக்கேற்றவிதமாய் நடந்து நன்றியறிந்தவனா
யிருந்ததுண்டோ? இல்லை சுவாமீ இல்லையே. இது பொறுத்து
முடியாத நன்றி கெட்டதனமா யிருந்தாலும் இதற்குமேல் நா
னுமக்குச்செய்த நிஷ்டூரமான துரோகங்களையும் பார்த்து விதன
ப்படுகிறேன். நான் கனமானபாவத்துக் குட்பட்டபோதெல்லாம்
என் கையினாலே நானே யும்மைக் காயப்படுத்தினேன்; [illegible]
யி[illegible]றந்தேன்; நானே பிதாவாகிய சர்வேசுரனைத் தள்ளி அ[illegible]
க்குப் பிள்ளையா யிருக்கிறதைப் பார்க்கப் பசாசுக் கடிமையாயிரு
க்கிறது தாவிளையென்று துணிந்தேன். வரப்பிரசாதமும் மோட்
சமுந் தேவையில்லையென்று ஊழியுள்ள காலம் நரகத்திலே தமதி
ரித்துவத்தைப் பகைக்கிறதுக்கும், தூஷணிக்கிறதுக்குஞ் சம்ம
தித்தேன். ஐயோ! அர்ச். இராயப்பனைப் போலே யாகிலும் மெய்
யான மனதாய்த் திரும்பி என்னாலே யானமட்டுந் தவசுக் குட்
பட் டிருப்பேனே யானால் அது ஒரு ஆறுதலும் ஒரு நம்பிக்கை
யுமா யிருக்கும். என் புத்தியானது உம்மை நினைக்கச் சுத்தமாய்
ப் பிரியப்படாமல் நினைக்கிறதெல்லாம் உமக்கேறாத குற்றமாய்
த்தானே யிருக்கிறது. மனசானது உமது காரியங்களிலே பிடி
மான மில்லாமல் குற்றத்தோடே சேர்ந்த தெல்லாத்தையும் பிடி
த்துக்கொண்டு பாவங்களைக் கட்டிக்கொள்ளுகிறது. [illegible]தை
வேண்டும் பிரகாரமாய் வெறுக்கச் சத்துவமில்லாமல் நீர் கட்ட
ளையிட்ட தெல்லாத்தையும் வெறுத்துக்கொண்டே வருகிறது.
கண், காது, நாக்கு, சரீர மாதியந்தஞ் சகல குற்றங்களுக்கும் ஊ
ற்று ஊற்றாய்த்தானே யிருக்கிறது. ஒரு நாளிலே அவைகளினா
ல்வருகிற குற்றங்களுடைய கணக்குப் பிடிக்கப் பார்த்தால் தலை
மயிர் கணக்குப் பிடிக்கிறாப்போலே யிருக்கும். ஆங்காரம், கோப
ம், சோம்பல், காய்மகாரம், இவைமுதலான துர்க்குணமெல்லாம்
என்னை யாண்டுகொண்டு சகல குற்றங்களிலும் இழுத்துக்கொ
ண்டே வருகிறதேயல்லாமல் அவைகளை நானடக்கிக் கீழ்ப்படித்
தினவனல்ல. தாழ்ச்சி, பொறுமை, கீழ்ப்படிதல், பிறர்சிநேகம்,



இது முதலான புண்ணியங்களை அநுசரிக்கிற சமயங்களிலே
முதலாய் எனக்குப் பாவத்தந்திரம் வருகிறது. செபத்தியானம்
பூசை, பாவசங்கீர்த்தனம், திவ்வியநற்கருணை வாங்குதல் இதெ
ல்லாங் குற்றங்களை யறுத்துப் பரிகாரம்பண்ண வெகுபலத்த
உபாயமா யிருந்தாலும், நானடத்துகிற அசட்டைத்தனம் பரா
க்கு அலங்கோலை இவைகளினாலே எனக்குப் புதுப்பாவம் வரு
கிறவழியாய்ப் பழைய குற்றங்களை யழிக்கப் பலனற்றதாய்த்தா
னே யிருக்கிறது. இதெல்லாம் நான் பார்க்கும்போது எனக்குத்
தானே யித்தனைக்கஸ்தியும், இத்தனை வருத்தமுமாயிருந்தால் சம்
மனசுக்களுடைய பரிசுத்த தனத்திலே முதலாய்க் குற்றம் பிடிக்
கிற உம்முடைய திருப் பார்வைக்கு என்னமா யிருக்குமோவெ
ன்று யோசிக்க எனக்குப் பயமுண்டாகின்றது. இதுவே[illegible] நானு
மக்குச் செய்த துரோகங்களுக்கு நான் பண்ணுகிற தவசு? நரக
த்தினுடைய நெருப்பை யவிக்கிற குளுந்த புண்ணியமும், பாவ
நாற்றத்தைத் தள்ளுகிற பரிமளமு மிதுவோ வென்று புத்திமய
ங்கி மனசு தடுமாறி அவஸ்தைப்பட்டுத் தவிக்கிறேன்.

ஆனாலும் இவையெல்லாத்தையும் உத்தமவிதமா யறிந்து பார்த்
துக்கொண்டு இருக்கிற நீரிப்போதென்னைப் பாவசங்கீர்த்தனத்
துக்கு அழைக்கிறீர், இப்படி அழைக்கிற முகாந்தர மென்னவெ
ன்று கேட்டால் உம்முடைய திரு விரத்தத்தைக் கொண்டு மறு
படி எனக்கு ஸ்நானம் பண்ணுவிக்கச் சித்தமாயிருக்கிறீர், இ
து காரியத்திலே சற்றேயாகிலும் சந்தேகத்துக் கிடமில்லாமல்
மெய்யாகவே குருவானவர் ஆசீர்வாதத்தைப் பாவசங்கீர்த்தனத்
தி[illegible]க்குக் கொடுக்கும்போது என்னாலே தடையில்லாமற்
[illegible] கபாலமலையிலே நீர் பொதுவாய்ச் சகலருக்கும் இரத்த
த்தைக் கொடுத்தாப்போலே தனியாய் எனக்காகவே கொடுக்கப்
போகிறீர், ஆகையா லென்னாத்துமத்திலே சகல பாவமெல்லாம்
பதிந்திருந்தாலும், பதிந்த பாவம் எத்தனைத்தான் கனமுள்ளதா
யிருந்தாலும், இருக்கிற பாவங்களை எல்லாம் நீக்கித்தான் போ
டுவீர். வரப்பிரசாதம் என்னாத்துமத்திலே இல்லாதே போனால்
[illegible]சாய் [illegible]ப்பண[illegible] வரப்பிரசாதத்தை நானடைந்திருந்
தால் அதைப் பலப்படுத்தி வர்த்திக்கப் பண்ணிக் குற்றங்களைத்
தள்ளவும், குறுகுணங்களை யடக்கவும், புண்ணியங்களை யநு
சரிக்கவும் அதிக மதிகமா யுதவிபண்ணுவீர், உம்முடைய ஆகே

னைத் தேடுகிறதிலே நீதியை மறந்துபோகிற உத்தம ஆயனே!
எனக்கும்முடைய திருவிலாவைத் திறந்து அதிலே யும்முடைய
திருவிரத்தத்தால் சகல நன்மைகளை யடையத் தக்கதாக அழைக்
கிறீரென்று நான் பார்க்கும்போது இன்னமு முழுமனதோடே
திரும்பாமல் உம்முடைய திருவிரத்தத்தை என்னை யறுக்கப்
போகிற ஒரு வாளாக்குவேனோ? ஐயோ! மதுரமான இரட்சகரே,
அறியாத புத்தியினாலே பயித்தியக்காரனாய்த் திரிந்து காலின்
றுமட்டும் பண்ணின நிஷ்டூரங்கள் போதும், இதோ இந்தப் பா
வியை நீரழைத்ததுக்கு இசைகிற மனது என்னவென்றால், அர்ச்.
மதலேனாளும்முடைய பாதத்திலே விழுந்து மனஸ்தாபக் கண்
ணீர்களினாலே அவைகளைக் கழுவினாளே, நானோ வென்றால்
என் அசுத்தங்களை உமது பாதத்திலே [illegible] வேணுமென்று ஆ
ய்யான ஆசையாயிருக்கிறேன். உலகத்திலேயிருக்கிற சகல நிர்
ப்பந்தங்களும் உத்தரிப்பு ஸ்தலத்திலேயிருக்கிற வேதனைகளும்
நரகத்தினுடைய கொரேங்களெல்லாம் என் சரீரத்திலேயும் என்
னாத்துமத்திலேயுஞ் சேர்ந்திருக்கக் கூடுமானால் என் மரணமட்
டும் அதெல்லாத்தையும் அநுபவித்துக்கொண்டு நா னுமக்குச்
செய்த துரோகங்களுக்குப் பரிகாரம் பண்ணவேணுமென்று
வெகு ஆசையா யிருக்கிறேன். இனிமேல் என் னெஞ்சானது
உமக்குப் பொருந்தாத ஒரு அற்பக் குற்றத்துக் குட்பட அதுக்
குச் சம்மதிக்கிறதைவிட என்னெஞ்சை நான் பிடுங்கி நெருப்
பிலே யானாலும் எறிந்து போடுவேன். மற்ற வெல்லாத்திலும்
உம்முடைய திரு விரத்தத்தின் பலனை நம்பி வருகிறேன். என்
தேவனே! இரட்சகரே! என்னாத்தும பத்தாவே! உம்முடைய தி
ருவிரத்தத்திலே ஸ்நானம் பண்ணப்போகிற இந்தப் பாவி
இனிமேல் உம்முடைய தோத்திரத்திற்கும், உம்முடைய சித்
தத்துக்கும் ஒரு அற்பக் குறையாகிலும் வருகிறது பரிச்சேதம்
பொறுக்க முடியாத காரியமா யிருக்கும், இதைப்பார்க்க நரக
நெருப்பு முதலானவை அடியேனுக்குப் பெரிதல்ல, ஆகையால் கபா
லமலையிலே சிலுவையி லறையுண்டு நீர்பட்ட அவஸ்தையையும்
உமது பரிசுத்த தாயார் பட்ட வியாகுலத்தையும் பார்த்து இப்
போது தானே மனஸ்தாபத்தின் பெருக்கத்தினாலே உம்முடை
ய பாதத்திலே சீவனை விடுகிறதுக்கு நான் பாத்திரவானல்லாதே
போனாலும் அடியே னிடத்திலே உம்முடைய தோத்திரமும்



உம்முடைய சித்தமும் ஒரு அற்பக் குறையில்லாமல் நிறைவேறு
ம்படிக்கு என்னை யும்முடைய திருவிரத்தத்தினாலே பலப்படுத்த
வேணுமென்று மன்றாடுகிறேன்.—ஆமென்சேசு.

¶அடிக்கடி பாவசங்கீர்த்தனஞ் செய்கிறவர்கள் ஆத்தும
சோதனைசெய்ய வெகுநேரஞ் செலவழிக்க வேண்டியதில்லை.
க-வது.—பத்துக்கற்பனைப் பிரகாரமாகவும். உ-வது.— திருச்ச
பைக் கற்பனைப் பிரகாரமாகவும். ௩-வது.—தலையான பாவங்களின்
பிரகாரமாகவும். ச-வது.—செய்யவேண்டிய புண்ணியங்களைக்
குறைத்ததைக் குறித்தும், தன் கடமைகளைச் செய்யாமல் விட்
டுவிட்டதைக் குறித்தும். ரு-வது.—புத்தி மனது நினைவென்கி
ற உள்ளிந்திரியங்களினாலேயும், கண், காது, மூக்கு, நாவு, பரிச
முதலான கருமேந்திரியங்களினாலேயும் வாக்குக் கிரியையினா
லேயுங் கட்டிக்கொண்ட பாவங்களைக் குறித்து ஆத்துமசோ
தனை பண்ணுகிறது.

## சுலுவான ஆத்துமசோதனை.

செய்யவேண்டிய செபத்தியானங்களைச் செய்யாமல் விட்டு
விட்டதும், அவைகளை அசட்டைத்தனத்தினாற்குறைத்ததும், செ
ய்தாலும் படபடப்பாயும், பத்திக்குறைவாகவுஞ் செய்ததும் பா
வம். சர்வேசுரனுடைய சமூகத்துக்கு முன்னிருக்கப் பிரயாசை
ப்படாமற் போனதும், எல்லாவற்றிலும் அவருடைய சித்தத்துக்
கு ஒத்திராமலிருந்ததும், அவருடைய ஏற்பாட்டுக்கும் இஷ்டத்
துக்கும் விரோதமாய் முறுமுறுத்துச் சோம்பலாயிருந்ததும்,
வழக்கமாய்ச் செய்யவேண்டிய காரியங்களைச் சோம்பலினாற் செ
ய்யாமற் போனதும் அல்லது தாமதப்படுத்தினதும் பாவம்.—ஆ
ங்காரம், கோபம், பெருமை, காய்மகாரம், பகை முதலிய துஷ்ட
குணங்களுக்கு இடங்கொடுத்ததும், வழக்கமாய் விழுகிற பாவ
த்தில்நின்றுதப்பித்துக்கொள்ளப்பிரயாசைப்படாமற்போனதும்,
பாவத்துக்குக் காரணமான ஆபத்துகளை நீக்க முயற்சிசெய்யாம
ற் போனதும் பாவம்.—அற்பப் பாவத்தை முதலாய்ச் செய்யா
ம விருப்பதோடு பரிசுத்தத்தாலும், தெய்வ சிநேகத்தாலும் உலக
த்தை மேற்கொள்ளப் பிரயாசப்படாமற் போனதும், பரிசுத்தமா
ய்நடக்கச் செபத்திலும், தியானத்திலும், தேவவாக்கியத்திலும்,
தேவபுத்தகங்களைப் படிக்கிறதிலும், தன் காலத்தை உபயோகப்

படுத்தா திருந்ததும் பாவம்.—இப்படிப்பட்ட பாவங்களைச் செய்ததுண்டானால் அவைகளை எத்தனைத்தரமென்று பாவசங்கீர்த்தனத்தில் வெளிப்படுத்தவும்.

## பாவசங்கீர்த்தனத்துக்கு முன் செபம்.

என் மதுரசேசுவே! என்னினிய விரட்சகரே! கரைகாணாக் கருணை சமுத்திரமான என் திவ்விய பிதாவே! என்பாவ அக்கிரமங்களை விட்டு விட்டுமது கிருபையின் பாதத்தை அண்டிவருகிறேன். நல்ல பாவசங்கீர்த்தனத்தின் வழியா யுமக்குப் பிரியமாக வருந்து யித்தருணத்தில் என் ஞாபகம் எனக்கு வந்துதவ [illegible]த் துலாம்பரமுள்ள தாக்கும். என்புத்தி பாவங்களின் கனத்தைக் கண்டுபிடிக்க அதற்கு [illegible] தந்தருளும். என் [illegible] நொந்[illegible] பூங்காவனத்தில் என்னக்கிரமங்களைக் கண்டு இரத்த வேர்வையால் சோர்ந்ததுபோல நானுமென் கொடுந் தோஷதுரோகங்களைக் கண்டு பயந் ததிர்ந்து கண்ணீர்சொரிந்து வேற்றுருவாகி நிர்ம்மல வேறுமனிதனாகப் பண்ணியருளும். என்னங்கம் பதைக்க என்னுயிர் சோர இந்தப் பாவசங்கீர்த்தனத்தா லுமது திரு விரத்தத்தில் மூழ்கிப் [illegible]து மனிதனாகப் பண்ணியருளுஞ் சுவாமீ.—ஆமென்சேசு.

இரக்கமுந் தயையு நிறைந்த சர்வேசுரா! சீவியத்தின் ஊற்றாகிய உம்மைவிட்டு அகன்ற நிர்ப்பாக்கிய ஊதாரிப்பிள்ளை வந்தேன், அழிந்துபோகுஞ் சரீரசுகத்தைநாடி நீர் தந்த அருளாபரணங்களைப் போக்கடித்தேன்; பாவ அசுத்தத்தால் பரதவிக்கிறேன் உம்மைவிட வெனக்காதாரம் ஒருவருமில்லை; உமது [illegible] னைச் செய்தன, ஒருமணிநேரம் நெருப்பிற்கிடந்து நிற்[illegible]ண மாட்டேன்; சகல வியாதியுஞ் சேர்ந்தா லொருநாழிகை பொறுக்கமாட்டேன். அரைமணிநேரம் மூச்சடைத்துப்போனால் திக்குமுக்காடிப் போவேன்; இம்மாத்திரம் பலவீனமுள்ள நான் ஆகாசம், பூலோகஞ், சூரிய சந்திரன் யாவையு முண்டுபண்ணின தெய்வத்தோடு ஒரு சாவான பாவத்தா லெதிர்த்தேனே, நரகில் நித்தியகால மென்னமாய் வேகத்துணிவேன்? நித்திய பேரின்ப பாக்கியமாகிய உம்மைவிட்டு நீங்கச் சம்மதிப்பவர்களார்? புத்திக்கடங்காத அளவில்லா மோட்ச சுகத்தைவிட்டுப் பாவக்குழியில் விழுந்தால் நான் எப்படிப்பட்ட புத்தியீனன்!



உமது கைவேலைகளிற் சின்னதாகிய ஓர் யானைக்கு நான் ஆற்றமாட்டேன். கொடிய வோர் வியாதியைச் செயித்து முன்னுக்கு வர என்னாலாகாதே; மரணம்வரப் பேச்சற்றுப் பாழுங்குழியில் விழுவேனே, இப்படிப்பட்ட நீசமனிதனாகிய நான் மூன்றுலோகப் பிரபுவுமாய்ச் சர்வ சக்ரவர்த்தியுமா யிருக்கிற உமது கட்டளையைமீறி உம்மை நிந்தித்ததினால் நா னெம்மாத்திர மதிகேடன்! என் பாவத்தால் நான் குஷ்ட நோய்கொண்டவன்போலானாலும் நா னுமது கைப்படைப்பானதால், நீரென்னைச் சவுக்கியப்படுத்தப் பின்வாங்குவீரென்று நானினைக்கவில்லை. ஆகையாலுமது திருப்பாதத்தில் நொந்து விழுகிறேன். எனக்கு நல்ல மனஸ்தாபத்தைத் தந்து என் கன்னெஞ்சைக் கரையப்பண்ணும். [illegible] கணலை மூட்டும். இதோ என் பாவங்களை உமது கட்டளைப்படி யுமது ஊழியனாகிய குருவினிடத்திற் சங்கீர்த்தனம் பண்ணப்போகிறேன். நானே உம்மைக்கண்டு உமது திருப்பாதத்தில் விழுந்து மனஸ்தாப மிகுதியால் உயிரைவிட ஆசிக்கிறேன். உம்மைச் சரீரத்தின் கண்ணாற்பார்க்கக் கூடாதென்று இவ்[illegible]கையாய் என் பாவநோய்க்கு அவுழ்தங் கட்டளையிட்ட வுமக்கு நன்றி[illegible]ந்த தோத்திரம் பண்ணுகிறேன். பூலோகத்தில் பாவஞ்செய்து தபசுபண்ணின பாவிகள் கொண்டிருந்த மனஸ்தாபத்தை யெல்லா மெனக்குக் கொடுத்தருளுஞ் சுவாமீ. அர்ச். தாவீது, இராயப்பர், மரியமதலேனம்மாள் இவர்களுக்கிருந்த மனஸ்தாபத்தை எனக்குக் கொடுத்தருளுஞ் சுவாமீ. நான்படுமனஸ்தாபத்தால் கோடையிடிக்குச் சமானமான உமது சீற்றவழி லென்னைத் தப்பித்துவிடும். இனி சகல துன்பம் [illegible]யாதி இம்சை உபாதனைகள் வந்தாலும் உயிரையிழக்க வேண்டியிருந்தாலு மொரு பாவத்தையுஞ் செய்யவே மாட்டேன் சுவாமீ. மேலும் எனது பிராண சத்துருக்களாகிய பூலோகம் பசாசு சரீரத்தால் நான் சூழப்பட்டிருப்பதாலும் நான் செய்துகொண்ட துர்ப்பழக்கமெனக் கெதிரிடப்போகிற படியாலு மிவைகளைச் செயிக்கவேண்டிய தயிரியமும் பிரகாசமுந் தந்தருளுஞ் சுவாமீ.—ஆமென்சேசு.

## பாவ உச்சாரணத்தின் அநுசுத்தி.

மெய்யான பாவ உச்சாரணஞ் செய்யத்தக்கதாகத் தாழ்ச்சி, அழுகை, நிர்வஞ்சகம், சுலபம், விளக்கமென்கிற இவ்வைந்து இல

ட்சணத்தோடு பாவம் உச்சரிக்கவேண்டும். ௧௫-ம். பக்கங்காண்க.

### பாவசங்கீர்த்தனஞ் செய்யத் துவக்குகிறவகை.

நீ குருவானவர் முன்பாக ஒருபக்கத்திலே முழந்தாளி லிருந்து சிலுவை வரைந்து "சுவாமீ பாவியாயிருக்கிறவென்னை ஆசீர்வதித்தருளும்" என்று அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றபின் சாதாரணபாவசங்கீர்த்தன மந்திரந் துவக்கி "என் பாவமே என் பாவமே என் பெரும்பாவமே" என்கிற வார்த்தைமட்டுஞ் சொல்லி நிறுத்திப் பாவங்களைச் சொல்லத் துவக்கவும், தான் கட்டிக்கொண்ட பாவங்களை எல்லாம் ஒழுங்காய்ச் சொல்லி இந்தப் பாவங்களோடு நினைவில்லாத பாவங்கள் யாவற்றையுஞ் சொல்லுகிறேனென்றும், இவைகளாற் சர்வேசுரனுக்குச் செய்த துரோகங்களுக்காக மெத்த விசனப்பட்டு இனிமேற் செய்யாதபடிக்கு உறுதியான மனதாயிருக்கிறேன்; ஆசீர்வாதமும், அபராதமும் தாருமென்று மன்றாடி, முன் நிறுத்தி வைத்த பாவசங்கீர்த்தன மந்திரத்தின் மற்றக் குறைவையும் முடிவிற் சொல்லவும்.

¶ அடிக்கடி பாவசங்கீர்த்தனஞ் செய்துவரும் வழக்கமுள்ளவர்கள் தங்களிடத்தில் இந்தப்பாவசங்கீர்த்தனத்தில் வெளிப்படுத்த சாவானபாவமில்லையேயென்று கலங்காமல் தாங்கள் முன் பாவசங்கீர்த்தனத்திற் சொன்ன பாவங்களையே மறுபடியும் மிகுந்த உத்தம மனஸ்தாபத்தோடு சொல்வதே முறை.

## பாவசங்கீர்த்தனஞ் செய்தபின்

### சந்தோஷப் பிரகரணம்.

என்னுடைய ஆத்துமமே! நாம் சந்தோஷமா யிருக்கக் கடவோம். இந்த மட்டுஞ் சாவான பாவத்தினாலே பசாசுக் கடிமையாயிருந்த நாம் இப்பொழுது சுவாமி அதைப் பொறுத்ததினாலே அந்த அடிமைத்தனம் நீங்கிச் சர்வேசுரனுடைய பிள்ளையானோம். ஆ! சுவாமீ, ஒருக்ஷணத்தில் என்னிடத்தில் எத்தனைமாற்றம் உண்டாயிற்று! உமக்குச் சத்துருவா யிருந்த நான்உமக்குப்



பிரியமானவனானேன்; நரகத்திற்குப் பாத்திரமாயிருந்த நான் மோட்சத்திற்குச் சுதந்தரவாளனானேன்; பசாசுக்கு அடிமையாயிருந்த நான் உமக்குப் பிரிய குமாரனானேன். ஆ! என் சர்வேசுரா, தேவரீர் மகா நல்லவர்; என் கேடுகளைத் தீர்த்து இத்தனை நன்மை அடைகிறதற்கு எளிதான உபாயங் கட்டளையிட்டீரே; நீர் [illegible]ட்டில்லாத தயாளமுள்ளவர்; தேவரீர் எனக்கு இந்தத் தயை செய்யாமல் பாவத்திற்குத் தக்க ஆக்கினை யிட்டீராகில் இந்நேரம் நரக பாதாளத்திற் கிடந்து வேகுவேனே சுவாமீ.

ஆண்டவரே, உமக்கே நித்திய தோத்திரமும், புகழ்ச்சியும் உண்டாகக்கடவது. சகல படைப்புண்ட வஸ்துக்களே, ஆண்டவரைத் தோத்திரஞ்செய்யுங்கள், என் ஆத்துமமே உன் பாவ தோஷங்களைப் பொறுத்து உன் வியாதியைக்குணமாக்கி உனக்கு வந்த கேட்டை நீக்கி உன்னை இரட்சித்த அவருடைய திருநாமத்தை என்றென்றைக்கும் வாழ்த்திப் புகழ்ந்து துதிக்கக் கடவாய்.

ஆ! என் பிரியமுள்ள இரட்சகரே, என் நல்ல ஆயனே, என் மெய்யான தகப்பனே, ஒருக்ஷணத்தி லென்னிடத்திலுமது திருவிரத்தப் பலத்தால் எம்மாத்திர மாற்றமுண்டாக்கிப் போட்டீர். இதோ நான் பசாசினடிமைத்தனத்தினின்று நீங்கியிருக்கிறேன். ஞான அந்தகாரமும் ஞானவியாதிகளும் பிணிகளு மென்னைவிட்டுநீங்கப் பண்ணினீர். என்னைப்பாவச் சிறைக்கூடத்திலின்று மீட்டீர். நித்திய வாக்கினைக் குட்படப்போன வென்னைக் கைபிடித்திழுத்து மோட்ச சுதந்தரமுள்ளவனாக்கினீர். இம்மாத்திரந் தயை நீரெனக்குச் செய்தபின் இனி நானும்மைவிட்டுப் பிரிய வெனக்கு எப்படி மனதுவரும்? இனிச் செத்தாலுஞ் சாவதொழியப் பாவஞ்செய்ய மாட்டேன். முன் நான் பாவங்களைக் கட்டிக்கொள்ளக் காரணமா யிருந்த விடங்களையும், மனிதர்களையும், காரியங்களையும் விட்டு விடுகிறேன். நான் விட்ட பாவத்துக்கு விரோதமான புண்ணியங்களைச் செய்கிறேன். இனி பாவத்திற் பிரவேசிப்பதைப் பார்க்க என்னுயிரை யிழக்கத் தீர்மானித்திருக்கிறேன் சுவாமீ. காணப்பட்ட வஸ்துக்களிலும், காணப்படாத பசாசு, பொய்மாய்கை பாச லோகாதிகளிலும் நானினி யகப்படாமலிருக்கக் கிருபைசெய்தருளுஞ் சுவாமீ. நானும்மை இன்னொரு விசை பாவத்தா லிழப்பதைவிட பூலோ[illegible]தயு மகிலடங்கிய

சகல தீமைகளையு மிழக்கக் கெட்டியான பிரதிக்கினைப் பண்ணுகிறேன். என் பிரதிக்கினைகளை உறுதிப்படுத்தி என் சகல தந்திரங்களில் நின்று கைதூக்கி இரட்சியுஞ் சுவாமீ.—ஆமென்சேசு.

பின்பாடு, நீ மறுபடி பாவத்தில் விழாதபடிக்குச் சர்வேசுரனுடைய அநுக்கிரகத்தைக்கேள்; தேவமாதாவையும், காவலான சம்மனசுவையும் உனக்குச் சகாயமாயிருக்க வேண்டிக்கொள்.

தேவநற்கருணையாங்கு முன்னும், வாங்கின பின்னுஞ் செபங்கள் (௩௭௮-ம். பக்கமுதல், ௪௩௫-ம்.) பக்கம் வரைக்குங் காண்க.

---

## *சிலுவைப் பாதை.

### எந்தக்காலத்திலும் விசேஷமாய்த் தபசுகாலத்திலுஞ் செய்யத்தக்கது.

### பீடத்துக்கு முன்பாகச் சொல்லத்தக்க ஆயத்தச் செபம்.

திவ்விய சேசுவே! எங்கள் நேசத்துக்குரிய இரட்சகரே! இதோ அடியோர்கள் எங்களுக்காகவும், மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமங்களுக்காகவும் உமது திவ்விய இரக்கத்தைக்கேட்டு மன்றாடும்படிக்குத் தாழ்ச்சி வணக்கத்துடனே உமது திருப்பாதத்திலே விழுந்து கிடக்கிறோம். உம்முடைய திருப்பாடுகளைத் தியானிக்கப்போகிற அடியோர்கள் எல்லாருக்கும் அனைவரின் அளவில்லாப் பேறுபலன்களைத் தந்தருளுஞ் சுவாமீ. அழுகைப் பிரலாபத்துக் குரிய உமது திருச்சிலுவையின் பாதையை யநுசரிக்கையில் நாங்கள் முழுதும் மனந்திரும்பி மெய்யான துக்க மனஸ்தாபப்பட்டு இவ்வுலகத்தின் துன்பம், பீடை, கஸ்தி, அவ

*இதைப் பத்தியோடே செபிப்பவர்கள் அர்ச். பாப்புகளாலே சேசுநாதர் பாடுபட்ட ஸ்தலமாகிய ஜெருசலேம் பட்டணத்தைத் தரிசித்துச் சந்திப்பவர்களுக்கு முன் அளிக்கப்பட்ட பூரணப் பலன்களை யெல்லா மடைவார்கள். ஆனாலிந்தப் பதினாலு ஸ்தலங்களையும் ஒரே இடத்திலிருந்து சொல்லலாகாது, கொஞ்சமாகிலு நடந்து நின்று ஸ்தலங்களையுஞ் சேசுநாதர் பட்ட பாடுகளை நினைத்துக்கொண்டே சொல்லவும்.



மானங்களைச் சந்தோஷத்துடனே ஏற்றுக்கொள்ளும் படியாக அநுக்கிரகஞ் செய்தருளும்.

ஓ! திவ்விய மாதாவே, அர்ச். மரியாயே! சிலுவையின் பாதையிலே எங்களுக்கு முந்தி நடந்தினவளை எங்களுக்குக் காண்பித்துப் படிப்பித்தவள் நீரே; பத்தியுள்ள இந்த முயற்சியை யநுசரிக்கு மந்நேரத்திலே [illegible] துவானவர் எங்களிருதயத்தில் வருவிக்கும் நல்ல மனஸ்தாபத்தையும் தேவ சிநேகத்தின் பற்றுதலையும் அர்ச். திரித்துவமாகிய சர்வேசுரனுக்குத் தமக்குச் செய்யப்பட்ட நிந்தைகளுக்குப் பரிகாரமாக ஏற்றுக்கொள்ளும்படிக்கு நீரே மன்றாடவேணுமென்று உம்மை நோக்கி நம்பிக்கையோடே பிரார்த்திக்கிறோம்.—ஒரு-பர-பிரி-திரி.

பாடல்-இராகம்-[illegible].

புவனரட்சகாசேசு நாதா மோட்சநெறியைப்,
போதித்தருளுஞ் சத்திய வேதா,
தவமாமரி திருக்கு, மானா பாவிகளானோர்,
தம்மையீடேற்றுமோட்சதாதா.

## முதல் ஸ்தலம்.

முதலோதி.—திவ்விய சேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்கிறோம்,

துணைவர்.—அதேதெனென்றால் உம்முடைய அர்ச். சிலுவையைக்கொண்டு உலகத்தை யிரட்சித்தீர்.

### சேசுநாதர் மரணத்துக்குத் தீர்வையிடப் படுகிறார்.

பிலாத்தென்கிற துரை விதித்த இந்த அநியாயமான மரணத்தீர்வைக்கு இயல்பா யுட்பட்டதினாலே திவ்விய சர்த்தரிடத்தில் விளங்கின ஆச்சரியமான பொறுமை சிரவணத்தைத் தியானிப்போமாக. ஆண்டவருக்கு மரணத்தீர்வையிட்டது பிலாத்தென்கிறவன் மாத்திரமல்ல, இவ்விடத்தி லிருக்கிற நாமுஞ் சகல பாவிகளு மவரைக் கொலைப்படுத்த வேண்டி நம்முடைய பாவங்களாலே ஏற்பட்டோமென்று நன்றா யோசித்துத் தீர்ப்புக்கட்டுவோம். நம்முடைய அக்கிரமங்கள் தான் அவருக்கு மரணத் தீர்வைக்

ருக் காரணமாச்சுது. ஆகையால் மெய்யான துக்கத்தோடே ப லாபித்தழுது அவருடைய பாதத்தில் விழுந்து அவருடை பொறுத்தலையடைய அவரை நோக்கி மன்றாடுவோமாக.

செபம்.—ஆ! திவ்விய கர்த்தாவே! மாசில்லாத சேசுவே எங்கள் பாவங்களாகிய அக்கிரமமே உம்மை மரணத் தீர்வைக்குட் படுத்தின படியினாலே நாங்கள் மனநொந்து மிகுந்த மனஸ்தாப ப்பட்டு எங்கள் பாவங்களை எல்லாம் அருவருத்துவிட்டு எங்க பிரலாபத்தினாலுந் தபசினாலும் உம்முடைய இரக்கத்துக்கு பொறுத்தலுக்கும் பாத்திரவான்க ளாகும்படிக்கு அநுக்கிரக ம்செய்தருளுஞ் சுவாமீ.—ஒரு-பர-பிரி-திரி.

முதலோதி.—எங்கள்பேரில் தயவாயிருஞ் சுவாமீ.

துணைவர்.—எங்கள்பேரில் தயவாயிரும்.

முதலோதி.—விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசு னுடைய இரக்கத்தினாற் சமாதானத்திலே இளைப்பாறக் கடவது

துணைவர்.—ஆமென்சேசு.

பாடல். ௨

சேசுநாதரோ சுவாமீ! தோத்ரம் எங்கள் பாவத்தால்,
செகத்தில் அவதரித்தீர் தோத்ரம்,
தோஷமெங்களை மீட்க மெய்யாய் உயிர்ப்பலியாம்,
துஷ்ட தீர்வைக்குள்ளானீர் ஐயோ!

## இரண்டாம் ஸ்தலம்.

முத.—திவ்வியசேசுவே.—மற்றதும். (கஉ௫-ம்.) பக்கங் காண்க.

### சேசுநாதர் சிலுவை சுமத்தப்படுகிறார்.

நம்முடைய திவ்விய போதகருமாய்ப் பரம குருவுமா யிரு கிற சேசுநாதர் கசைகள் முதலிய ஆயுதங்களினாலே அடியுங் காயமும்பட்டு நொறுங்கி இரத்தக் கறைபிடித்த தமது திருத்தோ ளின்பேரில் அருமையான நிர்ப்பந்தமுள்ள சாவின் பயங்கரமு ள்ள எத்தனமாகிய சிலுவையை எம்மாத்திரம் பிரியத்தோடும், ம



குணத்தோடுஞ் சுமந்துகொண்டாரென்று யோசிப்போமாக. *சர் வேசுரனாலேயாவது படைப்புண்ட வஸ்துக்களாலேயாவது நம க்கு வருகிற ஆக்கினை, கஸ்தி, துன்பங்களை மிகுந்த பொறுமை யோடே ஏற்றுக்கொண்டு நமது சிலுவையாகிய அவைகளை நாம் சுமக்கத்தக்க விதத்தை நம்முடைய திவ்வியகுருவானவர் இப்படியாய் நமக்குப் படிப்பிக்கச் சித்தமானார்.

செபம்.—ஆ! மதுரசேசுவே! தேவரீர் முழுதும் மாசற்றவ ராயிருக்கையால் இந்தப் பாரமான சிலுவை உமது பேரிலல்ல, சகல அக்கிரமங்களும் நிறைந்த நிர்ப்பாக்கியப் பாவிகளாகிய எங்க ள் பேரிலே சுமத்தப்பட வேண்டியதா யிருந்தது. ஆகையில் உம்முடைய நீதிக்கு உத்தரிக்கவும் பரலோக விராச்சியத்திற் சேரவும் வழியாக உம்முடைய சித்தம் எங்களுக்கு நியமித்திரு க்கிற பிரபஞ்ச துன்ப துரித பொல்லாப்புக்களை யும்முடைய தி வ்விய மாதிரிகையின்படியே நாங்கள் முறையிடாமற் பொறு மையோடே யநுபவிக்க மனத்திடனைக் கொடுத்தருளுஞ் சுவாமீ. —ஒரு-பர-பிரி-திரி.

முத.—எங்கள்.—மற்றதும் (கஉசு-ம்.) பக்கங் காண்க.

பாடல்.

பாவச்சுமை சுமக்குங் கடமை எங்கள்மேல் நிற்கப்,
பாரம் பொறுக்கோமென்ற திடமோ?
தேவரீர் தயவாகப் பூமி மீதுகனத்த
சிலுவை சுமக்கலானீர் சுவாமீ.

## மூன்றும்ஸ்தலம்.

முத.—திவ்வியசேசு.—மற்றதும் (கஉ௫-ம்.) பக்கங்காண்க.

### சேசுநாதர் முதல்விசை தமது பாரமான சிலுவையோடு குப்புற விழுகிறார்.

நம்முடைய இரட்சகராகிய சேசுக்கிறீஸ்து நாதர் கபால மலையின் வழியில் மிகுந்த வருத்தத்தோடு நடந்து போகிறதை யோசிப்போமாக. அவர் பூங்காவனத்தில் இரத்தவேர்வை விட் டபோதும், சாட்டி, கசை, வார்களினாலே அடிபட்டபோதும்,

முண்முடி தரிக்கப்பட்ட போதும், தமது திருவிரத்தத்தை மிகுதியாய்ச் சிந்தினதினாலே மெத்த பலவீன மடைந்ததைப்பற்றித் தமது சிலுவையின் பாரத்தைத் தாங்கமாட்டாமற் குப்புற விழுகிறார். உடனே தம்மை நிஷ்டூரச்சேவகர் தூஷணித் தடித்தாலும் அவர் அவ்வளவுங் கோபிக்காமல் மறுபடி எழுந்து சிலுவை சுமக்கத் திருவுளமாகிறார். இப்ப[illegible] பாவ சங்கிரமங்களைப் பரிகரிக்கவும் யாதொரு பாவத்தில் விழுகிற நிர்ப்பாக்கியம் நமக்கு நேரிட்டபின்பு உடனே தகுந்த தபசினாலெழுந்திருக்க வேணுமென்று காண்பிக்கவுங் கிருபை செய்கிறார்.

செபம்.—ஆ! நல்ல சேசுவே! எப்பக்கத்திலும் எங்களுக்கு நேரிடுகிற தின்மை ஆபத்துக்களிலே நின்று எங்களைக்கைதூக்கி இரட்சியும். புண்ணியநெறியில் மெத்த பலவீனரான அடியோர்களைத் திடப்படுத்தி நாங்கள் தைரியமாய்க் கபாலமலைமட்டுக்குந் தேவரீரைப் பின்சென்று சீவியங் கொடுக்கிற விருட்சமாகிய சிலுவையின் இன்பமான பலனை அடையவுந் தேவரீரோடு கூடப் பரகதியிலே நித்திய ஆநந்தத்தைச் சுதந்தரித்துக் கொள்ளவுங் கிருபைபுரியும் சுவாமி.—ஒரு-பர-பிரி-திரி—

முத.—எங்கள்.—மற்றதும். (ககூ-ம்.) பக்கங்காண்க.

பாடல்.

அடியால் முள்ளின் முடியால் மிக்க உதிரவெள்ள,
ஆற்றல் திடனுமற்று நிற்கக்,
கொடிய சிலுவைப்பார மையோ தாளாமல் வீழ்ந்தீர்,
கொலைக்கார ராலோ மிகு பொய்யோ!

## நான்காம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே.—மற்றதும். (ககூ-ம்.) பக்கங்காண்க.

சேசுக்கிறீஸ்துநாதர் தம்முடைய பரிசுத்தமாதா வெதிர்
கொண்டு வருகிறதைக் காண்கிறார்.

திவ்விய கர்த்தராகிய சேசுக்கிறீஸ்துநாதர் தம்முடைய பிரியதாயாரை இம்மாத்திரங் கொடிய குரூரமான வேளையிற்காண்கிற



தினாலுந் தேவமாதா தம்முடைய நேசகுமாரன் எண்ணிறந்த சனங்களாற் சூழவும்நிந்திக்கவுந்தூஷணிக்கவும் பட்டு வெகுநிஷ்டூரச் சேவகர் படைகளால் மானபங்கமாகக் கொலைக்களத்துக்கு நடத்திக்கொண்டு போகப்படுகிறதைப் பார்க்கிறதினாலும் இருவரு மநுபவித்த கஸ்தி வியாகுலம் எம்மாத்திரமென்று யோசிப்போமாக. [illegible] படுகிற கொடூர நிர்ப்பந்தங்களைப் பார்த்து இரக்கமுள்ளமாதாவினிருதயம் ஆயிரம் அம்புகளினால் ஊடுருவப்பட்டுத் துக்கசாகரத்தி லமிழ்ந்தினாற் போலாயிற்று. தம்முடைய பிரிய குமாரனைக் கொலைப்பாதகருடைய கையில் நின்று விடுவித்து மீட்க மகா வாஞ்சையாயிருந்தாள். ஆனால் நம திரட்சணியம் இப்படி நிறைவேற வேணுமென்றறிந்து தம்முடைய திவ்விய திருக்குமாரனுடைய பலியோடே கூடத் தமதன்னையும் பலியாக ஒப்புக்கொடுத்து அவருடைய சகல கஸ்தி துன்ப வாதைகளுக்கும் பங்காளியாகத் தமது சாவுக்கே யஞ்சாமல் அவரைக் கடைசி பரியந்தம் பின்செல்லுகிறாள்.

செபம்—வியாகுலமாதாவே! துக்கம் நிறைந்த மரியாயே! பரிசுத்த பருவதமாகிய கபாலமலைமட்டுஞ் சேசுக்கிறிஸ்துவைப் பின்செல்லுகையில் நீர் கொண்டிருந்த மிகுந்த அன்பின் பற்றுதலையுஞ் சிலுவையி னடியிலே யும்மிடத்தில் விளங்கின மனத்திடனையும் அடியோர்கள் கண்டு பாவித்து உம்மோடு கூடத் தைரியமாய்ச் சிலுவையடியிலே நிலைகொண்டு ஒருகாலும் அதை விட்டுப்பிரியா திருக்கும்படிக்கு எங்களுக்காக உம்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும்.—ஒரு-பர-பிரி-திரி.

முத.—எங்கள்.—மற்றதும். (ககூ-ம்) பக்கங்காண்க.

பாடல்.

தாயே மாசில்லாமரி யம்மா, ஓ, ஓ, என்சொல்வோம்,
தளர்ந்துநின் திருமகன் எம்மால்,
தூயகல்வாரிமலை மீதே உயிர் கொடுக்கச்
சிலுவை சுமந்துபோறார் நீதோ.

## ஐந்தாம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே—மற்றதும். (ககூ-ம்) பக்கங்காண்க.

**சேசுக்கிறீஸ்துநாதர் தமது சிலுவையைச் சுமந்து போகிறதுக்கு சிரேனேன் என்கிற சிமோன் உதவிசெய்கிருர்.**

நம்முடைய திவ்விய இரட்சகராகிய சேசுக்கிறீஸ்து நாதருக்கு நமது பேரிலுள்ள மட்டில்லாத அன்பை யோசிப்போமாக. அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்துபோகிறதற்குப் புறத்தியுதவியை ஏற்றுக்கொண்டதற்கு முகாந்தரமென்ன? அவரிடத்தில் பலத்தின் குறைவோ? அல்லவே, அவர்தான் சர்வலோகத்தையுந்தாங்கி நடத்துகிறார். ஆனால் தம்முடைய பீடை, கஸ்தி முதலான துன்பங்களை அவர் பட்ட நிர்ப்பந்தங்களோடே ஒன்றாக்கூட்டி அவருடைய கசப்பான பாத்திரமாகிய பாடுகளுக்கு நம்மைப் பங்காளிகளாக்க வேணுமென்று அவ்விதமாய் நமக்குப் படிப்பிக்கச் சித்தமானர்.

செபம்.—ஆ! எங்கள் திவ்விய உபாத்தியாயராகிய சேசுவே! பாடுகளின் பாத்திரத்திலே யதிகக் கசப்பா யிருந்த தெல்லாத்தையுந் தேவரீர்தாமே யுட்கொண்டு அதிலே கொஞ்சமாத்திரமெங்களுக்கு மீதிவைக்கக் கிருபை செய்தீரோ, தேவரீர் உம்முடைய பாடுகளின்பாத்திரத்திலே எங்களுக்கு நியமித்த சொற்பமானபங்கு எங்களுக்கு வேண்டாமென்று நாங்களே எங்களுக்குச் சத்துராதிகளாய்த் தள்ளாமல் மனப்பற்றுதலாய் அதை ஏற்றுக்கொண்டு தேவரீர் நித்திய பேரின்ப விராச்சியத்தில் முத்திபேறுபெற்றவர்களுக்குத் திருப்தியாய்த் தந்தருளுகிற சொல்லிலடங்காத ஆநந்தத்துக்கும் அடியோர்கள் பங்காளிகளாகும்படிக்கு அநுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமீ.—ஒரு-பர-பிரி-திரி.

முத.—எங்கள்.—மற்றதும். (ககூ-ம்.) பக்கங்காண்க.

பாடல்.

சகல படைப்புகட்கும் இறையோன் பரதேசிபோல்,
தவித்துத் தள்ளாடி நின்ற முறையால்,
சுகிர்த சிமோனென்றவர் உதவச் சிலுவைதன்னைச்
சுமந்து நடக்கலானர் வதைய.

~~~~~~~



## ஆரும் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே.—மற்றதும். (கஙரு-ம்.) பக்கங்காண்க.

**பத்தியுள்ள ஒரு ஸ்திரீயானவள் சேசுநாதருடைய திருமுகத்தைத் துடைக்கிருள்.**

அந்தப் பரிசுத்த ஸ்திரீயானவள் தன் திவ்விய கர்த்தரைத் தரிசிக்கத் தக்கதாக கிஷ்டூரச் சேவகருடைய நெருங்கின படைநடுவே யுட்புகுந்து போனதினலே காண்பித்த அதிசயமான தைரியத்தை ஆச்சரியத்தோடே யோசிப்போமாக. சேசுநாதருடைய திருமுகமானது உமிழ்நீர், தூசி, வேர்வை, இரத்தத்தினல் மிகவுங் கறைபிடித்திருக்கிறதை அவள் கண்டு மெத்தவும் மனமிரங்கி யழுது பிரலாபிக்கிறுள். சகல அர்ச்சிய சிஷ்டவர்களையும் ஆநந்தத்தினல் பரவசமாக்கிறதுமாய்ச் சம்மனசுக்கள் தானே யதின் சோதிப் பிரகாசத்தை நிமிர்ந்து பார்க்கக்கூடாமல் தங்களுடைய இறக்கைகளினலே தங்களை மறைத்துக் கொள்ளும்படியாய் அவர்களுக்குப் பிரமிப்பை வருவிக்கிறதுமா யிருக்கிற இந்தத் திருமுகம் இப்படி வேற்றுருவா யிருக்கின்றதின்மேல் சலித்துத் தேவஸ்நேகத்தின் மிகுதியினலே ஒன்றுக்கும் பயப்படாமல் சேசுநாதருடைய திருப்பாதத்தையண்டி வணக்கத்துடனே யவருடைய திருமுகத்தைத் துடைக்கிருள். உடனே அந்தத் திருமுகத்தின் மகிமையுள்ள சாயல் அதைத் துடைத்த வஸ்திரத்திற் பதிந்ததினல் அவளுடைய விசுவாசத்திற்குப் பலனுயிற்று.

செபம்.—சகல மனுமக்களிலும் அதிக சுபசவுந்தரியமுள்ள சேசுவே! தேவரீருக்கு எங்கள்பேரிலுள்ள பட்சமிகுதியானது தேவரீரை எந்தக்கோல மாக்கிப்போட்டது! மெய்யாகவே யிப்போது விசேஷமாய் எங்கள் ஆராதனைகளுக்கும் ஸ்துதிகளுக்கும் மிகவும் பாத்திரமா யிருக்கிறீர். ஆகையால் தேவரீருடைய திருச்சமுகத்தில் நாங்கள் சாஷ்டாங்கமாக விழுந்து தேவரீரையாராதித்து அடியோர்கள் உமக்குச்செய்த துரோகங்களை மன்னிக்கவும்எங்களுடைய ஆத்துமம் பாவத்தினலே இழந்துபோன தன் சுபசவுந்தரியத்தை அதற்கு மறுபடி தந்தருளவும்வேணு
~~~~~~~

மென்று தேவரீரைப் பத்தி வணக்கத்தோடே மன்றாடுகிறோம் சுவாமீ.—ஒரு-பர-பிரி-திரி.

மூத.—எங்கள்.—மற்றதும். (௧௧௬-ம்.) பக்கங்காண்க.

பாடல்.

அழுதகண்ணீர் துடைத்துக் காக்கும் ஆண்டவனை நா
அந்நீத கொலைக்குள்ளா யாக்கப்,
பழுதற்ற மாதொருத்தி கண்டுமுகந்துடைக்கப்,
பார்த்தோமே கல்நெஞ்சர் நம்போ லுண்டோ?

## ஏழாம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே.—மற்றதும். (௧௧௫-ம்.) பக்கங் காண்க.

### சேசுக்கிறீஸ்துநாதர் இரண்டாம்விசை குப்புற விழுகிறார்.

அவதரித்த தேவனாகிய சேசுநாதர் மறுபடி இளைத்துக் களைத்து விழுகிறதை யோசிப்போமாக. பலியாகப் போகிற அந்தத் திவ்விய கர்த்தர் தம்முடைய பலியின் பயங்கரத்தினால் எத்தனமாகிய பாரமான சிலுவை மரத்தின்கீழே சோர்ந்து கிடக்கிறதையுந் தம்மைக் கொலைப்படுத்தப் போகிற நிஷ்டூரச் சேவகர்களாலே மறுபடி கொடூரமா யடிபடுகிறதையும் விசாரிப்போமாக. வணக்கத்துக் குரிய இரட்சகர் நமது பேரில்வைத்த அளவில்லாத பட்சத்துக்கு அத்தாட்சி காண்பிக்கத் தக்கதாக இப்படி இரண்டாமுறை தரையிலே விழச் சித்தமானார். ஏனெனில் நாம் அடிக்கடி பற்பல குற்றங்களில் விழுந்தாலுந் தைரியமற்று அவநம்பிக்கைப் படாமல் தம்முடைய தயவை நம்பிக்கொண்டு மறுபடி உறுதியான பிரதிக்கினையோடே எழுந்திருக்க வேணுமென்றுஞ் சகலதுன்ப சோதனைகளி லகப்பட்டிருந்தாலும் மனத்திடனைக் கைவிட லாகாதென்றும் பரகதியின்வழி முள்ளு முறடும் நிறைந்ததா யிருக்குதென்றும் பரலோக மகிமைப் பிரதாபத்தை யடையத்தக்கதாகச் செம்பொன் உலையிற் சுத்தமாகிறாப்போலே உபத்திரவங்களின் வழியாய்ப் பரிசுத்தமாக வேணுமென்றும் அவ்விதமாய் நமக்குப் படிப்பிக்கத் திருவுளமானார்.



செபம்.—ஆ! எங்களுக்குப் பலமாகிய சேசுவே! அடியோர்களெந்தப் பாவத்திலுந் திரும்ப விழாதபடிக்கு எங்களைத் தற்காத்தருளும். தேவரீர் நித்திய நரகத்திலே நின்று எங்களை மீட்கத்தக்கதாக அநுபவித்த இளைப்புத் தவிப்பு வருத்தங்களை அடியார்கள் வீணாக்கி முடிவில்லாத கேட்டுக்கும் நிர்ப்பாக்கியத்துக்கும் உள்ளாகாதபடிக்கு எங்களைக்காப்பாற்றி இரட்சியுஞ்சுவாமீ.—ஒரு-பர-பிரி-திரி.

முத.—எங்கள்.—மற்றதும். (௧௧௬-ம்.) பக்கங்காண்க.

பாடல்.

அவ்வுலகத்தையேந்துந் தேவன் அடியால் நொந்து,
மீண்டுங்குப்புற வீழ்ந்தார்; ஆ, ஆ,
பாவிகளான நம தடிமை நீக்கிட இந்தப்
பாடோ? ஐயையோ! என்ன கொடுமை.

## எட்டாம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே.—மற்றதும். (௧௧௫-ம்.) பக்கங்காண்க.

### சேசுநாதர் தம்மைப்பின்சென்று புலம்புகிற ஜெருசலேமென்கிற பட்டணத்தின் புண்ணிய ஸ்திரீகளுக்கு ஆறுதல் சொல்லுகிறார்.

இவ்விடத்தில் நம்முடைய திவ்விய இரட்சகருடைய நிகரில்லாத தயாளத்தி னிரக்கத்தைப்பார்த்து ஆச்சரியப்படக்கடவோம். பிரலாபத்துக்குரிய அவருடைய கஸ்தியுபத்திரவங்களைக் கண்டழுது புலம்புகிற புண்ணிய ஸ்திரீகளுடைய வியாகுலப் பிரலாபத்தின்பேரில் மனமிரங்கித் தாமே அநுபவிக்கிற நோக்காடுகளை மறந்தாற்போல அவர்களுடைய மிகுதியான துக்கத்துக்கு வேண்டிய ஆறுதல்களைச் சொல்லுகிறதற்கு மாத்திரம் நினைவா யிருக்கிறார். தம்மைப்பற்றி அழாமல் தங்களையுந் தங்கள் பிள்ளைகளையுந் தேவதுரோகிகளான தங்கள் தேசத்தாரையும்பற்றி அழுது புலம்ப வேணுமென்று கற்பித்ததினாலே நமதுபேரில் நா மிரக்கமா யிருக்கிறது போதாமல் நம்முடைய உபாதைகளுக்குக் காரணமாயிருக்கிற நம்முடைய பாவங்களி

ணிமித்தம் அழுது மனஸ்தாபப்பட்டு, அவைகளினாலே நமக்கு வருகிற பயங்கரமான ஆக்கினைகளைத் தயவினாலே நிவர்த்திபண்ண வேணுமென்று படிப்பித்தருளினார்.

செபம்.—ஆ! நேசத்துக்குரிய சேசுவே! துன்பப்படுகிற ஆத்துமாக்களுக்கு மெய்யான ஆறுதல் தரும் கர்த்தாவே! இரக்கமுள்ள உமது கிருபாகடாட்சத்தா லெங்களை நோக்கியருளும். ஜெருசலேம் பட்டணத்தின் பத்தியுள்ள ஸ்திரீகளைப்போலே சிலுவையின் திருப்பாதையிலே மனத்திடனோ டும்மைப் பின்சென்று அவர்களைப்போலே யுமது திருவாயில் நின்று ஞான [illegible]ய ந்தரும் வார்த்தைகளைக் கேட்டுக்கொள்ளவுஞ் சொல்லிலடங்காத ஆநந்தமுள்ள உமது தயாளத்தினாறுதலை அநுபவிக்கவும் அடியோர்களுக்குக் கிருபைசெய்தருள வேணுமென்று தே[illegible] ரை மன்றாடுகிறோம்.—ஒரு-பர-பிரி-திரி.

முத—எங்கள்.—மற்றதும். (௧௯௯-ம்.) பக்கங்காண்க.

பாடல்.

இசராயேல் மாதர்கண்டு புலம்ப ஆறுதலவர்க்,
[illegible]ர வுலகநாதர் விளம்ப,
அசையா நமதுள்ளங் கல்லோ? நாம் [illegible]
அடுத்த சமயமிது அல்லோ?

〰〰〰

## ஒன்பதாம் ஸ்தலம்.

முத.—[illegible]வ்விய சேசுவே.—மற்றதும். (௧௯௫-ம்.) பக்கங் காண்க.

### சேசுக்கிறீஸ்துநாதர் மூன்றுமுறை தரையிலே விழுகிறார்.

ஆராதனைக்குரிய சேசுநாதர் மிகுந்த பிரயாசத்தோடே கபாலமலையின் உச்சியிலே சேருகிறதை யோசிப்போமாக. அவ்விடத்தில் நின்று கொடிய பாவிகளின் கையால் தாம் பலியாகப்போகிற ஸ்தலத்தை நோக்கிப் பார்க்கிறார். உடனே அவருக்குண்டாகிற துயரமான கவலை என்னவென்றால், தம்முடைய திருவிரத்தத்தின் பலனைத் தங்களுக்கு வியர்த்தமாக்கி, நரகத்தில்



விழும் எண்ணிறந்த பாவிகளுடைய நித்தியக் கேட்டையும் நம்முடைய இடைவிடாத பாவ அக்கிரமங்களையும் நினைத்து விசனப்படுகிறார். அவரின்னமநுபவிக்கப்போகிற சகல நிர்ப்பந்தங்களையும் விட அந்தத் துயரமான நினைவு அவருடைய இரக்கமுள்ள இருதயத்தைக் கஸ்திப்படுத்தி வாதிக்கிறது. அதைப்பற்றி அவருடைய திரு ஆத்துமந் துக்கசாகரத்தி லமிழ்ந்தினதினாலே அவர் பலனற்றுத் தயங்கிக் களைத்துப் பூங்காவனத்திலே மரண அவஸ்தைப் பட்டதுபோலே யிங்கேயும் அயர்ந்து தரையில் குப்புறவிழுகிறார்.

செபம்.—ஆ! ஸ்நேகபலியான சேசுவே! இங்கேயோ மனிதர்களின் இரட்சணியத்துக்காக உம்முடைய பிராணனைக் கொடுக்கப் போகிறீர்? ஆண்டவரே! அடியோர்கள் பரலோகத்தில் எங்கள் புகழ்ச்சியின் பலியை நித்தியகாலமும் உமக்கு ஒப்புக்கொடுக்கப் பாத்திரவான்களாகும்படிக்கு உம்முடைய திருவிரத்தப் பலியின் பேறுகளை எங்களுக்குத் தந்தருள வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்.—ஒரு-பர-பிரி-திரி.

முத.—எங்கள்.—மற்றதும். (௧௯௯-ம்.) பக்[illegible]

பாடல்.

சிலதேகம் நொறுங்கி[illegible]சிதைய மூன்றுமுறையும்,
[illegible]வயுடனே வீழ்ந்தார் வதைய,
பாலரும் பால்குடிக்கார் கண்டால் ஆண்டவர் படும்
பாடுகள்சொல்ல நாவு முனைடோ?

〰〰〰

## பத்தாம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே.—மற்றதும். (௧௯௫-ம்.) பக்கங் காண்க.

### சேசுநாதருடைய வஸ்திரங்களை உரிந்து கொள்ளுகிறார்கள்.

எண்ணிக்கையில்லாத சனங்களுக்கு முன்பாகக் கொலைக்காரர் சேசுக்கிறீஸ்துநாதருடைய திருவஸ்திரங்களை நிஷ்டூரத்தோடும் மானபங்கத்தோடும் உரிந்தபோது நம்முடைய திவ்விய

இரட்சகரநுபவித்த துக்கமும், வேதனையும் எம்மாத்திரமென்று யோசிப்போமாக. அவர் சர்வாங்கத்திலும் பட்ட காயங்களோடே அவருடைய வஸ்திரங்கள் ஒட்டிக் காய்ந்திருந்தபடியினாலே அவைகள் உரியப்பட்டபோது அவருடைய காயங்களெல்லாந் திரும்பவுந் திறந்துபோக அவருடைய திருச்சதை எப்பக்கத்திலுங் கிழிய இரத்தம் வெள்ளமாயோடக் கசைகள் முதலிய ஆயுதங்களாலடிபட்டதினாலே அவருக்குண்டான கொடூரவேதனைகளை எல்லாம் மறுபடியொருமிக்க அநுபவித்தார். நாங்கள் தருடைய அசுசியான சுகங்களையும் துர்மார்க்க அக்கிரமங்களையும் பற்றி உத்தரிக்கிறதற்கு ஆண்டவருடைய திருச்சரீரத்தில் உண்டான கொடூர நோக்காடுகளைப் பார்த்துச் சகல பாவங்களையும் வெறுத்து விடாதிருக்கலாமோ?

செபம்.—ஆ! மதுரசேசுவே! திவ்விய ஆட்டுக்குட்டியே! பலியாகிறதுக்குக் கொலைக் களத்துக்கு வந்துசேர்ந்தீர். ஐயோ! தேவரீர் முறையிடுகிறதற்கு வாய்திறவாமல் எவ்வளவோ பொறுமையாயிருக்கிறீர். தேவரீருடைய மவுனம் மகாதிடமுள்ள பிரசங்கம்போலக் கஸ்தியில் எங்கள் பொறுக்காமையையும், முறைப்பாடுகளையும் நாங்கள் அடக்கவேணுமென்று எத்தனையோ உறுதியாகக் கற்பிக்கின்றது. மேலும் உமது இஷ்டப்பிரசாதமாகிய விலைமதிக்கப்படாத வரத்தை நாங்களிழந்த நிர்ப்பாக்கியத்துக்குப் பரிகாரமாக உம்முடைய வஸ்திரங்கள் உரியப்படச் சித்தமானீரே! ஆகையால் ஆராதனைக்குரிய இரட்சகரே! நாங்கள் எங்களிடத்திலுள்ள பழைய துர்க்குணங்களை யுரிந்துபோட்டு, உம்முடைய தேவஇஷ்டப் பிரசாதமாகியதிவ்விய ஆடையைத் தரித்துக்கொண்டு, உம்முடைய திரு இருதயத்தின் சற்குணங்களை அநுசரிக்கும்படி எங்களுக்குக் கிருபை செய்தருளுஞ் சுவாமீ.—ஒரு-பர-பிரி-திரி.

முத.—எங்கள்.—மற்றதும். (௧௯௬-ம்.) பக்கங் காண்க.

பாடல்.

துர்த்த ருடலோடொட்டிக் காய்ந்த திருச்சட்டையை,
தோலுரிபோ லுரிக்க நேர்ந்தார்,
பார்க்கக்கூடுமோ? இந்த கோரம் வானோர்களேனும்,
பரனை மறைக்காரோ? இந்நேரம்.



## பதினோராம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே.—மற்றதும். (௧௯௫-ம்.) பக்கங் காண்க.

சேசுக்கிறீஸ்து நாதரைச் சிலுவையில் அறைகிறார்கள்.

நம்முடைய திவ்விய இரட்சகராகிய சேசுநாதர் சிலுவையிலே யறையப்படுகிறதுக்காக இயல்பாய்க் கொலைக்காரருக்குத் தம்மைக் கையளித்துச் சிலுவைமரத்திலே தம்முடைய கைகால்களை நீட்டி ஒப்பித்துக்கொடுக்கிறதை யோசிப்போமாக. அவருடைய திருக்கைகால்களிலே கொடிய பாதகர் பெரும் இருப்பாணிகளை வைத்துச் சுத்தியாலே அடித்துத் துளைக்கிறபோது அவரநுபவித்த வேதனை நிர்ப்பந்த மிவ்வளவென்று சொல்லக் கூடுமோ? அப்போது அவருடைய திருச்சதைகிழிய, எலும்புகளின் மூட்டுகள் பிசக, நரம்புகள் தெறிக்க, இரத்தத்தாரைகள் அறுந்துபோக, உதிரம் வெள்ளமாயோட, அவர் தவித்து அயர்ந்து மெத்தப் பலவீனபட்டதல்லாமலும் இத்தனைக் கடின நிர்ப்பந்தங்களோடேகூட மகா கொடூரத் தாகத்தின் உபத்திரவத்தையும் அநுபவித்தார்.

ஓ! பாவமே, ஓ! சபிக்கப்பட்ட பாவமே, எங்கள் இரட்சணியத்தின் பலியாகிய திவ்விய கர்த்தரைச் சொல்லிலடங்காத இத்தனை நிஷ்டூர ஆக்கினைக்குள்ளாக்கித் துக்க சாகரத்தில் அமிழ்த்தினது நீயே. ஆ! கிறீஸ்துவர்களே, நமது பேரில் இரட்சகரிடத்தில் எவ்வளவோ மிகுதியான அன்பு! எவ்வளவோ அதிசயமான நேசம்! அதைப்பார்த்துநம்முடைய நெஞ்சம் பிளந்து தேவ ஸ்நேகத்தின் அக்கினியாற்பற்றி எரியக்கடவது, நம்முடைய ஆத்துமம் இவ்வுலகத்தின் சுகசெல்வங்களை எல்லாம் வெறுத்துவிடக்கடவது. நம்முடைய இருதயம் சேசுநாதருடைய திரு இருதயத்தோடே கூட எப்போதைக்குஞ் சிலுவையில் அறையப்படவும், நம்முடைய கண்கள் இரவும், பகலும் பிரளயமாய்க் கண்ணீர்விட் டழவுங்கடவது.—ஒரு-பர-பிரி-திரி.

முத.—எங்கள்.—மற்றதும். (௧௯௬-ம்) பக்கங் காண்க.

பாடல்.

ஐயோ மூன்றாணியாலே, சிலுவை மீதுகர்த்தரை,
அறைந்துகொல்லுவ தென்ன வலுமை!
மெய்யாய் நம்மைரட்சிக்கும் வான ஆண்டவர்க்கு நாம்,
விரும்பிச்செய் நன்றியிது தானோ?

## பன்னிரண்டாம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே.—மற்றதும். (கக...ம்.) பக்கங் காண்க.

### சேசுக்கிறீஸ்துநாதர் சிலுவையில் உயிர்விடுகிறார்.

எல்லாப் பரிசுத்தத் தனத்தையு முடையவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் இரண்டு பாதகர் நடுவிலே சிலுவையில் உயிர்விடுகிறதைப் பார்த்து அவருடைய அன்பின் மிகுதியையும், மதுரத்தன்மையையும் யோசித்து ஆச்சரியப்படுவோமாக. அவர்தம்முடைய பிதாவை நோக்கித் தம்மைக் கொலைப் படுத்துகிறவர்களுக்காகப் பொறுத்தலைக் கேட்கிறார். நல்லகள்ளனைப் பார்த்து இன்று தானே[illegible] கூடப் பரகதியிலிருப்பாயென்று திருவுளம் பற்றி[illegible] தம்முடைய பிரிய சீஷனுக்குத் தம்முடைய திருத்தாயாரை மாதாவாக ஒப்புக்கொடுக்கிறார். தம்முடைய பிதாவின் கையில் தமதாத்துமத்தையொப்பித்து, எல்லாம் நிறைவேறிற்றென்று உரைத்து நமக்காக உயிர்விடுகிறார். உடனே படைப்புண்ட வஸ்துக்களெல்லாம் அவருடையதேவசத்துவத்தைப் பிரசித்தப் படுத்துகிறது. சூரியன் மங்கி நிற்கப், பூமியதிரக், கற்பாறைகள் பிளந்துபோக, உலகமெல்லாந் தன்னைச் சிருஷ்டித்தவர் மரிக்கிறதைப்பார்த்துத் துக்கத்தினு லழிந்துபோக விரும்புகிறதாகத்தோன்றுகிறது.

ஓ! பாவிகளே, இப்படிப்பட்ட பிரலாபத்துக்குரிய சமயத்தில் நீங்கள்மாத்திர மன மிளகாம லிருப்பீர்களோ? மரிக்கிற உங்கள் திவ்விய இரட்சகரை நோக்கிப்பாருங்கள். உங்கள்பாவங்கள் எம்மாத்திரம் நிர்ப்பந்தமான அந்தஸ்தி லவரை வைத்த தென்று கண்டறியுங்கள்; ஆகிலும் நீங்கள் உங்கள் பாவங்களை வெறுத்து மெய்யான மனஸ்தாபப்பட்டால் உங்களுக்குப்



பொறுத்தலைத்தந்தருளச் சித்தமாயிருக்கிறார். இதோ உங்களைக்காக்காத்துக்கொண்டிருக்கிறதற்கு அவருடைய திருப்பாதங்கட்டுண்டிருக்கிறது. உங்களைத் தயவோடு அணைத்துக் கொள்ளுகிறதற்குத் தம்முடைய திருக்கரங்களைவிரித்துக் கொண்டிருக்கிறார். உங்கள்பேரில் தம்முடைய வரப்பிரசாதங்களைத் திரளாய்ச் சொரியவிடுகிறதுக்கு அவருடைய திருவிலாத்திறக்கவு மவருடைய திரு இருதயம் ஊடுருவப்பட்டிருக்கிறது. உங்களுக்குச் சமாதானமும்; ஆறுதலுங் கொடுக்கிறதற்கு அநந்த பட்சத்தின் குறிப்பாக அவருடைய திருச்சிரசு உங்கள் முகமாகச் சாய்ந்திருக்கிறது. ஆகையால் நாமெல்லாரு மவருடைய திருச்சிலுவை யடியிலே யோடி இன்று அவர் நமக்காகத் தம்முடைய உயிரைத் தந்தபடியினாலே நமது உயிரை யவருக்கு என்றென்றைக்கும் ஒப்புக்கொடுப்போமாக.—ஒரு-பர-[illegible]-திரி.

முத.—எங்கள்.—மற்றதும். (கககூ-ம்.) பக்கங் காண்க.

பாடல்.

பொறுவில் மன்னுயிர்களை மீட்கச் சிலுவைமீது,
பலியாய்த் தன்னுயிர்தந்தார் பார்க்கக்,
கதிரோன் சுடருமங்கிப் போச்சே நமதுள்ளம்,
கரையாததென்ன? இரும் பாச்சோ?

## பதின்மூன்றாம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே.—மற்றதும். (ககூ-ம்.) பக்கங் காண்க.

### சேசுநாதருடைய திருச்சரீரத்தைச் சிலுவையில் நின்றிறக்கி அவருடைய திருத்தாயார் மடிமேல் வளர்த்துகிறார்கள்.

உருக்கம் நிறைந்த தேவமாதா தம்முடைய திருக்குமாரனாகிய சேசுநாதருடைய மரணத்துக்குப்பின் அநுபவித்தசொல்லிலடங்காத துயரத்தை யோசிப்போமாக. அவருடைய சீஷர்கள் அவருடைய திருச்சரீரத்தைச் சிலுவையில் நின்று இறக்குகிறபோது வியாகுலமாதா எவ்வளவோ துக்கத் துயரத்தோடே அதைத் தம்முடைய கைகளிலேந்தி மடிமேல் வளர்த்திக்கொண்டிருக்கிறாள். அவருடைய திருமுகம் வெளுத்து வேற்றுருவாகி

இரத்தக்கறை பிடித்திருக்கிறதையுங் கண்விழி பஞ்சடைந்து மங்கியிருக்கிறதையுந் திருவாய் மூடியிருக்கிறதையுந் திருவிலா திறக்கப்பட் டிருக்கிறதையுங் கைகால் ஊடுருவப்பட் டிருக்கிற தையும் பார்த்துத் துக்கசாகரத்தில் அமிழ்ந்திப் பரதவிக்கிறாள். அந்தப் பார்வையானது தேவமாதாவுக்குத் தமதுசாவைவிடமகா கொடிய நிர்ப்பந்தமா யிருக்கிறது. அவளுடைய வியாகுலத்தின் மிகுதியும் பேறுபலனுஞ் சர்வேசுரனுக்கு மாத்திரந் தெரியக் கூடும்.

செபம்.—ஆ! வியாகுலமுள்ள மரியாயே, உம்முடைய துக்க துயரத்துக்குக் காரணம் நாங்கள்தா னல்லவோ? உம்முடைய தேசகுமாரனாகிய சேசுநாதரைச் சிலுவையில் அறைந்தது நாங்கள். உம்முடைய திரு இருதயத்தைக் குத்தி ஊடுருவினது எங்கள் பாவமென்கிற வாள்தானே. ஆ! தயாபமுள்ளதாயே, அடியோர்களுக்காக மன்றாடிப் பொறுத்தலை அடைந்தருளும். சிலுவையில் மரித்த எங்களன்பரை உம்முடைய திருக்கரங்களில் ஆராதிக்க உத்தாரங் கட்டளையிடும்படி சிலுவையின் அடியிலே நீர் அநுபவித்த நிகரில்லா வியாகுல துக்கத்தை அடியோர்கள் ஒருகாலும் மறவாதபடிக்கு அதை எங்க ளிருதயங்களில் உறுதியாய்ப் பதியப்பண்ணியருள வேணுமென்று உம்முடைய பாதத்திலே விழுந்து மன்றாடுகிறோம்.—ஒரு-பர-பிரி-திரி.

முத.—எங்கள்.—மற்றதும். (௧௧௬-ம்.) பக்கங் காண்க.

பாடல்.

மரியே, ஐயையோ! உயிர் பிரிந்த நின்மகன் றன்னை,
மடிமேல் வளர்த்தி மனங் கரிந்தே,
இருகண்ணீ ராறுயோட முகமுஞ் சோரப்புலம்ப,
இக்கோலங் காணவைத்தார் தகு மோ

~~~~~~

## பதினான்காம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே.—மற்றதும். (௧௧௯-ம்.) பக்கங் காண்க.

பதினான்காம் ஸ்தலம். ௨௧௧

### சேசுநாதருடைய திருச்சரீரம் அடக்கஞ் செய்யப்படுகிறது.

செபம்.—திவ்விய சேசுவே! எங்களுக்கு மிகவும் பிரியமுள்ள இரட்சகரே! எங்கள் இரட்சணியத்தின் திவ்விய பிணையுமாய் ஆராதனைக்குப் பாத்திரமுமா யிருக்கிற உமது திருச்சரீரம் இதோ ஒரு கல்லறையில் அடக்கஞ்செய்யப்பட்டிருக்கிறதேஎங்களை மீட்டிரட்சிக்கத் தக்கதாகத் தேவரீர் அநுபவித்த கடின நிர்ப்பந்தங்களையும் அடைந்த அவமானமுள்ள மரணத்தையும் அடிக்கடி நினைத்துத் தியானிக்கிறதே யிந்தக் கண்ணீர்க் கணவாயிலே எங்களுக்கு மிகவும் ஆறுதலா யிருக்கும்படியாகத் தயைபுரியும். தேவரீருடைய அன்பின் தேவதிரவிய அநுமானமாகிய தேவநற்கருணைவழியா யும்மை யுட்கொள்ளுகிறதுக்கு நாங்கள் புது இருதயத்தோடே அண்டி வரவேணுமென்று கற்பிக்கத் தக்கதாகத் தேவரீர் ஒரு புதுக்கல்லறையில் அடக்கஞ் செய்யப்படச் சித்தமானீரோ, ஆகையால் தேவரீர் எங்கள் பாவ அழுக்கெல்லாம்போக்கி எங்களைச் சுத்திகரித்துத் தேவநற்கருணையாகிய உமது திருப்பந்திக்கு நாங்கள் அடிக்கடி பங்காளிகளா யிருக்கிறதற்கு எங்களைப் பாத்திரவான்களாகச் செய்தருளும். இந்தக் கல்லறையிலே தானே அடியோர்களுடைய சகல அக்கிரமங்களையும் ஆசாபாசங்களையும் புதைத்து, நாங்கள் எங்கள் பாவ துர்க்குணங்களுக்கும் பிரபஞ்ச சகல காரியங்களுக்கும் மரித்தவர்களாய் உம்மோடுகூட மறைவுள்ள சீவியமாய்ச் சீவித்துப் பாக்கியமான மரணத்தைஅடையவும் உமது மகிமைப்பிரதாபத்திலே வெளியரங்கமாகத் தேவரீரைத் தரிசிக்கவும் நாங்கள் பேறுபெற்றவர்க ளாகும்படிக்குக் கிருபை செய்தருளுஞ் சுவாமீ.—ஒரு-பர-பிரி-திரி.

முத.—எங்கள்.—மற்றதும். (௧௧௬-ம்.) பக்கங் காண்க.

பாடல்.

கர்த்தர் திருக்கல்லறை யருகில் நெருங்கி யன்பால்,
கண்ணீர் சொரிந்துமன துருகி,
நித்திய கதியிற்சேர வாரும் பாவிகள்மீது,
நிமலா சேசுவே தயை கூரும்.

~~~~~~

## பீடத்துக்கு முன்பாக.

முத.—திவ்விய.—மற்றதும். (ககரு-ம்.) பக்கங்காண்க.

முத.—நாங்கள் சேசுக்கிறீஸ்துவின் திருவாக்குத் தத்தங்களுக்குப் பாத்திரவான்களாகத் தக்கதாக,

துணை.—மிகவும் வியாகுலமுள்ள கன்னிகையே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

முத.—ஆண்டவரே! எங்கள் இரட்சணியத்தின் அடையாளங்களை,

துணை.—தேவரீருடைய திரு ஊழியனாகிய அர்ச். பிரான்சிஸ்குவினிடத்திற் பதியச்செய்தீர்.

முத.—நமக்கு அதிசிரேஷ்ட மேற்றிராணியாராகிய அர்ச்சியசிஷ்ட பாப்பானவருக்காக வேண்டிக்கொள்ளுவோமாக,

துணை.—கர்த்தர் அவரை ஆதரித்துக் காப்பாற்றி இவ்வுலகத்திற் பாக்கியவானாக்கி அவருடைய சத்துராதிகளிடத்தில் அவரைக் கையளிக்காமல் இரட்சித்துக் கொள்ளுவாராக.

முத.—மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளுவோமாக,

துணை.—நித்திய இளைப்பாற்றியை அவர்களுக்குத் தந்தருளுஞ் சுவாமீ. முடிவில்லாத ஒளி அவர்களுக்குப் பிரகாசிக்கக்கடவது.

### பிரார்த்திக்கக் கடவோம.

சர்வேசுரா சுவாமீ! எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் பாவிகளாகிய யூதர்களுடைய கையிற் காட்டிக் கொடுக்கப்பட்டுச் சிலுவையி னிர்ப்பந்தத்தை அநுபவித்து இரட்சித்தருளின இந்தக் குடும்பத்தைக் கிருபைக் கண்கொண்டு பாரும்.

நித்திய சீவியமுள்ள கடவுளின் குமாரனாகிய சேசுக்கிறீஸ்து நாதரே சுவாமீ! தேவரீர் உலகத்தின் இரட்சணியத்துக்காக மத்தியான வேளையிற் சிலுவை மரத்தில் அறையுண்டு உயர்த்தப்பட்டு எங்கள் பாவங்களுக்கு விமோசனமாக உம்முடைய விலைமதியாத திரு விரத்தத்தைச் சிந்தினீரே, அடியோர்கள்



மரித்த பிற்பாடு மோட்ச விராச்சியத்திற் பிரவேசித்து நித்திய ஆநந்த மகிமைப் பிரதாபத்தை யடையத் தக்கதாக அநுக்கிரகஞ் செய்தருள வேணுமென்று தேவரீரைத் தாழ்ச்சி வணக்கத்துடனே மன்றாடுகிறோம்.

திவ்விய சேசுவே! தேவரீர் பாடுபட்ட நேரத்தில் வியாகுலமென்கிற வாளினால் ஆத்துமத்திலே யூடுருவப்பட்ட உம்முடைய திருமாதாவாகிய அர்ச். கன்னிமரியம்மாள் உம்முடைய தயாளமுள்ள சந்நிதியில், எங்களுக்காக இப்போதைக்கும் எங்கள் மரணநேரத்திலும் மனுப்பேசத் தேவரீர் தயைபுரிய வேணுமென்று உம்மைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோஞ் சுவாமீ.

எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துவே! உலகத்தில் பத்தியானது குளிருகிறதா யிருந்த காலத்திலே உம்முடைய திவ்விய ஸ்நேகத்தின் அக்கினியினாலே எங்களிருதயத்தைப்பற்றி எரியச் செய்யும்படிக்கு அர்ச். பிரான்சீஸ்குவின் சரீரத்தில் உம்முடைய பாடுகளின் திரு அடையாளங்களைப் புதுமையாகப் பதியச் செய்தீரே, அவருடைய மன்றாட்டுக்களையும் பேறுபலன்களையுங் குறித்து அடியோர்கள் எங்கள் சிலுவையை எப்போதைக்குஞ் சுமந்து கொள்ளவும் நல்லதபசின் கனிகளைத் தரவும் தயாபரரா யநுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமீ.

சர்வ வல்லவருமாய் நித்தியருமா யிருக்கிற சர்வேசுரா! உம்முடைய திரு ஊழியனா யிருக்கிற எங்கள் [illegible] மேற்றிராணியாராகிய* 13-ம் சிங்கராயர் என்கிற பாப்பானவர்மேல் தயவா யிரும். அவருக்குமுடைய வரப்பிரசாதத்தைக்கொண்டு தேவரீருக்குப் பிரியமுள்ளவைகளை விரும்பி [illegible] மட்டும் அவைகளை நிறைவேற்றும்படிக்கு நித்திய ஈடேற்றத்தின் நெறியில் அவரை உம்முடைய தயாளத்தின்படியே நடப்பித்துக் கொள்ளுஞ் சுவாமீ.

பொறுத்தலைத் தந்தருள விரும்புகிறவருமாய் மனுக்களின் இரட்சணியத்தை அபேட்சிக்கிறவருமா யிருக்கிற சர்வேசுரா சுவாமீ! எப்பொழுதுங் கன்னிகையாயிருக்கிற அர்ச். மரியம்மா

---

* அந்தந்தக் காலத்தின் அர்ச். பாப்புவினுடைய பேரைச் சொல்லவும்.

ளுடைய மன்றாட்டையும் உம்முடைய சகல அர்ச்சியசிஷ்டவர்களின் வேண்டுதல்களையுங் கேட்டுத் தேவரீர் இப்பரதேசத்தினின்று மறுலோகத்திற் சேர்ந்த எங்கள் சபைக்கூட்டத்தார், சகோதரர், உறவின்முறையார், உபகாரிகளை நித்திய ஆநந்த பாக்கியத்துக்குப் பங்காளிகளாக்கக் கிருபைசெய்தருள வேணுமென்று உம்முடைய தயாளத்தை நோக்கி மன்றாடுகிறோம். இந்த மன்றாட்டுக்களை எல்லாம் எங்கள் ஆண்டவருமாய்த் தேவரீரோடும் இஸ்பிரீத்து சாந்துவோடும் ஏகதேவனுமாய்ச் சதாகாலஞ் சீவியருமாய்ப் பரிபாலனஞ் செய்கிறவருமா யிருக்கிற சேசுநாதருடைய திருமுகத்தைப் பார்த்துத் தந்தருளுஞ் சுவாமீ.—ஆமென்சேசு.

---

## *சுருக்கமான சிலுவைப்பாதை.

### பீடத்துக்கு முன்பாகச் சொல்லத் தகுஞ்செபம்.

உத்தம மனஸ்தாப மந்திரத்தைச் சொல்லியபின்பு சொல்லத் தக்கதாவது.

திவ்விய சேசுவே! எங்களுக்காகவும் உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களுக்காகவுஞ் சிலுவைப்பாதையைச் சேவிக்கிறவர்களுக்கு அளிக்கப்பட்ட பலன்களை யடைய விரும்பித் தேவரீருடைய இரக்கத்தைக்கேட்டு மன்றாடுகிறோம்.

அர்ச். மரியாயே! வியாகுலமாதாவே, உம்மோடுகூடச் சிலுவைப்பாதையைச் செபிக்க விரும்புகிற நாங்கள் அதினுடைய சுகிர்த பலன்களை யடையும்படிக்கு எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

## முதல் ஸ்தலம்.

†முதலோதி.—திவ்வியசேசுவே! உம்மை யாராதித்து வணங்கி யுமக்கு நன்றியறிந்த தோத்திரம் பண்ணுகிறோம்.

‡துணைவர்.—அதேனென்றா லும்முடைய அர்ச். சிலுவையைக்கொண்டு உலகத்தை மீட்டிரட்சித்தீர்.

---

*இந்தச் சுருக்கமான சிலுவைப் பாதையைச் செபிப்பவர்கள் விரிவான சிலுவைப்பாதையா லடைகிறபலன்களை எல்லாம் அடைகிறார்கள்.

†‡இவைகளை அந்தந்த ஸ்தல செபங்களுக்கு முன் சொல்லு



திவ்விய சேசுவே! தேவரீர் சிலுவையிலே யறையுண்டு மரணத்தை யடையத் தீர்வையிடப்பட்டதைத் தியானித்து நாங்கள் தேவரீரை வணங்கி நமஸ்கரிக்கிறோம், அகோரத்தீர்வையிலே நின்றெங்களை யிரட்சித்தருளுஞ் சுவாமீ.—ஒரு-பர-பிரி-திரி.

## இரண்டாம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே.—மற்றதும்.

திவ்வியசேசுவே! தேவரீர் பாரமான சிலுவையைச் சுமந்துபோனதைத் தியானித்து உம்மையாராதிக்கிறோம். எங்களுக்கிவ்வுலகில் வருகிற கஸ்தி பொல்லாப்புகளைப் பொறுமையோடேயநுபவிக்கக் கிருபை செய்தருளுஞ் சுவாமீ.—ஒரு-பர-பிரி-திரி

## மூன்றாம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே.—மற்றதும்.

திவ்விய சேசுவே! தேவரீர் சிலுவையின் கீழேமுதல்விசைகுப்புறவிழுந்ததைத்தியானித்து உம்மையாராதிக்கிறோம். நாங்கள் செய்கிற பாவங்களிலே மூர்க்கராய்நிலைகொள்ளாம லுடனேயவைகளைவிட் டெழுந்திருக்க அநுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமீ! ஒரு-பர-பிரி-திரி.

## நான்காம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே.—மற்றதும்.

திவ்வியசேசுவே! தேவரீருடைய பரிசுத்தமாதா வுமக்கு எதிர்கொண்டு வருகிறதைக் கண்டு நீர்சொல்லிலடங்காத கஸ்தியையநுபவித்ததைத் தியானித்து உம்மை யாராதிக்கிறோம். நாங்கள் சாகும் வேளையிலே வியாகுலமாதாவின் அடைக்கலத்தை நாடைய அநுக்கிரகஞ்செய்தருளுஞ் சுவாமீ.—ஒரு-பர-பிரி-திரி.

---

வதுமல்லாமல், ஸ்தலசெப முடிந்தபின் ஒருபரமண்டலம் ஒரு பிரியதத்த மந்திரங்களையும், ஒருதிரித்துவத் தோத்திரத்தையும் சொல்லவும்.

## ஐந்தாம்ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே.—மற்றதும்.

திவ்வியசேசுவே! தேவரீர் சிலுவைசுமந்து போகிறதற்குச் சிரோனென்கிற சிமோ னுதவிசெய்ததைத் தியானித்து உம்மை யாராதிக்கிறோம். எங்களுக்கு நியமித்திருக்கிற சிலுவையாகிய துன்பங்களை யும்மோடுகூட நாங்கள் சுமக்கக் கிருபைசெய்தரு ளுஞ் சுவாமீ.—ஒரு-பர-பிரி-திரி.

## ஆறாம் ஸ்தலம்.

முத.—திவ்வியசேசுவே.—மற்றதும்.

திவ்விய சேசுவே! வெரோணிக்கம்மாள் தேவரீருடைய திரு முகத்தைத்துடைத்ததைத்தியானித்து உம்மை யாராதிக்கிறோம். நாங்கள் முகதாட்சணியத்தைப் பாராமல் புண்ணிய நெறியில் உறுதியாய் நடக்க அநுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமீ.—ஒரு-பர-பிரி-திரி.

## ஏழாம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே.—மற்றதும்.

திவ்விய சேசுவே! தேவரீர் சிலுவையின்கீழே யிரண்டாம் விசை குப்புற விழுந்ததைத் தியானித்து உம்மை யாராதிக்கி றோம். நாங்க ளொந்தப்பாவத்திலும் திரும்ப விழாதபடிக்குக் கிரு பைசெய்தருளுஞ் சுவாமீ.—ஒரு-பர-பிரி-திரி.

## எட்டாம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே.—மற்றதும்.

திவ்விய சேசுவே! தேவரீ ரும்மை நோக்கி யழுத செருச லேம் பட்டணத்து ஸ்திரீகளுக் காறுதல் சொன்னதைத் தியா னித்து உம்மை யாராதிக்கிறோம். நாங்கள் பண்ணின பாவத்து ரோகங்களுக்குத் துயரப்பட்டு அவைகளுக்காக எப்போது மழு து கொண்டிருக்கக் கிருபை செய்தருளுஞ் சுவாமீ.—ஒரு-பர-பிரி-திரி.



## ஒன்பதாம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே.—மற்றதும்.

திவ்விய சேசுவே! தேவரீர் சிலுவையின்கீழ் மூன்றாம் விசை குப்புற விழுந்ததைத் தியானித்து உம்மை யாராதிக்கி றோம். நாங்கள் சாவான பாவத்தோடே செத்து நித்திய நரகத்தி லே விழாதபடிக்குக் கிருபை செய்தருளுஞ் சுவாமீ.—ஒரு-பர-பிரி-திரி.

## பத்தாம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே.—மற்றதும்.

திவ்விய சேசுவே! தேவரீர் வஸ்திரங்க ளுரியப்பட்டதை யுந் தேவரீருக்குக் கசப்பான காடியைக் குடிக்கக் கொடுத்ததை யுந் தியானித்து உம்மை யாராதிக்கிறோம். நாங்கள் சகலத்திலுந் தேவ சித்தத்துக்குக் கீழ்ப்படிந்து பொறுமையோடே நடக்கக் கிருபைசெய்தருளுஞ் சுவாமீ.—ஒரு-பர-பிரி-திரி.

## பதினோராம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே.—மற்றதும்.

திவ்விய சேசுவே! தேவரீர் சிலுவையி லறையப்பட்டதைத் தியானித்து உம்மை யாராதிக்கிறோம். நாங்க ளிவ்வுலக செல்வ ங்களை வெறுத்துப் பரலோகத்தை மாத்திரமே நாடக் கிருபை செய்தருளுஞ் சுவாமீ.—ஒரு-பர-பிரி-திரி.

## பன்னிரண்டாம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே.—மற்றதும்.

திவ்விய சேசுவே! தேவரீர் சிலுவைமரத்தி லுயிர்விட்ட தைத்தியானித்து உம்மை யாராதிக்கிறோம். நாங்க ளும்மை மா த்திரமே நேசித்து இஷ்டப்பிரசாதத்தோடே மரித்துப் பரகதியி லும்மோடே வீற்றிருக்கக் கிருபை செய்தருளுஞ் சுவாமீ.—ஒரு-பர-பிரி-திரி.

## பதின்மூன்ரும் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே.—மற்றதும்.

திவ்விய சேசுவே! தேவரீருடைய திருச்சரீரத்தைச் சிலுவையினின் றிறக்கி வியாகுலமாதாவின் மடியிலே வளர்த்தப்பட்டதைத் தியானித்து உம்மை யாராதிக்கிறோம்; எங்களுடைய இருதயத்திலே தேவரீருடைய திருக்காயங்களும், பரிசுத்த மாதாவின் வியாகுலங்களும் பதிந்திருக்கக் கிருபைசெய்தருளுஞ் சுவாமீ.—ஒரு-பர-பிரி-திரி.

## பதிணன்காம் ஸ்தலம்.

முத.—திவ்விய சேசுவே.—மற்றதும்.

திவ்விய சேசுவே! தேவரீருடையதிருச்சரீரம் அடக்கம்பண்ணப்பட்டதைத் தியானித்து உம்மை யாராதிக்கிறோம். நாங்கள் மரணபரியந்தந் தேவரீரை நேசிக்கவும் தேவரீருடைய பேரின்பவிராச்சியத்துக்குச் சேரவுங் கிருபைசெய்தருளுஞ் சுவாமீ:—ஒரு-பர-பிரி-திரி.

¶சேசுக்கிறீஸ்துநாதருடைய ஐந்து திருக்காயங்களைக் குறித்து ஐந்து பர-பிரி-திரி. சொல்லுகிறது.

¶அதன்பிறகு அர்ச்.பாப்பானவருடைய சுகிர்த கருத்துகள் நிறைவேறும்படிக்கு ஒரு-பர-பிரி-திரி. சொல்லுகிறது.

## ஏழுதவச் சங்கீதம்.

தாவீதனென்கிற இராசாபாடின கீதஆகமமான நூற்றைம்பது சங்கீதங்களில் ஏழு சங்கீதங்களைத் திருச்சபை தெரிந்தெடுத்துத் தவ செபமாக நியமித்ததினால் பாவத்தினிமித்தம் துக்க மனஸ்தாப முயற்சியாகிய அவைகளை யுரைத்து வேண்டிக்கொள்வது பூர்வீகந்துவக்கி நடக்கின்ற நல்ல முறைமையாமே.

### DOMINE, NE IN FURORE.

முதலாவது சு-ம். சங்கீதம்.

¶வியாதியஸ்தன் வைத்தியனை மன்றாடுகிறதுபோலே பாவத்தினால் மெலிந்து கலங்கின ஆத்துமமானது சர்வேசுரனைப் பிரார்த்தித்து, அவருடைய சந்நிதியிலே அழுது பிரலாபிக்கிறதைக் குறித்தும் ஆண்டவர் அந்தப் பிரலாபத்தைக் கேட்பதைக் குறித்தும் பாடியிருக்கின்றது.



சுவாமீ! தேவரீர் கோபமாயிருக்கும்போது என்னைத் தண்டியாதேயும், உமது கோபாக்கினி வேளையில்என்னைக் கடிந்துகொள்ளாதேயும். நானோவெகுபலவீனன், என்மேல் இரக்கமாயிரும்—என் எலும்புகள் நெக்குவிட்டிருப்பதால் எனக்கு ஆரோக்கியங்கொடுத்தருளும்.—என் ஆத்துமமோ வெகுவாய்க்கலங்கியிருக்கிறது, ஆனால் சுவாமீ! நீர் எந்தமட்டும் எனக்கு உதவிசெய்யாம விருப்பீர்.—சுவாமீ, தேவரீர் எனது முகமாய்த் திரும்பிஎன் ஆத்துமத்தைஈடேற்றி உமது கிருபையைக்குறித்து என்னை இரட்சித்தருளும்.—ஏனெனில் மரணத்தன்மையில் உம்மை ஆரும் நினைப்பாரில்லை. நரகத்தில் உம்மை ஸ்துதிக்கிறவனார்.—பிரலாபப்பட்டு மிகவும் மெலிந்தேன், இராத்திரிதோறும் என் கண்ணீரால் என் கட்டிலைக்கழுவி என் கண்ணீரால் என்படுக்கையை நனைத்துக்கொண்டு வருகின்றேன். கோபாக்கினியால் என் கண் கலங்கிச் சிவந்தது. என் சத்துருக்கள் நடுவில் வெகுநாளாய் அகப்பட்டுத் தளர்ந்தேன்,—ஆண்டவர் என் அழுகைக்குரலைக் கேட்டருளினார். ஆகையால் அக்கிரமங்களைச் செய்கிற நீங்களெல்லோரும் என்னைவிட்டு அகன்று போங்கள்.—ஆண்டவர் என் வேண்டுதலைக் கேட்டு எனது விண்ணப்பத்தைக் கையேற்றுக் கொண்டார்.—என் சத்துருக்களெல்லாரும் வெட்கி மிகவும் கலங்கக் கடவார்கள், அதிசீக்கிரத்தில் வெட்கமும், ஈனமும் மூடப் பின்னிட்டுப் போகக் கடவார்கள்.—ஒரு-திரி.

### BEATI QUORUM.

உ-வது. ௱க-ம். சங்கீதம்.

¶நல்ல மனதோடு பாவத்தைவிட்டுச் சருவேசுரனைச் சேருவதின்மேலும், ஆண்டவர் நமது இக்கட்டில் அடைக்கலமுமாய் நல்லோர்க்குஇன்பமுமாய்ப் புல்லோர்க்குத் துன்ப ஆக்கினையிடுபவருமாய் இருக்கிற தொன்றுதின்மேலும், பாடியிருக்கின்றது.

எவரெவர் பாவம் பொறுக்கப்பட்டதோ, அவர்கள் பாக்கியவான்கள். எவரெவர் பாவம் மறைக்கப்பட்டதோ, அவர்களும்

பாக்கியவான்கள். ஆண்டவர் எவனுடைய பாவத்தை அவன் மேற்சாட்டாமல் இருக்கிறாரோ, அவன் பாக்கியவான். எவனுடைய மனதிற் கபடமில்லையோ அவனும் பாக்கியவான்—நான் என் பாவத்தை வெளிப்படுத்தாமல் மவுனமாகி, நாளெல்லாங் கூக்குரலிட்டதினால் என் எலும்புகள் தளர்ந்து போயிற்று.—ஏனென்றால் உமது கைப்பாரம் அல்லும் பகலும் என்மேற் சுமந்ததினால் முள்ளுதைத் திறங்கினாற்போலக் கடின துயரப்பட்டு ஆராட்டமாய்ப் புரண்டுகிடந்தேன். என்பாவத்தை உமக்கு அறிக்கை யிட்டேன், என் அநீதத்தை உமக்கு மறைத்தேனில்லை.—நான் எனக்கு விரோதமாக என் அக்கிரமத்தை ஆண்டவரிடத்திற் சங்கீர்த்தனஞ் செய்வேனென்று சொல்லவே நீர் என் பாவக்கேட்டைப் பரிகரித்தருளினீர்.—இதைப்பற்றித் தர்மாத்துமாக்களெல்லாருந் தக்கசமயம்பார்த்து உம்மை மன்றாடுவார்கள்.—இத்தன்மையாய் வெள்ள நீர் எப்படிப் புரண்டுவந்தாலும்அவர்கள் மட்டும் எறாது.—என்னைச் சூழ்ந்திருக்கிற துன்பங்களில் எனக் கடைக்கலமும் நீரோ, என் சந்தோஷமாகிய கர்த்தாவே, என்னை வளைந்து கொண்டிருக்கிறவர்களிடத்தில் நின்றென்னைக் காத்தருளும்.—நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் கற்பித்து, உனக்கு உணர்வைத்தந்து, உன்மேல் நமது பார்[illegible]வோம்.—ஞானமில்லாத குதிரை, கோவேறு கழுதைகளைப் போலே இராதேயுங்கள்.—உமதருகிற் சேராத அந்த மிருகங்களின் வாயை வாரினாலுங் கடிவாளங்களினாலும் இறுக்கிப்பந்தனஞ் செய்யுங்கள்.—பொல்லாதவர்களுக்கு அநேகம் ஆக்கினைகள் உண்டு. ஆனால் ஆண்டவர்பேரிற்பத்தி நம்பிக்கையா யிருக்கிறவர்களைத் தேவகிருபை சூழ்ந்திருக்கும்.—நீதிமான்களே, ஆண்டவரிடத்தில் அகமகிழ்ந்து சந்தோஷப்படுங்கள். செவ்விய இருதயத்தோரே, நீங்கள் எல்லாரும் அவரிடத்தில் உங்கள் மேன்மையைப் பாராட்டுங்கள்.—ஒரு-திரி.

## DOMINE NE IN FURORE.

### ௩-வது. ௩௭-ம். சங்கீதம்.

¶ பாவத்தால் ஆத்துமத்தில் பட்ட புண்களைத் தெளிவிக்கிறதின்பேலும், நல்லோர் துன்பப்படுகையில் சிநேகிதராலுங் கைவிடப்படுகிறதின்மேலும், தபசுக்குட்பட்ட ஆத்துமமானது சர்வேசுரனுடைய நீதிக்கு உத்தரிப்பதற்கான வழிபாடாக இலவுகீக துன்பங்களைக் கையேற்றுக்கொண்டு அநுபவிக்க, எப்பொழுதும் ஆயத்தமா யிருக்கிறதின் மேலும் பாடி யிருக்கின்றது.



சுவாமீ, தேவரீர் கோபமா யிருக்கும்போது என்னைத் தண்டியாதேயும்.—உமது கோபாக்கினி வேளையில் என்னைக் கடிந்துகொள்ளாதேயும்.—ஏனெனில் நீர் விட்ட அம்புகள் என்னை உருவிப்பாய்ந்தது.—உமது கையின் பாரம் என்மேல் சுமந்தது.—உமது கோபத்தின் முகத்தே எனது மாம்சத்திற் சுகமற்றுப் போயிற்று; என் பாவங்களின் முகத்தே என் எலும்புகள் உறவற்றுக் கலகலத்துப் போயிற்று.—ஏனென்றால், அக்கிரமங்கள் என்தலைக்கு மிஞ்சி என்னை மூழ்கடித்தும் வெகு பாரச் சுமையாக என்னை இருத்தியும் போட்டது.—என் மதியீனத்தினால் என்னுடைய காயங்கள் புழுத்து நாறிப்போயிற்று.—நான்மிகவுந் தரித்திரனாய் உடல் கூனிப்போய் நாள்முழுதுந் துக்கத்தால் முகம் வாடித்திரிகிறேன்.—ஏனெனில், என் இடுப்பானது அக்கினிப் பிரவேசமாய்ப் பற்றியெரிகிறது, என் சரீரத்தில் நல்ல [illegible]க்குமில்லை.—நான் வெகு வேதனைக்கும் ஈனத்திற்கும் [illegible]ள்ளானேன். என்னிருதயத்தின் அங்கலாய்ப்பினால் புலம்புகிறேன்.—என் ஆண்டவரே, என் ஆசைகளெல்லாம் உமக்குத் தெரிந்திருக்கிறது. என் பிரலாபம் உமக்கு மறைந்திருக்க வில்லை.—என் இருதயங் கலங்கி எனது சத்துவம் என்னைக் கைவிட்டிருந்து. என் கண்ணொளிவு மங்கிப்போகிறது. என்னைச் சேர்ந்தார் சிநேகிதரும் என்மேல் எதிர்த்து நெருங்கி விரோதமாக நின்றார்கள். என் அருகில் இருந்தவர்கள் அகலப் போனார்கள். என் உயிர் பறிக்க எண்ணினவர்கள் எனக்கு வெகுகொடுமை செய்தார்கள்.—எனக்குப் பொல்லாங்கு தேடினவர்கள் என்னோடு வீண்வார்த்தைபேசி, நாள் முழுதும் என்னை மோசம்போக்கும் விதத்தை யோசித்தார்கள்.—நானோவென்றால் காதுகேளாதவனாய்ச் செவிடனைப்போலும் வாய்திறவாத ஊமையைப்போலும் இருந்தேன். நான் [illegible]கச் செவியில்லாதவனும், மறுத்துச் சொல்ல நாவில்லாதவனுமானேன்.—சுவாமீ, உம்மை நம்பியிருக்கிறேன், என் சர்வேசுர சுவாமீ, என் மன்றாட்டைக் கேட்ட

ருளும். என்கால் தடுமாறும்போது என்மேல் இடும்புபேசின என்
சத்துருக்கள் இன்னம் என்னைக்கொண்டு மனமகிழாதபடி உம்
மைக்கேட்டுக் கொண்டேன். ஆகிலும், நான் தண்டனைப்பட ஆ
யத்தமா யிருக்கிறேன், என் சஞ்சலம் எந்நேரமும் என்முன்பாக
நிற்கிறது.—ஏனெனில் என் அக்கிரமங்களைச் சொல்லிக் காட்
டுவேன்,—என் பாவங்களை நினைத்துச் சிந்தைப்படுவேன்.—ஆ
னால் என் சத்துருக்கள் உயிரோடிருந்து என்னிலும் பலமானார்
கள், நியாயமில்லாதென்னைப் பகைக்கிறவர்கள் பலுகிப்போனார்
கள்.—நான் நன்மையைப் பின்சென்றதால் நன்மைக்குபதில்
தின்மை செய்கிறவர்கள் என்னைத் தூற்றுகிறார்கள்.—என் சர்
வேசுரா சுவாமீ, என்னைக் கைவிடாதேயும், என்னைவிட்டு அக
லாதேயும்.—எனக்கு இரட்சணியமா யிருக்கிற சாவேசுரா
சுவாமீ, தீவிரத்தில் வந்து எனக்கு உதவிசெய்தருளும்.—
ஒரு-திரி.

MISERERE MEI, DEUS.

சு-வது. ருo-ம். சங்கீதம்.

¶ தாவீது என்கிறவர் தமது கண்முன்பாக எப்பொழுதும்
இருக்கிற தமது பாவங்களைக்குறித்துச் சர்வேசு[illegible]
பிரலாபித்துப் பாவத்தில் நின்று அதிகமதிகமாய்த் தம்மைப் பரி
சுத்தமாக்கித் தமக்கு வரப்பிரசாதங்களையும் புதிதான இருதயத்
தையுங் கொடுத்தருள வேணுமென்று சர்வேசுரனை மன்றாடின
தும், தாழ்ச்சியும், மனஸ்தாபமுமுள்ள இருதயமே சர்வேசுரனு
க்குப் பிரியபலி என்கிறதுமாகப் பாடியிருக்கின்றது.

சர்வேசுரா சுவாமீ, உமது தயையின் விசாலத்திற்குச் சரி
யானபடி என்மேல் இரக்கமாயிரும்.—உமது இரக்கப் பெருக்கத்
திற்கு ஒத்தபடி என் அக்கிரமங்களை நிர்மூலமாக்கும்.—இன்னம்
அதிகமாய் என் குற்றங்களில் நின்று என்னைக் கழுவி என் பாவ
ங்களில் நின்றென்னை விடுவித்துப் பரிசுத்தப்படுத்தும்.—நானே
எனது அக்கிரமங்களை அறிந்திருக்கிறேன், என் பாவம் எந்நேர
மும் என் கண்முன்னே நிற்கிறது.—உமக்கு மாத்திரமே குற்ற
ஞ்செய்தேன், உம்முடைய சந்நிதிக்கு முன்னே தீங்கு புரிந்
தேன், நீர் உமது வாக்குத்தத்தத்தில் பிரமாணிக்கராய் இருக்கி
றீரென்றும், உமது தீர்வையிலே நீதிபரனாய் இருக்கிறீரென்றும்



விளங்கும்படி என் குற்றங்களைப்பொறுத்தருளும்.—நானோவெ
ன்றால்.—அக்கிரமத்தில் சன்மித்தேன் என் தாயார் பாவத்தில் எ
ன்னைக் கர்ப்பந்தரித்தாள்.—நீர் சத்தியத்தைநேசித்து, உமது பர
ம ஞானத்தின் மறைவுள்ள இரகசியங்களை எனக்கு விளங்கச்
செய்தருளினீர். நீர் ஈசோப்பென்கிற புல்லினால் என்மேல் தெ
ளித்தருளுவீர், நானுஞ் சுத்தமாவேன்.—நீர் என்னைக் கழுவுவீர்
வெண்பனிக்கட்டியிலுந் தூய்மையாவேன்.—என் செவிகளுக்கு
இன்பத்தையுஞ் சந்தோஷத்தையுந் தந்தருளுவீர், தளர்ந்துபோ
ன என் எலும்புகள் திடன்கொண்டு எழுந்து அக்களிக்கும்.—
என் பாவங்களைப் பாராமல் உமது முகத்தைத் திருப்பிக்கொண்
டு, என் அக்கிரமங்களை எல்லாம் போக்கியருளும்.—சர்வேசு
ரா, என்னிடத்தில் சுத்தமான இருதயத்தை உண்டாக்கி என்
உள்ளத்தில் நீதி முறைமையுள்ள புத்தியைப் புதுப்பித்தருளும்.
—உமது சந்நிதியில் நின்று என்னைத் தள்ளாதேயும், உம்முடை
ய இஸ்பிரீத்து சாந்துவை என்னிடத்தில் நின்று மறுபடி வாங்
கிக்கொள்ளாதேயும். உமது இரட்சணியத்தின் ஆநந்தத்தை
மறுபடி எனக்குத் தந்தருளும், உமது மேலான ஞானத்தால் எ
ன்னை உறுதிப்படுத்தும்.—அநீதருக்கு உமது மார்க்கத்தைப்
போதிப்பேன், துஷ்டர் உம்மிடத்தில் திரும்புவார்கள்.—சர்வே
சுரா, என் இரட்சகரான சர்வேசுரா, இரத்தப் பழிகளில் நின்
றென்னை மீட்டு விடுதலையாக்கியருளும், அப்போது என்னுடைய
நாவு உமது நீதியைப் புகழ்ந்தேத்தும்.—ஆண்டவரே! என் இத
ழ்களைத் திறந்தருளும், என் வாய் உம்முடைய தோத்திரங்களைக்
கூறும்.—ஆண்டவரே! உமக்குப் பலிவேண்டி யிருந்தால் மெய்
யாகவே பலிகொடுப்பேன், ஆனால் சர்வாங்க தகனப்பலிகள்
உமக்குப் பிரியமாய் இருக்கிறதில்லை.—நுக்கப்படுகிற உள்ளமே
ஆண்டவருக்குப் பிரியமானபலி, மனஸ்தாபத்தினாலே நொறுங்
கித் தாழ்ச்சியுள்ள இருதயத்தைப் புறக்கணிக்கமாட்டீரோ சுவாமீ.
—ஆண்டவரே உமது நன்மைத்தன்மையில் சீயோன் என்ற பரு
வதத்தின்மேல் கிருபையாயிரும். செருசலேமென்கிற பட்டண
த்தின் மதில்கள் எடுக்கப்படத் தயைசெய்தருளும்.—அப்பொ
ழுது நீதியின் பலியும், சர்வாங்க தகனப்பலியுங் காணிக்கைகளு
ம் உமக்கு ஏற்கையாகும்.—அப்பொழுதே உமது பீடத்தின்
மேல் நவசு காரியப்பலிகளைக் கொடுப்பார்கள்.—ஒரு-திரி.

## DOMINE EXAUDI.

### ரு-வது. ௧௦௧-ம். சங்கீதம்.

¶ இந்தச்சங்கீதம், தீர்க்கதரிசியாகிய தாவீது அவரவர் தங்கள் தங்கள் பாவத்தின்மேல் மனஸ்தாபப்பட்டுப் பர்வத்தின் ஆக்கினையாகிய துன்பங்களில் சர்வேசுரனை மன்றாடுகிறதற்கு மகா உதவியுமாய்த் திருச்சபைக்கு மகா உச்சிதமான செபமுமாய்ப் பாடியிருக்கின்றது.

ஆண்டவரே! என் மன்றாட்டைக் கேட்டருளும், என் அபயசத்தம் உமது சந்நிதிமட்டும் வரக்கடவது.—எனக்கு உமது திருமுகத்தைத் திருப்பிக்கொள்ளாதேயும், நான் துன்பப்படும் எந்தெந்த நாளிலும் என் வேண்டுதலுக்குக் காது சாய்த்துக் கொடுத்தருளும். நான் எந்தெந்தநாளில் உம்மை மன்றாடினாலும் என் மன்றாட்டைத் தீவிரமாய்க் கேட்டருளும்.—ஏனெனில் என்னுடைய நாள்கள் புகைபோல மறைந்து போயிற்று, என்னெலும்புகள் அடுப்பின் விறகைப்போலே துவண்டுபோயிற்று.—என் ஆகாரத்தைப் புசிக்க மறந்து விட்டதனால் என் இருதயங் காய்ந்து வெய்யிலில் அடிபட்ட புல்லுப்போல் உலர்ந்தேன்.—என் பிரலாபப் பெருமூச்சின் பேரொலியால் எனது தோலோடு என் அஸ்திகள் ஒட்டிப்போயிற்று. வனாந்தரத்தில், தனித்திருக்கும் * பெலிக்கான் போலவுந் தனி வனத்தில் தங்கின ஆந்தைபோலவு மானேன்.—கண்ணுறக்க மற்றேன், தனிப்பட்டுக் கூரைமேற் குந்தின குருவிபோலானேன்.—என் சத்துருக்கள் என்னை நாள்முழுதும் தூஷணஞ் செய்கிறார்கள், என்னைப்புகழ்ந்தவர்கள் எனக்கு எதிராய்ச் சபதங் கூறுகிறார்கள்.—அதேதென்றால் நான்சாப்பாடாகச் சாம்பலை அருந்தித் தண்ணீரோடு என் கண்ணீரைப் பானம்பண்ணினேன். —உமது சினத்தையுங், கோபாக்கினியையும் பற்றி இவ்விதஞ் செய்தேன் ஏனென்றால், நீர் என்னை உயர்த்திப் பின்பு கீழே விழ அடித்து நறுக்கினீர்.—என்னுடைய நாள்கள் நிழலைப்போலச் சாய்ந்துபோயிற்று; நானோ புல்லுப்போல் உலர்ந்தேன்.—ஆனால் ஆண்டவரே! நீர் சதாகாலங்களும் இருக்கின்றவர், உமது திருநாமத்

* ஓர்பட்சி.



தின் ஸ்மரணமோவெனில் அனவரதகாலமும் நிலைத்துநிற்கும்.—சீயோன் என்ற மாநகருக்குக் கிருபைபுரியுங் காலம் வந்து நேரிட்டமையால் தேவரீர் எழுந்தருளி அதன்மேல் இரக்கஞ் செய்தருளும்; அதேதென்றால், உம்முடைய அடியார் அந்தநகரத்தில் தகர்ந்த கல்லுகளின்மேல் பிரீதியாகி அதன் மண்ணின்மேலும் இரக்கமாயினார்கள்.—ஆண்டவரே! சமஸ்த சனங்களும் உமது திருநாமத்துக்குஞ் சகல மண்டலேஸ்வரரும் உமது அர்ச்சிய மகிமைக்கும் அஞ்சுவார்கள்.—அதேதெனில், சீயோன் என்ற நகரத்தை ஆண்டவர் கட்டுவித்துத் தமது மகிமைப்பிரதாபத்திற் காணப்படுவார்.—அவர் தாழ்ச்சி உள்ளவர்களுடைய வேண்டுதலுக்குத் திரும்பிச் செவிதந்த தல்லாமல் அவர்களுடைய மன்றாட்டைப் புறக்கணித்ததில்லை.—இனிவருஞ் சந்ததிக்கு இவைகளெழுதப்பட்டிருக்கட்டும்; இனிமேல் உண்டாகுஞ் சனம் ஆண்டவரை ஸ்துதிக்கும்.—ஏனென்றால் ஆண்டவர் தமது அர்ச்சியசிஷ்ட தலத்தின் உன்னதத்திலிருந்து திருக்கண்ணோக்கினார்.—விலங்கிற் கிடக்கிறவர்களுடைய பிரலாபத்தை கேட்கவுங் கொலையுண்டு போனவர்களுடைய பிள்ளைகளைக் கட்டவிழ்த்து விடுவிக்கவும்.—இப்படி விடுதலானவர்கள் சனங்களும் இராசாக்களும் ஆண்டவருக்குத் திருப்பணி புரியக்கூடும்பொழுது, சீயோன் பட்டணத்தில் ஆண்டவருடைய திருநாமத்தைக் கொண்டாடிச் செருசலே நகரில் அவருடைய திருப்புகழைப் பாடத்தக்கதாகவும் பரலோகத்தில் நின்று பூலோகத்தைப் பார்த்தருளினார்.—அடியான் தன் சத்துவத்தின் மத்தியில் அவருக்குச் சொன்னது: என் ஆயுசினுடைய சொற்பத்தை எனக்குக்காட்டியருளும், என் ஆயுசு நடுவில் என்னை அழைத்துக் கொள்ளாதேயும்.—உம்முடைய வருஷங்கள் தலைமுறை தலைமுறையாக நிற்கின்றது.—சுவாமீ! தேவரீர் தாமே, ஆதியிலே பூமண்டலத்துக்கு அஸ்திவாரமிட்டீர்.—வான மண்டலங்கள் உமதுகைத்தொழிலாமே,—இவைகள் சிதைந்துபோம், நீரோ நிரந்தரம் இருக்கிறவராமே.—உடுத்த உடைபோல் இவையெல்லாம் பழசாய்ப்போம். ஆடை மாற்றுகிறதுபோலத் தேவரீர் அவைகளை மாற்றுவீர், அவைகளும் மாறுபட்டுப்போம்.—நீரோவெனில் எக்காலமும் ஒரேசீராயிருக்கிறவர். உம்முடைய வருஷங்கள் ஒழிவதில்லை.—உம்முடைய அடியார்களின் பிள்ளைகள் உம்மோடு வாசஞ் செய்வார்கள். அவ

ர்களுடைய சந்ததியும் என்றென்றும் நன்னெறியில் நடத்தப்ப டுவதாமே.—ஒரு-திரி.

DE PROFUNDIS.

௬-வது. ௧௨௯-ம். சங்கீதம்.

¶பாவப் பொறுத்தல் அடையச் சர்வேசுரனை மன்றாட வேண்டிய உருக்கத்தின் மாதிரிகையாகப் பாடியிருக்கிறது.

சுவாமீ! பாதாளத்தில் நின்று உம்மைநோக்கிக் கூப்பிடுகி றேன், சுவாமீ! என் சத்தத்தைக் கேட்டருளும்.—எனது விண்ண ப்பத்தின் பேரொலியை உமது செவிகந்து கேட்டருளும். ஆ ண்டவரே! நீர் எங்கள் பாவங்களைப் பாராட்டுவீராகில் உமக்கு முன்பாக நிருவாகஞ் செய்கிறவனார்?—ஆனால் தேவரீரிடத்தில் தயாளமான மன்னிப்பிருக்கிற படியாலும் உமது வேத முறை மையைப் பற்றியுஞ் சுவாமீ உம்மை நம்பிக் காத்திருக்கிறேன். —என் ஆத்துமம் ஆண்டவருடைய திருவசனத்தின்மேல் ஊன் றிக் காத்திருக்கின்றது, என் ஆத்துமம்ஆண்டவரிடத்தில் நம்பி க்கை வைத்திருக்கிறது.—உதய சாமகாவல் நேரந்துவக்கி யிரவு பரியந்தம் இஸ்ராயேல் சனம் ஆண்டவரை நம்பிக் காத்திருக்கக் கடவது.—ஏனென்றால், சுவாமீ தயையுள்ளவர்; அவரிடத்தில் இரட்சணியம் ஏராளமாய் இருக்கின்றது.—அவரே இஸ்ரா யேல் சனத்தை அதின் சகல பாவங்களில் நின்று இரட்சித்தரு ளுவார்.—ஒரு-திரி.

DOMINE EXAUDI.

எ-வது. ௧௪௨-ம். சங்கீதம்.

¶தீர்க்கதரிசியாகிய தாவீது என்கிறவர் தாம் படுகிற உபத் திரவங்களில் தேவ கிருபையை யிரந்து கேட்டுச் சர்வேசுரன் தமது நீதியின் உக்கிரத்திற்கு ஒத்தவண்ணம் நடப்பியாமல் தயை யோடு நடப்பித்தருள வேண்டுமென்று சர்வேசுரனை மன்றாடிப் பாடி யிருக்கின்றார்.

சுவாமீ! என் வேண்டுதலைக் கேட்டருளும், உமது சத்தியத் தின்படி என் விண்ணப்பத்திற்குக் காது கொடுத்தருளும்.—உம

115256



து நீதியின்படி என் மன்றாட்டை ஏற்றுக்கொள்ளும், குற்றம் பாராட்டி உம்முடைய அடியானைத் தீர்வையிடப் பிரவேசியா தேயும். ஏனெனில், சீவனுள்ளவரில் எவனும் உமக்கு முன்பாக ப் பரிசுத்தனாகத் தோன்றமாட்டான்.—என் சத்துராதி என்னாத் துமத்தை உபத்திரவப்படுத்தி என்னுயிரை வதைத்துப் பூமியில் சிறுமைப்படுத்தினான்.—முற்காலத்தில் மாண்டுபோனவர்களைப் போல என் சத்துரு என்னை இருட்டில் குடிகொண்டிருக்கச் செய்தான்.—என்னைக்குறித்து என் புத்தி அலமந்து துக்கத்தில் அமிழ்ந்தி, என் இருதயங் கலங்கிப்போயிற்று.—நான் பூர்வகா லங்களை நினைத்து, உமது செயலெல்லாம் யோசித்து எண்ணி னேன், உம்முடைய திருக்கரங்களின் செய்கைகளின்மேல் தியானஞ் செய்தேன்.—உம்மை நோக்கி என் கைகளை விரித்தே ன். நீரில்லா நிலம்போல என் ஆத்துமம் வறண்டு உம்மைத்தாவு கிறது.—ஆண்டவரே! என் ஆவிசோர்ந்து போகின்றது. என் வேண்டுதலைத் தீவிரமாய்க் கேட்டருளும்.—உமது திரு முகத் தைத் திருப்பிக்கொள்ளாதேயும், திருப்பிக்கொள்வீராகில் குழி யிலிறங்கிப் போகிறவர்களுக்குச் சமானமாவேன்.—நான் உம் மை நம்பியிருக்கின்றமையால், அதிகாலமே நான் உமது தயை மொழியைக் கேட்கச்செய்தருளும்.—என் ஆத்துமம் உம்மைநோ க்கி எழுந்தபடியால், நான் நடக்கவேண்டிய வழியை எனக்குப் படிப்பித்தருளும்.—நான் உம்மைத் தஞ்சமென்று ஓடிவந்ததினா ல், என்சத்துருக்கள் இடத்தில் நின்று என்னைத் தற்காத்தருளும். தேவரீர் என் தேவனானகையால், நான் உமது சித்தத்தின்படியே செல்லக் கற்பித்தருளும்.—உம்முடைய நல்ல இஸ்பிரீத்தானவர் என்னை நன்மார்க்கத்திலே நடப்பிப்பாராக; சுவாமீ; உமது திரு நாமத்தின் கீர்த்தியைக்குறித்து உமது நீதிக்கு ஒத்தபடி என்னை ச் சீவிக்கச்செய்வீராக.—உபத்திரவத்திலே நின்று என் ஆத்தும த்தை விடுதலாக்கி உமது தயவினால் என் சத்துருக்களைச் சங்க ரித்துப் போடுவீராக.—நான் உம்முடைய அடியானானதால் என் ஆத்துமத்தை உபாதிக்கிறவர்கள் எல்லாரையும் நிர்மூலஞ் செய்த ருளும்.—ஒரு-திரி.

சுவாமீ! எங்கள் பாவங்களையும் எங்களை ஈன்றவர்களுடைய பாவங்களையும் ஸ்மரணம்பண்ணாதேயும், எங்கள் பாவங்களுக்கா கப் பழிவாங்கத் திருவுளமாகாதேயும்.

# தேவநற்கருணை சந்திப்பு.

## தேவநற்கருணையைச் சந்திக்கிறவகை.

¶ பரம கர்த்தராகிய சேசுநாதர் தேவநற்கருணையிலே நமது பேரிற் காண்பிக்கிற மட்டில்லாத அன்புக்குப் பிரதியன்பைச் செலுத்தத் தக்கதாக ஆத்தும சஞ்சீவியாகிய அவருடைய திருச்சரீரத்தை யடிக்கடி பத்தியோடே வாங்கிக்கொண்டு அவரோடு ஐக்கியமாகிறதுந் தவிர அடிக்கடி தேவநற்கருணையைச் சந்தித்து அவருக்கு வணக்கஞ் செய்கிறது மிகுந்த நீதியாயமல்லவோ? ஆகையாற் சிலமுறை அவரை யாராதிக்க, இடையர்கள் மூன்றிராசாக்களைப் போலவும், சிலமுறை அவருடைய திருப்போதகங்களைக் கேட்டுக்கொள்ள, அப்போஸ்தலர்கள், சீஷர்களைப் போலவுஞ், சிலமுறை நம்முடைய பாவங்களை நினைத் தழுதுகொண்டு அவருடைய ஆச்சரியமான இலட்சணங்களைத் தியானிக்க, மரியமதலேனம்மாளைப் போலவும் அவரண்டைக்குப் போவோமாக. சுவிசேஷத்திற் சொல்லப்பட்ட பிணியாளிகளைப் போலே, நம்முடைய ஞானநோய்களிலே நின்று குணமாக்கப்படவும், அல்லது தரித்திரர்களைப்போலே, அவருக்கு நம்முடைய அவசரங்களைச் சொல்லிக் காண்பிக்கவும், நம்முடைய துன்பதுரித சந்தேக கஸ்திகளில் வேண்டிய ஆறுதலையும், வரப்பிரசாதங்களையும், அவரிடத்திற் கேட்கவும், அவருடைய திருச்சந்நிதியிற் சேருவோமாக, தேவநற்கருணையில் மெய்யாகவே எழுந்தருளியிருக்கிற ஆராதனைக்குரிய கர்த்தரின் சமுகத்திலே தகுந்த வணக்கம், பத்தி, ஒடுக்கம், நன்றியறிதல், விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம் முதலான சற்குணங்கள் நம்மிடத்திலெப்பொழுதும் விளங்கும்படியாய்க் கவனித்திருப்போமாக.

## தேவநற்கருணையின் சந்நிதியில் வேண்டுதல்.

நிகரில்லாத பரம அன்பின் மிகுதியினாலே தேவநற்கருணையிலெழுந்தருளி எங்கள் பீடங்களின்மேல் நிலையாயிருக்கத் தயைபுரிந்த மதுரசேசுவே! அன்புக்குரிய இரட்சகரே! தேவரீர் பரமகர்த்தரென்றும், சர்வத்துக்கும் அதிபதியான கடவுளாகிய என் தெய்வமென்றும், விசுவசித்து நம்பி, இதிலே உம்மைமிகுந்ததாழ்ச்சிவணக்கத்தோடே யாராதிக்கிறேன். பரமதிவ்வியநற்கருணையிலிருக்கிற உமக்குப் பாவிகள் செய்கிற துரோகங்களைத் தேவ



ரீர் பாராட்டாமல் தேவரீர் அடியோர்கள்பேரிற் காண்பிக்கிற மட்டில்லாத பட்சத்தைப்பற்றி முழுமனதோடே யுமக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்கிறேன். எங்கள் நன்றிகெட்டதனத்தின்பேரில் மிகுந்த விசனப்பட்ட அநந்த மகிமையுள்ள பரமதேவனே, ஆராதனைக்குரிய இந்தத் தேவதிரவிய அநுமானத்திலிருக்கிற உமக்குச் செய்யப்பட்டதும் இனிச் செய்யப்படுவதுமாகிய துரோகங்களுக்கும், அவமானங்களுக்கும், நிந்தைகளுக்கும், பரிகாரமாக என்னாலியன்றமட்டும் பத்திவணக்கத்தோடும், என்னிருதயத்திலுள்ள முழுப் பட்சத்தோடும், உமக்கு நமஸ்காரஞ் செய்ய வருகிறேன். ஆ! என் திவ்விய கர்த்தாவே! முன்னால் நானே அநேகம் விசை உம்முடைய சந்நிதியில் வணக்கக் குறைச்சலாய் நடந்ததற்கும், தேவபத்தி சிநேகமில்லாமல் அசட்டையாய் உம்மை வாங்கிக் கொண்டதற்கும், அடியேன் படுகிற மிகுதியான வியாகுலத்தைத் தேவரீருக்கு எவ்விதமாய்ச் சொல்லப் போகிறேன்!

தயவுள்ள கர்த்தாவே! அடியோர்களுடைய பாவதுரோகங்களைப்பொறுத்து, உம்முடைய அளவில்லாத கிருபையைமாத்திரம் நினைத்தருளுஞ் சுவாமீ. தேவரீருடைய மட்டற்ற அன்புவிளங்குகிற விந்தத் தேவதிரவிய அநுமானத்தில் உம்மை வணங்கவும், எல்லாருடைய வணக்கத்தையு முமக்கு வருவிக்கவும், எனக்குள்ள பெருமாசையை ஏற்றுக்கொள்ளுஞ் சுவாமீ. மெய்யாகவே சம்மனசுக்களும் அர்ச்சியசிஷ்டவர்களும் இதிலே உம்மைச் சிநேகித்து ஸ்துதித்து ஆராதிக்கிறதுபோலே நானுமென் முழுமனதோடே யும்மை நேசித்துத் தோத்தரித்து வந்தித்து வணங்க அபேட்சிக்கிறேன். மேலும் நான் சாஷ்டாங்கமாக விழுந்து ஆராதிக்கிற உமது இந்தத் திருச்சரீரத்தையும் விலைமதியாத விரத்தத்தையும்பற்றி, நானினித் தேவநற்கருணையிலும்மைப் பயபத்தி வணக்கத்தோடே நமஸ்கரிக்கிறதினாலும், அதைத் தகுந்த ஆயத்தத்தோடே வாங்கிக்கொள்ளுகிறதினாலும் உம்முடைய கிருபையை அடைந்து என்மரணத்துக்குப் பின்பு சகல மோட்சவாசிகளோடே கூடப் பேரின்ப பாக்கியத்தில் நித்தியமா யும்மைத் தரிசித்து ஸ்துதிக்கிறதற்குப் பாத்திரவானாகும்படியாக எனக்கநுக்கிரகஞ் செய்தருளுஞ் சுவாமீ.—ஆமென் சேசு.

சர்வேசுரா சுவாமீ, உம்முடைய திவ்விய குமாரனுமாய்எங்கள் பரமகுருவுமா யிருக்கிற சேசுநாதர் அடியோர்கள் செய்த பாவங்களுக்குப் பரிகாரமாக உமக்குச் செலுத்துகிற பரிசுத்த பலியை உம்முடைய தேவாலயத்தில் நின்றுந் தேவரீர் பரமமண்டலங்களில் வீற்றிருக்கிற வுந்நத ஸ்தலத்திலே நின்றும் பார்த்து எங்கள் எண்ணிறந்த அக்கிரமங்களைப் பொறுத்தருளும். சிலுவையில் நின்று எங்கள் திவ்விய இரட்சகரும் மனுஷாவதாரத்தா லெங்கள் சகோதரருமாகிய சேசுவினுடைய திருவிரத்தத்தின் சத்தம் உம்மை நோக்கிக் கூப்பிடுகின்றது. எங்கள் மன்றாட்டைக் கேட்டருளுஞ் சுவாமீ. தேவரீர், உம்முடைய கோபத்தை யமர்த்தியருளும். எங்கள்மே லும்முடைய கிருபாகடாட்சம் வைத்து நன்மை புரியும். என்கர்த்தாவே அதிக தாமதஞ் செய்யாதேயும். இவ்வூரின் மேலும் இச்சனத்தின்மேலுந் தேவரீர் தயவாயிருக்கும்படிக்கு உம்முடைய திருநாமம் பிரார்த்திக்கப் பட்டபடியினாலே உமக்குத் தோத்திர மாகத்தானே எங்களுக்குக் கிருபைசெய்தருளும்.—ஆமென்சேசு.

பரிசுத்த பரமதிவ்விய நற்கருணைக்கு எந்நேரமுந் தோத்திரமும், ஸ்துதியும் உண்டாகக் கடவது.

இப்படி மும்முறை சொல்லவும்.

மிகவும் பரிசுத்த திவ்விய நற்கருணைக்கு எந்நேரமும் ஸ்துதியும் நன்றியறிந்த தோத்திரமுஞ் செலுத்தப்படக்கடவது.

---

# தேவநற்கருணை சந்திப்பு.

## முதல் தேதியின் சந்திப்பு.

¶தாகமுள்ளவன் நம்மிடத்தில் வரக்கடவான். அர்ச். அருளப்பர், எ-ம். அதிகாரம்.—இரட்சகருடைய சுனையிற் சலத்தை மொள்ளுவீர்களென்று இசையாஸ் தீர்க்கதரிசியைக்கொண்டு சர்வேசுரன் ஏற்கனவே உலகத்திற்கு அறிவித்தபடியே, சேசுநாதர் பாடுபட்டுஅடைந்த பேறுபலனெல்லாம் நமக்கு உதாரமாகக்கொடுக்கச் சேசுநாதசுவாமி தேவநற்கருணையில் எழுந்தருளியிருந்து, தாகமுள்ளவன் நம்மிடத்தில் வரக்கடவான் என்று திருவுளம் பற்றுகிறார். இந்தச் சீவசுனையில் அர்ச்சியசிஷ்டவர்கள் எத்தனை



இஷ்டப்பிரசாத நன்மையை அடைந்தார்கள். ஞானத்தில் தெளிந்த மகாத்துமாவான அவிலாவென்பவர் வசனித்த புத்தியைக் கேட்டு உலகத்தைத் துறந்த அர்ச். கிளாரம்மாள் சபையில் உட்பட்ட உத்தம வங்கிஷத்திற் பிறந்த பெரியாவென்று புண்ணியவதி தேவநற்கருணைக்கு முன்பாக நெடுநேரம் இருக்கிற வழக்கத்தினால் அவளைத் தேவநற்கருணையின் பத்தினியென்று அழைப்பார்கள்; ஒருநாள் அந்த அம்மாளைப்பார்த்து தேவநற்கருணைக்கு முன்பாக நெடுநேரம் நீர் என்னசெய்வீரென்று கேட்டதற்கு "மோட்சவாசிகளுடைய போசனமாகிற நரதேவ சுபாவத்தானே தேவநற்கருணையில் இருக்கிறதினால் நித்தியகாலம் நான் தேவநற்கருணைக்கு முன்பாக இருப்பேன். ஆ, சுவாமீ! இதென்ன? சர்வேசுரனை முன்பாக என்ன செய்கிறது என்று கேட்கிறீர்கள். ஸ்துதிக்கிறதும், நன்றியறிந்த தோத்திரஞ் சொல்லுகிறதும், ஆண்டவர் சமுகத்திற்செய்யுங்காரியமல்லவோ? மகராசன் சமுகத்தில் எளியவனும், வயித்தியன் முன்பாக வியாதிக்காரனும், தெளிந்த சுனையருகில் தவித்தவனும், கல்லபந்தியில் உட்கார்ந்த பசித்தவனும், என்னசெய்வார்கள்" என்றாள்.

## சேபம்.

என் இருதயவிருப்பமே, என் மதுரமே, என்னுருயிரே, என் பாக்கியமே, என் நம்பிக்கையே, என் சிநேக தேவனானசேசுவே! தேவநற்கருணையில் தேவரீர் எங்களோடு வாசமாயிருக்க எத்தனைப்பாடுபடவேண்டி யிருந்தது. தேவநற்கருணையில் பலியாக இருக்கச் சிலுவை மரத்தில் உயிர்விடவேண்டியிருந்தது. உமது தரிசனத்தால் எங்களுக்கு ஆறுதல் தந்தருள நீர் எத்தனை நிந்தை அவமானத்திற்கு உள்ளாக வேண்டியிருந்தது. தேவரீர் எங்கள் பேரில் வைத்த மகா ஸ்நேகப் பெருக்கத்தினாலும் நாங்கள் உம்மை ஸ்நேகிக்கவேண்டுமென்கிற ஆவலினாலும் எல்லாவற்றிற்கும் உள்ளாகினீர். எழுந்தருளிவாராய்என் ஆத்தும அன்பனேவாராய் நான் உம்முடையபேரில் வைக்கவேண்டிய ஸ்நேகத்தை சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்கள் பங்கிட்டுக்கொள்ள வராதபடி என் இருதயவாசலை இறுக அடைத்துப்போடும். ஆராதனைக்குப் பாத்திரமான என் இரட்சகரே! நீர் மாத்திரமே என்னை ஆட்கொள்ளும். உமக்கு மாத்திரமே என்னை முழுதுஞ் சொந்தமாக்கிக் கொள்ளும். சிலமுறை நான் உமக்கு அடங்கி நடவாவிட்டால்,

உமது திருவுளத்திற்கு இசைந்தவண்ணம் நடக்க அதிகப் பிரயாசப்பட்டு, எச்சரிக்கை சாவதானமாய் இருக்கும்படிக்கு என்னைத் தண்டியும். உமது மனதிற்கு இரம்மியமான காரியத்தை மாத்திரமே நான் விரும்பவும், தேவநற்கருணையில் அடிக்கடி உம்மைச் சந்தித்து இஷ்டமாய் உம்மோடு பேசிக்கொண்டு இருக்கவும், அடிக்கடி தேவநற்கருணைவழியாய் உம்மை உட்கொள்ளவுங் கிருபைசெய்யும். ஆராருக்கு என்னென்ன வேண்டுமோ தேடித்திரியட்டும். எனக்கு உமது ஸ்நேகம் ஒன்றுமாத்திரங் கிடைத்தாற்போதும். நான் என்னை முழுதும் மறந்து உமதுநன்மைத்தனத்தின் பேரில்மாத்திரமே சிந்தையாயிருக்கக் கிருபைசெய்யும். பத்திச் சுவாலகரே, நான் உங்களுடைய ஆநந்த பாக்கியத்தின்பேரில் விருப்பம் வைக்காமல், சர்வேசுரன்பேரில் உங்களுக்குள்ள ஸ்நேகத்தைமாத்திரமே விரும்புகிறேன். உங்களைப்போல நான் சர்வேசுரனை ஸ்நேகிக்கவும், அவருக்குப் பிரியப்பட நடக்கவும் நான் செய்யவேண்டியது இன்னதென்று எனக்குப் படிப்பியுங்கள்.

### *மனவல்லயச் செபம்.

என்சேசுவே! நான் உம்மை மாத்திரமே ஸ்நேகிக்கவும், உமக்கு மாத்திரமே பிரியப்பட நடக்கவும், விரும்புகிறேன்.

~~~~~~~~~~

## தேவமாதாவின் சந்திப்பு.

### அர்ச். எபிரேம் என்பவர் செய்த செபம்.

சன்மமாசணுகாத நிர்மல பரிசுத்தமானவளுமாய்ச் சகல சம்மனசுக்களுக்கும் அர்ச்சியசிஷ்டவர்களுக்கும்மேன்மையாகஸ்தாபிக்கப்பட்டவளுமாய், எங்கள் பிதாக்களின் ஏக நம்பிக்கையுமாய்ப், புண்ணியவான்களுக்கு ஞான சந்தோஷமுமாய், உந்நத மகிமைப் பிரதாபமுள்ள இராக்கினியுமாய், தேவதாயுமாயிருக்கிற அர்ச். மரியாயே! உமது தஞ்சமென்று ஓடிவரும் அடியார்கள்பேரில் இரக்கமாயிரும். உமது ஊழியத்திற்கு ஏற்பட்டவர்களுமாய் உமது சொந்த அடிமைகளென்று பேர்கொண்டவர்களுமாய் இருக்கிற எங்களைச் சோதியுடைத்தானுகிய பூசிப்பசாசு நித்திய அக்கினியிற் கொண்டுபோகாதபடி உமதுதிருக்குமாரனைமன்றாடும். சன்மமாசணுகாத திவ்வியகன்னிகையே தஞ்சமென்று உமது அடைக்கலத்தை நாடிவந்திருக்கும் அடியார்களின் பாவ அகோரத்தைக்கண்டு உமது திருக்குமாரன் எங்களைச்சத்துருவின் கையில் ஒப்புக்கொடாதபடி உம்முடைய திருக்குமாரனை மன்றாடும்.

### மனவல்லயச் செபம்.

எங்கள் சந்தோஷத்தின் காரணமே, எங்களுக்காக உமது திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும்.

¶ அர்ச். தேவமாதாவின் உதவிசகாயமடையத் தேவமாதாவின் ஒவ்வொரு சந்திப்பின் கடைசியில் செய்யத்தக்க செபம். இதைத் தேவமாதாவின் சந்திப்புக்குப் பின்சொல்லவும்.

சன்மமாசணுகாத கன்னிகையே! பரலோக பூலோகத்திற்கு அரசியே! பரிசுத்தமரியாயே! என்சர்வேசுரன் தாயே! என்னம்மா! கஸ்திப்படுகிறவர்களுக்கு ஆறுதலே! பாவிகள் தஞ்சமே! பாவிகளுக்காக உமது திருக்குமாரனிடத்தில் மனுகேட்கிறவளே! பாவிகளிற் பாவியாயிருக்கிற அடியான் உமது தஞ்சமென்று ஓடிவந்தேன், என்பேரில் கிருபையாயிரும். என்பாவ அகோரத்தால் அநேகமாயிர முறை நரகத்திற்குப் பாத்திரமாய் இருந்த என்னை இதுவரைக்குங் காப்பாற்றி மட்டற்ற உபகாரங்களைச் செய்துவருகிறதினால் உமக்கு நன்றியறிந்த தோத்திரஞ்செய்கிறேன். மகா ஸ்நேகத்திற்குப் பாத்திரமானதாயே! உம்முடையபேரில்வைத்த ஸ்நேகத்தால் நானென் ஆயுசுபரியந்தம் உமக்கு ஊழியஞ்செய்து வருகிறதுமல்லாமல், சகலமனிதரும்உமக்குஊழியஞ்செய்நுவர என்னாலான பிரயாசப்படுவேன். என்பணிவிடையைப் புறக்கணித்துத் தள்ளாமல் என்னை உமது தாசரில் ஒருவனுகச்செய்யும். மகா இரக்கம் நிறைந்த மரியாயே! சர்வேசுரனுக்குப்பின் என்னம்பிக்கையே! நீர் சர்வேசுரனிடத்தில் மன்றாட வல்லபமுள்ளவள் ஆகையால் நான் மரணபரியந்தம் பாவசோதனையில் அகப்பட்டு மோசம்போகாமல் என்னைக்காப்பாற்றும். என்னேசமுள்ளதாயே, சர்வேசுரன்பேரில் உமக்குள்ள மகா ஸ்நேகப் பெருக்கத்தைப்

*ஒவ்வொரு தேவநற்கருணை சந்திப்பின் கடைசியில் சொல்லப்படும் மனவல்லயச் செபத்தை அந்நாள்முழுதும் பலமுறை சொல்லிக்கொண்டு வரவேண்டியது மல்லாமல் ஒவ்வொரு சந்திப்பின் கடைசியில் ஞானவிதமாக நன்மைவாங்குவது முறை.
~~~~~~~~~~

பார்த்து எனக்கும் அவர்பேரில் மெய்யான ஸ்நேகமுண்டாகச் செய்யும். எந்தெந்த சமயத்திலும் நீர் எனக்கு உதவி சகாயமாய் இருக்கிறதுமல்லாமல், என் மரணநேரத்தில் விசேஷ வுதவியாய் இருந்து, நித்திய காலமும் நான் உமது கிருபையை வாழ்த்தி ஸ்துதிக்கவருமளவும் என்னைக்கைவிடாதேயும். உமது கிருபையை நாடி உமது அடைக்கலத்தைத்தேடிவந்தவர்களில் ஒருவனையாகிலும் நீர் கைநழுவவிட்டதென்று உலகத்திற்கேள்விப்பட்டதில்லையென்கிறதினால், என்னை உம்மைவிட்டுப் பிரியச்செய்யாதேயும்.

## உ௨ தேவநற்கருணை சந்திப்பு.

¶பரலோக அப்பத்தை அவர்களுக்குத்தந்தருளினார். எஎ·ம். சங்கீதம்.—"அப்பமானது அப்பொழுதுதானே சாப்பட உதவுகிறதல்லாமல்' வைத்திருந்து சாப்படவும் உதவும் என்கிறதினால், சேசுநாதர் தம்மை ஸ்நேகிக்கிற ஆத்துமங்களுக்குப் போசனமாய் இருக்கிறதும் அல்லாமல் தாம் மனிதர்பேரில் வைத்த ஸ்நேகத்தை மனிதர் மறவாமல் எப்பொழுதும் நினைக்கும்படி, பீடத்தில் வாசமா யிருக்கவும், அப்பத்தின் குணங்களுக்குள்ளே தாம் எழுந்தருளியிருக்கத் திருவுளமாயினார்." என்று நிரம்பர் என்ற மகாத்துமாவானவர் எழுதியிருக்கிறார். "அடிமையின் உரூபம் எடுத்ததினால் சேசுநாதர் தம்மைத்தாமே இலயமாக்கினார்." என்று அர்ச். சின்னப்பர் பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தின் இரண்டாம் அதிகாரத்தில் வசனித்து இருக்கையில், அவர்தாமே அப்பத்தின் உருபம் எடுக்கக்காண்கிற நாம் என்ன சொல்லவேண்டி யிருக்கிறது. "இஷ்டப்பிரசாதத்தோடு இருக்கும் ஆத்துமங்கள்பேரில் சேசுநாதர் வைக்கும் ஸ்நேகம் மனோவாக்குக் கெட்டாததென்று" அர்ச். அலக்சாந்தர் இராயப்பர் வசனித்திருக்கிறார். நமது ஆத்துமத்தின் திவ்விய பத்தாவானவர் பரலோகத்திற்கு எழுந்தருளத் திருவுளமானாலும், நம்மோடு தாம் இல்லாவிட்டால் நாம் அவரை என்றும் மறந்துபோகப் போகிறோம் என்கிறதைப்பற்றி, நாம் அவரை மறவாமல் நினைத்திருக்கும்படி தேவநற்கருணை வழியாய் நம்மோடு எப்பொழுதும் வாசமாயிருக்கத் திருவுளமாகினார்.



### செபம்.

நிர்ப்பாக்கியம்நிறைந்த பாவிகளின் மன்றாட்டைக்கேட்கத் தேவநற்கருணையில் எழுந்தருளியிருக்கத் திருவுளமான சேசுவே! நிர்ப்பாக்கியரிலும் நிர்ப்பாக்கியனான நன்றிகெட்ட பாவியா யிருக்கிற அடியேனுடைய மன்றாட்டிற்கு இரங்கித் திருச்செவி கொடும். உமக்கு ஏற்காத துரோகத்தைச்செய்ய ஒருமித்ததினால் என் பாவ அகோரத்தைக் கண்டு மனம் நொந்து உருகி உமது பாதத்தை நாடி வரும் என் பாவத்தைப் பொறுத்துக்கொள்ளும். என்கர்த்தரே சுவாமீ! நான் உமக்கேற்காத துரோகங்களைச் செய்ய உடன்பட்ட தென்னை? என் ஆண்டவரே! நீர் மட்டற்ற சிநேகத்திற்குப் பாத்திரமாக இருக்கிறீரென்கிறதைக் கண்டு என் இருதயம் உம்மைமாத்திரமே சிநேகிக்கவும், உமக்குமாத்திரமே பிரியப்படவும் விரும்பி நாடுகிறது. நீர் எனக்கு உதவியாய் இராவிட்டால் நான் உம்மை ஸ்நேகிக்கக்கூடாது என்கிறதினால் உமது மட்டற்ற வல்லமையையும் அளவற்ற நன்மைத்தன்மையையும் பரலோகமும் பூலோகமும் அறியும்படி உமக்கு அடங்கி நடவாத அடிமையான என்னை உமக்குப் பிரமாணிக்கமான ஸ்நேகிதனாக்கிக் கொள்ளும். உமக்குச் சித்தமுண்டானால் எல்லாம் ஆகுமென்கிறதினால் நான் உமக்குச் செய்த தோஷ துரோகத்திற்கு ஈடாக உம்மைஆவலாய் ஸ்நேகிக்கச்செய்யும். சேசுவே! உம்மை ஸ்நேகிக்கிறேன். என் சிநேக தேவனே உம்மையே ஸ்நேகிக்கிறேன். என்னுயிரையும் எல்லாவற்றையும் பார்க்க உம்மையே ஸ்நேகிக்கிறேன்.

மனவல்.—என் சர்வேஸ்வரா! என் சகல நன்மையே!.

## தேவமாதாவின் சந்திப்பு.

### அர்ச். எபிரே என்பவர் செய்த செபம்.

பரலோக பூலோகத்திற்கு இராக்கினியே! கருணை நிறைந்த மரியாயே! பாவிகள் தஞ்சமே! பாவ சமுத்திரத்தில் அமிழ்ந்தினவர்களுக்குத் தெப்பமே! உலகத்திற்கெல்லாந் தாபரமே! அடிமைப்பட்டவர்களை மீட்குங்கிரயமே! வியாதிக்காரர்களுக்கு ஆரோக்கியமே! கஸ்திப் படுகிறவர்களுக்கு ஆறுதலே! பூலோக இராச

ணியத்திற்கு இருப்பிடமே, பிரிய தத்தத்தினால் பூரண மரியாயே! சம்மனசானவர் உம்மைப் புகழ்ந்து தோத்திரித்த வாக்கியத்தை நான் இனி யோக்கியமாய்த் துதி செய்யும்படி என் புத்திக்குப்பிரகாசத்தையும் நாவுக்கு அசைவையுங் கட்டளையிடும். தேவ சமாதானமே, ஞான சந்தோஷமே, இரட்சணிய இருப்பிடமே, உலகத்திற்கெல்லாம் ஆறுதலே, மேன்மையான அற்புதமே, செல்வம் பொழியுஞ் சிங்காரத்தோப்பே, ஆபத்தில் அகப்பட்டவர்கள் அபயமே, இஷ்டப்பிரசாத ஊருணியே, சர்வேசுரனுக்கும் மனிதருக்கும் உறவுகட்டுகிறவளே, உம்மையே வாழ்த்தி ஸ்துதித்து வணங்கி நமஸ்கரிக்கிறேன்.

மனவல்லயச் செபம்.—பாவிகள் தஞ்சமே, எங்கள் பேரில் கிருபையாயிரும்.

சன்மமாசணுகாத கன்னிகையே, (உகரு-ம்) பக்கங் காண்க.

## கூ௦ தேவநற்கருணை சந்திப்பு.

¶மனுமக்களோடு கூட இருக்கிறதே நமக்குப் பிரியம். உபமைச்சொல், அ-ம். அதிகாரம்.—சேசுநாதர் உலகத்தில் இருக்கும்பொழுது நம்முடையபேரில் வைத்த மகா ஸ்நேகத்தால் உயிர் விட்டதுமல்லாமல் இன்னம் நம்மோடு இருக்கிறதே தமக்குப் பிரியமென்று திருவுளம் பற்றித் தேவநற்கருணையில் நம்மோடு வாசமா யிருக்கிறார். மனுமக்களே! உங்களோடு இருக்கிறது நமக்கும் பிரியம் என்று சொல்லிக்கொண்டு வரும் சர்வேசுரனுக்குத் துரோகஞ்செய்ய உங்களால் எப்படிக் கூடுமென்று அர்ச். தெரசம்மாள் அதிசயப்படுகிறாள். நம்மோடிருக்கிறது சேசுநாதருக்குப் பிரியமா யிருக்கையில் அவர் அரமனையில் பேறுபெற்று இருக்கப் பிரியமில்லாமற் போகிறது என்ன அதிசயம்! இராசாவானவர் தமது அரமனையில் பிரபுக்களுக்கு விடுதி கொடுத்தால் அவர்கள் அதை எத்தனைக் கனமாய் எண்ணுவார்கள். மகிமைப்பிதாபமுள்ள அதிபதி இராசாவானவர் அரமனையில் சேசுநாதரோடுகூட இருக்கப் பேறுபெற்ற நாம் இந்தத் தயையை எத்தனை அதிக கனமாக எண்ணவேண்டியிருக்கிறது. இந்தத் தயையின் விசாலம் இன்னதென்று கண்டுபிடிக்கவுஞ் சேசுநாதரோடு இருக்கிறதினால் நாம் அடையத்தக்க நன்மைகளைக் கைக்கொள்ளவும் பிரயாசப் படக்கடவோம்.



### செபம்.

சகல நன்மையின் ஊருணியுமாய், பாவவியாதிக்குப் பரம சஞ்சீவியுமாய், எளிய தரித்திரர் பொக்கிஷமுமாய் இந்தப்பீடத்தில் எழுந்தருளிவரத் திருவுளமான என் ஆண்டவரே! பாவவியாதியில் அகப்பட்டு மெலிந்தவனுமாய் வறுமை நிறைந்தவனுமாய் இருக்கிற அடியான் உமது பாதாரவிந்தத்தை அண்டிவந்து உமது தயையை இரந்துகேட்கிறேன். நீசனாயிருக்கிற அடியான்பேரில் இரங்கக் கிருபைசெய்யும். எனக்கு நன்மைசெய்ய வேண்டுமென்று பரலோகத்தில் நின்று தேவரீர் இந்தப் பீடத்தில் எழுந்தருளிவந்ததைக் காண்கிற நான் என் நிர்ப்பாக்கியத்தைக் கண்டு மனமடியப் போகிறதில்லை. எங்கள்பேரில் வைத்த ஸ்நேகப்பெருக்கத்தால் எங்களோடிருக்கத் திருவுளமான என் தயாபரசேசுவே! உம்மையே வாழ்த்தி ஸ்துதித்துவணங்கிநமஸ்கரிக்கிறேன். நான் உம்மை யாதொரு மன்றாட்டுகேட்க வேண்டுமென்று தேவரீர் திருவுளமா யிருக்கிறதினால் இனிநான் ஒருகாலும் உமக்கு ஏராத துரோகஞ் செய்யாதிருக்கவும், என் சத்துவமெல்லாங் கொண்டு உம்மை ஸ்நேகிக்கவும் கிருபைசெய்யும்; ஆண்டவரே, நானும்மை முழுமனதோடும் ஆத்துமத்தோடும் என்புத்தி சத்துவமெல்லாங்கொண்டு ஸ்நேகிக்கிறேன். நான் உம்மைச் சிநேகிக்கிறேனென்று சொல்லும்பொழுது வாயினால் மாத்திரஞ்சொல்லாமல் மனதோடும் வாக்கோடும் காலத்திலும் நித்தியத்திலும் உண்மையாகவே உம்மை ஸ்நேகிக்கிறேனென்று சொல்லச்செய்யும். சவுந்தரிய நேசத்தின் தாயே, சம்மனசுக்களே, அர்ச்சியஷ்டவர்களே மட்டற்ற நேசத்திற்குப் பாத்திரமான சர்வேசுரனை மன்றாடுங்கள்.

மனவல்லயச்செபம்.—ஆயனும் அப்பமுமான சேசுவே! நீர் எங்களை ஊட்டி வளர்த்துச் சத்துருக்கள் இடத்தில் நின்று காப்பாற்றிச் சீவியர்களுடைய நாட்டில் உமது நன்மையைக்கண்டு களிகூரக் கிருபைசெய்யும்.

## தேவமாதாவின் சந்திப்பு.

### அர்ச். ஜோமானுஞ் சென்பவர் செய்த செபம்.

என் ஆண்டவளே! சர்வேசுரன் எனக்குத் தந்த மெய்யான ஆறுதலே, இடுக்க நெருக்கத்தில் இளைப்பாற்றியான பரலோகப

த்தினியே பாவ அந்தகாரத்தில் அகப்பட்டுத்தயங்கும் ஆத்துமப் பிரகாசமே, யாத்திரையில் சிந்தாத்திரையே, பலவீனத்திற் சத்துவமே, தாரித்திரர் பொக்கிஷமே, கஸ்திப்படுகிறவர்களுக்கு ஆறுதலே, நோய்ப்பட்டவர்களுக்கு அவுழ்தமே, பாவிகள் தஞ்சமே, என் இரட்சணிய நம்பிக்கையே, நீர் மனிதர்பேரில் மட்டற்ற சிநேகமுள்ள சர்வேசுரனுக்குத் தாயாகையால் உமது மகிமைப்பிரதாபத்திற்கு ஏற்கையானபடி என்பேரில்கிருபையாயிரும். நான் உம்மைக்கேட்கும் மன்றாட்டு ஏதென்று தேவரீர் நன்றாய் அறிந்திருக்கிறதினால் என்மன்றாட்டைக் கேட்டருளும்.

மனவல்லயச்செபம்,—கிருபையுள்ளவளே, தயாபமுள்ளவளே, பேரின்ப இரசமுள்ள கன்னிமரியாயே.

சனீம மாசணுகாத கன்னிகையே (௨௬௬-ம்) பக்கங்காண்க.

## ௪௨. தேவநற்கருணை சந்திப்பு.

¶அவருடைய சஞ்சரிப்பில் கசப்பும், அவருடையகூட்டில் சலிப்புமில்லை.—ஞானபுஸ்தகம், அ-ம். அ௯.—சிநேகிதர் ஒருவர் ஒருவரைக்கண்டு பேசிப்பழகிக்கொண்டிருக்கச் சந்தோஷங்கொள்ளுகிறதினால் பலநாளைப் பேச்சிற்போக்குகிறார்கள். சேசுநாதர் பேரில் ஸ்நேகமில்லாததினால் தேவநற்கருணையில் அவரோடு பேசிப் பழகியிருக்கச் சலித்துப் போகிறார்கள். அர்ச்சியசிஷ்டவர்கள் சேசுநாதரை ஸ்நேகித்துக்கொண்டு வருகிறதினால் தேவநற்கருணை அவர்களுக்கு மோட்சமாக விருக்கிறது. அர்ச். தெரசம்மாள் வான இராச்சியத்தில் இருந்து தமதுசபையில் உட்பட்ட ஒரு கன்னியாஸ்திரிக்குத் தரிசனையாகிப் பரலோகத்தில் இருக்கிற நாங்களும் பூலோகத்தில் இருக்கிற நீங்களும் பரிசுத்தத்திலும் ஸ்நேகத்திலும் சமானமாய் இருக்கவேண்டியது. நாங்கள் அகமகிழ்ச்சி அடைந்திருக்கிறதும், நீங்கள் துன்பதுரிதப்படுகிறதும், உங்களுக்கும் எங்களுக்கும் உள்ள வித்தியாசம். பரலோகத்தில்நாங்கள் தேவசுபாவத்திற்குச் செய்துவருகிறதைப்பூலோகத்தில் நீங்கள் தேவசுபாவத்திற்குச் செய்துவரவேண்டியதென்று சொல்லி மறைந்துபோனாள். ஆனபடியினாலே தேவநற்கருணை நம்முடைய மோட்சமாயிருக்கிற தென்கிறதற்குச் சந்தேகமில்லை.



### செபம்.

எங்களுக்காகச் சிலுவைமரத்தில் பலியான மாசற்ற செம்மறிப்புருவையே! நீர் உபத்திரவ மரணத்தால் மீண்டு இரட்சிக்க வந்தவர்களில் நானும் ஒருவனென்கிறதை மறந்துவிடாதேயும். நீர் எனக்காக உம்மைக் கையளித்ததுமல்லாமல் இன்னம்என்பேரில் வைத்த ஸ்நேகத்தால் தினந்தோறும் எனக்காகப் பீடத்தின்பேரில் தேவரீர் பலியாகத் திருவுளமானதினால் நீர் முழுதும் என் கைவசமா யிருக்கிறதுமல்லாமல் நானும் ஒருபொழுதும் உம்மைவிட்டுப்பிரிய ஒட்டாதேயும். உமக்குச்சித்தமானபடி என்னை நடப்பிக்க என்னை முழுதும் உமது கையளிக்கிறேன். நான் உமக்கு ஒப்புக்கொடுக்கிற என்மனதை உமதுஸ்நேகத்தால் அடக்கி உமது திருச்சித்தத்திற்கு எப்பொழுதும் அடிமைப்பட்டதாய் இருக்கச்செய்யும். என் ஆசைக்கு இரம்மியந் தேடாமல் மட்டற்ற உமது நன்மைத்தன்மைக்கு மாத்திரம் பிரியப்பட விரும்புகிறேன். என்னிடத்தில் உமக்கு அசங்கியமானதெல்லாம் பறித்தெறிந்து உமக்குப் பிரியப்பட வேண்டுமென்கிற ஆசை யொன்றைமாத்திரமே எனக்குக் கட்டளையிடும். நீர் ஆசைப்படுகிறதைத்தானே நானும் ஆசைப்படச்செய்யும். என் இரக்ஷகரான கர்த்தாவே, நான் உம்மை ஸ்நேகிக்கவேண்டுமென்று நீர் ஆசைப்படுகிறதினாலும், நீர் மட்டில்லாத நேசத்திற்குப் பாத்திரமா யிருக்கிறதினாலும், நான் உம்மை நேசிக்கிறேன். உம்மை நேசிக்க வேண்டியபடி நான் நேசிக்கவில்லை என்கிறதினால் மிகவும் மனநொந்து விதனப்படுகிறேன். ஆண்டவரே! உமதுநேசத்திற்காக என்உயிரைக் கொடுக்க ஆசைப்படுகிறேன். என் ஆசையைக் கையேற்றுக்கொண்டு உமது நேசத்தை எனக்குத் தந்தருளும்.

மனவல்லயச்செபம்,—தேவ திருவுளமே! என்னை முழுதும் உமக்குப் பலியாக ஒப்புக்கொடுக்கிறேன்.

## தேவமாதாவின் சந்திப்பு.

மேற்சொல்லப்பட்ட அர்ச். ஜெர்மானுசென்பவர் செய்த செபம்.

எங்கள் அடைக்கலமும், ஞானசந்தோஷமுமான ஆண்டவளே! மோக்ஷானந்தத்தில் நீர் அநுபவிக்கும் மேன்மையான பாக்கி

யத்திற்கு நானும் பங்காளியா இருக்கப் பாத்திரவானாகச் செய்யும். என் ஆண்டவளே, என் தஞ்சமே, என் தாபரமே, என் அன்பான தாயே, என் ஆதரவே, என் ஆருயிரின் மாதாவே, என் சந்தோஷமே, என் நம்பிக்கையே, நான் உம்மோடு மோட்ச இராச்சியத்தில் இருக்க மன்றாடும். நீர் தேவதாயாகையால் உமக்குச் சித்தமுண்டானால் என்னையும் உம்மோடு இருக்கச் செய்யலா மென்கிறதற்குச் சந்தேகமில்லை. பரிசுத்த மரியாயே, நீர் பாவிகளை இரட்சிக்கச் சருவ வல்லப முள்ளவ ளாகையாலும், தயையின் தாயாகையாலும், எனக்கு நித்திய சீவியம் அளித்த உம்முடைய திருக்குமாரனை மன்றாடியருளும்.

மனவல்லயச் செபம்.—என்னம்மா, என் அடைக்கலமே, நான் முழுதுஞ் சேசுவுக்குச் சொந்த அடிமையாய் இருக்க மன்றாடியருளும்.

சன்ம மாசணுகாத கன்னிகையே, (உகக-ம்.) பக்கங்காண்க.

## ருஎ. தேவநற்கருணை சந்திப்பு.

¶ஊர்க்குருவிகளுக்குவீடும், காட்டுப்புறாக்களுக்குக் குஞ்சு பொரிக்கக் கூடும் அகப்படுகையிற் சர்வவல்லவரான கர்த்தாவே, என் ஆண்டவரே சுவாமீ உமது பீடம் எனக் கிளைப்பாறும் இடமாயிராமல் இருக்குமோ?—அக-ம். சங்கீதம்.

### செபம்.

ஆண்டவரே! தேவரீர் எங்களோடு வாசமா யிருக்கவும், உம்மைச் சிநேகிக்கிறவர்களுக்கு உமது தரிசனத்தைக் கொடுக்கவும், பீடத்தை ஆலயமாகத் தெரிந்து கொண்டதினால் மனிதர்மேல் உமக்குள்ள சிநேகங் கரைகடந்ததா யிருக்கவேண்டியது. மனிதர்கள் உம்மைஸ்நேகிக்க ஆசைவர இன்னம் நீர் செய்யக்கூடுமான தென்ன? நேசத்திற்குப் பாத்திரமானசேசுவே! நாங்களும்மைமட்டுத்திட்டமில்லாமல் ஸ்நேகிக்கச்செய்யும். எங்களை இத்தனைஆவலாய்ச் சிநேகிக்கிறவரை நாங்கள் இத்தனை அற்பமாய் ஸ்நேகிக்கிறதுஞாயமோ? சேசுவே, உமது ஸ்நேகபாசத்தால் எங்களை உமதருகில் இழும், நீர்எத்தனை ஸ்நேகத்திற்குப் பாத்திரமாயிருக்கிறீர் என்கிறதை நாங்கள் கண்டுபிடிக்கச்செய்யும். மட்டற்றமகிமைப்



பிரதாபமும் அளவற்ற நன்மைத்தனமு முள்ள சேசுவே! நீர் மனிதர் மேல்வைத்த கரைகடந்த ஸ்நேகத்தையும் மனிதர் உம்மைஸ்நேகிக்கவேண்டுமென்று நீர்செய்துவரும் இத்தனை ஆச்சரியமானகாரியங்களையுங் கண்டபின்பு இன்னம் இத்தனை ஆயிரம்பேர் உம்மை ஸ்நேகியாமல் இருக்கிறதெப்படி? இந்தமட்டும்நானுமுமக்குநன்றி கெட்டவனாய்இருந்ததுபோதும், நீர்மட்டற்றஸ்நேகத்திற்குப்பாத்திரமாய்இருக்கிறதினாலும், நான்உம்மைஎல்லாவற்றையும்பார்க்க ஸ்நேகிக்கவேண்டுமென்று தேவரீர் கற்பிக்கிறதினாலும், என்னால் இயன்றமாத்திரம் உம்மைஸ்நேகிக்கிறேன். உம்மை மாத்திரமே ஸ்நேகிக்கிறேன். ஆ! என் ஆண்டவரே! நான் இந்தமட்டும் உம்மை ஸ்நேகியாமல் இருந்ததற்கு என்னாலான பரிகாரஞ்செய்கிறேன். உமது மனதிற்குத் திருப்தியான பரிகாரம் நான்செய்யக் கிருபைசெய்யும். உலக நன்மையை அபேட்சிக்கிறவர்களுக்குக் கொடும், மேன்மையான சம்பத்தாகிற உமது ஸ்நேகத்தை எனக்குத்தந்தருளும். நீர் எனக்காக பேறுபெற்றப் பலன்களைக் குறித்து நான் உம்மை நம்பி இரந்துகேட்கும் ஸ்நேகத்தை எனக்குத்தந்தருளும். சேசுவே! உம்மைஸ்நேகிக்கிறேன்; மட்டற்ற நன்மையே, நீயே என்சம்பத்து, நீயே என் பாக்கியம், நீயே என் ஸ்நேகம்.

மனவல்லயச்செபம்.—சேசுவே! நீர் உம்மை முழுதும் எனக்குக் கையளித்ததினால் நானும் என்னை முழுதும் உமக்குக் கையளிக்கிறேன்.

## தேவமாதாவின் சந்திப்பு.

### அர்ச். பெர்நாந்து என்பவர் செய்த செபம்.

பாவச்சகதியில்விழுந்துபுரண்டிருக்கும் நாங்கள் பரம நீதிகர்த்தர் சமுகத்தில் தீர்வைகேட்கப்போக வேண்டியதினால் அவருடைய கோபக் கடோரத்தைத் தணிக்கவாராவென்று பரலோக இராக்கினியே, உம்மை அண்டிவந்து பார்க்கிறோம். ஆண்டவளே! எங்கள் நீதிக்கர்த்தனை உமது திருக்குமாரனை நீரும் உம்மை அவரும்மிகவும்ஸ்நேகிக்கிறதினால்உம்மைவிடவேறொருவரும் அவர் மகாகோபத்தைத்தணிக்கக் கூடாமையால் கிருபை

தயாபத்திற்கு மாதாவே, உமது அடைக்கலத்தை நாடிவந்த அடியார்கள் அழுகைப் பிரலாபத்திற்கு இரங்கி உமது திருச்செவி கொடும். உமது திருக்குமாரனின் அகோரமான கோபத்தைத் தணித்து எங்களை அவரோடு உறவாக்கியருளும். எத்தனை அவலட்சணப்பாவிகளானாலும் உம்மை நாடி உமது அடைக்கலத்தைத் தேடி வந்தால் நீர் அவர்களைப்புறக்கணித்துத் தள்ளிவிடாமல் ஆறுதல்சொல்லி நம்பிக்கைவருத்தி நீதிகர்த்தரோடு அவர்களை உறவாக்காமல் விட்டு விடுகிறதில்லை.

மனவல்லயச்செபம்.—நீர் எங்களுக்குத் தாயாராய் இருக்கிறீர் என்று காண்பியும்.

சன்ம மாசணுகாத கன்னிகையே (௨௩௫-ம்.) பக்கங் காண்க.

## ௩௨ தேவநற்கருணை சந்திப்பு.

¶ உங்கள்பொக்கிஷமுள்ள இடத்தில் உங்கள் இருதயமுங் கூட இருக்கும். அர்ச். லூக்கா. ௧௨-ம் அதிகாரம்.—அவரவர்களுடைய பொக்கிஷமுள்ள இடத்தில்அவரவர்கள் ஆசையும்பட்சமும் இருக்கிறதென்று சேசுநாதர்தாமே திருவுளம் பற்றியிருக்கிறதினால் சேசுநாதரைத் தங்கள் மேலான பொக்கிஷமென்று எண்ணுகிற புண்ணிய ஆத்துமாக்கள் தங்கள் ஆசைப்பட்சமெல்லாந் தேவநற்கருணையின்பேரில் வைக்கிறார்கள்.

### செபம்.

என்மேல் வைத்த ஸ்நேகத்தால் இரவும் பகலும் பீடத்தில் எழுந்தருளியிருக்கத் திருவுளமான என் சிநேகதேவனே, நான் உமது சிநேகத்தை மாத்திரமே நினைக்கவும், உம்மைமாத்திரமே அபேட்சிக்கவும் உமது சிநேகபாசத்தால் என்னை உமதருகிற்சேர்த்தருளும். நீர் எனக்காகப்பாடுபட்டு அடைந்த வேதனைகளைப் பார்த்து எனக்கு இந்த மன்றாட்டைத் தந்தருளுவீரென்று நம்பியிருக்கிறேன். என் இரட்சகரே! என் ஆத்தும நேசரான பத்தாவே! நான் உம்மை சிநேகிக்க வேண்டுமென்று நீர் என்னை எத்தனை அன்பாய் அழைக்கிறீர். நித்திய வார்த்தையே, நீர் எங்களுக்காக மனிதனாகப் பிறக்கவும் பாடுபட்டு மரிக்கவுந்திருவுளமானது மல்லாமல் எங்களுக்குத் துணையாயிருக்கவும் எங்கள்போசனமாகவும்



இனி நாங்கள் அடையப்போகிற மோட்சத்தின் அச்சாரமாகவும் இருக்கத் திருவுளமானீர். எங்களுக்கு உமதுமேல் உருக்கம் வரும்படி மாட்டுக் கொட்டிலிற் குழந்தை உருவாகவும், தச்சர் கூடத்தில் வேலைக்காரனாகவும், கழுமரத்தில் குற்றவாளியாகவும், பீடத்தில் அப்பத்தின் குணங்களுக்குள்ளேயுங் காணப்படுகிறீர். நாங்கள் உம்மை சிநேகிக்க நீர் இன்னஞ் செய்யவேண்டியதென்ன? மட்டற்ற நேசமே, உம்மை நான் வேண்டியபடி எப்பொழுது சிநேகிப்பேன்? என்னாண்டவரே, நான் உம்மை ஸ்நேகிக்க மாத்திரமே உயிர் அடைந்திருக்க ஆசைப்படுகிறேன். என்மதுரமுள்ள இரட்சகரே, உமது உயிரை முழுதும் நீர் எனக்காகப் பலிகொடுத்திருக்கையில் என் ஆவி முழுதும் உம்மை சிநேகிக்கவும் உமக்குப் பிரியப்படவும் உதவாவிட்டால் நான் உயிரோடிருந்தும் பிரயோசனமென்ன? ஆண்டவரே! நீர் மட்டற்ற சிநேகமுமாய், அளவற்ற சிநேகத்திற்குப் பாத்திரமானவருமாய், உருபலாவருணிய அலங்காரமுமாய், நன்மையுள்ள மதுரமுமாயிருக்கையில் நான் உம்மை சிநேகியாமல் என்னத்தை சிநேகிக்கப் போகிறேன்? என் ஆத்துமம் உம்மையே சிநேகித்துச் சீவித்திருக்கக்கடவது. நான் உமதுபேரில் வைக்கும் சிநேக உருக்கத்தால் மாட்டுக்கொட்டில், தச்சர்கூடம், சிலுவைமரம், தேவநற்கருணை என்கிற சத்தம் என் காதில் விழும்போது என் உள்ளம் உருகக்கடவது. சேசுவே! நீர் எனக்காக இத்தனை மகா அரிதான காரியங்களைச் செய்ததினால் உமக்காக நானும் அரிதான காரியங்களைச் செய்ய ஆசைப்படக் கடவேனாக.

மனவல்லயச்செபம்.—ஆண்டவரே! என் ஆவி பிரியுமுன் நான் எதாகிலும் உமக்காகச் செய்யக் கிருபைசெய்தருளும்.

## தேவமாதாவின் சந்திப்பு.

### மேற்சொல்லப்பட்ட அர்ச். பெர்நாற்து என்பவர் செய்த செபம்.

நிர்மல பரிசுத்த மரியாயே, பெண்ணாகப் பிறந்தவர்களில் நீர் ஒருத்தி மாத்திரமே உலக இரட்சகர் இளைப்பாறும் இடமாய் இருக்கப் பேறு பெற்றதினாலும், உலக இரட்சணியம் உமது திருவயிற்றில் துவக்கினது என்கிறதினாலும், உமதுகருப்பத்தில்

சர்வேசுரனுக்கும் மனிதருக்கும் உறவானது என்கிறதினாலும், தேவ இஷ்டப்பிரசாத நன்மைகளை நீர் ஒருத்திமாத்திரமே மட்டுதிட்டம் இல்லாமல் பெற்றவள் என்கிறதினாலும் சகலரும் உம்மைத் தேவாலயம் என்று கொண்டாடுகிறார்கள். பாவியின் கைநீட்டிப் பூபறியாத் தோட்டமும், உரோச என்னும் புஷ்பமுதல் எந்தெந்தப் புஷ்பங்களைவிட ஆத்துமத்திற் கதிக அலங்காரமாயிருக்கும் ஸ்நேகம், கற்பு, தாழ்ச்சிமுதலான திருச்சபைக்கு அலங்காரமான புண்ணியங்களாகிற உருபலாவருணிய அலங்கார புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட நந்தவனமு நீரே, உலகத்திற் கெல்லாந் தேவ இஷ்டப்பிரசாத சலம்பாயும் உந்நதம் பிறக்குஞ் செல்வம் பொழியுஞ் சிங்காரத் தோப்பு நீர் அல்லோ? நீர் தேவ இஷ்டப்பிரசாதத்தின் வாய்க்காலாயிருக்கப் பேறுபெற்றதினால் உலகத்திற்கு வந்தநன்மை இவ்வளவு என்று கண்டுபிடிக்கிறவர்களார்?

மனவல்லயச் செபம்.—கிருபைதயாபத்திற்கு மாதாவாயிருக்கிற எங்கள் இராக்கினியே வாழ்க.

சன்மமா சனுகாத கன்னிகையே, (௨௧௯-ம்.) பக்கங் காண்க.

## ௭௨ தேவநற்கருணை சந்திப்பு.

இதோ உலக முடியுமளவும் நாம் உங்களோடிருக்கிறோம். அர்ச். மத்தேயு. ௨௮-ம். அதிகாரம்.—தம்மால் சிநேகிக்கப்பட்ட ஆடுகளுக்காகத் தமது உயிரைக்கொடுத்த நல்ல ஆயனானவர் தாம் மரணமடைந்தாலும் நம்மைவிட்டுப்பிரியாமல் இருக்கத் திருவுளமாகி, நம்மைப்பார்த்து, நம்மால்மிகவும் சிநேகிக்கப்படும் ஆடுகளே இதோ நாம் உங்களோடு எப்பொழுதும் வாசமாயிருக்கிறோம், உங்களைப்பற்றி நற்கருணையில் உலகத்தில் இருக்கிறோம், நமது தரிசனையால் உங்களுக்கு ஆறுதல் சகாயமாயிருக்க நாம் திருவுளமாயிருக்கிறதினால் உங்களுக்கு வேண்டுமென்கிற பொழுது நமது தரிசனையைக் காணலாம். உலகத்தில் மனிதர் இருக்குமளவும் நாமும் உலகத்தைவிட்டுப் பிரியாமல் மனிதரோடு வாசமாயிருப்போமென்று திருவுளம்பற்றி வருகிறார். தூர தேசத்திற் போகிற பத்தாவானவர் தாமில்லாத சமயத்தில் தமதுபத்தினி தனித்திராமல் தாமே தேவநற்கருணையில் எழுந்தருளித் தமது பத்தினிக்



குத் துணையாயிருக்கத் திருவுளமாயிருந்தாரென்று, அர்ச். அலக்சாந்தர் இராயப்பர் வசனித்திருக்கிறார்.

### செபம்.

நன்மைநிறைந்த கர்த்தாவே! ஸ்நேகநிறைந்த பிதாவே! இப்பொழுது நானும்மைச் சந்திக்கிறதற்குப் பதிலாய் நான் தேவநற்கருணையைப்பட்கொள்ளும்பொழுது தேவரீருமென்னைச் சந்திக்க வருகிறீர், தேவரீரென்னைச்சந்திக்கவருமளவில்உமது தரிசனையை எனக்குத்தந்தருளுகிறதும் அல்லாமல் உம்மைத்தானே எனக்குப் போசனமாகக்கொடுத்து என்னோடு பந்தனமாகத் திருவுளமான என் சேசுவே, உம்மைமுழுதும் என் கையளிக்கிறதினால் நீர் இப்பொழுதும் என்னிடத்தில் இருக்கிறீர் என்று உண்மையாகச் சொல்லுகிறேன். தேவனாயிருக்கிற நீர்தாமே உம்மைமுழுதுமென் கையளிக்கிறதினால், நிலத்தின் ஊத்தையில் உதிக்கும் புழுவுக்குச்சமானமாயிருக்கிற நானும் என்னை முழுதும் உமது கையளிக்க ஞாயமல்லோ? ஆ! என் தேவஸ்நேகமே! நான் வார்த்தையினால் மாத்திரம் உமக்கு முழுதுஞ் சொந்தமாயிருக்கிறேனென்று சொல்லாமல் உண்மையாகவே கிரியையினால் உமக்கு முழுதுஞ்சொந்தமாயிருக்கிறேனென்று சொல்லுங்காலம் எப்பொழுதுவரும்? சேசுவே! இது உம்மாலாகுங் காரியமாகையால் நீர் எனக்காகச் சிந்தின திருஉதிரத்தின் பேறுகளைப்பார்த்து என் நம்பிக்கையை உறுதிப்படுத்தி நான் மரணமடையாமுன் ஒரு விதத்திலும் நான் என்னுடையவனென்று இராமல் முழுதும் உம்முடையவனாயிருக்கச்செய்யும். சகல மனிதர் சத்தத்திற்குத் திருச்செவிகொடுக்குங் கர்த்தாவே, உமது ஸ்நேகத்தைவருந்திக்கேட்கும் என் அடியசத்தத்திற்குச் செவிகொடும். ஆண்டவரே, நான் என் சத்துவமெல்லாங்கொண்டு உம்மைஸ்நேகிக்கவும், பிரயோசனமும் ஆறுதலும், சம்பாவனையும் இல்லாமல் உமது திருவுளத்திற்கு முழுதுங் கீழ்ப்படிந்திருக்கவும், ஸ்நேகத்தைப்பற்றி மாத்திரமே உமக்கு ஊழியம் பணிவிடை செய்துவரவும் என்மேலுள்ள ஸ்நேகம்அக்கினிமயமாய்ப் பற்றியெரியவும் உமது திரு இருதயத்திற்குமாத்திரமே பிரியப்படவும் அபேட்சிக்கிறேன். உமதுஸ்நேகமே அடியேனுக்குச் சம்பாவனையாயிருக்க மன்றாடுகிறேன். பிதாவின் பிரியகுமாரனான சேசுவே, என் மனச் சுதந்தரத்தையும் என்னையுந்தானே முழுதும் உமக்குள் ஐக்கியப்படுத்தும்.

சேசுவே! நான்உம்மையேநாடி, உம்மையேதேடி, உம்மையே அபேட்சித்து, உம்மை மாத்திரமே ஸ்நேகிக்க மன்றாடுகிறேன். உம்மையல்லாமல் எனக்கு வேறொன்றும் வேண்டாம். உம்மை மாத்திரமே எனக்குத் தந்தருளும்.

மனவல்லயச்செபம்.—சேசுவே! நான் முழுதும் உமக்குச் சொந்தமாயிருக்கச் செய்யும்.

## தேவமாதாவின் சந்திப்பு.

### மேற்சொல்லப்பட்ட அர்ச். பெர்நாற்து என்பவர் செய்த செபம்.

பரலோக இராக்கினியே, விடியற்காலம்போல உதயமாகிறவளும்; சந்திரனைப்போலச் சவுந்தரியமானவளும், சூரியனைப்போல ஒளிவு பிரகாசமுள்ளவளுமென்று உமது பேரிலல்லோ வேதத்திற் சொல்லியிருக்கிறது? பரிசுத்தமரியாயே, ஞானச்சூரியன் உதயமாகுமுன் விடியற்காலத்தின் நட்சத்திரம்போல உலகத்திற்கு உமது அர்ச்சியசிஷ்டவரத்தால்பிரகாசங்கொடுக்க உற்பவித்தவள் நீரல்லவோ? சந்திரனைவிடசூரியனுக்குச்சமானமானநிகமொன்றும்இல்லாததுபோலப், படைக்கப்பட்டவஸ்துக்களுக்குள்ளேஎல்லாவற்றையும்படைத்த சர்வேசுரனுக்கு உம்மைவிட சமானமானவர்கள் ஒருவரும் இல்லையென்கிறதினாலும் இராக்காலத்தில் சந்திரன் ஒளிவு பிரகாசங் கொடுக்குமாப்போல எங்கள் அந்தகாரத்தில்உமது தர்ம புண்ணியத்தால் ஒளிவு பிரகாசங் கொடுக்கிறவளும் நீர் ஆகையால், சந்திரனைப்போலச் சவுந்தரிய முள்ளவளும் நீரல்லவோ? சந்திரனுக்கு உள்ள களங்கம் உம்மிடத்தில் இல்லையென்கிறதினால் நீர்சந்திரனிலும் அழகுள்ளவளென்று சொல்லவேண்டியிருக்கிறது. உலகத்துக்குப் பிரகாசங் கொடுக்குஞ் சூரியனைப்படைத்த ஞான சூரியனாகிய சர்வேசுரன் நராகப்பிறந்தவர்களுக்குள்ளேமேலான பிரகாசமா யிருக்குமாப்போலப் பெண்ணாகப்பிறந்தவர்களுக்குள்ளே நீர்சூரியனைப்போல ஒளிவு பிரகாசமுள்ளவளென்று சொல்லவேண்டியதல்லவோ?.

மனவல்லயச்செபம்.—அர்ச். மரியாயே! சர்வேசுரனுடைய மாதாவே, பாவிகளாயிருக்கிற எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

சன்மமாசணுகாத கன்னிகையே. (உககூ-ம்.) பக்கங் காண்க.



## உ௰ தேவநற்கருணை சந்திப்பு.

¶ என் காதலியே, என் சவுந்தரியே, எழுந்திருந்து நீவிரமாகவா. உந்நதகவி. உ-ம். அதி.—சேசுநாதர் தேவநற்கருணையில் தம்மைச் சந்திக்கவருகிற ஆத்துமத்தைப்பார்த்து நீ நம்மை ஸ்நேகிக்கிறதினாலும் சிநேகபாசம் நம்மிருவரையும் பந்தனமாகக் கட்டியிருக்கிறதினாலும், நமது காதலியானபத்தினியே, நமது இஷ்டப் பிரசாதத்தால் அலங்கரிக்கப்பட்ட சவுந்தரியே, இன்னும் அதிகமான இஷ்டப்பிரசாத நன்மைகளை அடையும்படி உன் நிர்ப்பாக்கியத்தைவிட்டு எழுந்திரு. நமது மகிமைப்பிரதாபத்தைக்கண்டு நீ பயந்து நமது அருகில் வராமல் பின்வாங்கப்போகிறாயென்று, தேவநற்கருணையில் மறைந்து இருக்கிற நம்மிடத்தில் தினம் நம்பிக்கையோடுவா; உன்னை நாம் பட்சத்தோடுகட்டி அரவணைத்துக்கொள்ளவும், நீ நம்பிக்கையோடு கேட்கும் மன்றாட்டுக்களைத் தயவோடு கொடுக்கவும் காத்திருக்கிறோம் என்று திருவுளம்பற்றுகிறார். மகிமைப்பிரதாபமுள்ள இராசாவானவரிடத்தில் நாம் அதிக நம்பிக்கையோடு அடுத்துப் போகும்படி அவர் தமது மகிமைப் பிரதாபமெல்லாம் அப்பத்தின் குணங்களில் மறைத்துக்கொண்டு இருக்கிறார் என்று அர்ச்சியசிஷ்ட தெரசம்மாள் வசனித்திருக்கிறாள். ஆனபடியினால் மகாசிநேகத்தோடும் நம்பிக்கையோடுஞ் சேசுநாதரை அடுத்துப்போய் அவரோடு ஐக்கியித்து அவர் இஷ்டப் பிரசாதங்களைத் தந்தருள வேண்டுமென்று மன்றாடுவோம்.

### செபம்.

என்பேரில்வைத்த சிநேகத்தால் மனிதனாகப்பிறந்து அப்பத்தின் குணங்களில் மறைந்திருக்கும் நித்தியவார்த்தையான ஏகசுதனே! நீர் தேவனுமாய் மட்டற்ற மகிமைப்பிரதாப முள்ளவருமாய் அளவற்ற நன்மை நிறைந்தவருமாய் என் ஆத்துமத்தின்பேரில் பட்சமுள்ளவருமாய் இருக்கிறீர். உமது திருச் சமூகத்தில் நானிருக்கிறேன் என்கிறதினால் எனக்கு எத்தனை ஆனந்த சந்தோஷம் உண்டாகவேண்டியிருக்கிறது, ஆண்டவரை சிநேகிக்கும் ஆத்துமங்களே, நீங்கள் பரலோகத்திலாவது பூலோகத்திலாவது எங்கேயிருந்தாலும் எனக்காக ஆண்டவரைச் சிநேகியுங்கள். அழகிய சிநேகத்தின் மாதாவான அர்ச்சியசிஷ்ட மரியாயே, என் சர்வேசுரன் தாயே, என்னம்மா என் ஆண்டவரை நான் சிநேகிக்க

எனக்கு உதவியாயிரும். சிநேக தேவ்னை சேசுவே! நீர் என் சிநேகத்திற்கு விஷயமாயிரும். என்மனதை உம்மில் ஐக்கியப்படுத்தி என்னை முழுதும் உமது கைவசப்படுத்திக்கொள்ளும். என் புத்தி இடைவிடாமல் உம்மைத் தியானிக்கவும் நான் உமக்குப் பிரியப்பட என் சரீரம் உதவியாயிருக்கவும் என் ஆத்துமம் முழுதும் உமது சொந்தப் பொருளாய்த்தானே யிருக்கவும் வேண்டும் என்கிறதைப்பற்றி என் மனம், சித்தம், புத்தி, சரீரம், ஆத்துமம், இவை முழுதும் உமக்கே பாதகாணிக்கையாக வைக்கிறேன். என் ஆசைக்குரிய அன்பனே மனிதர்பேரில் உமக்குள்ள அளவிறந்த ஸ்நேகத்தை அறிந்து சகலமனிதரும் உம்மை சிநேகிக்கவும் உமக்குப் பிரியப்பட நடக்கவும் ஆசைப்படுகிறேன். நான் உமது உருபவாருணியத்தைக் கண்டு உமதுபேரில் ஞான ஆசைகொண்டு உமது சிநேகம் அக்கினிமயமாய்ப் பற்றிப்பெரியவும் உமக்குப் பிரியப்பட என்னுற் செய்யக் கூடுமான தெல்லாங் குறைவில்லாமற் செய்யவும், உமது ஊழியத்தில் என்ன பிரயாசைப் படவேண்டியிருந்தாலும், உயிரைமுதலாய்ச் செலவழிக்க வேண்டியதானாலும், அசட்டையில்லாமல் செய்துவரவும் ஆசைப்படுகிறேன். என் சர்வேசுரா, என்பாக்கிய சம்பத்தே, என் சிநேகமே, என்சகல நன்மையே, நான் உம்மை யடைய மற்றெல்லா மிழந்தால் எத்தனைப் பாக்கியம்.

மனவல்லயச் செபம்.—சிநேக விஷயமான சேசுவே! என்னை முழுதும் உமது சொந்தமாக்கிக் கொள்ளும்.

## தேவமாதாவின் சந்திப்பு.

### அர்ச். பெர்நாற்து என்பவர் செய்த செபம்.

உந்நத மகிமைப் பிரதாபம் நிறைந்தவளும், மகாசிநேகத்திற்குப் பாத்திரமானவளும், பேரின்ப இரசம்பொழியுங் கன்னிகையுமா யிருக்கிற பரிசுத்த மரியாயே, சிநேக அக்கினித்தணல் இருதயத்திற் பற்றாமல் உமது திருநாமத்தை உச்சரிக்கவும், அதிகமதிகமாய் உம்மைச் சிநேகிக்கவும் ஆசை விளையாமல் உம்மைச் சிநேகிக்கிறவர்கள் உம்மை நினைக்கவும் கூடாதல்லோ? சம்மனசுக்களுக்கும், மனிதருக்கும் மேன்மையுள்ள இராக்கினியான ஆண்டவளே, நமது ஆண்டவரிடத்தில் உம்மைவி ஒருவரும் அதிகமாய் அடுத்திருக்கவில்லை என்கிறதினால் உம்மைவிட எங்



களுக்காக அவரிடத்தில் மனுப்பேசத்தக்கவர்கள் ஒருவரும் இல்லையே. நீர் கேட்கும் மன்றாட்டுக்கெல்லாம் உமது திருக்குமாரன் செவிகொடுத்து உமக்கு ஒன்றுமில்லை யென்று உரைப்பதில்லை, ஆகையால் எங்களுக்காக நீர்தாமே அவரிடத்தில் மன்றாடும்.

மனவல்லயச் செபம்.—அர்ச். மரியாயே! நான் இடைவிடாமல் உமது அடைக்கலத்தை நாடிவர எனக்குக் கிருபைசெய்தருளும்.

சென்ம மாசணுகாத கன்னிகையே, (உககூ-ம்.) பக்கங் காண்க.

## கூ. தேவநற்கருணைசந்திப்பு.

¶ மாரோடணைக்கப்படுவீர்கள். இசையாஸ். கூகூ-ம். அதிகாரம்.—ஆண்டவர் மார்பிலேபொற்கச்சை கட்டியிருக்க அர்ச். அருளப்பர் காட்சிகண்டோமென்று காட்சியின் புஸ்தகம் முதல் அதிகாரத்தில் வசனித்திருக்கிறது. சேசுநாதர் மகாதயைநிறைந்த தாயைப்போல நமக்கு அநேகமாயிரம் இஷ்டப்பிரசாத நன்மைகளைத் தந்தருள தேவநற்கருணையில் எழுந்தருளியிருப்பதற்கு அடையாளமாகக் காண்கிறது. தன்பாலைக்கொடுக்கப்பிள்ளைகளை அன்புடனே தேடுந் தாயைப்போலச் சேசுநாதர்நம்மைத் தேடுகிறதினால் இசையாஸ் என்கிற தீர்க்கதரிசியைக்கொண்டு நீங்கள் மாரோடணைக்கப்படுவீர்கள் என்று முன்னமே அறிவித்திருக்கிறார். தேவநற்கருணையில் எழுந்தருளியிருக்கிற சேசுநாதர் இஷ்டப்பிரசாத நன்மைகளைத் தமது கைநிறைய வைத்துக்கொண்டு ஆருக்குக்கொடுப்போமென்று தேடித்திரிகிறதை மகாத்துமாவான அல்வாரேஸ் என்பவர் கண்டோமென்று சொல்லியிருக்கிறார். தாயிடத்தில் பால்குடிக்கப் பிள்ளைகள் ஆவலாய்ப் போவதுபோலச் சீயோன் என்கிற பட்டணத்தில்பிறந்த அர்ச்சியசிஷ்ட கத்திரீனம்மாள் தேவநற்கருணையைஆவலோடு அடுத்துப் போவாளென்று அந்தம்மாள் சரித்திரத்தில் எழுதியிருக்கிறது.

### செபம்.

நித்தியபிதாவின்நேசமுள்ள திருக்குமாரனைசேசுவே, எல்லாவற்றிலும் பார்க்கத் தேவரீரை அதிகமாய்ச் சிநேகிக்கவேண்டியது என்கிறதினால் உம்மைவேண்டியபடி சிநேகிக்க விரும்புகிறேன். அநேகமாயிரமுறை உமக்கு இரண்டகஞ்செய்த நான்

இனித்தேவரீரைச்சிநேகிக்கவுந்தேவரீரை அடுத்துவரவும்பாத்திரவானல்ல என்றாலும் தேவரீர் அடியேனைப்பார்த்து என் மகனே, உன்னிருதயத்தை எனக்குத்தாராய் என்றும், உன் ஆண்டவராகிற சர்வேசுரனை உன் சத்துவத்தோடும், முழு இருதயத்தோடும் சிநேகிப்பாயாகவென்றுந் திருவுளம்பற்றுகிறதைக்கேட்கிறதினாலே நீர்என்சிநேகத்தை இன்னம்வருந்தித் தேடுகிறீர் என்கிறதற்குச் சந்தேகமில்லை. நான் என் ஆசை விருப்பமெல்லாம் உமது பேரில் வைக்கவேண்டும் என்கிறதைப்பற்றியல்லோ நீர் இன்னம் என்னை நரகத்தில் தள்ளாமல் உலகத்தில் வைத்திருக்கிறீர்? சிநேக தேவனே, நன்மை நிறைந்த கர்த்தாவே, நான் என்னை முழுதும் உமது கையளிக்கிறேன். நீர் மாத்திரமே என் னிருதயத்திற்கு அதிபதிகர்த்தரா யிருக்கவேண்டுமென்று திருவுளமாயிருக்கிறதினால் உம்மைமாத்திரமே என்னிருதயத்திற்கு அதிபதிகர்த்தராக வைத்துக்கொள்ளுகிறேன். என் இருதயம் சிநேக அக்கினிச் சூடில்லாமல் ஈரித்திருக்கிறதினால் உமக்கு அரோசகமாயிருக்கும். தேவரீர் திருவுளமிரங்கி அந்த இருதயத்தைக்கையேற்றுக் கொண்டால் அதைமாற்றிவைக்க உம்மால் ஆகும். மட்டில்லாத ஸ்நேகத்திற்குப் பாத்திரமானவருமாய் என்னை இத்தனை ஆவலாய் சிநேகிக்கிறவருமாகிய உமக்கு நான் அநேக காலம் நன்றிகெட்டவனாய் இருந்ததும், உமது சிநேகத்தை இத்தனை அற்பமாயெண்ணினதும்போதும், இனியாவதுநான் உமக்கு நன்றியறிந் திருக்கவும் உம்மை வேண்டியபடி சிநேகிக்கவும் ஆசைகொண்டதினால் என்னிருதயத்தை மாற்றிஎனக்குநவமான இருதயத்தைக் கட்டளையிடும், நான் இந்தமட்டும் உம்மை சிநேகியாமற் போனதற்கு ஈடாக உமது சிநேகத்தை அதிக மதிகமாய் அபேட்சிக்க அநுக்கிரகஞ்செய்தருளும்.

மனவல்லயச் செபம்.—என் சர்வேசுரா சுவாமீ, உம்மை சிநேகிக்க விரும்புகிறேன், உம்மையே சிநேகிக்க விரும்புகிறேன்.

## தேவமாதாவின் சந்திப்பு.

### அர்ச்சியசிஷ்ட தாமசென்கிற அருளப்பர் செய்த செபம்.

கிறீஸ்துவர்களின் நம்பிக்கையான பரிசுத்த மரியாயே! உம்மைச்சிநேகித்துவணங்கிநமஸ்கரித்துச்சர்வேசுரனுக்குப்பின்என்



னம்பிக்கையெல்லாம்உமதுபேரில்வைத்திருக்கும்நீசப்பாவியான் அடியேன் மன்றாட்டுக் கிரங்கித் திருச்செவி கொடுத்தருளும். நான் உமது மன்றாட்டால் உயிர் அடைந்தவனாகையால் உமது திருக்குமாரனின் தேவ இஷ்டப்பிரசாத மடையச் செய்யும், நீர் என்னிரக்ஷணியத்தின் ஈடாகையால் என்பாவ அகோரத்தில் நின்று என்னை மீண்டு இரட்சிக்க உமது திருக்குமாரனை மன்றாடும். உமது சலுகையைக்கொண்டு நான் நித்திய மோக்ஷானந்தம் அடையும்படி என்புத்தியின் அந்தகாரத்தைநீக்கி ஆசாபாசத்தை அறுத்து எனக்குவருஞ் சோதனைகளை ஒழித்துஎன்னடக்கையை ஒழுங்கு படுத்த மன்றாடியருளும்.

மனவல்லயச் செபம்.—என்தாயே, நான் உம்மை எந்நேரமும் மறவாதிருக்கச் செய்யும்.

சன்ம மாசணுகாத கன்னிகையே, (உ௩௩-ம்.) பக்கங்காண்க.

## ௰௨ தேவநற்கருணை சந்திப்பு.

¶நம்மை அடைந்தவன் சீவியமடைவான். உவமைச்சொல். அ-ம். அதிகாரம்.—சேசுநாதரிடத்தில் மாத்திரம் நீங்கள் தேடும் நன்மையாவும் ஸ்தாபித்திருக்கையில், மதிகெட்ட மனிதரே; நீங்கள் எங்கே போகிறீர்கள்? எவற்றைத் தேடுகிறீர்களென்று அர்ச். அகுஸ்தீனென்பவர் கூக்குரலிடுகிறார். என்றைத்துமமே நீயும் உலகத்தாரைப்போலப் பயித்தியங்கொண்டலையாமல்எல்லா நன்மையுங் கொண்டிருக்கிற மேன்மையான சர்வேசுரனை மாத்திரமேதேடு; நீ அவரைத் தேடுகிறது மெய்யானால் உன்மன்றாட்டைக்கேட்கவும், உனக்காறுதல் கட்டளையிடவும், இதோ இந்தப்பீடத்தில் எழுந்தருளி உன் அருகிலிருக்கிறார். அர்ச். தெரசம்மாள் வசனிக்கிறதுபோல உலக இராசாக்களிடத்தில் ஆர் போனாலுமோ அவர்கள் தடையின்றிப்போய்த் தங்கள் காரியங்களைத் தாங்கள் தானே பேசிக்கொள்ளக் கூடாதிருக்கிறது மல்லாமல் வேறொருவரைக்கொண்டு மனுப்பேசுவிக்கிறதுந்தானே வருத்தமா யிருக்கிறது.

### செபம்.

மகிமைப் பிரதாபமுள்ள இராசாவான சேசுவே! நீர் பாரபட்சமில்லாமல் சகல மனிதர் மன்றாட்டுக்குத் திருச்செவிகொடுத்

துக் கேட்கவேண்டுமென்றும், எல்லாரோடும் முகமுகமாய்ப் பேசவேண்டுமென்றுமல்லோ இந்தப்பீடத்தி லெழுந்தருளி இருக்கிறீர். இராசாக்கள் குறிக்கப்பட்ட நாள்களில் மாத்திரம் அவரவர் பேச்சுகளுக்குச் செவி கொடுக்கிறார்கள்; நீரோவென்றால் இரவும் பகலும் ஓய்வு ஒழிவு இல்லாமல் செவிகொடுத்துக் கேட்டு வருகிறீர். மகா சிநேக தேவனான சேசுவே! எத்தனையோ ஆயிரம்பேரை உமது மகா சிநேக அக்கினிமயமாய்ப்பற்றி எரியச்செய்தீர். சிநேகபலியே! மகா மேன்மையே, நான் உம்மையே கண்டு உம்மையே நாடி இடைவிடாது உமது சிந்தையாயிருந்து உமது சிநேகத்திற்கு அடிமைப்பட்டிருக்கவும் ஆசைப்படும்என் இருதயத்தை உமது சிநேகபாசத்தால் உமதருகில் இழுத்தருளும். என் ஆசை, விருப்பம், நம்பிக்கை, பிரயோசனமெல்லாம் உமது கைவசப் படுத்துகிறேன், ஆண்டவரே! நீர் அவைகளைக் கையேற்றுக்கொண்டு உமக்குச் சம்மதியானபடி நடத்தும். நீர் அடியேனை யெப்படி நடத்தினாலும் எப்பொழுதும் என்பேரில் தயை நிறைந்த உமது திரு இருதயத்திற்கு ஒத்தவண்ணம் நடத்துவீரென்கிறதினாலும், எனக்கு அதிக நன்மைவரும்படி செய்வீரென்கிறதினாலும், இனி நான் உமது பட்சபராமரிக்கையின்பேரில் அற்பமும் முறைப்படேன். அநித்தியத்திலும், நித்தியத்திலும் உமது திருவுளத்திற்கு இசைவது என் மனதிற்கு இரம்மியமாக இருக்கிறது. எனக்கும், என்னைக்கொண்டும் நீர் செய்யத் திருவுளமாயிருக்கிறதெல்லாங் குறையில்லாமற்செய்து முடியும். ஆண்டவரே ஆராதனைக்குப் பாத்திரமான சிநேகம் நிறைந்த உமது திருச்சித்தத்தோடு என்மனதை முழுதும் ஏகரிக்கச்செய்கிறேன். மகா சிநேகத்திற்குப்பாத்திரமான என் ஆண்டவர் திருச்சித்தமே!நான் உம்மோடே ஐக்கியமாகச் சேர்ந்து சீவிக்கவும், மரிக்கவும், ஆசைப்படுகிறேன். உமக்கு இரம்மியமானதேஎனக்குஇரம்மியம்நீர்விரும்புகிறதைநானும்விரும்பச் செய்வீராக. என்பேரில் வைத்தசிநேகத்தால் உயிர்விடவும்எனக்குப் போசனமாகவுந்திருவுளமான என் கர்த்தரேசுவாமீ இனி நான் உமக்காகமாத்திரமே சீவிக்கவும்,உமக்குச்சித்தமானதை மாத்திரமே விரும்பவும், சிநேகத்திற்குப்பாத்திரமானஉமதுதிருவுளத்தைமாத்திரமேசிநேகிக்கவும், உமதுசிநேகத்தினால் மாத்திரமே உயிர்விடவுங் கிருபைசெய்யும். ஆண்டவரே, நான் உமது திருச்சித்தத்திற்கு மாறுபடேன். தாறுமாறாக இசை-



ந்தவண்ணம் நடந்தகாலமெல்லாம் பாழ்த்துப் போகக்கடவது. என் ஆண்டவரே, உம்மை நான் சிநேகிக்கிறேன், உம்மை என் முழு இருதயத்தோடு சிநேகித்து என்னை முழுதும் உமக்குப்பூதகாணிக்கையாக வைக்கிறேன்.

மனவல்லயச் செபம்.—என் ஆண்டவர் திருவுளமே, நீரே எனக்குச் சிநேகமும் செல்வமுமாயிரும்.

## தேவமாதாவின் சந்திப்பு.

### ஜெருசலேம் பட்டணத்தில் எழுந்தருளி இருந்த அர்ச். பெலேந்திரர் செய்த செபம்.

கர்த்தர் உம்மிடத்தில், ஆகையால் பிரியதத்தத்தினால் பூரண மரியாயே வாழ்க, உம்மாலே எங்கள் சாபம் நீங்கி ஆசீர்வாதம் வந்ததினால் எங்கள் சந்தோஷத்தின் காரணமேவாழ்க, சர்வேசுரன் மகிமைப்பிரதாபமுள்ள ஆலயமே, பரலோக இராயர் எழுந்தருளும் சிங்காசனமே,சர்வேசுரனுக்கும்,மனிதருக்கும் உறவுகட்டுகிறவளே வாழ்க, உம்மைச் சிருஷ்டித்தவருக்கு நீரே தாயானதினால் சகல சனங்களும் உம்மை ஆசீர்வதிக்கப் பட்டவள் என்றும், பாக்கியவதி என்றுங் கொண்டாடுகிறார்கள். அர்ச்சியசிஷ்ட மரியாயே,நான் உம்மை நம்பினால் இரக்ஷணியம் அடைவேன், உமது அடைக்கலத்தை நாடிவந்தால் நான் ஒன்றுக்கும் பயப்பட விடமில்லை. பணிவிடைத்தாசனுக்கு இரக்ஷணிய ஆயுதங் கையிற் கிடைத்தது.

மனவல்லயச் செபம்.—நிர்மல பரிசுத்த தேவதாயே! உமது அடைக்கலத்தை நாடிவந்தோம்.

சன்மமாசணுகாத கன்னிகையே, (உகா-ம்.) பக்கங்காண்க.

## ககஉ தேவநற்கருணை சந்திப்பு.

¶ நாம் நல்ல ஆயனாக இருக்கிறோம், அருளப்பர், கக-ம். அதிகாரம்.—இடையன் தன் அருகாமையில் இருக்கிற ஆடுகளுக்கு அதிக பட்சங்காட்டுவான் என்கிறதினாலேயும், தான் சாப்பிடுஞ் சாப்பாட்டில் எதாகிலும் ஆட்டுக்குப்போடுவான் என்கிற

திறலேயும் நமது நல்ல ஆயனாகிற சேசுவைவிட்டு ஒருபொழுதும் கண்மறையவும், அகன்று போகாதிருக்கவும் பிரயாசைப்படவேண்டும். ஆயன் நித்திரைசெய்தால் ஆடுகள் அவனைவிட்டு அப்புறம்போம். அவன் கண்விழித்துப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும். ஒன்றில் ஆயனை எழுப்பிவிட வேண்டுமென்று அர்ச் சியசிஷ்ட தெரசம்மாள் வசனித் திருக்கிறாள்.

### செபம்.

இந்தபீடத்தில் மெய்யாகவே எழுந்தருளியிருக்கும் நல்ல ஆயனான சேசுவே! உமது மகா சிநேகத்தினால் எந்நாளும் நிலைகொண்டிருக்கவும், உமது ஊழியத்தில் சுறுசுறுப்பாயிருக்கும் எனக்கு அநுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறேன். பரலோக அப்பமான தேவநற்கருணையில் அப்பத்தின் குணங்கள் ஒன்றுமில்லாமல் நமது இரட்சகராகிய சேசுக்கிறீஸ்து நம்மீதில் வைத்த மட்டற்ற பட்சத்தால் அப்பத்தில் முழுதும் எழுந்தருளி யிருக்கிறாரென்று விசுவாச வெளிச்சத்தால் அறிந்திருக்கிறதினால், அப்படிப்பட்ட விசுவாச வெளிச்சத்தைத் தந்தருளின சர்வேசுரனுக்கு நான் எத்தனை நன்றியறிந்திருக்க வேண்டியிருக்கிறது. என் ஆண்டவரே! சுவாமீ, நான் தேவநற்கருணையில் உம்மை என்கண்ணாற் காணாதிருந்தாலும் தேவநற்கருணையில் எழுந்தருளி யிருக்கிறவர் பரலோக பூலோகத்திற்கு அதிபதி கர்த்தரென்றும் உலக இரட்சகரென்றும் விசுவாச வெளிச்சத்தால் கண்டு உறுதியாக அங்கீகரிக்கிறேன். என் மதுரசேசுவே! நீர் என் நம்பிக்கையும், இரட்சணியமும், திடனும், ஆறுதலுமா யிருக்குமாப்போல என்னினைவுக்கும், ஆசைக்கும், இருதய விருப்பத்திற்கும் விஷயமா யிருக்கக்கடவது. அநித்தியத்திலும் நித்தியத்திலும் நான் அடையக்கூடுமான பாக்கியத்தைப் பற்றி நான் சந்தோஷப்படுகிறதைவிடத் தேவரீர் அநுபவிக்கும் பாக்கியத்தைப்பற்றி அதிக சந்தோஷப்படுகிறேன். என் ஆசைக்குரிய அன்பான கர்த்தாவே! நீர் அனுபவிக்கும் பாக்கியம் அளவற்ற பாக்கியமா யிருக்கிற தென்கிறதினாலேயும் நீர் முழுமன இரம்மியமா இருக்கிறீர் என்கிறதினாலேயும் நானும் அகமகிழ்ச்சியாயிருக்கிறேன். என் ஆண்டவரே, நானென் ஆத்துமத்தை முழுதும் உமக்குக் கையளிக்கிறேன். அதை முழுதும் நீரே ஆண்டு நடப்பியும். என் ஆத்தும சத்திகளும் என் பஞ்சேந்திரியமுந்த



னே உமதளவில்லாத சிநேகத்திற்கு அடிமைப்பட்ட[illegible]து உமக்குப் பிரியப்படவும் உம்மைத் தோத்திரஞ் செய்யவு மாத்திரமே உதவக்கடவது. நிர்மல பரிசுத்த மரியாயே! சேசுக்கிறீஸ்துவின் தாயே, தேவசிநேக பத்தினியே, நீர் உமது பாக்கியமெல்லாஞ் சர்வேசுரனிடத்தில் இருக்கிறதென்று எண்ணி நடந்தது போல நான் உம்மைக்கண்டு பாவித்து நடக்க எனக்காக வேண்டிக்கொள்ளும்.

மனவல்லயச் செபம்.—சேசுவே, நான் முழுதும் உமக்குச் சொந்தமாகவும், நீர் முழுதும் எனக்குச் சொந்தமாகவும் இருக்கக்கடவது.

## தேவமாதாவின் சந்திப்பு.

### அர்ச். இலதே போஞ்சு என்பவர் செய்த செபம்.

சிருஷ்டிக்கப்பட்ட சகல வஸ்துக்களுக்கு மேன்மையாக உயர்த்தி ஸ்தாபிக்கப்பட்டுச் சகலசனங்களுக்குந் தயாபரதஞ்சமான பரிசுத்த மரியாயே, தேவ கோபத்தைத் தணிக்கவும், நாங்கள் பாவப்பொறுத்தலும் இஷ்டப்பிரசாத நன்மையும் அடையவும், சகல சுகிர்தபுண்ணியங்களை அநுசரித்துக்கொண்டு வரவும், எங்கள் சத்துருக்களை அடக்கி ஒடுக்கி ஜெயங்கொள்ளவும், உமது மன்றாட்டு சத்துவமுள்ளதாகையால், கிருபைதயாபத்தின் மாதாவே, உமது திருக்குமாரன் எங்கள்பேரில் கிருபையாயிருக்க மன்றாடும்.

மனவல்லயச் செபம்.—மரியாயே! என் நம்பிக்கையும் என் நம்பிக்கைக்கு ஆதாரமும் நீரே.

சன்ம மாசணுகாத கன்னிகையே, (உ[illegible]) பக்கங்காண்க.

## ௧௨-ட தேவநற்கருணை சந்திப்பு.

¶ சர்வேசுரன் அளவில்லாத சிநேகமாயிருக்கிறார்; சிநேகமுள்ளவன் சர்வேசுரனிடத்திலும் சர்வேசுரன் அவனிடத்திலும் இருக்கிறார்.—அர்ச். அருளப்பர், முதல் நிருபம், ௪-ம். அதிகாரம்.—நம்மைச் சிநேகிக்கிறவனை நமது பிதா சிநேகிக்கிறார்; நா

ங்களவனிடத்தில் வந்து வாசஞ்செய்வோமென்று அருளப்பர் சுவிசேஷம், ௧௪-ம். அதிகாரத்தில் சேசுநாதர் தாமே திருவுளம் பற்றியிருக்கிறதினால் சேசுநாதரைச் சிநேகிக்கிறவனிடத்தில் சேசுநாதருஞ் சேசுநாதரிடத்தில் அவனுமிருப்பதற்குச் சந்தேகமில்லை. இதைப்பற்றி அர்ச்சியசிஷ்ட எல்சேயா என்பவர் கன்னியாஸ்திரியுங் கலங்காத கற்புடையவளுமான அர்ச்சியசிஷ்ட தெல்பீனென்பவளுக்கு எழுதும் இடத்தில் நீர் என் சரீரசவுக்கியத்தையுஞ் சேதியையுமறிய ஆசைப்படுகிறீரல்லோ! தேவநற்கருணை நாம் வாசஞ்செய்யும் விசேஷதலமென்று நீர் நன்றாய் அறிந்திருக்கிறதினால், அடிக்கடி தேவநற்கருணையைச் சந்தித்துச் சேசுநாதருடைய இருதயத்திற்குட்பிரவேசித்தால் நாமெப்பொழுதும் அதிலிருக்கிறதினால் நம்முடைய சேதிகள் உமக்கு அவ்விடத்தில் தெரியவருமென்றார். அர்ச். பிலிப்புநேரி என்பவர் மரண அவஸ்தையாயிருக்கும்பொழுது தமக்குக் கொடுக்கத் தேவநற்கருணை கொண்டு வருகிறதைக்கண்டு, இதோ மகா சிநேகம்! இதோ மகா சிநேகத்தின் விஷயமென்று கூப்பிட்டார். தேவநற்கருணையில் எழுந்தருளியிருக்கிற சேசுநாதரைத் தரிசிக்கிறவர்களெல்லாரும் இதோ என் சிநேகம், இதோ அநித்தியத்திலும் நித்தியத்திலும், என் மகா சிநேக விருப்பத்தின் விஷயமென்று மெய்யாகவே கூப்பிட்டாலல்லோ தாவிளை.

## செபம்.

சேசுவே, உம்மைச் சிநேகிக்கிறவர்களை நீரும் சிநேகிக்கிறோமென்றும், அவர்களைவிட்டுப் பிரியாமல் எந்நாளும் அவர்களோடு வாசமாயிருக்கிறோமென்றுந் தேவரீர் திருவுளம் பற்றியிருக்கிறதினால், எல்லாவற்றையும் பார்க்க உம்மை மேன்மையாகச் சிநேகிக்கிற வென்னை நீரும் சிநேகியும். உலக நன்மைகளை எல்லாம் ஒருமிக்க அனுபவிக்கிறதைவிட உம்மால் சிநேகிக்கப்படுகிறது எனக்கு அதிக பாக்கியமென்று நான் எண்ணுகிறதினால், என் எளிய ஆத்துமத்தில் குடிகொண்டிருக்கவாரும். உம்மைத் துரத்திவிட்டால் அல்லாமல், நீர் ஒருவரையும்விட்டு அகலப்போகிறதில்லை என்கிறதினால், இதுவரைக்கும் நானும்மை அகலத் துரத்தினதுபோல இனிமேலும் உம்மைத் துரத்தவிடாதேயும். உமதுகையில் இத்தனை அபூர்வ உபகாரங்களையும், இஷ்டப்பிரசாத நன்மைகளையும் நான் கைக்கொண்டபின்பு, இன்ன



மும் உம்மைப்பகைத்து உமதுபேரில் கையெடுக்கத்[illegible]னென்கிற கொடுமையான சத்தம் உலகத்தில் ஒருபொழுதும் கேள்விப்படாதிருக்கச்செய்யும். என் நிர்ப்பாக்கியத்தினால் நானின்னமும் உமதுபேரில் கையெடுக்கலாமென்கிறதினால் நித்தியகாலமும் உம்மோடு சீவித்திருக்கும்படி உம்மோடு ஒருமித்து மரணமடைய ஆசைப்படுகின்றேன். உமக்குச் சித்தமுண்டானால் என்னை இவ்வுலகத்தில் நின்று எடுத்துக்கொள்ளும். என் இரட்சகரான சேசுவே! உமது சமுகத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து உமது பாதத்தைக் கட்டி அரவணைத்துக் கொண்டிருக்கும் என்பேரி லிரங்கி, நான் எப்பொழுதுமும்மை சிநேகித்துவரவும், எப்பொழுதும் உம்மால் சிநேகிக்கப்படவும் கிருபைசெய்யும். என் ஆத்தும அன்பரான சேசுவே! நித்தியமும் நாமிருவரும் சிநேகத்தால் ஒன்றித்திருப்போமென்று நம்புகிறேன், என் நம்பிக்கை அபலமாய்ப் போகவிடாதேயும்.

மனவல்லயச் செபம்.—என் ஆண்டவராகிற சேசுவே, நான் எப்பொழுதும் உம்மை சிநேகிக்கவும், எப்பொழுதும் உம்மால் சிநேகிக்கப்படவும் அபேட்சிக்கிறேன்.

~~~~~~~~~

# தேவமாதாவின் சந்திப்பு.

## அர்ச். இலதே போஞ்சு என்பவர்செய்த செபம்.

மகா பரிசுத்த மரியாயே! பரலோக பூலோகத்திற்கு அதிபதிகர்த்தரைப் பெற்றெடுத்த தாயே! பெண்சாதிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவளுநீரே! கன்னிகைகளிற்பரிசுத்த கன்னிகையே சிருஷ்டிக்கப்பட்ட சகலவஸ்துகளுக்கும் இராக்கினியே! சகல பிரசைகளாலுங் கொண்டாடப் படுகிறவளே! உமது மகிமைப் பிரதாபத்தை நான் என்னாலானமட்டும் கொண்டாடவும், என்சத்துவத்திற்குத் தக்கது உம்மைச் சிநேகித்துத் தோத்தரித்து உமக்கு யோக்கிய பணிவிடை செய்து வரவுங் கிருபை செய்தருளும்.

மனவல்லயச் செபம்.—நிர்மலபரிசுத்த கன்னிகையே, உம்மை யோக்கியமாகத் தோத்தரிக்கக் கிருபை செய்தருளும்.

சன்ம மாசணுகாத கன்னிகையே, (௨௯ம்.) பக்கங்காண்க.
~~~~~~~~~

## [illegible] தேவநற்கருணை சந்திப்பு.

¶ என் கண்களும், இருதயமும் எப்பொழுதும் இதில் இருக்கும்.—அரசராகமம், ௩-ம். புத்தகம், ௯-ம். அதிகாரம். இரவும், பகலும் நம்மைவிட்டுப் பிரியாமல் தேவநற்கருணை வழியாய் நம்மோடு வாசஞ்செய்யத் திருவுளமாயிருக்கிற நமது அன்பரான சேசுவானவர் நம்மைப்பார்த்து நமதுகண்களும் இருதயமும் எப்பொழுதும் இதிலிருக்கிறதென்று திருவுளம்பற்றினார் அல்லோ?

### செபம்.

அளவில்லாத சிநேக தேவனான சேசுவே! பட்டம்பகலில் யாதொருவர் உம்மைச்சந்தித்து நமஸ்கரிக்க வருகிறதினால் பட்டம்பகலில் மாத்திரந் தேவநற்கருணையில் எழுந்தருளி யிருந்தாற் போதாதோ? இராக்காலங்களிலுந் தனிமையாய்க் கோவிலில் அடைபட்டிருக்க வேண்டியதென்ன? எங்கள்பேரில் நீர் வைத்த மட்டில்லாத சிநேகம் உம்மைவிட்டு எங்களை இரவும் பகலும் பிரியவொட்டாமல் உலகத்திற் சிறைபடுத்தி யிருக்கிறதென்று சொல்லவேண்டியதல்லோ? சேசுவே! மனிதர்பேரில் வைத்த மட்டில்லாத சிநேகத்தால் உலகத்திற் சிறைபட்டிருக்கும் மனோவாக்குக்கெட்டாத சிநேகதேவனான சேசுவே! நீர் எங்களுக்காக இரவும் பகலும் அடைபட்டிருக்கிறீர் என்கிறதை மாத்திரம் ஊன்றி நினைத்தால் ஒருவரும் உம்மைவிட்டுப் பிரியாமல் எப்பொழுதும் உமது பாதங்களின் அடியிற் காத்துக் கொண் டிருக்க வேண்டு மல்லோ? இடைவிடாமல் எங்கள்பேரிற் சிந்தையாயிருந்து, எங்களுக்கு வேண்டிய உபகாரங்களைக் குறையில்லாமற் செய்து எங்களை ஓய்வு ஒழிவில்லாமல் விசாரித்துவரும் உம்மைவிட்டு யாதொரு அவசர நிமித்தம் பிரியவேண்டி யிருந்தாலும் எங்கள் மனது முழுதும் உமது பாதங்களின் அடியிலிருக்க வேண்டிய தல்லோ? சேசுவே! என்னுடைய மனவிருதயமுமெல்லாம் உமக்கே பாதகாணிக்கையாக வைக்கிறேன். எங்களோடு கூட வாசமாயிருக்க வேண்டுமென்கிறதும் அல்லாமல் உமக்குப் பிரியமுள்ளவர்களோடு இஷ்டமாய்ப்பேசிப் புழங்கிக்கொண்டு இருக்கவேண்டு மென்கிறதைப்பற்றி இந்த அப்பத்தின் ரூபத்தில்மறைந்திருக்குந் தேவதத்துவமே, உம்மைவணங்கி நமஸ்கரிக்கிறேன். ஆண்டவரே, உமது திருச்சரீரத்தைப் புசிக்க உமதருகில் வரும், [illegible]த்தால் உமக்குத் தூரமாய்ப் போகவுந் துணிகிறார்? சேசுவே! நீர் எங்கள் உள்ளத்திற் பிரவேசிக்கவும், எங்களிருதயத்தை உமது கைவசப்படுத்தவும், எங்களோடு ஏகித்திருக்கவும் ஆசை மிகுதியால், இந்தத் தேவநற்கருணையில் மறைந்திருக்கத் திருவுளமாகி என் மனதையும் என் இருதயத்தையும் முழுதும் உமது கைவசப்படுத்திக்கொள்ள என்னிடத்தில் எழுந்தருளிவாரும் இன்பம், சுகம், சுயபக்ஷம் என்னப்பட்டதெல்லாம் உமது சிநேகத்திற்குப் பலியாக ஒப்புக்கொடுக்கிறேன். மகா சிநேகதேவனான சேசுவே, என்னிடத்தில் இராச்சியபாரஞ் செய்யும்; என்னை அடக்கி ஒடுக்கி என்னிடத்திலுள்ளபாவங்களை எல்லாம் நாசஞ்செய்யும். என்னிருதயநேசரே, தேவநற்கருணைவழியாய் உம்மை உட்கொண்ட என் ஆத்துமந் தேவ மகத்துவத்தை நிரஞ்சமாகக் கொண்டபின் உலக அநித்திய வஸ்துக்களின்பேரில் பற்றுதல்வைக்க வொட்டாதேயும். சேசுவே, உம்மை சிநேகிக்கிறேன்; உம்மைமாத்திரமே சிநேகிக்கவும், இடைவிடாமல் எப்பொழுதும் உம்மையே சிநேகிக்கவும் விரும்புகிறேன்.

மனவல்லயச் செபம்.—சேசுவே! உமது சிநேக பாசத்தால் என்னை உமதருகிற் சேர்த்தருளும்.



## தேவமாதாவின் சந்திப்பு.

### அர்ச். இலதே போஞ்சு என்பவர் செய்த செபம்.

சர்வேசுரனின் திருப்பணிவிடைக்காரர்களில் மிகவுந் தாழ்ச்சியுள்ளவளான பரலோக பூலோக இராக்கினியே, என் ஆண்டவரை ஈன்றெடுத்த அற்புதத்தாயே, உமது பாதத்திற்சாஷ்டாங்க தெண்டனாய் விழுந்திருக்கும் பாவியின் பாவதோஷங்களை உமது திருக்குமாரன் மனம் பொறுத்துக்கொள்ளவும், என் மனது அவரோடு எப்பொழுதும் ஏகித்திருக்கவுஞ் செய்யும். உமது திருக்குமாரனைத் தேவனாகவும், உம்மைத்தேவனுக்குத்தாயாகவும், உமது திருக்குமாரன் என்னை மீண்டு இரட்சித்ததினால் அவரை என் இரட்சகராகவும், உமது திருக்குமாரன் என்னைமீண்டு இரட்சிக்கக்கொடுத்த திருச்சரீரம் உம்மிடத்தில் நின்றெடுத்ததாகையால், உம்மை என் இரட்சணியத்தின் காரணமாகவும் சிநேகிக்கவேண்டிய இஷ்டப்பிரசாதத்தை எனக்காக மன்றாடித் தந்தருளும்.

மனவல்லயச்செபம்.—என் தாயே! உம்முடைய பேரில் நான் பூரண நம்பிக்கை வைக்கவும், உம்மை எப்பொழுதும் நாடவும் கிருபைசெய்தருளும்.

சிரம மாசுணுகாத கன்னிகையே, (உ௩௩-ம்.) பக்கங்காண்க.

115926

## ௰௪-வது தேவநற்கருணை சந்திப்பு.

¶இது நாம் எப்பொழுதும் இளைப்பாறு மிடமென்று இதை நாம் தெரிந்துகொண்டிருந்தால் இதில்வாசஞ்செய்வோம். ௱௩௧-ம் சங்கீதம்.

### செபம்.

தேவநற்கருணையில் எழுந்தருளியிருக்கும் சிநேக தேவனை சேசுவே! தேவரீர் அடியார்களைப் பார்த்து இதுநாம் எப்பொழுதும் இளைப்பாறும் இடமென்று தெரிந்துகொண்டிருக்கிறதினால் இதில் நாம் வாசமா யிருக்கிறோமென்று திருவுளம்பற்றி வருகிறீரல்லோ! சேசுவே! தேவரீர் எங்கள்பேரில் வைத்த மட்டுகெட்ட சிநேகத்தால் தேவநற்கருணை வழியாய் எங்களோடு வாசமாயிருக்கத் திருவுளமானதினால் எங்களோடு வாசமா யிருக்கிறதுதானே உமக்கு இளைப்பாற்றியாய் இருக்கிறதினாலும் எங்கள் இருதயம் எப்பொழுதும் உம்மோடு வாசமாயிருக்கவும் உம்மில் இளைப்பாறுகிறதே எங்கள் சுகசெல்வமுமா யிருக்கவும் வேண்டியிருக்கிறதல்லோ? சிநேக தேவதிரவிய அனுமானத்தில் எழுந்தருளியிருக்கும் சேசுவினிடத்தில் இருக்கிறதைவிட உலகத்தில் அதிக இன்பசுகம் ஒன்றுமில்லை என்றிருக்கும் விசுவாசமுள்ளவர்கள் பாக்கியம் பெற்றவர்களாமே. தேவநற்கருணையில் எழுந்தருளி எப்பொழுதும் என்னை மறவாமல் என் பாக்கியத்தின்பேரிற் சிந்தையாயிருக்கும் என்னிரட்சகரான கர்த்தரே! நான் எப்பொழுதும் உம்மை மறவாமல் உமது திருப்பாதத்தடியிற் காத்திருக்கிறதே சுகமென்று இருந்தால் எத்தனைப்பாக்கியம் பெற்றவனாயிருப்பேன். என்கர்த்தரே சுவாமீ! நானித்தனைக்காலமும் உம்மை சிநேகியாமற் போனதென்ன! என் சிநேகதேவனைச் சிநேகியாத காலமெல்லாம் பாழ்த்துப் போகக்கடவது. உமது சிநேகப் பெருக்கத்தையுந் தயையின் விசாலத்தையுங்கண்டு என்னை முழுதும் உமக்குக் கையளிக்க வேண்டுமென்று இத்தனை வருஷகா